# MADRAS
# GOVERNMENT ORIENTAL SERIES

(*Published under the authority of the Government of Madras.*)

GENERAL EDITOR:

T. CHANDRASEKHARAN, M.A., L.T.

(*Curator, Government Oriental Manuscripts Library, Madras.*)

# ஆனந்தரங்கன் கோவை

# ĀNANDARAṄGAN KŌVAI

*Critically edited with introduction and notes*

by

VIDWAN N. SUBRAHMANIAN, M.A.

(*Lecturer in History, A. M. Jain College, Madras.*)

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

MADRAS

1955

*Price Rs.* 4–10–0.

A-1

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | Introduction | iii |
| 2. | Preface | v |
| 3. | முகவுரை | ix |
| 4. | மேற்கோள் நூற் பெயரகராதி | xxxi |
| 5. | இளவி அகராதி | xxxiii |
| 6. | ஆனந்தரங்கன் கோவை மூலமும் உரையும் | 1 |
| 7. | தனிப்பாடல்கள் | 137 |
| 8. | அரும்பத முதலியவற்றின் அகராதி | 139 |
| 9. | செய்யுள் முதற்குறிப்பகராதி | 147 |

# ANANDARAṄGAN KŌVAI

Ānandaraṅga Pillai was a famous Dubash in Pondicherry during the time of the French Governor Dupleix. By virtue of his industry, honesty and efficiency in French and Indian languages he rose to a very high position and was regarded with great esteem by the French. He was a great Philanthropist and has recorded the chief incidents of his life in 12 volumes of what is now described as Anandaranga Pillai Diary, the original of which is deposited in the Madras Record Office. An interesting work in Sanskrit known as Anandaranga Campu has also been edited by Dr. V. Raghavan, M.A., PH.D., Head of the Sanskrit Department, University of Madras. The present edition also describes some leading incidents in the life of Anandaranga Pillai, who lived in Pondicherry. It belongs to the form of literature known as Kovai which usually consists of 400 verses. The press copy was originally prepared by the late Pandit N. Balarama Iyer and is now edited by his son Sri N. Subrahmania Iyer with notes and introduction.

This edition is based on a single paper manuscript bearing R. No. **4416**—13½ x 10 inches consisting of 183 pages.

## PREFACE

'Ānanda Rangan Kōvai' is a Tamil poem eulogising the famous Dubash Anandaranga Pillai (1709–1761). 'Kovai' is a form of poetic literature in Tamil, which has for its subject matter a conventional love theme. Even the framework of the poem is subject to rigorous control by grammatical rules; but depending on the genius of individual authors, a real literary distinction does belong to each Kovai. St. Manikkavachakar's 'Thiruchirrambala Kovayar' is considered to be the Kovai par excellence; while 'Ambikapathi Kovai', generally ascribed to Ambikapathi, son of the great Kamban, has special characteristics not usually found in other Kovais; while 'Thanjaivanan Kovai' by Poyyamoli Pulavar is the most popular with the junior students of Tamil literature as it closely follows the 'Ahapporul' grammar.

'Ananda Rangan Kovai' consists of 400 stanzas all composed in the inevitable 'Kattalai Kalithurai' metre. The style is fluent and the diction dignified; the handling of the theme and the choice and classical expression occurring in many places in this work are a proof of the author's full acquaintance with ancient Tamil literature and a gifted poetic talent of a high order.

Dubash Ananda Ranga Pillai was a native of Perambur and the son of Thiruvenkatam Pillai who migrated to Pondicherry where he plied a busy import-export trade, and acted as dubash (Dobashi: one knowing two languages) to the officials of the French East India Company. Thiruvenkatam Pillai died in 1726 and Ananda Rangan commenced his career as a small merchant. He was a very clever man and his business very soon prospered and expanded. He held the position of chief commercial agent to the French in India during the greater part of the regimes of Governor Lenoir (1720–1735) and Governor Dumas (1735–1742). But with the advent of Dupleix as Governor of Pondicherry, he rose greatly in wealth, influence and importance. His position as commercial agent, dubash and adviser to Dupleix, who gave him the fullest confidence and held him in high esteem, elevated Anandaranga Pillai to an enviable position among the powers of the Carnatic. His commercial prosperity was, however, more uniform and unerring than his political sagacity.

The affairs of the Carnatic, as is wellknown, were then in a confused state, with a few cases of disputed succession arresting the attention of all the political powers in the Deccan and South India. Dupleix who dreamt of a French Empire in India made capital use of the confused political condition and it is beyond doubt that Anandaranga Pillai contributed in no small measure to the great success which the French Governor met with. Anandaranga Pillai held Madam Dupleix in great contempt and attributed the political misfortunes of the French in India to the 'evil counsels' of that lady whom he frankly designated as the 'black beast'.

Anandaranga Pillai's fame and fortune rose with those of his patron and master, Dupleix; with the fall of Dupleix, Pillai's fortunes also fell; but after a short period of revived good fortune in 1758 when Count De Lally came to French India, Pillai's fortunes once again sank. On the 12th January 1761, exactly four days before Pondicherry was captured by the English under Colonel Coote, Ananda Ranga Pillai died.

Ananda Ranga Pillai's services to French India were sincere and considerable. The Nizam of Hyderabad conferred on him the title of 'Vizier' and 'Kumara Banangal.' He was a great patron of literature and fine arts; he loved music and dancing and amply rewarded the artistes. His patronage of poets led to the composition of a Telugu panegyric 'Ananda Ranga Chanthas' and a Sanskrit poem 'Ananda Ranga Champu', and this Tamil classic 'Ananda Rangan Kovai' by Thyagaraja Desikar.

The author of this poem states that he was rewarded by Ananda Ranga Pillai with ear-rings studded with gems, a beautiful necklace with pendant, valuable shawls and enough lands and money to enable him to live happily thereafter in his native town of Tiruvarur. The poem itself, it is said, took sixteen years to complete. It was commenced on the 16th August 1739 (Thursday) and was presented to the public on the 15th August 1755 (Friday). The poem mentions Thiruvenkatam Pillai as Ranga Pillai's father, mentions his caste as the Yadava caste (i.e. the shepherd caste), and gives an account, of course exaggerated, of his conquests (?). Pillai, no doubt, understood military problems and helped Dupleix organise the defences of Pondicherry; but to say as the poet says, that he conquered Gingi, Vijayapuri, Delhi (Stanza 8), Bengal, Kalinga and the Telugu districts (Stanza 46) is, to say the least, poetic licence. The poem in almost every stanza speaks of Ranga Pillai as a native of Perambur. It is easy to see that he was not merely

interested in encouraging and rewarding the poets but took an active interest in acquainting himself with the various arts. Among the poets patronised by him Namasivaya Pulavar, Madhurakavirayar, Ramakavirayar, Padikkasu Pulaver, Srinivasa Kavi and Thyagaraya Desikar are the better known. Many stanzas composed by these poets eulogising Ananda Ranga Pillai on special occasions have come down to us and give us a vivid picture of Ranga Pillai's munificence.

The real and undying fame of Ananda Ranga Pillai, however, is based on his diary in Tamil covering the period 1736 to 1760. This diary reveals Anandaranga Pillai's profound capacity for political judgment, and is a most valuable source of history for that period. The reason for his having maintained this diary can only be guessed; for, he nowhere says why he did so. Apart from the craving common to diarists to record impressions and events from day to day, he must have had other ideas too. He must have felt that a ready reference to the rapidly changing course of contemporary events might be useful some day ; perhaps so in his own life time when he might be accused of political duplicity or treason ; but what he forged as a weapon of defence serves the purpose of a source book of history. "The diary is a good summary of the views and feelings of the most acute Indian observer of contemporary events".* This diary written in Tamil, mostly in his own hand but here and there with the help of an amanuensis, still remains as a manuscript and unpublished ; while an English translation of the same has been published.

**Thyagaraya Desikar,** the author of the 'Kovai' was the illustrious son of a reputed Tamil scholar, Vaidyanatha Navalar, the author of 'Ilakkana Vilakkam' the well-known work on Tamil Grammar.

The authorship of this work seems to have been a matter for some confusion. Dr. V. Raghavan, the learned editor of 'The Ananda Ranga Champu', and Mr. Desikam Pillai, author of 'A Life of Ananda Ranga Pillai' have with one voice stated that Sadasiva Desikar was the author of this Kovai. The only two munuscripts of this Kovai now available with us categorically refer to the author as 'Thyagaraja Desikar'. Hence it may be considered that it was only Thyagaraja Desikar who composed this work and not Sadasiva Desikar, who by the way was another son of Ilakkana Vilakkam Vaidyanatha Navalar.

---

* C. S. Srinivasachariar; Ananda Ranga Pillai, the Pepys of French India.

**Mr. N. Balarama Iyer,** (1876—1943) the commentator of this Kovai was the most reputed disciple of the late V. G. Suryanarayana Sastriar of the Christian College, Madras. Mr. Balarama Iyer has edited most of Mr. Sastriar's works with critical annotations, written an elaborate and scholarly commentary on the 'Natakaviyal', written two plays, 'Valli Parinayam' and 'Dasaratha's Mistake' and translated 'Matha Vilasa Prahasanam' of Mahendra Pallava, composed two poetical works, 'Yavvanambikai Pillai Tamil' and 'The Fresh Lotus' and rendered into Tamil the 'Dasakumara Charitram' of Dandin; he was a distinguished student of the Christian College during Dr. Miller's Principalship. He served as Tamil Pandit in the Cuddalore and Karaikudi High Schools, served for six years as Tamil Lecturer in the Annamalai University from where he retired in 1935 and devoted the rest of his life to the cause of Tamil literature. He passed away in 1943.

Rao Bahadur C. M. Ramachandran Chettiar, who was a good friend of Mr. N. Balarama Iyer, was good enough to publish a part of Ananda Rangan Kovai through the columns of his valuable journal 'Kongu Malar'; but with the unfortunate cessation of the journal, the publication of the Kovai also stopped. The Tamil public must now indeed be grateful to the authorities of the Oriental Manuscripts Library for having come forward to publish this work through Government endeavour.

N. SUBRAHMANIAN,
*Editor.*

# முகவுரை

## I. கோவை

இது தமிழ் மொழியிற் காணப்பெறும் பிரபந்த வகைகளுள் ஒன்று. இஃது அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமையும். அகப் பொருட் கருத்துக்கள் அமைந்த செய்யுட்கள் பிற பிரபந்தங்கள் சில வற்றிலும் காணப்பெறுகின்றனவாயினும், கோவைப் பிரபந்தத்தில் அக் கருத்துக்கள் கிளவிகளாக அமைக்கப்பெற்றுத் துறைகளாக விரித்துக் கோவைப்படக் கூறப்படுதலின் அஃது அப்பெயர் பெற்றது. அகப்பொருட் குரிய திணைகள் ஐந்தாகலின் கோவையை ஐந்திணைக்கோவை என்றும் வழங்கும்.

கோவைப் பிரபந்தத்திற்கு இலக்கணம் இறையனார் அகப்பொருள், நாற்கவிராஜ நம்பி இயற்றிய அகப்பொருள், திருவாரூர் வைத்தியநாத நாவலர் இயற்றிய இலக்கண விளக்க அகத்திணையியல் என்பவையே. தமிழ் நெறி விளக்கம் என்னும் நூலுள்ளும் இவ்விலக்கணம் ஒருவாறு வகுக்கப்பட்டுள்ளது. பண்டைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள அகப்பொருள் இலக்கணம் மேற்கூறிய நூல்களிற்போலத் தொடர்புபடக் கூறப்படவில்லை. இறையனார் அகப்பொருள் உரையில் அகப் பொருள் இலக்கணத் தொடர்பும் ஒவ்வொரு துறைக்கும் ஏற்ற உதாரணச் செய்யுட்களும் கூறப்பெற்றுள்ளன. இவ்விவரமே பிற் காலத்தில் கோவை யிலக்கணம் கூறிய ஆசிரியர்கள் மேற்கொண்ட முறைக்கு ஆதாரமாக அமைந்தது. பன்னிரு பாட்டியல் என்னும் பிற்காலப் பாட்டியல் நூல்

" கோவை என்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனும் கிளவி
ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப "

(செய். 220)

என்று கோவையிலக்கணம் கூறுகின்றது. இந் நூலாசிரியராகிய தியாகராய தேசிகர் இயற்றிய ' இலக்கண விளக்கப் பாட்டிய ' லில்

" முதற்பொருள் கருப்பொரு ளுரிப்பொருண் முகந்து
களவு கற்பெனும் வரைவுடைத் தாகி
நலனுறு கலித்துறை நானூ றாக
வாறிரண் டுறுப்பு மூறின்றி விளங்கக்
கூறுவ தகப்பொருட் கோவை யாகும் "

(செய். 56)

என்று அகப்பொருட்கோவைக்கு இலக்கணம் கூறப்படுகின்றது. ஆதலால் களவு, கற்பு என்னும் வகையும் உட்கொண்டு, நானூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களான் இயங்குவது கோவை என்பது பெற்றும். ஆனந்த ரங்கன்

கோவை இவ்விலக்கணத்திற்கு ஏற்ப அமைந்த நூலாகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு ஆகிய சங்கத்தொகை நூல்களுள்ளும், கல்லாடம் முதலிய வேறு சில நூல்களுள்ளும் அகப்பொருள் தொடர்புடைய செய்யுட்கள் காணப்படுகின்றன ; ஆயினும் இவை பல துறைகளும் ஒரு செய்யுளில் விரவிக்கிடக்குமாறு இயற்றப்பட்டவை.

கோவைப் பிரபந்தங்களுள் தலை சிறந்ததாகக் கருதப்படுவது மணிவாசகப் பெருமானார் இயற்றிய திருச்சிற்றம்பலக்கோவையாரே ; இந்நூலைத் திருக்கோவையார் என்றும் கூறுப. இக்கோவைச் செய்யுள்களும் அகப்பொருட் துறைகளில் அமைந்துள்ளன. ஆயினும் ஆன்மார்த்தமான உட்பொருள் ஒன்று இதனுள் அடங்கியிருப்பதாக ஆன்றோர் கொள்வராதலின் இக்கோவைக்கும் பிற கோவைகட்கும் வேறுபாடு காண்ப. இறையனார் அகப்பொருளுரையில் மேற்கோளாகக் காட்டப்பெறும் செய்யுட்கள் பெரும்பாலும் பாண்டிக்கோவை என்னும் நூலினின்றும் கொண்டவை ; அகப்பொருள் விளக்கக்காரர் மேற்கோளாகப் பெரிதுங் கொண்டுள்ள தஞ்சைவாணன் கோவை பொய்யாமொழிப் புலவராலியற்றப் பெற்று அவ்விலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்தது. கம்பர் மகனுகச் சிலராற் கருதப்பெறும் அம்பிகாபதி இயற்றிய அம்பிகாபதிகோவை பிற கோவைகளினின்றும் ஒரு சிறிது வேறுபாடுடையது. அக்கோவைக்குக் களவித்தலைவனையன்றிப் பாட்டுடைத் தலைவன் இல்லை என்பது நோக்கற்பாலது. பிற கோவைகள் எல்லாம் திருக்கோவையாரைப்போலக் கடவுளரையோ, தஞ்சைவாணன் கோவையைப்போல மக்களுட் சிறந்தோரையோ பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றவை. பிறகோவைகள் பாட்டுடைத் தலைவன் பெயரால் விளங்குவன ; அம்பிகாபதி கோவை மட்டும் ஆசிரியர் பெயரால் விளங்குவது. குலோத்துங்கன் கோவை, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய திருவெங்கைக்கோவை என்பவை கோவை வகையிற் சிறந்த பிற நூல்களாம்.

கோவைப் பிரபந்தத்தில் சில நூல்கள் நானூறு கட்டளைக் கலித்துறைக்கு எஞ்சியும் இருப்பதுண்டு. உதாரணமாக, அம்பிகாபதிகோவை 564 செய்யுட்களால் இயங்குவது ; அன்றியும், பிற கோவைகளிற் காணப் பெருத துறவறம், என்னும் துறையின் கீழ் ஒரு செய்யுள் அம்பிகாபதி கோவையில் உள்ளது.

தமிழ் மொழியில் பல கோவைப் பிரபந்தங்கள் உளவாயினும், அவையெல்லாம் கூறுகின்ற பொருளும் பொருள் தொடர்பும் ஒன்றே ; ஆனால் அவ்வந் நூலாசிரியர்தம் அறிவு ஆற்றல் கற்பனைத்திறம் ஆகியவற்றைப் பொறுத்து நூலின் பெருமையும் அமையும்.

## II. ஆனந்தரங்கன் கோவை

இந் நூல் தொண்டை மண்டலத்திலுள்ள புதுச்சேரி என்னும் புதுவையம் பதியில் சிறப்போடு வாழ்ந்துவந்த ஆனந்தரங்கப் பிள்ளை என்னும் வள்ளலைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு நானூறு கட்டளைக் கலித்

துறைகளால் இயற்றப்பட்டது. இந் நூல் சித்தார்த்தி ஆண்டு ஆவணியில் தொடங்கி யுவ ஆண்டு ஆவணியில் முற்றுப்பெற்றதாகக் கூறப்படுதலின், இதை இயற்றுதற்குப் பதினாறு ஆண்டுகள் ஆயின என்பது போதரும்.

வரலாற்றுப் புகழ் பெற்ற துபாஷ்* ரங்கப் பிள்ளை மீது இயற்றப்பெற்ற நூலாதலின் இந் நூற்கும் வரலாற்றுச் சிறப்பு உண்டு. இந் நூலைப்பாடி நூலாசிரியர் பெற்ற பரிசில் ரத்நகுண்டலம், சரப்பணி, பதக்கம், சால்வை, ஆரூரில் வசிக்கப் பொன் முடிப்பும் பூமிகளும்.

இந் நூலில் அம்பிகாபதிகோவைக் கருத்துக்களும் சொற்போக்குக்களும் மிகுதியும் காணப்படுகின்றன. இவ்வாசிரியர் தம் தந்தையாரான வைத்தியநாத நாவலர் இயற்றிய இலக்கண விளக்க அகத்திணையியற் சூத்திரங்களின் உரையில் உதாரணச் செய்யுட்களாகப் பெரும்பாலும் அம்பிகாபதிகோவைச் செய்யுட்களே எடுத்தாளப்பட்டமையும் காண்க. ஆதலால் இலக்கண விளக்கப் பரம்பரையார் அம்பிகாபதிகோவையைப் பெரிதும் போற்றி வந்தமை புலனும். ஆனந்தரங்கன் கோவைச் செய்யுட்களில் ஒன்றேனும் இலக்கண விளக்க அகத்திணையியற் சூத்திரங்களுக்கு மேற்கோளாகத் தரப்படாமையின், இக்கோவை யியற்றத் தொடங்கு முன்னரே இலக்கண விளக்க அகத்திணையியல் மூலமும் உரையுமாக இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

இக்கோவையில் வரும் செய்யுட்களைக் காணுந்தோறும் நூலாசிரியர் தம் பரந்த இலக்கிய இலக்கண அறிவும், பண்டைப் பெரு நூல்களில் இவருக்கு இருந்த பயிற்சியும் தொடர்பும் தெற்றென விளங்கும். செய்யுள் 42-ல்,

> "இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
> குற்ற மறைப்பா னுடம்பு" (குறள்—1029)

என்னும் குறளடிகள் தோன்றுவது காண்க. செய்யுள் 234-ல் "ஏமந் தரும்தண்புனலுட் புகினும் எழுந்து சுடும்" என்புழி "நீருட்குளிப்பினுங் காமம் சுடும்" என்னும் நாலடியார் (90)-க் கருத்தும் சொல்லும் எடுத்தாளப்பட்டமையும் காண்க.

இந் நூலில் கீழ்க்கண்ட புராணக்கதைகள் எடுத்தாளப்பட்டிருக்கின்றன :—

1. திருமால் இருகாலினாலும் உலகேழையும் மூவடியிட்டளந்தது (செய். 10.)

2. சிவபெருமான் ஏமவெற்பான மேருவை வளைத்துத் திரிபுர சங்காரம் செய்தமை (செய். 18.)

3. மல்லர், பறவை ஆகியோர் வலியைக் கண்ணன் தொலைத்தமை (செய். 19.)

4. மருதமரங்களாய்நின்ற நளகூபரன், மணிக்கிரீவன் என்பாரைக் கண்ணன் அழித்தமை (செய். 19.)

---

*துபாஷ் : இருமொழிவல்லவர்.

5. வருணன் மீது இராமன் அம்பு தொட்டமை (செய். 19,146.)

6. கண்ணன் பெரும் ஆனை (பசுக்கூட்டங்களை) வளர்த்தமை (செய். 20.)

7. இராமன் ஒரு சிலையைப் பெண்ணாகச் செய்தமை (செய். 21,93,183.)

8. திருமால் உலகளந்தமை (செய். 23.)

9. கண்ணன் வெண்ணெய்க்களவிற்கு அடியுண்டமை (செய். 32.)

10. கஜேந்திரன் வரலாறு (செய். 42,113,208.)

11. கண்ணன் விளமேல் குணிலெனக்கன்றெறிந்தது (செய். 43.)

12. அன்னம் தமயந்திபைக் கூட்டிய திறம் (செய். 52.)

13. இந்திரன் தூதாய் நளன் தமயந்தியிடம் சென்று வந்தமை (செய். 56.)

14. திருமால் சுதைகொண்டு அமரர்க் கருத்தியது (செய். 72.)

15. கண்ணன் கஞ்சன் அனுப்பிய சகட்டை அடர்த்தது (செய். 72.)

16. கண்ணன் கீழுறியின் அளை கொண்டது (செய். 92.)

17. மால் வடத்திலை மேற் கண்வளர்ந்தமை (செய். 98.)

18. இராமன் வடிக்கணை தொட்டு ஒருமான் பின்னடைந்து எய்திட்டது (செய். 105.)

19. கோபியர் தம் துகிலைக்கண்ணன் மறைத்தமை (செய். 107.)

20. முருகன் சரவணப் பொய்கையில் தோன்றியது (செய். 109.)

21. சிவன் உமையை இடப்பாகத்தில் தரித்தல் (செய். 117,144,225, 358.)

22. மால் சேடசாயியாயிருத்தல் (செய். 128,251,305.)

23. கண்ணன் கொடையிற் சிறந்தவன் (செய். 134, 308, 360.)

24. குபேரன் ஈகையிற் சிறந்தவன் (செய், 131.)

25. காமன் அழகிற் சிறந்தவன் (செய். 140.)

26. வாலியை இராமன் வென்றமை (செய் 160.)

27. கண்ணன் கோபியரோடு விளையாடல் (செய். 162.)

28. அகத்தியன் தமிழ் வளர்த்தமை (செய். 176.)

29. கண்ணன் பாண்டவர்க்குத் தூது நடந்தமை (செய். 187.)

30. காலவயிரவன் ஊர்தி நாயெனல் (செய். 196.)

31. பாரி ஒரு வள்ளல் எனல் (செய். 203.)

32. காமதேனு வேண்டிய ஈதல் (செய். 207.)

33. கஞ்சனைக் கண்ணன் வென்றமை (செய். 223.)

34. விஜயன் வில்வன்மை (செய். 233.)

35. சிந்தாமணி வேண்டிய ஈதல் (செய். 239.)

36. கண்ணன் பாரதத்தில் பாண்டவர்க்கு உதவியது (செய். 266.)

37. சிவபிரான் பிறையணிதல் (செய். 301.)

38. இராமன் மராமரம் புழை காண எய்தமை (செய். 303.)

39. உக்கிரசேனன் கண்ணனது (தாய் வழிப்) பாட்டன் (செய். 315.)

40. பாரதம் பதினான்காம் நாட் போரில் இரவு பகலாகக் கண்ணன் காட்டியது (செய். 322.)

41. கஞ்சன் விட்ட யானையைக் கண்ணன் வென்றமை (செய். 362)
42. அரிச்சந்திரன் உண்மை பேசுவன் என்பது (செய். 362)
43. கண்ணன் வெண்ணெயைத் திருடியுண்டமை (செய். 373)
44. கண்ணன் கமலையிருக்கவும் கோபியரை விரும்பியமை (செய். 378)
45. கண்ணன் அண்டங்களை வயிற்றில் அடக்கியமை (செய். 387)
46. காமனுக்கு வில்கரும்பு எனல் (செய். 394)
47. பாரதம் பதினேன்காம் நாள் போரில், கண்ணன் (சுதாயு எறிந்த) கதையை மார்பில் தாங்கியது (செய். 397)

இந்நூலிற் காணப்படும் **சரித்திரச் சான்றுகள்** :—

1. "செஞ்சி விஜயாபுரம் டெல்லி மட்டும் செங்கோல் செலுத்தும் வெஞ்சிலையா நந்தரங்கன்" (செய். 8)

2. "செந்தமிழ்க் கோவை கொள் ஆநந்தரங்கன்" (செய். 33)

3. "வங்கம் கலிங்கம் தெலுங்கம் புறமிட வாளெடுத்த துங்கன்" (செய். 46)

4. "திசைக் கணின்றும் பொன் வரவுற்றரு ளாநந்தரங்கன்" (செய். 106)

5. "புதுவையில் ஐந்தரு என்னும் முத்தியப்பன் மகிழ்மைத்துனன்" (செய். 391)

இந்நூலிற் காணப்படும் **பொருளணி, சொல்லணிகள்** :—

1. அரதன மாலையணி (செய். 329)
2. இரட்டுற மொழிதல் (நாமகள் வணக்கம்)
3. இல்பொருளுவமை (செய். 26)
4. உபலக்கணம் (செய். 242)
5. உருவகம் (செய். 218)
6. உலக வழக்கு நவிற்சியணி (செய். 372)
7. உவமை (செய். 15, 108, 116, 129, 143, 158, 175, 267, 341, 375.)
8. எண்ணணி (செய். 10)
9. ஏகதேசவுருவகம் (செய். 172, 173, 395)
10. ஒருமைப்பன்மை மயக்கம் (செய். 36)
11. ஒழிப்பணி (செய். 39)
12. ஔபசாரிகம் (செய். 144)
13. கருத்துடையணி (செய். 28, 221)
14. சொற் பொருட்பின் வருநிலையணி (செய். 109)
15. தற்குறிப் பேற்றவணி (செய். 16, 20, 108, 277, 392)
16. தன்மை நவிற்சியணி (செய். 293)
17. பிறிது மொழிதலணி (செய். 46)
18. முரண்தொடை (செய். 2, 16, 58, 84, 87, 89, 190, 227, 363)
19. வேற்றுமையணி (செய். 21)

இவையேயன்றித் தொனிப் பொருளாலும், பலவகை நயங்களாலும் எண்ணிறந்த பொருளணிகள் இந்நூற் செய்யுட்களால் பெறப்படும்; அவற்றுட் சில (செய். 18, 38, 61, 62, 94, 109, 118, 156, 221, 258, 260, 279, 290)

## III. பாட்டுடைத் தலைவர் வரலாறு

இவர் கி. பி. 1709-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ம் நாள் சென்னையையடுத்த பிரம்பூரில் திருவேங்கடம் பிள்ளை என்பாரது குமாரராகப் பிறந்தார். இவர் யாதவகுலத்தைச் சார்ந்தவர். திருவேங்கடம் பிள்ளை பிரம்பூரில் வியாபாரஞ் செய்து வந்த செல்வவந்தர்களுள்ளொருவர். அவ்வமிசத்தவர்களுக்குப் பிரம்பூர் மிட்டா உரியதாயிருந்தது. இந்நூல் உரையாசிரியரான ந. பலராம ஐயரவர்கள், இவருடைய முன்னோர்க்குப் பிரம்பூர் மிட்டா உரியதாக இருந்த வரலாற்றைப்பின் வருமாறு குறிப்பிட்டுள்ளனர் :

“ ஆனந்தரங்கப் பிள்ளையின் பரம்பரையைச் சேர்ந்த திருவேங்கடம் பிள்ளை என்பவர் கூறிய கர்ணபரம்பரைச் செய்தி பின் வருமாறு : இவர்தம் முன்னோருள் கருவேந்தியா பிள்ளை என்பவர் நச அயனபுரம் என்னும் ஊரில் மிக்க செல்வமுடையராய்ப் புலவர்களை யாதரித்து வந்த காலத்தில், கோல கொண்டா அரசனது அவைக்களப் புலவர்களுட் சிலர் அவரைக் கண்டு பரிசில் பெற்றுப் போமாறு ஒரு நாள் அங்குவந்தனர். வந்து அவ்வூர்க்குப் பெரியதனக்காரப்பிள்ளை எங்கே என்று விசாரித்த பொழுது பிள்ளையவர்கள் வயலுக்குப் போயிருப்பதாகக் கேள்வியுற்று அங்குச் சென்று பார்க்குமளவில், கருவேந்தியா பிள்ளை களத்திற் சிந்திய விதை நெற்களை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்த புலவர்கள் ‘ இப்படிச் சிந்திய நெற்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் இவரோ நமக்கு ஏராளமான பரிசளிக்கப் போகிறார்! தீரவிசாரியாமல் வந்துவிட்டோமே ’ என்று தமக்குள்ளே பேசிக் கொண்டனர். ‘ எப்படியிருப்பினும் இங்கு வந்த பிறகு அவரைக்கண்டு போதலே நியாயம் ’ என்று கருதி அவர்பால் நெருங்கிப் பேசினர். வந்த புலவர்களின் திறமையை உள்ளவாறுணர்ந்த பிரபுவும் அவர்கள் புலமைக்கு மனமகிழ்ந்து அவர்களைத் தக்கவாறு வரவேற்றுத் தமது வீட்டிற்கு அழைத்து வந்தார்; நெடுந்தூரம் பயணப்பட்டுவந்த களைப்பு நீங்க முதலில் உணவு கொண்ட பின்னரே பரிசில் பெற வேண்டும் என்றும் வற்புறுத்தினார். அதற்கு ஒப்புக் கொண்ட புலவர்களை வரிசையாக உட்காரவைத்துத் தலைவாழை இலைகளையிட்டு அவற்றிற் பவுன்களையும் மோகராக்களையும் பரிமாறி உணவு கொள்ள வேண்டிக் கொண்டனர். இதைப்பார்த்த புலவர்கள் ‘ஈதென்ன விந்தை! இவற்றை எங்ஙனம் உண்பது? சோற்றையுண்டாலன்றோ பசிதீரும்?’ என்றுகூற, அதற்கு அவர் ‘இதனை யறிந்திருந்து தானா, சிந்தின நெல்லைப் பொறுக்கினதை இழிவாய்க் கருதினீர்கள். சிந்தின பொன்னை விடுவீர்களா? அப்பொன்னினும் சிறந்த நெல்லை விடுவது எனக்கு நியாயமாகுமா?’, என்று அவர்களுக்கு வினயமாக அறிவுறுத்திப் பிறகு வேண்டியவாறு உண்டியளித்து அவர்கள் மனமகிழும்படி பரிசிலுமளித்தனுப்பினர். இதனைப்

புலவர்கள் வாயிலாக வுணர்ந்த கோல கொண்டா அரசர் கருவேந்தியாப் பிள்ளையைத் தனது சபைக்கு வரவழைத்து அவர்தம் கம்பீரமான தோற்றப் பொலிவையும் அறிவுத்திறனையும் கண்டுகளி கூர்ந்து, அவர் தன்னிடம் நாளும் நட்புரிமை பூண்டிருக்குமாறு பிரம்பூர் மிட்டாவை அவருக்குச் சுவாதீனப் படுத்திப் பல்லக்கு முதலிய வரிசையுடன் மரியாதை செய்தனுப்பினர். அது முதல் கருவேந்தியா பிள்ளையும் அவர் பின்னோர்களும் பிரம்பூரிலேயே வசித்து வந்தனர்."

ஆனந்தரங்கப் பிள்ளையின் தந்தையாகிய திருவேங்கடம் பிள்ளை பிரம்பூரில் வியாபாரஞ் செய்து வந்த செல்வர்களுள் ஒருவர் என்று முன்னமே கூறினோம். திருவேங்கடம் பிள்ளையின் மைத்துனராகிய நயனியப்பிள்ளை என்பவர் புதுச்சேரியில் பிரஞ்சுக்காரர்களுக்கு வியாபாரத் தொழில் நடாத்தும் பிரதானியாக இருந்தார். அக்காலத்தில் புதுவையில் பிரஞ்சு கவர்னராக இருந்த ஹெர்பர்ட் இந்தியாவில் பிரஞ்சு வியாபாரத்தைப் பலப்படுத்த வேண்டு மென்ற நோக்கத்தினால் பற்பல இடங்களிலுமுள்ள செல்வாக்குள்ள வியாபாரிகளை நன்கு அறிந்து கொள்ளப் பெருமுயற்சி செய்தார். இவரது தூண்டுதலினால் நயனியப்பிள்ளை தமது மைத்துனராகிய பிரம்பூர்த் திருவேங்கடம் பிள்ளைக்குப் பிரம்பூரை விட்டுப் புதுச்சேரிக்கே வந்து விடுவதால் உண்டாகும் பல நன்மைகளையும் எடுத்துக் கூறியதோடு, பிரஞ்சு கவர்னராகிய ஹெர்பர்ட்துரை அவருடைய முன்னேற்றத்தைப் பெரிதும் கருதியுள்ளா ரென்றும் பிரஞ்சு வியாபாரம் பலப்படுவதற்கு அவரையே பெரிதும் நம்பியிருப்பதாகவும் தெரிவித்தமையால், திருவேங்கடம் பிள்ளை பிரம்பூரை விட்டு 1716-ம் வருஷத்தில் தமது குடும்பத்தோடு புதுவைக்கே குடியாக வந்து சேர்ந்தனர். அக்காலத்தில் ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் மற்றுஞ் சில ஐரோப்பியர்களும் இந்தியாவில் தத்தம் வியாபாரங்களைப் பலப்படுத்துவதிலேயே பெருநோக்குடைய ராயிருந்தன ரென்பது நோக்கற்பாலது. திருவேங்கடம் பிள்ளை புதுவைக்குவந்த காலத்தில் அவர் குமாரனான ஆனந்தரங்கனுக்கு ஏழு வயது. திருவேங்கடம் பிள்ளை மற்றுஞ் சில செல்வவான்களான வியாபாரிகளோடு புதுச்சேரியிற் குடியேறிய கால முதல் பிரஞ்சு வியாபாரம் பலமடையத் தொடங்கிற்று. நயனியப்பிள்ளை திருவேங்கடம் பிள்ளை ஆகிய இருவரும் பிரஞ்சுக்காரர்களின் பிரதானிகளாக இருந்து புதுச்சேரி வர்த்தகத்தை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தனர்.

ஆனால் திடீரென்று இதற்குப் பெருந்தடையும் ஒன்று ஏற்பட்டது. ஹெர்பர்ட்துரை நயனியப்பிள்ளையின் மேல் பல குற்றஞ்சார்த்தி அவரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தினர். நயனியப்பிள்ளை சிறைச்சாலையிலேயே இறந்து விட்டமையின், யாவரும் அவரை ஹெர்பர்ட் துரை துன்புறுத்திக் கொன்று விட்டதாகவே கருதினர். நயனியப்பிள்ளையின் குமாரரான குருவப் பிள்ளையும், மைத்துனரான திருவேங்கடம் பிள்ளையும் கவர்னருக்கு அஞ்சிப் புதுவையை விட்டுச் சென்னைக்கு ஓடிப்போயினர். நயனியப்பிள்ளை இறந்தபின் அவர்தம் பிரிவாற்றாமையாகிய பிணியால் திருவேங்கடம் பிள்ளையும் நோயுற்று வையக வாழ்வை நீத்தனர் (1726). குருவப்பிள்ளை

சென்னையிலிருந்து இங்கிலாந்துக்குப் பிரயாணமாகி அங்கிருந்து பிரான்ஸ் தேசமடைந்து, அக்காலத்து அத்தேசத்து அரசப் பிரதி நிதியாயிருந்த ஆர்லியன்ஸ் பிரபுவின் முன்னிலையில் தன் தந்தை பிரஞ்சு அரசாங்கத்திற் குச் செய்த உதவியையும் புதுவை கவர்னர் ஹெர்பர்ட் அக்கிரமமாக அவரைச் சிறையிலிட்டது மன்றித் துன்புறுத்திக் கொலை புரிந்ததுமாதிய பல செய்திகளையும் தெளிவாக எடுத்துரைத்தார். இதன் பயனாக 1719-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஹெர்பர்ட் துரை கைதியாகப் பிரான்ஸுக் குக் கொண்டு போகப்பட்டார். இதற்கிடையில், குருவப்பிள்ளை தன் எஜ மானனாகிய அரசப் பிரதிநிதியின் நன்கு மதிப்பைப் பெற்றுத் தன் தந்தை யின் நிலையிலமர்ந்து வியாபாரத்தில் முன்னேற்றமடையலாயினர்; ஆயி னும் 1746-ல் அவர் இறந்து போகவே, 1747-ல் ஆநந்தரங்கப் பிள்ளை பிரஞ்சு ராஜ்ய வியாபாரத்திற்குத் தலைவராக நியமனம் பெற்றனர். நயனி யப்பிள்ளையும், திருவேங்கடம் பிள்ளையும் இறந்தபின், குருவப் பிள்ளை ஊரை விட்டோடிப் பிரான்ஸிற்குப் போய் வந்த காலத்திலும் அதன் பிறகும் ஆனந்தரங்கப்பிள்ளை பிரஞ்சு வியாபாரத்தைக் கைசோர விடாது நன்கு நடாத்தி வந்தமையாலும் ஒழுக்க நெறியினின்றும் சிறிதும் விலகா தவராய்ப் பெரியாரைப் பேணும் பெருந்தகையாயிருந்தமையாலும் இவரை பிரஞ்சு ராஜாங்கத்தாரேயன்றி யாவருமே கொண்டாடுவாராயினர். ஆநந்தரங்கப்பிள்ளை இந்திய பிரஞ்சு வியாபார முழுவதிற்கும் பெருந் தலைமை வகித்து வந்தமையால் அவருக்குண்டான செல்வாக்கு அளவற்றது. ஹைதராபாத் நைஜாம், மைசூர் அரசர், கர்நாடகத்தில் இருந்த நவாபுகள், திருவநந்தபுர அரசர் ஆகிய பல சிற்றரசர்களும் அவரது நட்பினைப் பெற விரும்பியதுமன்றி அவரை நன்கு மதித்தும் வந்தனர். பற்பல சமயங் களில் அவர்கள் இவருக்கு அனுப்பிய நன்கொடைகளையும் இவருக்கு அளித்த பட்டம் முதலிய விருதுகளையும் நோக்குவார்க்கு இவ்வுண்மை புலனாகும். 1742 முதல் 1754 வரை பிரஞ்சு கவர்னராக இருந்த டியூப்ளேக்ஸுக் (Dupleix) குண்டான பெருமைக் கெல்லாம் முதற் காரண மாயிருந்தவர் ஆநந்தரங்கப் பிள்ளையே. பிரஞ்சு ராஜ்யம் டியூப்ளேக்ஸின் காலத்தில் ஆங்கிலேயரும் அஞ்சும்படியான உயர் நிலையையடைந்தது ஆனந்தரங்கப்பிள்ளையின் அறிவுத்திறனாலேயே. இவரது அரசியல் திறமை யைக் கண்டு மகிழ்ந்த கர்நாடக நவாபு இவருக்கு ‘ வஜீர் ’ என்ற பட்டத்தை யளித்தனர். ஹைதராபாத் நைஜாம் ‘ வஜாரதன் ’ என்ற பட்டப் பெயர் அளித்தார். புலவர்கள் பலரும் இவரை ‘ வஜாரத விஜய ஆனந்தரங்கன் ’ எனப் போற்றிப் புகழ்வாராயினர். இவர் டியூப்ளேக்ஸினிடம் மிகுந்த நட் புரிமை பூண்டு வாழ்ந்து வந்தார். டியூப்ளேக்ஸ் கவர்னராயிருந்த பன் னிரண்டு ஆண்டு காலமும் ஆனந்தரங்கப்பிள்ளையின் அரசாட்சியென்றே சொல்லலாம். 1754-ம் ஆண்டில் டியூப்ளேக்ஸ் பிரான்ஸிற்குத் திரும்பி விட்டார். அவருக்குப் பதிலாக காடேஹ்யூ (Godeheu) என்பவர் பிரஞ்சு கவர்னராக வந்தார். அது முதல் ஆநந்தரங்கப் பிள்ளையின் செல்வாக்கும் அதிகாரமும் சிறிது குறைந்துபோயின. காடேஹுவைத் தொடர்ந்து தேலேரித் (Deleyrit) என்பவர் பிரஞ்சுக் கவர்னராக வந்தார். இப்புது கவர்னர் ரங்கப் பிள்ளைமீது அளவில்லாப் பொறுமை கொண்டிருந்தார்.

அவர் ரங்கப்பிள்ளையை வெறுக்கவும் தொடங்கினர். அரசாட்சியினும் வியாபாரத்திலும் ரங்கப்பிள்ளைக்கு இருந்த செல்வாக்கு அறவே மறைந்தது. ரங்கப்பிள்ளைக்கு மந்திரி பதவியும் போயிற்று.

இந்திய பிரஞ்சு ராஜ்யத்தை நிறுவுவதற்காகத்தானும் டியூப்ளேக்ஸும் இட்ட அடிப்படை தன் கண்ணெதிரிலேயே தகர்ந்து போவதைக் கண்ட ரங்கப்பிள்ளை வருத்தத்திற்கு ஆளாயினர்; பிணியும் அவரை வந்து எய்திற்று. 1761-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் நாள் ஆநந்தரங்கப் பிள்ளை இவ்வுலக வாழ்வை நீத்தனர். அவர் இறந்து நான்கே நாட்கள் கழித்து, அதாவது 1761-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் நாள் புதுச்சேரி நகரம் ஆங்கிலேயப் படைத் தலைவரான கர்னல் கூட் (Col. Coote) என்பவருடைய கைவசமாயிற்று.

ஆனந்தரங்கப்பிள்ளைக்கு இரண்டு ஆண் மகவுகள் பிறந்தன. மூத்த மகனாகிய அண்ணாசாமி இளமையிலேயே இறந்து போயினன். மற்றொரு மகனாகிய திருவேங்கடம் மணமுடித்து ஒரு பெண் மகவு பிறந்த பின்னர்ச் சில ஆண்டுகள் கழித்துக் காலமாயினன். இங்ஙனம் இரு புதல்வரும் இறந்து போயினமையால், ரங்கப்பிள்ளையின் இறுதிக் காலத்தில் ஆண் சந்ததியில்லை. பிற்காலத்தில், அவரது பரம்பரையோராக அவரது ஏராளமான சொத்துக்களை ஆண்டு வந்தவர்கள் அவரது பெண் வயிற்றுச் சந்ததியார்களே.

மேலே கண்ட விவரங்கள் எல்லாம், ரங்கப்பிள்ளையின் உடன் பிறந்தான் மகனும் மருமகனுமாகிய திருவேங்கடம் பிள்ளை பிரஞ்சு அரசாங்கத்திற்கு ரங்கப்பிள்ளை செய்த பேருதவிகள் யாவற்றையும் கண்டு அவருக்குப் பிற்காலத்தில் கவர்னரால் ஏற்பட்ட துன்பங்களையும் எடுத்துக்காட்டி, அக்குடும்பத்திற்கு நஷ்ட ஈடாக உபகாரச் சம்பளம் முதலிய நன்கொடையளிக்க வேண்டி விடுத்த விண்ணப்பம் ஒன்றால் விவரமாகத் தெரியவந்தன. இந்த விண்ணப்பத்தின் பிரதி ஒன்று அவர் பரம்பரையில் வந்த திருவேங்கடம் பிள்ளையிடம் இருந்தது.

ஆனந்தரங்கப்பிள்ளை தனது இருபத்தேழாவது வயதிலிருந்து அதாவது 1736-ம் ஆண்டு முதல் தினசரிக் குறிப்பு ஒன்று எழுதத் தொடங்கித் தன் இறுதிக் காலத்திற்குச் சில நாட்கள் முன்வரை தனக்கு முக்கியம் என்று தோன்றிய பல விஷயங்களையும் சுருக்கமாகவும் அழகாகவும் தொகுத்து எழுதியுள்ளார். இந்தத் தினசரிக் குறிப்பு எழுதிவைத்ததன் காரணம் யாதென்று அவர் எங்கும் குறிப்பிடவில்லை. ஆயினும், இது பிற்காலத்தில் பெரும் பயனளிக்கும் என்று கருதி எழுதியதாகவே தோன்றுகிறது. அக்காலத்தில் அரசாட்சி முறை நிலைபேறின்றி அடிக்கடி மாறுதலடைந்து வந்தமையாலும், ஒவ்வொரு கவர்னரும் தத்தம் மனப் போக்கின்படி நடந்து வந்தமையாலும், தன் அத்தை கணவனாகிய நயனியப்பிள்ளைக்கு முடிவு காலத்தில் அரசாங்கத்தாரால் நேர்ந்த துன்பங்களை ஆலோசித்துமே இத்தகைய தினசரி யொன்று எழுதிவைத்தார் என்று எண்ண இடமுண்டு. அதை எழுதிவைத்திருந்தால் அவ்வக் காலங்களில் நிகழ்ந்தவையெல்லாம்

தனக்குப் பிற்காலத்தில் வேண்டுமாயின் நினைவுக்குக் கொண்டுவரப் போதிய கருவியாக இருக்கும் என்று அவர் கருதியிருக்க வேண்டும்; அன்றியும், தன்மீது ஒரு கால் அரசாங்க விரோதக் குற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை விலக்கிக் கொள்ளுதற்கும் இது ஒரு சாதனமாகும் என்று கருதியும் இவ்வாறு செய்திருக்கலாம். இந்தத் தினசரியில் அரசாங்க சம்பந்தமாகவும், வியாபார சம்பந்தமாகவும், குடும்ப சம்பந்தமாகவும் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளையும், சிறிதாயினும் சரி பெரிதாயினும் சரி, தனக்கு முக்கியம் என்று தோன்றியவற்றை யெல்லாம் பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் தான் படுக்கைக்குப் போவதற்கு முன் எழுதிவைத்தனர் என்பது அவற்றைப்படிக்குநர்க்குப்புலனாம்.

தினசரி முழுவதும் தமிழிலேயே எழுதப்பெற்றுள்ளது. நடையும் செவ்விதாகிய எளியநடை. இங்கிலாந்து தேசத்தில் பெப்பிஸ் (Pepys) என்பவர் தினசரி வைத்திருந்ததாகக் கொண்டாடப்படுவது போலத் தமிழ் நாட்டிலும் ஒருவர் அருமையான தினசரியொன்று வைத்திருந்தார் என்ற சிறப்பிற்கு ரங்கப்பிள்ளை உரியர் என்பதற்கு ஐயமில்லை.

இவர் நற்கொடை வள்ளல் என்ற புகழ்மொழி நாடெங்கும் பரவவே, நாற்றிசையினுமுள்ள இரவல் மாக்கள் பலரும் பழுமரஞ்சேர் பறவையின மென இவரையண்முவராயினர். ‘கள்வன் நொண்டிச்சிந்து’ என்னுஞ் சிறு நூலில், கள்வன் ஆநந்தரங்கப் பிள்ளை தான தருமங்களிற் சிறந் திருந்தமையின் அவர் வீட்டில் கன்னமிட்டுக் களவு செய்தல் அடாது என்று கூறி அவர் பக்கத்து வீட்டிலுள்ள உலோபியொருவன் வீட்டிற் கன்னம் வைப்பதே தன்னுடைய தொழிலுக்கும் தனக்கும் பெருமையென்று கூறு மிடத்தில், “ஆநந்தரங்க துரை தான தர்மம், சொல்லப் போமோ அதை வெல்லப் போமோ” என்று கூறியிருப்பதை நோக்குமிடத்து இவரது வள்ளற்றன்மையைப் பாமரரும் அறிந்திருந்தமையைப் புலவர் விளக்குவது புலனாம்.

ஆனந்தரங்கப்பிள்ளையைப் பரிசில் காரணமாக அணுகிப் பயன்பெற்ற புலவர்கள் பலர். அவர்கள் அவ்வவ்வமயங்களில் எண்ணிறந்த தனிப் பாடல்கள் பாடியுள்ளனர்.

தொண்டைமண்டலம் நமச்சிவாயப் புலவர் பாடியது:

“பாரார் ஆர்சொல்லார் பறவைக்கு லங்கடம்பிற்
சீராரும் கிள்ளைமுதற் செப்பலால்—ஓரா
யிரம்பையா னந்தரங்கன் இன்பரங்கன் அன்பன்
பிரம்பையா னந்தரங்கன் பேர்.”

இப்புலவர் சீதக்காதி முதலிய வேறு பல வள்ளல்களையும் பாடியவர்.

ஒரு முறை, தொண்டைமண்டல சதகம் இயற்றிய படிக்காசுப் புலவர் ஆநந்தரங்கப் பிள்ளையைக் கண்டு பரிசில் பெறவிரும்பி வந்தார். அப் பொழுது அங்கிருந்த நமச்சிவாயப் புலவர், பிள்ளையவர்களிடம் வந்தவரை இன்னாரென்று அறிமுகப்படுத்து முறையில் “இவர் தொண்டைமண்டல

சதகம்பாடிய படிக்காசுப் புலவர் " என்று கூற, அப்பொழுது பிள்ளையவர்கள் அவரை நோக்கி, "ஐயா! தாங்கள் என்மீதா தொண்டைமண்டல சதகம் பாடியுள்ளீர் ?" என்று கேட்டனர். படிக்காசுப் புலவர் உடனே பாடிய செய்யுள் :

" மந்திரி யூகி யறிவினிற் சேடன் வடிவின்மதன்
இந்திர போகன் நிதியிற் குபேரன் இரவலர்க்கோர்
ஐந்தரு வாகுஞ் சொல்வாக்கி லரிச்சந்த்ர னுருமென
வந்தரு ளாநந்த ரங்கனும் வாழ் தொண்டை மண்டலமே. "

இச்செய்யுள் தொண்டைமண்டல சதகத்தில் இல்லாத செய்யுள்.

ஐவ்வாலைப் புலவர் என்னும் கவிஞர் பிள்ளையவர்கள் மீது பல தனிப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

" பானுகிர ணம்பார்க்கும் பங்கேரு கம்நிலவு
தானும்வரப் பார்க்கும் சகோரங்கள்—வானமரும்
மையைப்பார்க் கும்மயில்கள் மாவிஜயா நந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவோர் கண்."

அதே புலவர் பிள்ளையவர்கள் மீது நற்றாயிரங் கற்றுறையாகப் பாடியது :

" பாலையிலாள் பின்னங்காற் பஞ்சுளியென் றேசுளிப்பள்
பாலையிலாள் பின்னென் படுவாளோ—சோலையிலே
யாடுமயிற் பிரம்பூர் ஆனந்த ரங்கதுரை
நாடுதனி லென்னிளமின் னாள். "

இவரே பாங்கியிரங்கற்றுறையிற் பாடியது :

" இழைக்கின்ற கூடல்கி ணரு யிருகை வளையுறையா
மழைக்கண் கணீர் நிறை வாகத் தவளையின் வாய்க்கிங்கிணி
தழைக்குஞ் சரணமின் வாடுவ ளோதமி ழோர்க்குப்பொன் கொண்
டழைக்குங் கையானெங்க ளாநந்த ரங்கன் அணிவெற்பிலே. "

மதுரகவிராயர் என்னும் மற்றோர் புலவரும் பிள்ளையவர்கள் மீது பல தனிப் பாடல்கள் பாடியுள்ளார். அவர் பாடிய அம்மானை :

" அண்டர் குலதிலக னனந்த ரங்கைய வேள்
மண்டல மதான முகமதியங்காண் அம்மானை
மண்டல மதான முகமதியமே யாமாகிற்
கொண்ட வனசம் குவியாதோ வம்மானை
குவியுங் கரவனசங் குளத்திலே யம்மானை."

மற்றுமோர் முறை அதே புலவர் :

உலங்கொண்ட மணிப்புயனே பிரம்பூர்
ஆனந்த ரங்கா வுன்பாற் செல்ல
வலங்கொண்ட கருடனையா மிடங்கண்டோம்
எழினரையா வலத்தே கண்டோம்

பொலங்கொண்ட மணிமாட மீமிசையிற்
புயல்தவழும் புதுவை யென்னுந்
தலங் கண்டோம் நினதுநகை முகங்கண்டோம்
இனிவேண்டுந் தனங்கண்டோமே."

ஒரு முறை இராம கவிராயர் என்னும் புலவர் தமதூர்க்குப்போக வேண்டுமென்று பிள்ளையவர்களிடம் விரைந்து விடை கேட்க, அப்பொழுது பிள்ளையவர்கள் "என் பறக்கிறீர் ? மெதுவாகப் போகக்கூடாதா ?" என்ற பொழுது கவிராயர் கூறிய கவி :

"கொக்குப் பறக்கும் புறுப்பறக்கும்
குருவி பறக்கும் குயில்பறக்கும்
நக்குப் பொறுக்கி களும்பறப்பர்
நானேன் பறப்பேன் நராதிபனே
திக்கு விஜயம் செலுத்தி யுயர்
செங்கோ னடத்து மரங்காநின்
பக்க மிருக்க வொருநாளும்
பறவேன் பறவேன் பறவேனே."

இதனைக் கேட்டதும் பிள்ளையவர்கள் வேண்டியபரிசலளித்துப் புலவரை மகிழ்வித்தபொழுது கவிராயர் பாடியது :

"காராறு திங்கட் சொரிதலு மில்லை கவின்கொளுமிப்
பாராறும் நீத்தம் வருதல் சின்னாள்செழும் பங்கயமின்
னூராறு பயபத மான வாநந்த ரங்கன்செங்கை
யீராறு மாதமும் பொன்மாரி பெய்யும் இரவலர்க்கே."

பரதத்தில் வல்லுநளான அழகிய கணிகை யொருத்தி ரங்கப்பிள்ளை மனையில் பல்லோர் முன்னிலையில் ஆடிய காலத்தில் அவள் செய்த நடனத்திலே கண்ணுங் கருத்துமாக இராம கவிராயர் இருந்தபொழுது ரங்கப்பிள்ளை அவரைப் பார்த்து ஏதோ பேசினர். வேற்று நினைவாக இருந்ததால் கவிராயர் கவனிக்கவில்லை. அப்பொழுது பிள்ளையவர்கள், "கவிராயருக்குக் கணிகை மீதே கருத்துப் போலும்" என்று கூறினர். அப்பொழுது கவிராயர் கூறியது :

"மூவொன்ப தென்பதிலோர் நாளில்லை மொய்வனத்திற்
றூவுந்தனி மிருகந் தானில்லை நேரே
வளையா நடையில்லை வாரிறுக விம்மும்
முலையாளை யான்முயங்கு தற்கு."

(அத்தம், வேங்கை, செங்கோல் : இவை பொன்னுக்குப் பெயர்கள்.)

ஆநந்த ரங்கப் பிள்ளைக்கு மூத்தபிள்ளையாகப் பிறந்த அண்ணுசாமிக்கு ஒருவயது நிறைந்த நாளில் ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்தது. அதற்குப் பல நாடுகளிலிருந்தும் பல பிரபுக்கள் வந்திருந்தனர். அன்றிரவு நாட்டியக் கச்சேரி நடந்தது. அவ்வமயம் ரங்கப்பிள்ளையின் நண்பரும் மிக்க செல்வம் படைத்த குஜராத்தி வியாபாரியுமான ஜம்புதாஸ் என்பவர் வந்திருந்தார்.

அவர் குழந்தைக்குப் பிறந்தநாள் நன்கொடையாக ஒரு தங்கத் தட்டத்தில் நிறைய மோகராப்பொற் காசுகளை வைத்துக் குழந்தையைத் தன் கையி லெடுத்துச் சீராட்டி அதன் கையில் மோகராத் தட்டத்தைக் கொடுத்தனர். அதை இருகையாலும் தூக்கமுடியாமல் தூக்கிச்சென்று ரங்கப்பிள்ளையின் மடிமீதேறியுட்கார்ந்தது. அப்பொழுது ரங்கப்பிள்ளையின் முன்னிலையில் ஆடிக்கொண்டிருந்த கணிகை தான் நடனஞ் செய்யு முறையில் முன்னும் பின்னுஞ் சதி பெயர்த்த வண்ணம் நடந்துகொண்டு கையைக் கையை நீட்டி அபிநயம் புரிந்து கொண்டிருந்தனள். இதைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்த குழந்தை கணிகை கையை நீட்டியது தன்னெதிரிலுள்ள தங்கத் தட்டத்தை வேண்டியே என்று கருதிற்று; பிறகு மோகராவுடன் தங்கத் தட்டத்தை இருகைகளாலும் எடுத்து அவளை நோக்கி நீட்டிற்று. அவ்வளவு மிகுந்த செல்வத்தைப் பெற்றுக்கொள்ள அஞ்சிய கணிகை அசைவற நின்றுவிட்டாள். பிறகு ரங்கப்பிள்ளையே 'குழந்தை கொடுப்பதால் பெற்றுக்கொள்' என்று கூறியதால் அவள் தட்டத்தை ஏற்றுக்கொண்டு வணங்கினாள். அவ்வமயம் அங்கு வந்திருந்த மதுர கவிராயர் கூறிய செய்யுள் :

"கார்க்கரனு நந்தரங்க விஜயகற்ப
கத்தருவில் முளைத்தெழுந்த கன்றோமன்றே
பார்க்கவந்த ஜம்புதா செடுத்துக்கையாற்
பக்ஷமுடன் முத்தாடிப் பரிவாயீந்த
சீர்க்கநகந் தனைவாங்கிப் புண்கள்பாடும்
தேனனையாட் கீந்துமிகு திறமேபூண்ட
நாற்கவிஞர் புகழண்ணு சாமியென்போன்
நடைகற்கு முன்னமே கொடைகற்றானே."

இனி ஆனந்தரங்கப்பிள்ளையின் இரண்டாவது குமாரனாகிய திருவேங்கடம் பிள்ளைக்கு விவாகமானபொழுது, மணமகனும் மணமகளும் ஊசலிலமர்ந்தாடிய காலத்தில், மதுர கவிராயர் பாடியது :

"சோதிமதிக் குடைகவரி யாலவட்டம்
துவசமவு தாகிரிபே ரிகைகள் சட்டம்
கோதில் பசுஞ் சிவிகையம் பாரித்திட்டம்
குமாரபா ணங்கள் வஜீரென்னும் பட்டம்
நீதியொடு நிஜாமலிகான் அளிக்கப்பெற்று
நிலைகொளுமா நந்தரங்க ராயர்வாழ்வே
மேதினியோர் துதிக்கும் வஜாரதராய
விஜயதிரு வேங்கடமா லாடூசல்."

இச் செய்யுளால் ஆனந்த ரங்கனுக்குக் குமார பாணங்கள் என்னும் பட்டம் ஒன்றுண்டென்பது தெரிகிறது.

மேற்சொல்லிய திருவேங்கடம் பிள்ளைக்குப் பெண் குழந்தை பிறந்து அதற்கு ஒரு வயதாக, அப்பொழுது நிகழ்த்திய ஆண்டு விழாவில் மதுர கவிராயர் பாடியது :

"செஞ்சிநக ரார்க்காடு கன்னூர் கடப்பைமுகில்
சீர்ப்பை வெங்கடகிரி மைசூர்
செகநாதபுரிகாசி விஜயா புரங்கதிர்
செம்பொன் மதில் சூழ்ந்த டில்லி
தஞ்சைநகர் தென்மதுரை நெல்வேலி வெண்டிரைத்
தண்குமரி மலையா ளமும்
தனித்தனி புரக்கு முடிமன்னவ ரெலாமலர்த்
தாமரைச் செங்கை கூப்பி
யஞ்சலிசெய் தேபணியு மரசாட்சி புரிவிஜய
வாநந்த ரங்க ராயன்
அருள்புதல்வ னும்விஜய திருவேங் கடக்குரிசில்
அகமகிழ்ந் தினித ளித்த
பஞ்சியே விஞ்சுவன கிஞ்சுக மதிக்குமிதழ்
மணிவாயின் முத்த மருளே !
மங்கலஞ் சேர்வதன மங்கைநா யகவல்லி
மணிவாயின் முத்த மருளே !"

இச்செய்யுளால் ரங்கப்பிள்ளையின் பரந்த செல்வாக்கின் நிலை தெற்றென விளங்கும்.

ஆனந்த ரங்கப்பிள்ளையைப் பற்றி இந்நூலால் நாம் பல விவரங்களை அறிகிறோம் :

இவர் பிரம்பூரைச் சேர்ந்தவர் என்பது இந்நூல் ஒவ்வொரு செய்யுளாலும் பெறப்படும் ; ஆயினும் இவருக்கும் புதுவைக்கும் உள்ள தொடர்பு இரண்டு இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளது. 'பிரம்பை யரங்கன் புதிய பதி' (செய். 288) ; 'தென்புதுவையில் ஐந்தருவென்று முத்தியப்பன் மகிழ் மைத்துனன் தண்டமிழோர்க் கொரு கொண்டல் ரங்கன் பிரம்பூர் மகிழந்தவர்' (செய். 391) ; என்னுமிடங்களில் புதுவை பேசப்படுகின்றது. இவர் யாதவ (இடைக்) குலத்தைச் சேர்ந்தவர் என்பது கீழ்க்காணும் அடிகளில் குறிக்கப்பட்டுள்ளது : 'இருகோவை யொத்த' என்று தொடங்கும் தனிப்பாடலில், 'பொருகோவைத் தழுவு பிரம்பூர்த் திருவேங்கட தீரன் புத வா' என்பதியும், 'அண்டர் வரோதயன் பிரம்பூர்த் திருவேங் கடேந்தர நிதியளித்த பாலன்' என்னும் தனிப்பாடற் பகுதியிலும், 'அண்டர்க்கு இறை ரங்கன்' (செய். 387) என்பதியும். இவர் தந்தை பெயர் திருவேங்கடம் பிள்ளை என்பது மேற்கண்ட விடங்களிலும் பிறண்டும் குறிக்கப்பெற்றுள்ளது. 'பிரம்பூர்த் திருவேங்கட தீரன் புதல்வா' என்றும் 'பொன்னங்கு வட்டைப் பொரு திருவேங்கட பூபன் பெற்ற மன்னன் பிரம்பையினுறநந்த ரங்கன்' (செய். 32), என்றும் 'வாகைப்பூ யாசல வேடிரு வேங்கட மால்புதல்வன்' என்றும், 'எம்பாலன் புற்ற திருங்வேங்கடம் பெற்ற எந்தல்' (செய். 192) என்றும் வருதல் காண்க. மற்றும் இவர் தம் நெருங்கிய நண்பரோ பிறரொருவரோ, 'முத்தையன்' 'முத்தியப்பன்' என்னும் பெயர்களோடு இந்நூலிற் பேசப்படுகின்றார்.

" தமிழ்ப் பாப்புலவர் மெச்சவரு, முத்தையா ! " என்று தனிப்பாடலில் வருதலும், " புதுவையிலேந் தருவென்னு முத்தியப்பன் மகிழ் மைத் துனன் " என்று வருதலும் காண்க. இம் முத்தியப்பன் என்பவர் ஆனந்த ரங்கப்பிள்ளையின் மைத்துனர் என்று கொள்ளுதற்கும் இதில் இடம் உண்டு. இம் முத்தையன் பெயர் முத்தப்பன், முத்துசாமி என்று வேறு பலவித மாகவும் தனிப்பாடல்களில் காணப்படுகிறது.

இந்நூலில் பாட்டுடைத் தலைவர் பெயர் ரங்கன் (செய்.387), அரங்கன் (செய்.390), இரங்கன் (செய்.129), ரங்கேந்த்ரன் (செய். 28), ஆனந்த ரங்கன் (செய்.18), அரங்கப்பன் (செய்.16), அரங்கேந்த்ரன் (செய்.62), இரங்கேந்த்ரன் (செய்.111), இரங்கப்பன் (செய்.124) ஆகிய பலபெயர்களால் குறிக்கப்படுகின்றது.

ரங்கப்பிள்ளை, தன்மீது தேசிகர் கோவைப் பிரபந்தம்பாடி அரங்கேற்றிய தற்குப் பரிசிலாக

" ............ ரத்ன
குண்டலமுஞ் சரப்பணியும் பதக்கமொடு சாலுவையுங்
கொடுத்தே நாளுந்
தண்டமிழா ரூர்வசிக்கப் பொன்முடிப்பும் பூமிகளுந்
தந்திட் டானே "

என்பது தனிப்பாடல். இயற்புலவர்க்கேயன்றி இசை நடனப் புலவர்களுக்கும் அவரவர் தம் வரிசையறிந்து மிகுந்த பரிசில் வழங்குவது அவ்வள்ளலுக்கு இயல்பு. " இசைவாணருக்குப் பொன்போலும் ஆநந்த ரங்கா " (செய்.84), என்னும் கூற்றால் இசைப் புலவர்களைப் பிள்ளையவர்கள் ஆதரித்தமை விளங் கும். சமயம் வாய்த்த பொழுதெல்லாம் நடனக் கலைவாணர் தம் திறனைக் கண்டுகளித்து அவர்களைப் போற்றுதல் பிள்ளையவர்களின் மரபு. கலை வாணர்களை இவர் போற்றி வந்தமை இந்நூற் பெரும்பான்மைச் செய்யுட்களாற் பெறப்படும்.

ரங்கப்பிள்ளை சூழ்ச்சித் திறன் மிக்கவர் என்பதும் சொல்வன்மை நிறைந்தவர்என்பதும் பிறர் நினைத்தற்குமுன் இவர் நினைத்துச் சொல்லும் திறமை வாய்ந்தவர் என்பதும் " எண்ணுக்கு முன் சொல்லும் ஆனந்த ரங்கா " (செய்.170) என்பதால் போதரும். இதற்குப் பிறர் எண்ணத்தைத் தவறாமல் உணர்ந்து உள்ளபடி கூறும் திறனுடையர் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். இத்துணைச் சொல்வன்மை மிக்க பெருந் தகையார் வெற்றுச் சொல் பேசாதவர் ; சொன்ன சொல் தவறாதவர். "வசனம் தப்பாத ரங்கேந்த்ரன் " (செய்.214) என்றதும் " சொல்லொக்குஞ் செய்கைப் பிரம்பை ரங்கேந்திரன் " (செய்.100) " சிறந்த கல்விச் சொல்லை மெல்லுந்துரைரங்கன் (289), என்றதும் காண்க. அரசியற் பெரு நெருப் போடு நெருங்கிப்பழகும் நிலையிலிருந்த பிள்ளையவர்கள் எழுத்தெண்ணிப்

பேசுவதையும், சொன்ன சொல்லைக் காப்பதையும் விரதமாகக்கொண்டிருந்தனர் எனல் வியப்பன்று. தவிர, இவர் பல கலைப்புலவர்களைப் போற்றிப் பழகிய பழக்கத்தால் பலவகைக் கலைகளின் பண்பினையும் ஓரளவு தெரிந்து வைத்திருந்தனர் என்பதும் அக் கலைகளை மேலும் மேலும் ஆராய்வதில் பேரார்வம் கொண்டிருந்தார் என்பதும் " நானு கலைதேரி ரங்கன்" (செய்.129) என்பதாற் காணப்பெறும் ; " தமிழிற்கு அகத்தியன் போலிங்குயருங்கல்வியாநந்தரங்கன் " (செய்.176, என்றமையும் காண்க. ரங்கப்பிள்ளை சைவ வைணவ சமயங்களில் பொது நோக்குடையராய் விளங்கினர் என்பது இந்நூற் பாடல்களில் சில இடங்களால் விளங்கும். " சங்கரற்கு அன்புசெய் ஆநந்த ரங்கன் " (செய்.110), " சங்கரனை வந்திக்கும் ஆனந்த ரங்கன் " (செய்.113), " கூறொருபாலுமை கொண்டோனுக்கு அன்புளங் கொண்டுயர்ந்த ......அரங்கேந்த்ரன் " (செய்.225) என்றும், " திருமாலுக்கு அன்பு செய்வள்ளல் " (செய்.323) என்றும் வருதல் காண்க.

ஆனந்த ரங்கப்பிள்ளையின் அரசியல் வாழ்க்கையைப்பற்றியும் இந்நூலில் குறிப்பு வருகின்றது. " செஞ்சி விஜயாபுரம் டெல்லி மட்டும் செங்கோல் செலுத்தும் " (செய்.8) என்னுமிடத்தில் பாட்டுடைத் தலைவரது அரசியற் பெருமை ஒருவாற்றான் விளங்கும். பிரஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியாரது இந்திய கவர்னராயிருந்த டியூப்ளேக்ஸின் வலக்கை எனத்தகும் பெருமையோடு இவர் விளங்கியவராதலின், அக் கம்பெனியாருக்குக் கர்நாடகத்திலும், மத்திய இந்தியாவிலும் மொகலாயப் பேரரசர்தம் அவையிலும் இருந்த செல்வாக்கையெல்லாம் இவர்மீது ஏற்றிக் கூறினர் எனல் ஒருவாறு பொருந்தும் ; அன்றி, புலவர் பாட்டுடைத் தலைவர் தம்பெருமையைப்பற்றி மிகைபடக்கூறல் ஓரணியின் பால் அடங்கும் என்றும் கொள்ளலாம். இவர் படைக்கலப் பயிற்சி மிக்கவர் என்பதும் பலபோர்க்கள வெற்றி கண்டவர் என்பதும் ' வாளும் பரிசையுங் கொண்டொன்னலரை மறித்தவர் நீடோளுங்கவசமும் சோடுந்துணித் திட்ட துங்கரங்கன் ' (செய்.357) என்பதாற் புலனும்.

ஆனந்த ரங்கப்பிள்ளைக்குப் பலபட்டப் பெயர்கள் உண்மை இந்நூலால் அறியக் கிடக்கின்றது ; இந்நூற் பிரதிக்கு முன்னெழுதிச் சேர்க்கப்பட்டிருக்கும் குறிப்பாலும், ' செல்வம் படைத்த விஜயன் ' (செய்.267) என்பதாலும் இவருக்கு ' வஜாரத விஜயன் ' என்னும் பட்டம் உண்டு என்பது போதரும். ' தியாக விநோதன் ' (செய்.127), ' வீசுய் தியாகன் ' (செய்.180), ' இராய குலோத்தமன், ' (செய்.200), ' அகளங்கன் ' (செய்.222), ' மாராபிராமன் ' (செய்.296) என்று வருமிடங்களிலும் பட்டப்பெயர்களே பேசப்படுகின்றனவா என்பது தெரியவில்லை. மதுரகவிராயர் இயற்றிய ஒரு தனிப்பாடலால் இவருக்குக் ' குமாரபாணங்கள் ' என்னும் பட்டம் ஒன்று உண்டு என்பது புலனும். பிரபந்தங்களுள் மிகவும் கடினமான வகையைச் சேர்ந்த கோவை, அக்காலத்து வாழ்ந்து வந்த முதன்மையான ஒரு புலவரால் இவ்வள்ளல் மீது பாடப்பட்டிருத்தல் ஒன்றே ரங்கப்பிள்ளையின் பெருமைக்குச் சான்று பகர்வதாகும்.

## IV. நூலாசிரியர் வரலாறு

இந் நூலாசிரியர் தியாகராய தேசிகர் என்பவர். இவர் திருவாரூரைச் சேர்ந்தவர்; இலக்கண விளக்கம் இயற்றிய வைத்தியநாத நாவலரது குமாரர். இத்தியாகராய தேசிகரே அவர் தம் தந்தையார் இயற்றிய இலக்கண விளக்கத்தில் அவர் எக்காரணத்தாலோ இயற்ருது விட்டுப்போன பாட்டியற் பகுதியை இயற்றியவர். இஃது இலக்கண விளக்கப்பதிகத்தில்

" * * * இலக்கண விளக்க மென்ன
நாட்டினன் வைத்திய நாத தேசிகன்
* * * * * * * * * * * *
தந்தைமுன் னுரைத்தநூ ருன்முடி பெய்த
* * * * * * * * * * * *
புலங்கொளப் பாட்டிய லிலங்க வுரைத்தனன்
வாய்மைதரு தியாக ராய தேசிகனே "

என வருமாற்ருல் அறியப்படும். இப்பதிகம் இயற்றினுர் தியாகராயதேசிகரது மாணுக்கரும் புதல்வருமான வைத்தியநாத தேசிகர் என்பது அப்பதிகத்தின் இறுதியிற் காணப் பெறும் கீழ்க்காணும் வாக்கியத்தால் பெறப்படும். " இப்பதிகச் செய்யுள் செய்தான் வைத்தியநாத தேசிகன் மகன்பாட்டியல் பகர்ந்த தியாகராய தேசிகன் மாணுக்கனுகிய புதல்வன் வைத்தியநாத தேசிகன் என்றறிக." இப்பதிகத்தால் தியாகராய தேசிகர் அவர் தம் தந்தையாரது இரண்டாம் புதல்வர் என்பதும் பெறப்படும். இவர் தம் தமையனுர் சதாசிவ தேசிகர் என்பவர். அவரே இலக்கணவிளக்கத்திற்குச் சிறப்புப்பாயிரம் கூறியவர்.

தந்தையும் அவர் தம் அறிவறிந்த இரு புதல்வரும் தமிழ் மொழியின் இலக்கிய இலக்கணக் கடற்கு எல்லே கண்டவர்கள். இலக்கண விளக்கம் வகுத்த வைத்தியநாத தேசிகர் மாதைத் திருவேங்கட நாதர், படிக்காசுப் புலவர் முதலிய பெரும் புலவர்களுக்கு ஆசிரியராகத் திகழ்ந்தவர். தந்தையும் மக்களும் தமிழ்ப்பாடம் சொல்லுவதில் நிகரற்றவர்களாயிருந் தனர். சதாசிவ தேசிகர் தம் மாணுக்கர்களிற் சிலர் ஒரு முறை யாப் பருங்கலக் காரிகையை மனப்பாடம் செய்துகொண்டே தூதுளங்காய்பறித்துக் கொண்டிருந்தனர். இதைக் காண நேர்ந்தபடிக்காசுப்புலவர்

" கூடுஞ் சபையிற் கவிவா ரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குருவே முன்னுன் தந்தைதம்மாற்
பாடும்புலவர்க ளானே மின்றிச் செம்மற் பட்டியெங்குங்
காடுஞ்செடியு மென்னே தமிழ்க் காரிகை கற்றதுவே "

என்று பாடிக் கொண்டாடினுர்.

இத்துணைச் சிறப்புடைய மரபைச் சேர்ந்த தியாகராய தேசிகர் அந்தகக் கவி வீரராகவ முதலியார், தொண்டைமண்டல சதகம் பாடிய படிக்காசுப் புலவர், ஒருதுறைக்கோவை இயற்றிய அமிர்தகவிராயர், இராமகவிராயர், இலக்கணக் கொத்து இயற்றிய ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ஆகிய பெரும் புலவர்களது சமகாலப் புலவராக இருந்தார்.

அவர்காலத்தில் வள்ளன்மையினும், அறிவு ஆற்றல்களினும் தலை சிறந்து விளங்கிய புதுவை துபாஷ் ஆநந்தரங்கப் பிள்ளை என்பார் மீது இக் கோவைப் பிரபந்தத்தை 1739-ம் ஆண்டில் பாடத் தொடங்கி 1755-ம் ஆண்டில் முற்றுவித்தனர். இவர் இந் நூலை இயற்றி அரங்கேற்றி முடிப்பதற்குப் பதினாறு ஆண்டுகள் ஆயின ; ஆதலால் இந் நூல் மிகவும் மெல்லவே இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவு. இவர் இந் நூலை இயற்றி முடித்தபின்பும் ஆனந்தரங்கப்பிள்ளை நூல் அரங்கேற்றத்திற்கு வேண்டுவன செய்து பரிசில் அளிக்க முன் வராமை கண்டு, இவர் ரங்கப் பிள்ளைக்கு நெருங்கிய நண்பரும் அறிவுரை பகர்வோருமாயிருந்த 'முத்தையன்' என்பாரை வேண்டிக்கொண்டு அவர் மூலம் பிள்ளையின் நன் மதிப்பைப் பெற்று நூலை அரங்கேற்றினர். புலவர் அம்முத்தையனை "புலவர் மெச்சவரு முத்தையா கோவைமொழி விளங்க ஆனந்தரங்கைய னுக்கு அந்தரங்கமுறச் சாற்று" என்று வேண்டினர். இனி, இந் நூல் இயற்றி முடித்து, அரங்கேற்றம் ஆவதற்கு முன்பு இவர் பல இடையூறு களையும் மீறிவர வேண்டியிருந்தது என்றும், ஆனந்தரங்கப் பிள்ளையின் நெருங்கிய உறவினராயும் அவ்வப்போது அறிவுரை பகர்வோராயும் இருந்த முத்தையன் என்பார் புலவர் மீது பொறாமை கொண்டிருந்தார் என்றும், அவரைப்போற்றித்தன் வயப்படுத்திக்கொள்ள விரும்பிய புலவர் அவர் மீது ஒரு பாடலைப்பாடிக் கோவைப் பிரபந்த அரங்கேற்றத்தைச் சாதித்துக் கொண்டனர் என்றும் இவ்வரலாறு கூறப்படுகின்றது.

கோவை நூலின் பெருமையை உள்ளவாறு உணர்ந்த ஆநந்தரங்கப் பிள்ளை தமிழ் வள்ளல்களின் மரபையொட்டிப் புலவரை ஏற்றவாறு பரிசிலளித்துப் பெருமைப்படுத்தினார். இப் புலவருக்கு ரதன குண்டலமும், சரப்பணியும், பதக்கமொடு சால்வையும் கொடுத்துத் திருவாரூரில் வேண்டும் வசதிகளோடு வசிக்கப் பொன் முடிப்பும் பூமிகளும் பரிசிலாக ரங்கப்பிள்ளை அளித்தனர் என்பது 'அண்டர்வரோதயன்' என்னும் தனிப் பாடலால் நன்கு விளங்குகிறது.

மேற்கூறியவற்றால் தியாகராய தேசிகர் இக் கோவை நூலை ரங்கப் பிள்ளையின் வேண்டுகோளின்றித் தாமே இயற்றியபின் அவ்வள்ளலது ஆதரவைப்பெற்று அரங்கேற்றிப் பரிசில் பெற்றனர் என்பது புலனாகும்.

இந் நூலாசிரியரும் ஏனைய புலவர்களைப் போலப் புதுவை ஆனந்த ரங்கப்பிள்ளையை நாடிப்பரிசில் பெறச் செல்வதுண்டு. இவர் அது போன்ற சமயங்களில் பாடியுள்ள தனிப்பாடல்கள் பல. இந் நூலோடு தொடர் புடையவையாக இவர் பாடியுள்ள தனிப்பாடல்கள் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

இனி, இந் நூலை இயற்றினார் தியாகராய தேசிகர் அல்லர் என்றும், இலக்கண விளக்கம் வைத்தியநாத நாவலர் தம் முதல் மகனாரான சதாசிவ தேசிகர் என்பாரே என்றும் கூறுவாருமுளர். இந் நூலுக்குக் கிடைத்த ஏட்டுப் பிரதிகள் இரண்டே. அவற்றுள் ஒன்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராயிருந்து ஓய்வு பெற்றுள்ள திரு இராவ்சாகிப்

எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் மதுரைக் கல்லூரி திரு கார்மேகக் கோனாரவர்களிடமிருந்து பெற்ற பிரதி ; இஃது பல் வேறு வாயிலாகவந்து தற்போது தமிழ் அறிஞர் மே. வி. வேணுகோபால பிள்ளையவர்கள் வசம் உள்ளது. இப் பிரதியில் ஆனந்தரங்கன் கோவை ஆசிரியர் பெயர் 'சதாசிவ தேசிகர்' என்று குறிக்கப்பட்டுள்ளதாகச் சிலர் கூறு நின்றனர். 'ஆனந்தரங்க சம்பு' என்னும் வடமொழி நூலைப் பதிப்பித்துள்ள டாக்டர் வி. ராகவன் அவர்களும் ஆனந்தரங்கன் கோவையை இயற்றியவர் சதாசிவதேசிகர் என்றே குறித்துள்ளனர். இக் குறிப்புக்கும் மேற்கூறிய கூற்றே ஆதாரம் என்று தோன்றுகிறது. இஃது இவ்வாறாக, ஆனந்தரங்கப்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்று நூலை நல்ல முறையில் இயற்றியுள்ள திரு. தேசிகம் பிள்ளையவர்கள் அந் நூலில் ரங்கப் பிள்ளை மீது இரு கோவைப் பிரபந்தங்கள் இயற்றப்பட்டுள்ளன வென்றும், அவற்றுள் ஒன்று சதாசிவ தேசிகராலும், மற்றொன்று தியாகராய தேசிகர் என்பாராலும் என்றும் குறித்துள்ளனர். ஆனந்தரங்கன் கோவை என்னும் பெயரோடு நமக்குக்கிடைத்துள்ள இருசுவடிகளும் ஒரே நூலின் இரு பிரதிகள் ஆகையால் ரங்கப்பிள்ளை மீது இரு வேறு கோவை நூல்கள் இயற்றப்பட்டன என்னும் கொள்கை கொள்ளற்பாலதன்று. அன்றியும் இப்பதிப்பிற்குப் பெரிதும் பயன்பட்ட பிரதியின் தொடக்கத்தில் கீழ்க்கண்ட வாறு வரையப்பட்டுள்ளது :—

"திருவாரூரிலிருக்கும் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத தேசிகர் குமாரர் தியாகராய தேசிகர் சித்தார்த்திஸூ ஆவணிமீ 15உ சுக்கிரவாரதினம் பிரம்பூர் மகா-ா-ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் வஜாரத விஜயவாநந்த ரங்கப்பிள்ளையவர்கள்மேற் கோவைப் பிரபந்தம்பாட ஆரம்பித்து யுவஸூ ஆவணிமீ 3உ நிறைவேறி அரங்கேற்றுபடி செய்தது."

மற்றும் தமிழ் அறிஞர் மே. வீ. வேணுகோபால பிள்ளையவர்கள் வசம் உள்ள பிரதியிலும் நூலாசிரியரைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிக்கப் பெற்றுள்ளது :—

"சித்தார்த்திஸூ ஆவணிமீ ௰௫உ சுக்கிரவார நாள் ஆனந்த ரங்கக் கோவைபாட ஆரம்பித்து யுவ ஸூ ஆவணிமீ ௩ உ நிறைவேறி அரங்கேற் றூப்படி செய்தது.

"திருவாரூரில் இலக்கண விளக்கம் பண்ணின வயித்தியனாத பண்டாரங் குமாரன் தியாகராச பண்டாரம் பிரம்பூர் மகாராசராய மான்யராச ஸ்ரீ பிள்ளை யவர்கள் ஆனந்தரங்கப்பிள்ளையவர்கள் பேரில் பாடின பிரபந்தக் கோவை. . ."

கிடைத்த இரு பிரதிகளிலும் இவ்வாறே காணப்படுதலின், இந் நூலாசிரியர் தியாகராய தேசிகரே என்பது நன்கு விளங்கும்.

## V. உரையாசிரியர் வரலாறு

இந்நூலுக்குஉரை இயற்றியவர் ந. பலராம ஐயர் அவர்கள் (1876-1943). இவர் கடலூரைச் சேர்ந்தவர். மேற்படிப்பை முன்னிட்டுச் சென்னைக்குப் போந்து கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்தனர். அப்பொழுதே கணிதத்திலும் தமிழிலும் மிகவும் கூரிய அறிவுபடைத்திருந்தனர். கல்லூரியில் ஆசிரியர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரோடு தொடர்பு ஏற்படவே, அதன்

பயனாகத் தமிழ் ஆராய்ச்சியையே வாழ்க்கைப் பயனும் இன்பமுமாகக் கொண்டனர். இவர் சிறுவயதிலேயே செய்யுள் இயற்றும் வன்மையையும், உரை நடை எழுதும் திறனையும், சொற்பொழிவாற்றும் சக்தியையும் ஒருங்கே பெற்று விளங்கினவர். இவர் கடலூர்க் கலாசாலையிலும், காரைக்குடிக் கலா சாலையிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழாசிரியப் பணிசெய்து வந்தனர். இவர் இயற்றிய நூல்கள் தசரதன் தவறு, வல்லீ பரிணயம், மத்தவிலாசப் பிரகசனம்[1] என்னும் நாடகங்களும், தாமரை நாண்மலர், யௌவனாம்பிகை பிள்ளைத் தமிழ்[2] என்னும் செய்யுள் நூல்களும், சூளா மணி வசனம், சிலப்பதிகாரக்கதை, ஆத்திச்சூடி நீதிக்கதைகள், தசகுமார சரித்திரம் முதலிய உரை நடை நூல்களுமாம். பிற்காலத்தில், பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்) இயற்றிய நூல்களை உலகத்தோர் நன்குணர்ந்து பயனெய்துமாறு விளக்க உரை எழுதி உதவியவர் இவரே. இவ்வாறு இவர் எழுதியுதவிய உரைகளுள் முக்கிய மாகக் குறிப்பிட வேண்டியது நாடகவிய லுரையாகும்.[3] இனி இப்பதிப் பிற்கு மிகப்பயன்பட்ட ஆனந்த ரங்கன் கோவைப் பிரதி இவ்வுரையாசிரிய ருக்குப் புதுவையில் ஆநந்தரங்கப்பிள்ளையின் மனையிலேயே கிடைத்தது. இவர் ஆனந்தரங்கப்பிள்ளையைப்பற்றி இயற்றியுள்ள வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை யொன்றிலிருந்து கீழ்க்காணும் விவரமும் வேறு பல விவரங்களும் தெரியவருகின்றன :—

" நான் கடலூரில் இருந்த காலத்தில் ஒரு முறை புதுவைக்குச் சென்றேன். அங்கு அதுவரை அச்சுக்குவராத பழைய நூல்கள் இருக்குமோ என்று எனது நண்பர் ஒருவரை விசாரித்த காலத்தில் ஸ்ரீமான் ரங்கப்பிள்ளையவர்கள் வீட்டில் விசாரித்தால் ஒரு கால் இருக்கலாம் என்று அவர் கூறினார். சென்று பார்த்தபொழுது, ரங்கப்பிள்ளையின் பரம்பரையில் வந்தவராகிய ஸ்ரீ திருவேங்கடம் பிள்ளை என்பவர், ரங்கப் பிள்ளை காலத்திலிருந்து சேமித்துப் போற்றி வந்த பல ஏடுகளைக் கொணர்ந்து தந்து ' இவற்றை எக்காலத்தும் எடுத்தவருமில்லை, பார்த்த வருமில்லை, இவை எமக்கு எவ்விதத்தாலும் பயனற்றுக் கிடப்பதால் யாரேனும் தமிழ் தெரிந்தவர்களிடம் கொடுத்து விடலாம் என்று கருதி யிருக்கிறேன் ; பார்த்த பின்னர், பயன்படும் என்று கருதினால் அவற்றை எடுத்துக்கொள்ளலாம் ' என்று கூறினார்............ அங்குக் கிடைத்த ஏடுகளை ஆராய்ந்து பார்த்ததில் அவ் வக்காலங்களில் ஆனந்த ரங்கப்பிள்ளை யைப்பார்த்துப் பரிசில் பெற வந்த புலவர்கள் பாடிய பல தனிப்பாடல்களும் ஆனந்தரங்கன் கோவை யொன்றும் காணப்பட்டன."

இக் கோவையைப் புதுவையிலிருந்து கொணர்ந்த ஐயரவர்கள் நூலை நன்கு ஆராய்ந்து அதற்கு ஏற்றதொரு குறிப்புரையும் வரைந்து வைத்தனர். 1920-ம் ஆண்டிலேயே இந் நூற்குக் குறிப்புரை எழுதி முற்றுப்பெற்று விட்டதாயினும், இந் நூலை மூலமும் உரையுமாக அச்சிடவேண்டுமென்று ஐயரவர்கள் மேற்கொண்ட முயற்சிகளுள்

1 மகேந்திர பல்லவனால் இயற்றப்பெற்ற இவ் வடமொழி நாடகத்தை முதன் முதலில் தமிழில் பெயர்த்த பெருமை இவருடையது.
2 இந் நூல் இன்னும் அச்சில் வராதது.
3 இவ் வரலாறு வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் வாழ்க்கை வரலாற்றில் கண்டது.

ஒன்றும் பல காரணங்களால் கைகூடவில்லை. ஐயரவர்கள் 1935-ம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்றும் விலகிக் கோயமுத்தூரில் ஓய்வு பெற்றுக் கொண்டு இருந்த காலத்தில், கோவைத் தமிழ் அறிஞர் திரு இராவ் பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் இந் நூலைத் தாம் பிரசுரித்து வந்த ‘ கொங்குமலர் ’ என்னும் பத்திரிகை வாயிலாக வெளியிட ஒப்புக் கொண்டனர். அவ்வாறு ஏறத்தாழ முதல் நூறு செய்யுட்கள் வரையில் வெளிவந்தன. ஆயினும் யார் செய்த தவக்குறைவோ ‘ கொங்குமலர் ’ வெளியீடும் நின்று போயிற்று. அதோடு ஆநந்தரங்கன் கோவைப்பதிப்பும் தற்காலிகமாக நின்று பட்டது. இவ்வுரை ஆசிரியர் 1943-ம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தனர். தாம் நல்ல முறையில் பதிப்பிக்கவேண்டும் என்னும் கருத்தோடு உரையும் எழுதி வைத்திருந்த ஐயரவர்கள் ஜீவியகாலத்திலேயே இந்நூல் முழுவதும் வெளிவராமை அவர்கட்கு ஒரு பெரிய மனக்குறையே. இந் நிலையில் ஐயரவர்களால் திருத்தப்பட்ட கையெழுத்துப் பிரதியை ஏற்றுக் கொண்டு பதிப்பிக்க முன்வந்த சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தக சாலையினரிடம் தமிழகம் பெரிதும் கடப்பாடுடையது.

புதுவையில் ஆநந்தரங்கப் பிள்ளையவர்களுடைய மனையில் கிடைத்த கையெழுத்துப் பிரதியின் முதற் பக்கத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளது :—

“ வஜாரத விஜய வாநந்த ரங்கராயர்மீது பாடிய கோவைத் தமிழ் பிரபந்தம் :

வஜாரத விஜயாநந்த ரங்கேபதே பிராஞ்சு
ராஜந் நியதுர்சிய சாசனம் லோஹ சாசனம்.

திருவாரூரிலிருக்கும் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத தேசிகர் குமாரர் தியாகராய தேசிகர் சித்தார்த்திஸ்ரீ ஆவணிமீ 15உ சுக்கிரவார தினம் பிரம்பூர் மகா-௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் வஜாரத விஜயாநந்தரங்கப் பிள்ளையவர்கள் பேரில் கோவைப் பிரபந்தம் பாட ஆரம்பித்து யுவஸ்ரீ ஆவணிமீ 3உ நிறைவேறி அரங்கேற்றுபடி செய்தது.”

ந. சுப்ரமண்யன்.

## இந்நூலில் மேற்கோளாக எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் அகராதி

| | |
|---|---|
| அகத்திணையியல் | அகத்திணை. |
| அகநானூறு | அகம். |
| அடியார்க்கு நல்லாருரை | அடியார்க். |
| அம்பிகாபதிகோவை | அம்பிகா. கோ. |
| ஆசாரக்கோவை | ஆசாரக். |
| ஆய்ச்சியர்குரவை | ஆய்ச். |
| இறையனார் அகப்பொருள் | இறை. அகப். |
| ஐங்குறுநூறு | ஐங். |
| கப்பற்கோவை | கப். கோ. |
| கம்பராமாயணம் | கம். ரா. |
| கல்லாடம் | கல். |
| கலிங்கத்துப்பரணி | கலி. பரணி. |
| கலித்தொகை | கலி. |
| களவியல் | களவு. |
| குலோத்துங்கசோழன் கோவை | குலோ. கோ. |
| குறுந்தொகை | குறுந். |
| கையடைப் படலம் | கையடை. |
| கொன்றைவேந்தன் | கொன்றை. |
| கோடீச்சுரக்கோவை | கோடீ. கோ. |
| சிலப்பதிகாரம் | சிலப். |
| சிற்றகத்தியம் | சிற். |
| சீகாழிக்கோவை | சீகா. கோ. |
| சொல்லதிகாரம் | சொல். |
| ஞானோபதேசப்படலம் | ஞானோ. |
| தஞ்சைவாணன்கோவை | தஞ்சை. கோ. |
| தண்டியலங்காரம் | தண்டி. |
| திணைமாலை நூற்றைம்பது | திணை. நூற். |
| திருக்குறள் | குறள். |
| திருச்சிற்றம்பலக்கோவையார் | திருச்சிற். கோ. |
| திருமுருகாற்றுப்படை | திருமுருகு. |
| திருவாரூர்க்கோவை | திருவா. கோ. |
| திருவாலவாய்ப்புராணம் | திருவால. புரா. |
| தொல்காப்பியம் | தொல். |
| நச்சினார்க்கினியருரை | நச். |
| நற்றிணை | நற். |
| நாட்டுப்படலம் | நாட்டுப். |
| நாலடியார் | நாலடி. |
| நான்மணிக்கடிகை | நான்மணி. |
| நைடதம் | நைட. |
| பேராசிரியருரை | பேரா. |
| பொருளதிகாரம் | பொருள். |
| மரபியல் | மரபு. |

## ஆனந்தரங்கன்கோவை கிளவி அகராதி


| கிளவி | | பக்கம் |
|---|---|---|
| அறத்தொடு நிற்றல் | .. | 92 |
| இடந்தலைப்பாடு | .. .. | 14 |
| இயற்கைப்புணர்ச்சி .. | .. | 3 |
| இரவுக்குறி | .. .. | 55 |
| இரவுக்குறியிடையீடு | .. | 63 |
| இல்வாழ்க்கை | .. .. | 117 |
| உடன்போக்கிடையீடு | .. | 114 |
| உடன்போக்கு | .. .. | 95 |
| ஒருசார்பகற்குறி | .. .. | 47 |
| ஒருவழித்தணத்தல் | .. | 80 |
| கல்விவயிற் பிரிவு .. | .. | 130 |
| கற்பொடுபுணர்ந்த கவ்வை. | | 101 |
| காவற்பிரிவு | .. .. | 131 |
| கைக்கிளை | .. .. .. | 2 |
| தன்மனைவரைதல் | .. | 112 |
| துணைவயிற் பிரிவு .. | .. | 133 |
| தூதிற் பிரிவு | .. .. | 132 |

| கிளவி. | | பக்கம் |
|---|---|---|
| தெளிவு | .. .. .. | 11 |
| பகற்குறியிடையீடு .. | .. | 52 |
| பரத்தையிற்பிரிவு .. | .. | 120 |
| பாங்கற்கூட்டம் .. | .. | 15 |
| பாங்கிமதியுடம்பாடு | .. | 23 |
| பாங்கியிற்கூட்டம் .. | .. | 28 |
| பிரிவுழிக்கலங்கல் .. | .. | 12 |
| பிரிவுழி மகிழ்ச்சி .. | .. | 11 |
| பொருள்வயிற் பிரிவு | .. | 134 |
| மீட்சி | .. .. .. | 110 |
| வரைதல் | .. .. .. | 116 |
| வரைதல்வேட்கை .. | .. | 68 |
| வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல் | .. .. | 83 |
| வரைவுகடாதல் .. | .. | 73 |
| வரைவுமலிதல் .. | .. | 90 |
| வன்புறை | .. .. .. | 9 |

# ஆநந்த ரங்கன் கோவை

## காப்பு

### விநாயகர் துதி

1. சேவைத் தழுவும் புயல்பிரம் பூரன் திருக்கிளர்பொற்
காவைப் பொரூஉஞ்செங்கை யாநந்த ரங்கன் களிக்குமின்சொற்
கோவைக் கொருகொம் பிருசெவி மும்மதம் கொண்டுயர்கைம்
மாவைப் பரவி மனத்தன்பு கூர்ந்து வணங்குதுமே.

**குறிப்பு.**—சே : இடபம். புயல் : மேகம், ஈண்டுத் திருமால். கண்ணன் எழுவிடை தழுவிய கதை ஈண்டமைந்துள்ளது. தலைவனைத் திருமாலாகக் கூறுதல் பூவை நிலை என்னும் புறப்பொருளிலக்கணம். இது ‘ மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற் றுவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் ’ (தொல். பொருள். புறத். 5) என்பதாற் பெறப்படும். கா : கற்பகச் சோலை. கைம்மா : விநாயகர். கோவைக்கு : இவ்வாநந்த ரங்கன் கோவைக்கு.

### நாமகள் வணக்கம்

2. பொற்கோவை கொண்ட புயன்பிரம் பூரன் புகுநிரைக்கா
முற்கோவை மேற்கொண்ட வாநந்த ரங்கன் முழங்குபுகழ்ச்
சொற்கோவை பாடற்குத் தேடும்பொ ருண்மனந் தோன்றநல்கு
நற்கோவை கொண்டவெண் டாமரைக் கோவினு ணமகளே.

**குறிப்பு.**—பொற்கோவை : பொன்னரிமாலை. புயன் : புயம் ; ஈற்றுப் போலி. நிரைக்கா : பசுக்கூட்டங்களுக்காக. முற் கோவை : முன்பு மலையை. பசுக்களைக் காப்பதற்காகக் கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த வரலாறு ஈண்டு அமைந்துள்ளது ; கோ : மலை, கோவர்த்தனம். பொருள் : இரட்டுற மொழிதலால், அகப்பொருட்டுறையும் செல்வமுமாம். கோவை : வரிசை, இதழ் வரிசை.

# நூல்

# I களவியல்

## 1. கைக்கிளை

(கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம்; இஃது ஆண் பாற்கைக்கிளை, பெண் பாற்கைக்கிளை என இருவகைப்படும். ஈண்டுக் கூறியது ஆண்பாற்கைக் கிளை.)

### காட்சி

(தலைவன் தலைவியைக் காண்டல்.)

1. பூமேவு திங்கட் குடையிந் திரசிலை பூங்கணைதென்
கோமேவு யானை கொடிமேவு தேர்கொண்டு கோகநக
மாமேவு மாநந்த ரங்கன் பிரம்பை வரோதயன்பொற்
காமேவு சாரலி னோர்மின் னரசிரு கண்ணுற்றதே.

**குறிப்பு.**—மங்கல மொழியாதலின் 'பூ' என்று தொடங்கினர். திங்குட்குடை : முகம். இந்திர சிலை : வானவில், புருவம். பூங்கணை : நீலோற்பலமாகிய கண்கள். தென் : அழகிய. கோமேவு : கண்கள் பொருந்திய. யானை : கொங்கை. கொடி : இடை. தேர் : அல்குல். கோகநகமா : தாமரையில் வதியும் இலக்குமி. அரசிற்கேற்ப உறுப்புக்களைக் குறித்தமை யுற்றுநோக்கற் பாலது.

### ஐயம்

(இப் பெண் தெய்வமகளோ மானிட மகளோ என்று தலைவன் ஐயுற்றுக் கூறுதல்.)

2. வாரோ டிகல்செய் வனமுலை யார்க்கு மதன்பிரம்பை
யூரோ னொளிபெறு மாநந்த ரங்க னுயர்வரையோ
நீரோ வுரகர் நிலையோ வமாறுயி னீள்கடலோ
காரோ விவரிரு கால்வர மாதவங் கைவந்ததே.

**குறிப்பு.**—வார் : கச்சு. உரகர் நிலை : நாகலோகம். உரகம் : பாம்பு. அ : உலகறிசுட்டு. மால் துயில் நீள் கடல் : பாற்கடல். ஈற்றடியில் 'கால் வர மாதவம் கைவந்ததே' என்பதில் முரண் தொடை காண்க.

### துணிவு

(கால் நிலத்துறுதல் முதலிய குறிகளால் இம்மாது மானிட
மாதே எனத் தலைமகன் தெளிதல்.)

3. காவென்ற கைத்தல னாநந்த ரங்கன் கமலைகஞ்சப்
பூவென்று வாழும் பிரம்பையர் கோன்றென் பொதியவெற்பிற்
பாவென்ற மென்மொழிப் பாவைதன் சேவடி பாருறநீ
வாவென்று வாட்டடங் கண்க ளிமைத்தென்னை வாழ்வித்தவே.

**குறிப்பு.**—கா வென்ற : கற்பகத்தைக் கொடையால் வென்ற. கமலை : இலக்குமி, கமலத்தில் இருப்பவள். கஞ்சப்பூ : தாமரைப் பூ. பா என்ற : இசை நிகர்த்த.

### குறிப்பறிதல்

(தலைவிக்குத் தன்பால் வேட்கையுண்டென்று அவளுடைய பார்வைக்
குறிப்பால் தலைவன் அறிதல்.)

4. பண்ணொன்று செந்தமிழ் தேர்பிரம் பூரன் பதுமமலர்ப்
பெண்ணொன்று மார்பி னாநந்த ரங்கன் பிறங்கலொப்பார்
கண்ணொன்று பார்வையி னஞ்சொன் றமுதொன்று காட்டுதலாற்
றண்ணொன்று பாற்கட றன்னையிக் கார்க்கட லொன்றுமே.

**குறிப்பு.**—தேர் : ஆராயும். பதும மலர்ப் பெண் : இலக்குமி. ஒன்றும் மார்பினன் : பொருந்தும் மார்பையுடையனை திருமாலை யொக்குமவன். பிறங்கல் : மலை. ஒப்பார் : தலைவி. கார்க்கடல் என்றது கரிய கடல் போன்றுள்ள கண்ணினை. ஒன்றும் : நிகர்க்கும். பாற்கடலில் அமுதமும் நஞ்சும் ஒரு சேரத் தோன்றுதல் போலத் தலைவியின் பார்வையில் வேட்கைக் குறிப்பாகிய அமுதமும் அக் குறிப்பைத் தோற்றுவிக்காத பொது நோக்காகிய நஞ்சும் தோன்றுகின்றன். "மேலாழி தன்னுள் விடத்தோ டமிர்தம் விளைந்த தொக்கும், நூலா மிடையினள் வேல் விழித் தோன்றிய நோக்கங் களே." (கோடீச். கோ. 4)

### கைக்கிளை முற்றும்

## 2. இயற்கைப் புணர்ச்சி

(இயற்கை : ஊழ் ; ஊழ்வினை கூட்டுவிக்கக் கூடும் கூட்டம். இது
தெய்வப் புணர்ச்சி என்றும் பெயர் பெறும்.)

### இரந்து பின்னிற்றற்கெண்ணல்

[தன் குறைகளைச் சொல்லித் தலைவியின் பின்னே இரந்து
நிற்றற்குத் தலைவன் எண்ணல்.]

5. ஆடுங் கொடியிடை யன்னாள்செய்ந் நோய்க்கவ ளேமருந்தாய்க்
கூடுந் திறமவள் பாற்சென் றிரந்துகொள் வாநெஞ்சமே
பாடும் புலவர்க் கிருநிதி யென்னப் பரவுமெண்சீர்
தேடும் பிரம்பையி னாநந்த ரங்கன் சிலம்பிடத்தே.

**குறிப்பு.**—ஆடும் : துவளும். அவள் செய் நோய் : காம நோய். எண்சீர் : அஷ்ட ஐசுவரியம். ' நெஞ்சமே, சிலம்பிடத்து அவள் பாற் சென்று இரந்து கொள், வா ' என்று கூட்டுக.

### இரந்து பின்னிலை நிற்றல்

(தலைவியை யிரந்து பின்னே நின்ற தலைவன் வழிபாடு செய்தற்கு முயன்று நிலை நிற்றல்.)

6. தாள்வீசி முன்னெதிர்க் குந்தரி யாரைத் தடக்கைகொண்டு
தோள்வீசு மாநந்த ரங்கன் பிரம்பையந் தோகையன்னீ
ராள்வீ ரெனநின் றடிபணி வேற்கரு ளாதிருகண்
வாள்வீசி னீரென் பரிசையெண் ணீரென்ன வல்லபமே.

**குறிப்பு.**—தரியார் : பகைவர். தோகை : மயில். பரிசு : நிலைமை. பரிசை : கேடகம். ' எனது பரிசை (கேடகம்) எண்ணாது வாள் வீசினீர் ' என்பதன் சொற் போக்கு நயம் உய்த்துணரற்பாலது.

### முன்னிலையாக்கல்

(முன்னிலை : காரணம். காரியத்திற்கு முன்னிற்றலின் காரணம் முன்னிலை யாயிற்று. தலைவி தன் பொருட்டு நிற்பதாகத் தலைவன் கூறுதல்.)

7. காவியம் போருக மேவும் பிரம்பையர் காவலன்பூந்
தேவிமெய் யன்புற்ற வாநந்த ரங்கன் சிலம்பினிற்பைந்
தூவியந் தோகையன் னீர்வண்டல் கோலிச் சுனைகுடையா
தோவியம் போலநிற் பீரென் கொலோநும் முளத்தெண்ணமே.

**குறிப்பு.**—காவி : நீலோற்பலம். அம்போருகம் : தாமரை- காவியும் அம்போருகமும் மேவிய என்றும், கண்களாகிய காவி முகமாகிய அம் போருகத்தில் மேவும் என்றும் பொருள்படும். பூந்தேவி : இலக்குமி. வண்டல் : மகளிராடும் ஒரு வகை விளையாடல்.

### வண்டோச்சி மருங்கணைதல்

(நாணினால் வருந்தும் தலைவியின் பக்கத்தை யணைந்த தலைவன் அவள் கூந்தல் மாலையில் மொய்த்திருக்கும் வண்டுகளை யோட்டுவான் போல நெருங்குதல். மருங்கு : இடையெனலுமாம்.)

8. செஞ்சி விஜயா புரம்டெல்லி மட்டுஞ்செங் கோல்செலுத்தும்
வெஞ்சிலை யாநந்த ரங்கன் பிரம்பை விளரிவண்டீர்
குஞ்சர மேற்கொண்டு போர்செய வாடிக் குழையுமிள
வஞ்சி தளர்வுற நீர்சென்னி நண்புறு மாறுநன்றே.

**குறிப்பு.**—விளரி : ஓரிசை. குஞ்சரம் : கொங்கை. வஞ்சி : கொடி, இடை. சென்னி : தலை. ஈற்றடியில், சேரன் தளர்வுறச் சோழனை நட்புப் பூண்டதாகக் கூறும் நயம் உற்று நோக்கற்பாலது. மாறு : பகைமை.

### மெய்தொட்டுப் பயிறல்

(தலைவியின் மெய்யைத் தீண்டித் தலைவன் நெருங்குதல்)

9. அடிமலர் நீவி யினவளை முன்கை யமைத்துச்செம்பொற்
றுடியிடை கொண்ட கலைமீது மேகலை சூழச்செய்து
படிபுக ழாநந்த ரங்கன் பிரம்பையிற் பைந்தொடிக்குக்
கடிமலர் மென்குழல் சூட்டவும் பெற்றவென் கைத்தலமே.

**குறிப்பு.**—அடிமலர் : அடியாகிய மலர். நீவி : வருடி. துடியிடை : துடிபோன்ற இடை. கலை : உடை. மேகலை : இடையில் அணியப்படுவதோர் ஆபரணம். படி : உலகு. பெற்ற : இறந்தகாலப்பன்மை வினைமுற்று.

### பொய் பாராட்டல்

(தலைவியினழகைத் தலைவன் புனைந்து கூறல்.)

10. இருகாலி னுலகேழையு மீரடி யிட்டளந்து
வருகார் பிரம்பையி னுநந்த ரங்கன் வரையனையீர்
முருகார் மலர்முக நின்வா ணுதற்கொப்ப முன்னியன்றோ
வொருகா னிறைந்துங் குறைந்து மதிவா னுலாவுவதே.

**குறிப்பு.**—கார்-திருமால் ; ஈண்டுப் பலியிடம் வாமனன் மூவடிமண் இரந்த வரலாறு குறித்தவாறு ; முருகு-வாசனை. முன்னுதல் : எண்ணுதல். இது தற்குறிப்பேற்றவணி.

### இடம் பெற்றுத்தழாஅல்

(உரிய இடத்தைப் பெற்றுத் தழுவுதலைத் தலைவன் விரும்பிக் கூறுதல் ; தழாஅல் : தழுவுதல்.)

11. நானு கலைதெரி யும்பிரம் பூர னலந்தழைத்த
மானு பரன்புக ழாநந்த ரங்கன் வரைப்புறத்திற்
கானுர் குழலி யருட்கடைக் கண்ணுண்டு காமர்செய்யுந்
தேனுரு மாதவிப் பந்தருண் டின்பஞ் செறியவுண்டே.

**குறிப்பு.**—நானுகலை : பற்பல கலைகளும். மானுபரன் : மானத்தையே கவசமாகக் கொண்டவன். கான் : வாசனை.

### வழிபாடு மறுத்தல்

(தலைவன் செய்யும் வழிபாட்டை நாணினுல் மறுத்த தலைவிதான் மறைந்து கொள்ளுதற்பொருட்டு மாதவிக் கொடியைச் சார்தல்.)

12. சீரிடங் கொண்ட பிரம்பை வரோதயன் றெண்டிரைசூழ்
பாரிடங் கொண்ட புயன்ரங்க பூபன்பற் றுரினம்போற்
சூரிடங் கொண்டு மெலியா வகைமுகை துன்னுகிளை
யோரிடந் தாபொழில் வாயெழில் வாய்தரு மொண்குருகே.

**குறிப்பு.**—பற்றார் : பகைவர். சூர் : துன்பம். முகை : அரும்பு. குருகு : மாதவி. 'குருகே, மெலியாவகை ஓரிடந்தா' என்று கூட்டுக. 'பொழிலிடத்து உளவாகிய அழகுவாய்ந்த பூவையுடைய கொடியே, யானொதுங்குதற்குப் புகலிடந்தருவாயாக' என்க.

"புகலிட ந்தாபொழில் வாயெழில் வாய்தரு பூங்கொடியே."
(திருச்சிற். கோ. 42.)

### இடையூறு கிளத்தல்

(அங்ஙனஞ் சென்ற தலைவி நாணினால் தன் விழிகளைப் புதைத்துக்கொள்ள அதனால் உண்டாகும் துன்பத்தைத் தலைவன் கூறுதல்.)

13. பண்ணார் தமிழ்தெரி யாநந்த ரங்கன் பதுமமலர்ப்
பெண்ணார் விரும்பும் பிரம்பையர் கோன்வரை பெற்றபொன்னே
தண்ணார் குமுதத் தமுதங் கொடுத்துத் தடங்கமலக்
கண்ணா லருள்செய் திங் கேசொர்க்கங் காட்டுதல் காரியமே.

**குறிப்பு.**—மலர்ப்பெண்ணார் : இலக்குமி. குமுதத் தமுதம் : அதரபானம். சொர்க்கம் : கொங்கை. அமுதங்கொடுத்துச் சொர்க்கங் காட்டுதலைக் கூறிய நயம் உய்த்துணரற்பாலது.

### நீடு நினைந்திரங்கல்

(நெடிது சிந்தித்துத் தலைவன் வருந்துதல் ; தலைவியின் செய்கையால் காலம் நீட்டித்தலை அறிந்து தலைவன் வருந்துதல் என்றும் கூறுப.)

14. ஆயம் பிரியப் பிரியாத நெஞ்சரா ணுகுநிறை
சாயுந் திறங்கொண் டுளமெலி வேன்றவிக் காமனல்ல
ஞாயஞ்செ யாநந்த ரங்கன் பிரம்பை நலங்கொள்வெற்பிற்
றாயென் றிடமா தவிமே கலையொன்று தான்செய்ததே.

**குறிப்பு.**—ஆயம் : தோழியர் கூட்டம். 'பிரியாத' என்பதனை 'நிறை' யொடுங்கூட்டுக. 'தவிக்காமல்' என்பதனைச் 'செய்ததே' என்பதொடுங் கூட்டுக. தாய்-அன்னை.

"மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ்விப்பதே."
(அம்பிகா. கோ. 36.)

ஆசிரியர் இத்துறையில் ஏனைய கோவையாசிரியர்கள் போலாது அம்பிகாபதி கோவையாசிரியரைப் பின்பற்றியது ஆராயத்தக்கது.

### மறுத்தெதிர் கோடல்

(தன் நாணத்தை மறுத்துத் தலைவனை ஏற்றுக்கோடல்.)

15. கூடப் பிறந்து வளர்ந்தொரு நாளுங் குறைதலின்றித்
தேடற் கரிய வொருநா ணிரவிமுன் சேர்வெண்ணெயி
னீடப் பிரம்பையி னாநந்த ரங்கன்முன் னின்றிலர்போல்
வாடத் தனியே யெனைவிட்டப் பாற்சென்ற மாறுநன்றே.

**குறிப்பு.**—நீடு : செல்வமிக்க. மாறு : பகைமை. ' நாண் வெண்ணெயிற் சென்றமாறு நன்றே ' என்று கூட்டி முடிக்க. இன் : உவம உருபு ; ' சென்ற வாறு ' என்றும் பாடம். ' இரவி முன் வெண்ணெய்போல் சென்ற பகைமை ' என்க.

### வறிது நகை தோற்றல்

[வறிது-சிறிது ; (தொல். சொல். 336.) தலைவி புன்னகை செய்தல்.]

16. கருங்கட லூடுவெண் முத்தம் புகச்செழுங் கற்பின்முகை
விரிந்தல ராகவெண் பீலியின் கானு மெலிந்திரங்கப்
பெரும்புகழ் தேடும் பிரம்பூர ரங்கப்பன் பேர்சொல்வெற்பிற்
கரும்பனை யார்முகத் தோர்முறு வற்குறி காட்டியதே.

**குறிப்பு.**—கற்பு : முல்லை ; பீலியின் கால் : மயிலிறகினடி. இச்செய்யுள் தற்குறிப்பேற்றவணி. கருங் கடல் வெண் முத்தம் : முரண் தொடை.

### முறுவற் குறிப்பறிதல்

(தலைவியின் புன்னகையாற் பெற்ற உடம்பாட்டுக்குறிப்பினைத் தலைவன் அறிதல்.)

17. கவளக் களிற்றுக் கிறைபிரம் பூரன் கமழுமென்பூங்
குவளைக்கண் ணார்மகி ழாநந்த ரங்கன் குலவரைபோ
லிவளைப் பெறுதற் கிரங்கனெஞ் சேயஞ்ச லென்றிதழ்ச்செம்
பவளத் திடையத் தவளக் கதிர்முத்தம் பாரித்ததே.

**குறிப்பு.**—போல் : போலும். செம்பவளம் : இதழ். தவளக்கதிர்முத்தம்: புன்னகை. பாரித்தல்-விரித்துரைத்தல் ; " பயனில, பாரித்துரைக்குமுரை " (திருக்குறள்–193).

### முயங்குதலுறுத்தல்

(தலைவி முயங்குதற்கு உடம்பட்ட அருமையைத் தலைவன் வலியுறுத்திக் கூறுதல்.)

18. ஈட்டிய பொன்னுல கும்பணி லோகமு மேமவெற்பைக்
கோட்டிய காலையிற் கூடுமொன் றேயடி கூடலரை.
வீட்டிய வாநந்த ரங்கன் பிரம்பைவெற் பாரணங்கைக்
கூட்டிய கூட்டத்துக் கொப்பென லாமுண்மை கூறிடினே.

**குறிப்பு.**—பொன்னுலகு : சுவர்க்கம். பணிலோகம் : நாகலோகம். ஏம வெற்பு : மேரு. கோட்டியகாலை : வளைத்தபோது ; திரிபுரசங்காரகாலம். கூடலர் : பகைவர். அணங்கின் கூட்டத்திலும் கொங்கையாகிய ஏமவெற்பைக் கோட்டியகாலை இதழூறலாகிய அமுதங் கிடைப்பதாற் பொன்னுலகும், அல்குலாகிய அரவத்தின் சேர்க்கையாற் பணிலோகமும் தலைவற்கு ஒருங்கே கூடும் என்ற தொனிப் பொருளின் உண்மை யீண்டறியற்பாலது.

**புணர்ச்சியின் மகிழ்தல்**

(இது வெளிப்படை)

19. சொல்லுந் திறத்தின னமுதுஞ்செந் தேனுஞ் சுவையுமொப்பாம்
புல்லும் திறத்திவள் யானெனத் தெய்வம் பொருத்தியதால்
மல்லும் பறவை வலியுந் தொலைத்து மருதிடந்து
வெல்லும் பிரம்பையி னாநந்த ரங்கன்றன் வெற்பிடத்தே.

**குறிப்பு.**—மல்-மல்லர்; ‘முஷ்டிகசாணூரர்’ என்பவர். பறவை-பறவை யுருவாய் வந்த பகன் எனப் பெயரிய ஓரசுரன். ‘பரவைவலியும்’ எனப் பாடமோதில், பரவை-சமுத்திரம் எனக்கொண்டு இராமன் சமுத்திர ராஜன் மேல் வாளிதொட்ட சரிதையை யுணர்த்தியதாகக் கொள்க. மருது-சாபத் தால் மருத மரங்களாய் நின்ற நளகூபரன், மணிக்கிரீவன்.

**புகழ்தல்**

(தலைவியின் நலத்தைத் தலைவன் பாராட்டல்.)

20. பெருமானை யன்று வளர்த்தருள் செல்வன் பிரம்பையர்கோன்
றிருமானை மார்புற்ற வாநந்த ரங்கன் சிலம்பிடத்து
வருமான் முகத்துக் கொப் பாவதுண்டோ மிக்க மாதவங்க
ளருமா மலரொரு தாளூன்றி நீர்நின் றழுங்கினுமே.

**குறிப்பு.**—பெரும் ஆனை: பெரிய பசுக் கூட்டங்களை. செல்வன்: கண் ணன். திருமான்: இலக்குமி. மான்: தலைவி. அருமாமலர்: தாமரை. “பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை” “பூவிற்குத் தாமரையே” என்னுமாற்றானறிக. தாள்: கால், தண்டு. அழுங்குதல்: வருந்துதல்.

**ஏற்புற வணிதல்**

(நிலை குலைந்த ஆபரணங்களை முன் போலவே தலைவன் தலைவிக் கணிதல்.)

21. கலையு மணிமே கலையுந் திருத்திக் கலனுமுன்செய்
நிலையிற் பிறழா வகையணிந் தேனெடுங் கானிலொரு
சிலையும்பெண் ணாகச்செய் யாநந்த ரங்கன் திருப்பிரம்பை
மலையின் வருமமு தொப்பாயிப் போது மனங்களித்தே.

**குறிப்பு.**—சிலை: கல். பெண்: அகல்யை. சிலையைப் பெண்ணாகச் செய் தவன் ராமன்; அவனைப் பாட்டுடைத் தலைவனுக்கு உவமித்தது பூவை நிலை. இப்போது அணிந்தேன் என முடிக்க. மலையின் வருமமுது— வேற்றுமையணி.

**தலைவியியற்கைப் புணர்ச்சி முற்றும்**

## 3. வன்புறை

(தலைவியை நோக்கித் தலைவன் பிரியேனென்று வற்புறுத்திக் கூறல்.)

### அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்

(தான் புனைந்தமை வேறுபாட்டைப் புலப்படுத்து மென்று தலைவி நாணிய தையறிந்த தலைவன் முன்போலவே யணிந்தேனென்று அவளைத் தெளிவித்தல் ; அணிந்துழி : அணிந்த விடத்து.)

22. தேனுரு முல்லைத் தெரியல்கொள் மார்பனைத் தென்பிரம்பை
தானுர்வ முற்றிடு மாநந்த ரங்கனைச் சார்ந்திலர்போ
லேனுணி நின்றிங் கிரங்கல்பொற் றூசிழை யாவு மெண்ணி
மானு ரணிந்த படியணிந் தேன்பிறை வாணுதலே.

**குறிப்பு.**—தெரியல் : மாலை. இரங்கல் : வருந்த வேண்டா ; எதிர் மறை முன்னிலை வியங்கோள். பொன் : அணிகலன்களைப் ; துரசுழை : பட்டாடைகளையும் அணிகளையும் ; உம்மைத் தொகை. மானுர் : தோழியர் ; புணர்ச்சியால் நிலை குலைந்த பட்டையும் அணிகளையும், தலைவியது தோழியர் அவளுக்கு அணிவித்திருந்தவாறே தானும் அணிவித்திருத்தலான் பிறர் கண்டுஐயுருர் என்று தலைவன் தலைவிக்கு வற்புறுத்தியவாறு.

### பெரு நயப் புரைத்தல்

(தனதுமிக்க காதலைப் புகழ்ச்சி வகையாற்றலைவன் உரைத்தல் ; நயப்பு - விருப்பம்.)

23. அடியொன்றி லிப் படியளந் தோனடித் தாமரைப்பூ
முடியொன்று மாநந்த ரங்கன் பிரம்பை முளரிவண்டூர்
படியொன்று தாமரை சேதாம்பல் கொண்டுபைங் காவிமலர்
கொடியொன்று நீர்கண்ட துண்டோ சரிக்குங் குவலயத்தே.

**குறிப்பு.**—முளரி : தாமரை. படி : நிலம். தாமரை : முகம். சேதாம்பல் : செம்மை ஆம்பல் ; வாய். காவி : கண். மலர் கொடி - வினைத் தொகை ; "யலர் கொடி" யென்றும் பாடம். சரிக்கும் : சஞ்சரிக்கும். குவலயம் : நில வுலகம்.

### தெய்வத்திறம் பேசல்

(தம்மைச் சேர்த்துவைத்த ஊழ்வினையின் தன்மையைத் தலைவன் பாராட்டிக் கூறுதல் ; தெய்வம் - ஊழ்வினை.)

24. உம்மை பிறப்பி னிருவோரு மெய்யன் புறப்புரிந்தாங்
கிம்மைப் பிறப்பினிற் கூட்டிய தெய்வத்தை யார்சிதைப்பார்
மும்மைத் தமிழ்தெரி யாநந்த ரங்க முகில்பிரம்பைக்
கொம்மைக் குவிமுலைப் பொன்னேயென் றுகுலங் கூறுவதே.

**குறிப்பு.**—உம்மைப் பிறப்பு : முற் பிறப்பு. மும்மைத் தமிழ் : இயல் இசை நாடகம். கொம்மை : வட்டம். ஆகுலம் : துயரம்.

### பிரியேனென்றல்

(என்றல் : என்று தலைவன் சொல்லுதல்.)

25. திரைவா யமுது நிதியுந் துதிக்குஞ்சிந் தாமணியுந்
தரைவா யுறினெவர் தாமிகழ் வார்செம்பொற் ருமரைமே
லுரைசால் திருவே யுனையான் பிரிந்து முறைவதுண்டோ
துரைராஜ னநந்த ரங்கன் பிரம்பையந் தொன்னகர்க்கே.

**குறிப்பு.**—நிதி : சங்கநிதி, பதுமநிதி. அமுது முதலியவை தலைவியின் பால் அமைந்து தலைவற்குக் கிடைத்தலின், தரைவாயுறின் என்றதன் நயம் நோக்கற் பாலது. உரைசால் : புகழமைந்த. நகர்க்கே : நகரினிடத்தில் ; வேற்றுமை மயக்கம்.

### பிரிந்து வருகென்றல்

(போய் வருவேனென்று தலைவன் தலைவிக்குக் கூறுதல் ; வருகு - வருவேன். வருகுஎன்றல் : வருகென்றல்.)

26. திங்களில் வானவில் சேர்ந்தாங்கு வாணுதல் சேர்முகத்தா
யிங்குய ரும்மரு விப்புன லெற்றுவை யானெதிர்த்தோர்
சிங்கம் பிரம்பையி னநந்த ரங்கன் சிலம்பிடைச்சென்
றங்குநில் லாம னிழல்போ லகன்று மணுகுவனே.

**குறிப்பு.**—இதனை 'ஆடிடத்துய்த்தல்' என்னும் துறையாகக் கொள்வர் பேரா. (திருச்சிற். கோ. 16) "நிழறன்னை, வீயா தடியுறைந் தற்று" [திருக்குறள் - 208]

### இடமணித் தென்றல்

(நம்முடைய ஊர்கள் அணிமைக்கணுள்ளன வென்று தலைவன் தலைவிக்குக் கூறுதல். அணிமை - சமீபம்)

27. கான்பாய் குழலியர் சூழும் பிரம்பையர் காவலன்செந்
தேன்பாய் துளவணி யாநந்த ரங்கன் சிலம்பினும்மூர்
தான்பா யருவிப் புனலெம தூர்புகத் தாவியெம்மூர்
மீன்பாயு மந்த மடைவழி போய்த்துள்ளி மீதெழுந்தே.

**குறிப்பு.**—கான் : மணம். துளவு : துளசி. சிலம்பு : மலை. 'புகளழுந்து தாவியெம்மூர் மீன் பாயும்.' என முடிக்க. மீன் உம்மூர் அருவிமடை வழி போய்த் துள்ளி மீதெழுந்து எம்மூர் புகப்பாயும் என்றதால் தலைவி ஊர்க்குத் தலைவன் ஊர் அண்மையிலுள்ளமை கூறப்பட்டது.

### வன்புறை முற்றும்

## 4. தெளிவு

(தலைவன் பிரிந்து வருவேன் என்றதைத் தலைவி தெளிதல்.)

28. ஒளிதந்த பொன்னுல கொன்னல ராள வுடன்றுபொருங்
களிதந்த யானைப் பிரம்பைரங் கேந்த்ரன் கனகவெற்பி
லளிதந்து வந்தஞ்ச லென்றவர் நீப்பி னவருரையைத்
தெளிதந் தவர்க்குத் தவறுள தோவென்கொல் சிந்திப்பதே.

**குறிப்பு.**—கருத்துடையணி. ஒன்னலர் : பகைவர். அளிதந்து உவந்து என்று பிரிக்க. தெளிதந்தவர் - நம்பினவர்,

"அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு." (குறள்—1154)

தெளிவு முற்றும்

## 5. பிரிவுழி மகிழ்ச்சி

(தலைவி பிரிந்து ஆயத்திடைச் செல்லுங்கால் அவள் தோற்றத்தைக் கண்டு தலைவன் மகிழ்ந்து கூறுதல்.)

### செல்லுங்கிழத்தி செலவுகண்டுளத்தொடு சொல்லல்

(கிழத்தி செலவு : தலைவி பாங்கியரிடம் போதல். கண்டு : தலைவன் கண்டு.)

29. பின்னையெண் ணுமற் புலவர்க் குதவும் பிரம்பையர்கோன்
மன்னுயிர் காத்தரு ளாநந்த ரங்கன் வரைப்புறத்தி
லின்னுயிர் காணு வியற்றென்ப தென்கொலென் னுருயிர்தான்
மின்னிடை யாக விதோகண் டனன்பெரு வேட்கை யுற்றே.

**குறிப்பு,**— "காணு மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅங் காண்டுமெம் மரும்பெற லுயிரே
சொல்லு மாடு மென்மெல வியலுங்
கணைக்கா லுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே"

[தொல். பொரு. 101 உரை மேற்கொள்]என்னும் செய்யுளின் பொருள் இச் செய்யுளில் அமைந்து[கிடத்தல் காண்க. பின் : கைம்மாறு. 'பெரு வேட்கை' யைத் தலைவனொடுங் கூட்டுக. இயற்று : தன்மையது.

### பாகனொடு சொல்லல்

(பாகன் : தேர்ப்பாகன்)

30. மின்வைத்த தேர்வல வாகவி வாணர் விளங்குதமி
ழின்வைத்த வாநந்த ரங்கன் பிரம்பை யிருந்துறைவாய்
முன்வைத்த கஞ்சமு நெஞ்சமுங் கொண்டுமுன் னெய்துதல்பார்
பின்வைத்த காவியு மாவியு மீர்த்தொரு பெண்ணமுதே.

குறிப்பு.—வலவன் - தேர்ப்பாகன். இன் - இனிமை. கஞ்சம் - தாமரை போன்ற அடி. காவி - நீலோற்பலம் போன்ற கண்.

**பிரிவுழி மகிழ்ச்சி முற்றும்**

## 6. பிரிவுழிக் கலங்கல்

(தலைவி பிரிந்த விடத்துத் தலைவன் மனங் கலங்குதல்.)

**(ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ வென்றல்)**

(பாங்கியர்கூட்டம் தலைவிக்கு வழிபாடு செய்யத் தலைவன் கண்டு இவ்வளவு பாதுகாப்பிலிருக்குமிவளை நானடைந்து இன்புற்றது பொய்யோவென் றெண்ணுதல்.)

31. முந்நீ ருலகம் புகழ்பிரம் பூரன் முளரிமங்கை
தன்னீர்மை யுற்றிடு மாநந்த ரங்கன் றடஞ்சிலம்பிற்
பொன்னீர்மை யுற்றவப் பூங்கொடி யீங்கிவர் போற்ற நிற்கு
மிந்நீர்மை யெண்ணிற் கனவோ பிறிதோ வியைந்ததுவே.

குறிப்பு.—முந்நீர் : கடல் ; ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று நீர்மையும் உடைமையின் முந்நீர் என்னும் பெயர்த்து என்பது நச். கருத்து. முளரி மங்கை : இலக்குமி: பொன்: பூமகள். நீர்மை- தன்மை. பூங்கொடி : தலைவி. இவர் : பாங்கியர். "யென்னிற் கனவோ" என்றும் பாடம். இயைந்தது - கூடியது.

**வாயில் பெற்றுய்தல்**

(தலைவியைப் பெறுதற்குரிய வழியாயிருப்பவள் இன்னளென்றறிந்து தலைவன் ஆற்றுமை நீங்குதல். வாயில், தூது, வழியென்பன வொரு பொருட் சொற்கள்.)

32. உளமொன் றுயிரொன் றுடல்வேற தாகையி னுவள்கண்
ணளவின்றி யேயிவள் செந்தா மரைமுகத் தாரளியாந்
தளவொன்று மாநந்த ரங்கன் பிரம்பைத் தலைவன்வெண்ணெய்க்
களவொன் றினுக்கடி யுண்டோன் வரையிற் கனங்குழைக்கே.

குறிப்பு.—உவள் : தலைவி. இவள் : பாங்கி. அளி : வண்டு. தளவு : முல்லை மாலை. 'தளம் ஒன்று' என்ற பாடத்திற்கு, தளம் – படை. உண்டோன் : கண்ணன். ஆயர்பாடியில் வெண்ணெயைத் திருடியுண்டபின் கண்ணன் யசோதை பால் அடியுண்ட கதையீண்டுக் குறிக்கப்பெற்றது. இது பூவை நிலை.

**பண்பு பாராட்டல்**

(தலைவியினழகைத் தலைவன் மிகப் புகழ்தல். பண்பு—அழகு.)

33. மந்தர மொத்த புயன்பிரம் பூரன் வரகுணத்தான்
செந்தமிழ்க் கோவைகொ ளாநந்த ரங்கன் சிகரவெற்பி
னிந்திரை யார்நடைக் கொவ்வா வனங்களிம் மொய்குழலா
ளந்தளிர் மேனி யழகுக்கொவ் வாமயி லம்புவிக்கே.

**குறிப்பு.**—மந்தரம் : ஒரு மலை. செந்தமிழ்க் கோவை : இந்நூல். இந்திரை : இலக்குமி, ஈண்டுத் தலைவி. அனம் : அன்னம். அழகு : சாயல். புவிக்கே : புவியில், உருபு மயக்கம்.

" குன்ற நாடன் குன்றத்துக் கவாஅற்
பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையு
மஞ்சிலோதி யசையியற் கொடிச்சி
கண்போன் மலர்த லரிதிவ
டண்போற் சாயன் மஞ்ஞைக்கு மரிதே. " (ஐங்.299)

**பயந்தோர்ப் பழிச்சல்**

(தலைவியின் தாய் தந்தையர்களைத் தலைவன் வாழ்த்தல்.)

34. செந்தா மரைக்கட் டிருவைப் பொருவுற்ற தெள்ளமுதைத்
தந்தார்க ளிந்தத் தரைமேற் பிரம்பூர் தழைக்கமுல்லைப்
பைந்தாமங் கொண்டரு ளாநந்த ரங்கனைப் பாடிமுன்பு
வந்தார் படைத்திடுஞ் செல்வமென் மேல்பெற்று வாழியவே.

**குறிப்பு.**—தெள் அமுது : ஈண்டுத் தலைவி. தாமம் : மாலை. மென் மேல்—மேலும் மேலும். ' ஆநந்த ரங்கனைப் பாடி வந்தார் படைத்திடுஞ் செல்வம்போன்ற செல்வத்தை மேலும் மேலும் பெற்று, தெள்ளமுதைத் தந்தார் வாழியவே ' என்க.

**கண் படை பெறாது கங்குலோதல்**

(தலைவியைப் பிரிந்த தலைவன் துயில் பெறாமல் இராப்பொழுதில் வருந்திக் கூறுதல்.)

35. திருமால் பிரம்பையி னநந்த ரங்கனைச் சேரலர்தங்
கருமா மனமென வேயிருண் டன்னவன் காவனைய
மருவார் குழலி விழிபோல் நீண்டுவற் றுக்கடல்போன்
றொருவா தெதிர்க்கும்வெங் காலனைப் போலுமை யூர்கங்குலே.

**குறிப்பு.**—கா : சோலை. மரு : வாசனை. மையூர் : கருமை தவழும். " ஒருவாதெதிர்த்திடும் " என்றும் " போன்றிடு மூர்கங்குலே " என்றும் பாடம். ஊர்தல் : மெதுவாய் நகர்தல். கங்குல் : இராப்பொழுது.

**பிரிவுழிக் கலங்கல் முற்றும்**

## 7. இடந்தலைப்பாடு

(இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த விடத்தைத் தலைவன் அடைதல் : தலைப்படுதல் : சென்று அடைதல்.)

### தந்ததெய்வந் தருமெனச் சேறல்

(தலைவியை முன்பு அளித்த தெய்வம் இன்னும் தருமென்று தலைவன் தலைவியை முன்னர்க் கண்டவிடத்திற்குச் செல்லுதல்.)

36. என்னுன் முயன்றுமுன் னெய்திய தன்றெழி லேய்பிரம்பை
மன்னுண்மை யுற்றிடு மாநந்த ரங்கன் வரைப்புறத்துப்
புன்னாக நீழலின் மாதவிச் சூழலிற் போந்தனமேன்
முன்னுளிற் கூட்டிய தெய்வமிந் நாளுமென் முன்னிற்குமே.

**குறிப்பு.**—' போந்தனம் ' என்று கூறி ' என்முன் ' என்றது ஒருமைப் பன்மை மயக்கம். ' எழில்சேர் பிரம்பை ' யென்றும் பாடம். மன் : அரசன்; நிலை பெற்றவுமாம். சூழல் : இடம். ' எந்நாளும் ' என்றும் பாடம் ' இந்நாளும் நம் முன்னிற்குமே ' என்றும் பாடம்.

### முந்துறக் காண்டல்

(தலைவன் தலைவியை நேரிற் காணுதல். இனி, முந்துறவென் பதற்கு முன்போலவென்றும் பொருள் கூறுக.)

37. வடிவாள் பொருமிரு கண்பொழில் வாய்வைத்து மானவர்கைத்
துடிவாய் தருநுண் ணிடைமென் னடையாற் றுவளமுந்நீர்ப்
படிசூழ் பிரம்பையி னுநந்த ரங்கன் பசும்பொன்வெற்பிற்
கொடிதா னிருபொற் குடமேந்திக் கொண்டெதிர் கொண்டதுவே.

**குறிப்பு.**—வடி : கூர்மை. மானவர் : சிவபெருமான். வாய்தரு : பொருந்திய. படி : உலகு. கொடி : தலைவி. இரு பொற்குடம் : தனம்.

### முயங்கல்

(முயங்கல்—கூடல்)

38. பாயுங் கரடக் களிற்றான் பிரம்பைப் பதியிற்கற்றோ
ராயுந் தமிழ்புனை யாநந்த ரங்க னடுக்கலின்வா
யேயு மதிமுகத் தின்மே னகையைக்கண் டின்பவள
வாயி னமுதுண்டு சொர்க்கமுங் கைக்கொண்டு வாழ்ந்தனமே.

**குறிப்பு.**—கரடம் : மதம். புனைதல் : அணிதல். அடுக்கல் : மலை. நகை : புன்னகை. சொர்க்கம் : முலை. மதிமுகத்தினுடைய மேனகையைக் கண்டு இன்பந்தரும் வள்ளத்தின் வாயமுதுண்டு சொர்க்காதிபத்தியங்கொண்ட தாகக் கூறும் நயம் ஈண்டு உய்த்துணரற்பாலது.

### புகழ்தல்

(தலைவன் தலைவியைப் புகழ்தல்.)

39. காரே யளக மறலன்று பாயுங் கயல்விழியே
நீரேய் தருமிரு நீலோற் பலமல்ல நீண்டபெருஞ்
சீரேய் பிரம்பையி லாநந்த ரங்கன் சிலம்பனையார்க்
காரே யுவமை யரவிந்த மேயிட மாவதுவே.

**குறிப்பு.**—கார் : மேகம். அறல் : கருமணல். அரவிந்தமேயிடம் என்றதால் உவமை யிலக்குமி என்பது பெற்றும். இச் செய்யுள் ஒழிப்பணி.

### உடன் புணராயத் துய்த்தல்

(பாங்கியர் கூட்டத்தையடையுமாறு தலைவன் தலைவியை விடுத்தல்.)

40. தேங்கம லத்துரை மாதேயென் பாலுற்ற தெள்ளமுதே
பாங்கியர் சூழ்தரத் தாரா கணநடுப் பான்மதிபோ
லோங்கிய வாநந்த ரங்கன் பிரம்பை யுயர்வரைவா
யாங்கினி தெய்துக நீபஞ்சி யூட்டு மடிபெயர்த்தே.

**குறிப்பு.**—தாராகணம் : நட்சத்திரக் கூட்டம் ; பான்மதி : வெள்ளிய சந்திரன். பஞ்சி : செம்பஞ்சுக் குழம்பு.

இடந்தலைப்பாடு முற்றும்

## 8. பாங்கற் கூட்டம்

### தலைவன் பாங்கனைச் சார்தல்

(பாங்கனுடைய உதவியால் தலைவன் தலைவியை யடைதல். கூட்டம் : கூடுதல் ; தொழிற் பெயர். இனி இதற்குப் பாங்கனைத் தலைவனடைதல் எனவும் பொருள் கூறுக.)

### தலைவன் பாங்கனைச் சார்தல்

(பாங்கன் : உயிர்த்தோழன் ; பாங்கு : அருகு ; யாண்டும் அருகில் இருப்பவன் என்பது பொருள்.)

41. எண்ணும் பிரம்பை யிரங்கேந் திரனுக் குபேந்தரனென
நண்ணும் புகழ்செயு மாமனம் போலுமென் னண்பனுக்குப்
பண்ணுந் திறனு மெனக்கண்டு கொண்டிப் பரிசுரைத்தால்
மண்ணின் விலக்குந ருண்டோநம் பொன்னை மருவுதற்கே.

**குறிப்பு.**—பண் : இராகம். திறம் : ஸ்வரங்களின் வகை. பண், திறம் இவற்றினிலக்கணங்களைச் சிலப். அடியார்க்கு நல்லாருரையில் காண்க ; பொன் : தலைவி ; இந்திரனுக்கு உதவியாயிருப்பவன் உபேந்திரன்.

### பாங்கன் தலைவனை யுற்றதுவினுதல்

(உற்றது– உற்ற துன்பத்தை.)

42. அடுங்கைக் களிறு பிளிறிட் டழைக்க வடர்ந்தகரா
நடுங்கப் பணித்த பிரம்பைரங் கேந்த்ர னலங்கொள்வெற்பா
குடும்பத் தினையுற்ற குற்ற மறைப்பவர் கொள்கையென்ன
விடும்பைக் கிடமா யிருதோண் மெலிகுவ தேதுனக்கே.

**குறிப்பு.**—களிறு : கஜேந்திரன். கரா : முதலை. பணித்த : செய்த. கஜேந்திரனுக்கு வீடுபேறளித்த திருமாலையொத்த ஆநந்த ரங்கன் என்க. இடும்பை : துன்பம் ; ' இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ, குடும்பத்தைக் குற்ற மறைப்பா னுடம்பு ' [திருக்குறள் – 1029] என்னும் சொற்களும் கருத்தும் பின்னி ரண்டடிகளில் எடுத்தாளப்பட்டமை காண்க.

### தலைவனுற்ற துரைத்தல்

(தலைவன் தனக்கு நேர்ந்ததைக் கூறுதல்.)

43. விளமேற் குணிலெனக் கன்றெறிந் தன்று விஜயங்கொண்டு
வளமேவு மாநந்த ரங்கன் பிரம்பையை வாழ்த்தலர்போன்
றுளமேவு கொல்லி மலைப்பாவை யென்னமுன் னுற்றிடுமோ
ரிளமான் விழிக்குடைந் தென்னுற்றல் தோற்ற திருந்தகைத்தே.

**குறிப்பு.**—விள : விளாமரம். குணில் : குறுந்தடி. கண்ணன் கன்றுரு வாய் வந்த அசுரனை விளாமரத்திற் சாடிய சரிதம் ஈண்டமைந்துள்ளது ; " கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன் " என்னும் சிலப் (பாட்டு–ஆய்ச்சியர் குரவை)உம் அதனுரையும் நோக்குக ; கொல்லி மலைப்பாவை : அணங்கு. காமுகரைக் கொல்லு மியல்புடைமையால் இப்பாவை ' கொல்லி ' எனவும், இஃது இருக்கும் மலை ' கொல்லிமலை ' எனவும் பெயர் பெற்ற முறைஉணரற் பாலது.

" ............................பொறைய
னுரைசா லுயர்வரைக் கொல்லிக் குடவயி
னகவிலைக் காந்த ளலங்குகுலைப் பாய்ந்து
பறவை யிழைத்த பல்கண் ணிறுஅற்
றேனுடை நெடுவரைத் தெய்வ மெழுதிய
வினைமாண் பாவை ...... " [நற்.185

" பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை " [நற் . 192]

" செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வங் காக்குந் தீதுதீர் நெடுங்கோட்
டவ்வெள் ளருவிக் குடவரை யகத்துக்
கால்பொரு திடிப்பினுங் கதழுறை கடுகினு
முருமுடன் றெறியினு மூறுபல தோன்றினும்
பெருநிலங் கிளரினுந் திருநல வுருவின்
மாயா வியற்கைப் பாவை " [நற் . 201]

இம்மூன்று நற்றிணைப் பாக்களின் அடிகளாலுங் கொல்லிமலைப் பாவை யின் இயல்பை யறிக. இளமான் : தலைவி.

### சுற்றறி பாங்கன் கழறல்

(கழறல்—இடித்துரைத்தல்.)

44. மானென்று நின்று மருட்டக் கரட மதகளிறு
தானென்று தற்குத் தளர்ந்ததென் றுய்செழுந் தாமரையின்
மீனென்று கண்ணியர் வேள்பிரம் பூரன் விரும்புநறுந்
தேனென்று முல்லைகொ ளாநந்த ரங்கன் சிலம்பிடத்தே.

**குறிப்பு.**—ஒன்றுதற்கு : நெருங்குதற்கு ; " தானென்றதற்கு " என்றும் பாடம். ஒன்றுதல் : பொருந்துதல் ; நிகர்த்தல். 'விரும்பிடுஞ் செந்' என்றும் பாடம். ஒன்று : சேர்ந்த.

### கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்

(பாங்கன் இடித்துக் கூறியதைத் தலைவன் மறுத்துச் சொல்லுதல்.)

45. ஏந்திளங் கொங்கை யிளநீருங் கொவ்வை யிதழுமிள
மாந்தளிர் மேனியும் பானலொப் பான வரிவிழியு
நாந்தகங் கைக்கொள் பிரம்பைரங் கன்வரை நாரியைம்பாற்
கூந்தலுங் காணிலென் மேற்குறை கூறக் குறிப்பதின்றே.

**குறிப்பு.**—பானல் : நீலோற்பலம். நாந்தகம் : வாள். ஐம்பால் : முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்னும் ஐவகைக் கூந்தல் அணி. நாரி : பெண்.

### கிழவோற் பழித்தல்

(பாங்கன் தலைவனைப் பழித்தல்.)

46. வங்கங் கலிங்கந் தெலுங்கம் புறமிட வாளெடுத்த
துங்கன் பிரம்பையி லுநந்த ரங்கன் றுதிகொள்வெற்பா
பங்கம் படவென்னை முன்னொரு மானின்று பார்த்ததென்றுய்
சிங்கந் தடைப்படு மோமட மான்செய் செருக்கினுக்கே.

**குறிப்பு.**—' பிறகிட ' என்றும் பாடம். இச் செய்யுள் பிறிதுமொழிதலணி. வங்கம் முதலியன புறமிடவாளெடுத்ததாகக் கூறியது கவிமரபு போலும் ; இது வரலாற்று உண்மை என்று கருத வேண்டுவதின்று. வங்கத்திலும், கருநாடகத்திலும், தெலுங்கு நாட்டிலும் பிரெஞ்சுக்காரர்கள் பெற்ற வெற்றிகளைப் பாட்டுடைத் தலைவன் வெற்றியாகக் கூறினர் எனலுமாம்.

### கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்

(கிழவோன் : தலைவன், எழுவாய். வேட்கை : தலைவிபாலுள்ள விருப்பம். சாற்றல் : கூறுதல்.)

47. சொல்லா லெவரையுந் தேற்ற வல்லேமெய்த் துணையெனவே
நல்லார் மதிக்குந் திறமுடை யேமிக்க நாகரிகன்
மல்லாருந் திண்புய ளுநந்த ரங்கன் மகிழ்பிரம்பை
யல்லார் குழலி விழிவேற்குத் தோற்றநம் மாற்றனன்றே.

**குறிப்பு.**—மல் : வலிமை. அல் : இருள். விழிவேல் : இருபெயரொட்டுப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ; ஈண்டுத் தலைவி. வேல் போன்ற விழிகளின் பார்வை எனனுமாம். " நமது சொல் ஆற்றலால் பிறரைத் தேற்றவல்லேம் ; நல்லார் நம்மை அவர்க்கு உற்ற துணையெனவே மதிக்கும் திறமுடையேம் ; ஆயினும் அல்லார்குழலி விழியாகிய வேலிற்கு நாம் ஆற்றமாட்டாமையான் அவள்பால் உற்ற வேட்கை ஆற்றற்கு அரிது " என்பது கருத்து.

### பாங்கன்றன் மனத்தழுங்கல்

(அழுங்கல் : வருந்துதல்.)

48. பாலொக்கு மின்சொல் புயலொக்கு மேனியன் பண்டுதுயி
லாலொக்கு மின்வயி ருழியொக் கும்விழி யம்புயக்கண்
மாலொக்கு மாநந்த ரங்கன் பிரம்பை வரைக்கொடிக்கு
நூலொக்கு நுண்ணிடை யென்று லினியென்ன வெண்ணுவதே.

**குறிப்பு.**—புயலொக்கு மேனியன் : திருமால் ; ஆல் : ஆலிலை ; ஆழி : கடல். அம்புயக் கண்மால் : செந்தாமரை மலர்போலும் கண்ணையுடைய திருமால் ; இன்சொல் பாலையும், வயிறு ஆலிலையையும், விழிஆழியையும், இடை நூலையும் ஒக்கும்.

### பாங்கன் றலைவனோடழுங்கல்

(அழுங்கல் ஈண்டு வருந்திக் கூறுதல்.)

49. ஆதவன் மேற்குதித் தாலும் பரவை யகன்றிடினு
மோதுநல் வேத நெறிதி ரிந்தாலு முளந்திரியா
மாதவ ளுநந்த ரங்கன் பிரம்பை வரையண்ணலே
மேதகு முன்பெரு நீதியெண் ணுதலென் வெவ்வினையே.

**குறிப்பு.**—பரவை : கடல். அகன்றிடினும் : கரைபுரண்டாலும். 'திரியா என்பதை அண்ணலோடு கூட்டுக. ' என் வெவ்வினை ' வினு. ஏ : அசை. ' தெற்குதித்தாலும் ' என்றும் ' நால்வேத ' என்றும் பாடம்.

### பாங்கனெவ்விடத் தெவ்வியற்றென்றல்

(' நீ கண்ட உருவம் யாண்டையது ? எவ்வியல்பிற்று ? ' என்று பாங்கன் தலைவனைக் கேட்டல்.)

50. உன்பே ரறிவு மொழுக்கமும் பெற்ற வுனைத்தெருட்டு
மென்பே ரறிவினை யென்சொல் லுகேனெதிர்த் தாரைவென்று
தன்பேர்செ யாநந்த ரங்கன் பிரம்பையஞ் சாரலிடத்
தன்பேறு மாமயிற் கெவ்விடமி யாதிய லாவதுவே.

**குறிப்பு.**—உன் அறிவு : ஆராயும் திறனுடைய அறிவு. பிரம்பையம் சாரல் ; அம் : சாரியை. உன்னுதல் : யோசித்தல். பேர் : புகழ். ' அன்பு ஏறும் மாமயில். '

### அவனஃதிவ்விடத்திவ் வியற்றென்றல்

(தலைவன் தான் கண்டவுருவம் இவ்விடத்தில் உள்ளது, இவ்விலக்கணத்தை உடையது என்று கூறுதல்.)

51. அம்பே விழியின் னமுதே மொழியறல் சேர்ந்தவஞ்சிக்
கொம்பே யிடையெழிற் கோங்கரும் பேமுலை கோபியர்கள்
தம்பே றெனும்பிரம் பூரரங் கேந்த்ரன் றடஞ்சிலம்பில்
வம்பேறு கொங்கை மடந்தைக் குடந்தையம் மாமயிலே.

**குறிப்பு.**—அறல் : கருமணல் ; கூந்தல். பேறு : செல்வம். வம்பு : கச்சு. வாசனையுமாம். ' மடந்தைக் குடந்தையம் மாமயில் ' என்றதால் மடந்தை மயிலின் சாயலினையுடையள் என்பது கருத்து. உடந்தை: கூட்டு; ஈண்டு ஒப்பு.

### பாங்கனிறைவனைத் தேற்றல்

(இறைவன் : தலைவன் ; தேற்றல் : ஆற்றுவித்தல்.)

52. அன்னந் தமயந்தி யைக்கண்டு கூட்டிய வத்திறம்போற்
பென்னம் பெரிய முலையாளைக் கண்டு பெயர்குவன்யான்
பொன்னங் குவட்டைப் பொருதிரு வேங்கட பூபன்பெற்ற
மன்னன் பிரம்பையி னநந்த ரங்கன் வரைப்புறத்தே.

**குறிப்பு.**—பென்னம் பெரிய : மிகப்பெரிய ; கன்னங்கறேல், சின்னஞ் சிறிய என்பன போன்றது. பொன்னங்குவடு : மேரு. பொருவரை யெனக் கூட்டுக. அன்னம் நளதமயந்தியரைக் கூட்டுவித்ததுபோல் பாங்கன் தலைவன் தலைவியரைக் கூட்டுவிப்பன் என்பது குறிப்பு.

### குறிவழிச் சேறல்

(தலைவன் குறித்த விடத்திற்குப் பாங்கன் செல்லுதல்.)

53. வாரித் தலத்திந் திரன்பிரம் பூரன் மநுவெனவே
யீரித்த வின்சொ லிரங்கேந்த்ரன் வெற்பி னிடைநிற்குமோ
பாரித்து விம்மிப் பணைத்திறு மாந்து பளபளெனப்
பூரித்த கும்ப மிரண்டேந்திக் கொண்டொரு பூங்கொடியே.

**குறிப்பு :**—வாரித்தலம் : கடல்சூழ்ந்த உலகு மநு : சுவாயம்புமநு : ஈரித்த : குளிர்ந்த. பணைத்து : பரந்து. கும்பம் : தனம். 'மது' என்ற பாடத்திற்கு அதை 'இன்சொ' லொடுங் கூட்டுக.

### பாங்கனிறைவியைக் காண்டல்

(இறைவி : தலைவி)

54. மண்ணிற் சிறந்த பிரம்பையர் வேந்தன் வரகுணத்தா
னெண்ணிற் சிறந்தரு ளாநந்த ரங்க னிசைத்தமிழ்போற்
கண்ணிற் சிறந்தநங் காந்தனை யுள்ளக் கருத்தின்வைத்த
பெண்ணிற் சிறந்தவ ளேயிவள் காதற் பிடியினமே.

**குறிப்பு :**—வரகுணம் : சிரேஷ்ட குணம். கண்ணிற் சிறந்த-ஐந்தனுருபு உறழ்வுப்பொருள், "கண்ணிற் சிறந்தவுறுப்பில்லை" (தஞ்சை. கோ. 4); காந்தன் : தலைவன்.

### இகழ்ந்ததற் கிரங்கல்

(தலைவனைத் தான் முன்னம் இகழ்ந்ததற்குப் பாங்கன் வருந்துதல்.)

55. புருவச் சிலையிற் பொலிந்தகண் ணம்புரம் போழ்ந்துமுது
குருவப் பொறுத்திவ னின்றங் குறுமுர வோனவனே
பருவப் புயல்பிரம் பூரரங் கேந்த்ரனைப் பாடுமிக்கோர்
மருவப் பெறுமப் புலந்தெரி யாதெள்ளு மாறுநன்றே.

**குறிப்பு.**—சிலை : வில் ; 'சிலையினுற் பொலிந்த கண்ணாகிய அம்பு மார்பினைப் போழ்ந்து' என்க. உரம் : மார்பு. அவனே வுரவோனென மாற்றுக ; பருவம் : கார்காலம். மிக்கோர்-இரண்டனுருபுத்தொகை. புலம் : அறிவு. எள்ளுதல் : இகழ்தல்.

### தலைவனை வியத்தல்

(பாங்கன் தலைவனது மனத்திட்பத்தை வியந்து கூறல்)

56. இந்திரன் றூதுாய் நளன்ற மயந்தி யிடத்திற்சென்று
வந்ததொப் பாகுமிம் மான்கண் வலைக்குளம் மான்சிக்கவுஞ்
செந்தமிழ் தேரும் பிரம்பைரங் கேந்த்ரனைச் சேர்ந்திருக்கு
மந்திரச் சுற்றத் தவர்சிறப் பெய்தினன் மன்னவனே.

**குறிப்பு :**—இமான் : தலைவி. அம்மான் : தலைவன். மந்திரச் சுற்றத் தவர் அமைச்சர்.

### பாங்கன் றலைவியை வியத்தல்.

(இது வெளிப்படை)

57. கண்ணு லருள்புரி காதலு முள்ளக் கருத்துமின்சொற்
பண்ணுல் விளக்கும் பரிசுநம் மண்ணறன் பாலவன்றோ
விண்ணுவை யொத்தரு ளாநந்த ரங்கன் விளங்குமொரு
தண்ணுர மார்பன் பிரம்பூர் விரும்பிய தாழ்குழலே.

**குறிப்பு.**—' தாழ்குழல் அருள்புரி காதலுங்கருத்தும் பரிசும் அண்ண றன் பால ', எனக் கூட்டுக. விண்ஆ : காமதேனு. தண்ணாரம் : குளிர்ந்த மாலை. தாழ்குழல் : அன்மொழித்தொகை ; தலைவி.

### தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறல்

(தலைவி தனியே நிற்றலைத் தலைவனுக்குப் பாங்கன் கூறுதல்.)

58. கோலப் பிடிநடைக் கோமளச் செம்பொற் கொழுந்துகம
ழேலக் கருங்குழற் செவ்வாய் வெண்மூர லிளங்கொடிதான்
ஞாலத் திலங்கும் பிரம்பைரங் கேந்திர னன்னகர்சூழ்
சோலைக்கு ணின்றது கண்டேன்றண் டார்புனை தோளண்ணலே.

**குறிப்பு.**—கோலம் : அழகு. ஏலம் : மயிர்ச்சாந்து. மூரல் : புன்னகை. தண்டார் : தண்தார் ; குளிர்ச்சிபொருந்திய மாலை. கருங்குழல், செவ்வாய், வெண்மூரல் என்றது முரண்தொடை.

### தலைவன் சேறல்

(சேறல் : செல்லுதல்)

59. மைவார் குழலிற் பிறையொடுஞ் செந்திரு வாய்ப்பவெழிற்
கைவாய் தரச்செங் கனிவா யமுதொடு காதலித்து
மெய்வாழ்வு கூரும் பிரம்பைரங் கேந்த்ரநல் வெற்பிடத்தி
னிவ்வா றெதிர்நிற்கு மோகரப்பு வாய்த்தவென் னின்னுயிரே.

**குறிப்பு.**—மை : மேகம். செந்திரு : இலக்குமியுருவம் பொறித்தவோர் மகளிர் தலையணி ; ' தெய்வவுத்தியாகிய சீதேவி யென்னுந் தலைக்கோலம்' [முருகு-23] நச் ; ' செந்திருவுந் திங்களும் பூவும் தலைசிறப்ப ' - தண்டி. 26. உரை : மேற்கோள்.

### தலைவியைக் காண்டல்

(தலைவன் தலைவியைக் காண்டல்)

60. வண்ட றுறந்து மயிலிய லாய மறந்திருண்ட
கொண்டல் பொரூஉங் குந்தளமேற் றளவங் குமுகுமெனத்
தண்டமிழ் தேரும் பிரம்பைரங் கேந்த்ரன் றடங்கடல்வாய்க்
கண்டல் பொருந்துறை வாயெதிர் கொண்டதென் கார்மயிலே.

**குறிப்பு.**—வண்டல் : ஓர் விளையாட்டு. துறந்து : நீத்து. மயில் இயல் ஆயம் : மயிற்கூட்டம் போன்ற தோழியர். கொண்டல் : மேகம். குந்தளம் : கூந்தல் . தளவம் : முல்லை. குமுகுமு : ஒளிவீசுதலைக் காட்டவந்த சொல். கண்டல் : தாழை,

### கலவியின் மகிழ்தல்

(இது வெளிப்படை)

61. மாரிகை வைத்தரு ளாநந்த ரங்கன்வட் காரைவென்ற
பேரிகை யார்க்கும் பிரம்பை யொப்பாமிப் பெரும்பணைத்தோட்
காரிகை யார்செங் கனிவா யமுதங் கலந்தருந்த
வாரிகை வைத்த வனைப்பெற்ற துங்கைக்கு வாய்த்தனவே.

**குறிப்பு.**—மாரி : மேகம். வட்கார் : பகைவர். ஆர்க்கும் : ஒலிக்கும். பணை : மூங்கில். காரிகையார் : தலைவி. வாரி : கடல். கைவைத்தவன் : அகத்தியன். பெற்றது : அகத்தியரைப் பெற்ற கும்பம் ; ஈண்டுக்கும்பம் முலைகளையுணர்த்திற்று. அமுதமருந்தக் குடங்கிட்டியதாகக் கூறிய நயம் உணரற்பாலது.

இச்செய்யுள் பிறிது நவிற்சியணி.

**புகழ்தல்**

(இது வெளிப்படை)

62. தேருந் தமிழ்ப்பிரம் பூரரங் கேந்த்ரன் சிலம்பணங்கைச்
சாரு மதியி னிதழா ரமுதந் தனையெனைப்போ
லோருங் கடவுளர் மாதவங் கோடி யுஞற்றினும்பின்
னாருந் திறம்பெற் றனரோ தினந்தோறு மன்புகொண்டே.

**குறிப்பு.**—சிலம்பு : மலை. அணங்கைச்சாருமதி : முகம். இதழாரமுதம் ; இதழூறல். மதி : மது (அமுதம்) வினையுடையது ; சந்திரன் சுதாகரன் ஆதலின் மதியினிதழாரமுதமென்றது சாலவும் பொருத்தமுடைத்து. ஓர்தல் : ஆராய்தல். உஞற்றினும் : செய்யினும். ஆருந்திறம் : உண்ணுந் தன்மை.

" மெய்வாய்கண் மூக்குச் செவியென்னு நாமங்கண் மேவப்பெற்ற
வைவா யினுநின் றருந்தின ரோவருந் தானவர்முன்
னுய்வான் மலைகொண் டொலிநீர் கடைந்தவன் றும்பரென்போன்
மைவா ரளக மடந்தைநின் போது மருந்தினையே."

[அம்பிகா. கோ. 69].

**தலைவன் தலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்தல்**

(' இனி நீ வருங்கால் உயிர்த்தோழியோடு வருக ' என்று
தலைவன் தலைவிக்குக் கூறுதல்.)

63. மன்னுயிர் காக்கும் பிரம்பை ரங்கேந்த்ரன் வரையிடத்தி
னென்னுயிர்க் கின்னுயிர் போலச் சிறந்த விளமயிலே
நின்னுயி ரன்ன குயிலொடும் வந்திங்கு நிற்பதல்லா
னன்னுத னீதனித் தெய்துவ தன்று நலந்தரற்கே.

**குறிப்பு.**—மயில் : தலைவி. குயில் : உயிர்ப்பாங்கி. நன்னுதல் - அன்மொழித் தொகை ; ஈண்டுத் தலைவியைக் குறிக்கும் அண்மை விளி.

**பாங்கிற் கூட்டல்**

(பாங்கியர் கூட்டத்தில் தலைவியைத் தலைவன் செல்லச்சொல்லுதல்)

64. நெய்தற் கழியிற் செழுந்தா மரைமே னிவந்ததென
வெய்தற் குரியநின் னுயத்து ணீசென் றினிதெய்துவாய்
செய்தற் கரிய வெயில்சூழ் பிரம்பையிற் செந்தமிழோ
ருய்தற் கிடஞ்செய்யு மாநந்த ரங்கன்வெற் பொண்ணுதலே,

**குறிப்பு.**—நெய்தற்கழி : நெய்தல் (ஆம்பல்) மலர்ந்த உப்பங்கழி. மேல் நிவந்தது என : மேலோங்கி வளர்ந்து நின்றதுபோல. எயில் : மதில். உய்தற்கு : பிழைத்தற்கு.

பாங்கற் கூட்டம் முற்றும்

## 9. பாங்கி மதியுடன்பாடு

(தலைவி வேறுபாட்டைக் கண்டு புணர்ச்சி யுண்மையறிந்தாராய்ந்து பாங்கி தன் மதியை யுடன்படுத்தல்.)

நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்புஞ் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினு மையமுற் றோர்தல்

[நாற்றம் : பண்டு பயின்றறியாததோர் மணம். தோற்றம் கூட்டத்தாற் பிறந்ததோர் பொலிவு. ஒழுக்கம் : பண்டை விளையாட்டை முனிந்தகுறிப் பினளாய் ஒழுகுதலும் தெய்வந்தொழாமை முதலியனவும். உண்டி : பண்டையிற் சுருங்கிய உணவு. செய்வினை மறைத்தல் : தான் செய்யும் வினையைப் பிறர்க்கு மறைத்தல். செலவு : ஆயத்தை நீங்கித் தனியே சேறல். பயில்வு : வேற்றேரிடத்துப் பயிலுதல்.]

65. உருகிய மெய்யு மொருவழிச் சேற லுறுமனமு
மருகிய வுண்டியு மாங்கோர் மறைப்புமுற் றம்புவிமேற்
பெருகிய சீர்த்திப் பிரம்பை ரங்கேந்த்ரன் பிறங்கலின்வாய்
முருகியற் கூந்தலுக் கென்னு மதியிகழ் முன்னமதே.

**குறிப்பு.**—உருகிய : இளைத்த. ஒருவழிச்சேறல் : பயில்வு. அருகிய : குறைந்த. மறைப்பு : செய்வினை மறைப்பு. உற்று : பொருந்தி. பிறங்கல் : மலை. முருகு : வாசனை. என்னும் : என்ன காரணத்தால் நேர்ந்தன வாம். மதியிகழ்முன்னம் : பிறையைத்தொழ ஒருப்படாத கருத்து.

### அவ்வகை தன்னுலையந் தீர்தல்

(மேற்கூறிய ஆராய்ச்சியால் பாங்கி சந்தேகம் நீங்குதல்.)

66. அரும்பிளங் கொங்கை யடிக்கொண் டெழுந்தகன் மார்பு கொள் [ளச்
சுரும்பிவர் கூந்தற் குழற்சியின் மாமணந் தோன்றவண்கைக்
கரும்புயல் போலும் பிரம்பை ரங்கேந்த்ரன் கனகவெற்பில்
வருந்திரு வென்ன முதுக்குறைந் தாணறை வார்குழலே.

**குறிப்பு.**—சுரும்பு : வண்டு. குழற்சி : முடி. திரு : இலக்குமி. முதுக் குறைதல் : பேரறிவுடையளாதல். நறை - தேன்.

"முதுக் குறைந்தனளே, முதுக் குறைந்தனளே
மலைய ஞெள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக் குறைந்தனளே"

(தொல். பொருள். அகத். சூ 3. நச். உரை மேற்கோள்.)

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருட் சொல்லிடை லுட்சுனை வியந்துரைத்தல்.

(வழிநிலை : வழிபாட்டு நிலை. கவர் பொருட்சொல் : இருபொருள் பயக்குஞ் சொல். தலைவியின் வேறுபாட்டைக் கண்ட தோழி இவ்வேறுபாட்டிற்குக் காரணம் யாதென்று வினையவழி அவள் ஒரு சுனையாடிப் போந்தேன் என்று கூறப் பாங்கி சுனை இங்ஙனஞ் செய்ததோ வென்று அதனை வியந்து கூறல்.)

67. கைவா ரணங்கவி ராஜர்க் களித்துக் களித்திருக்கு
மவ்வாண்மை யுற்ற பிரம்பைரங் கேந்திர னடுக்கலின்வாய்ச்
செவ்வாய் வெளுப்பக்கண் சேப்பக் களபத் திரளுகுப்ப
விவ்வா றெருசுனை யுண்டோவண் டார்குழ லின்னமுதே.

**குறிப்பு.**—கை : துதிக்கை. கவிராஜர் : புலவர். அடுக்கல் : மலை. சேப்ப : சிவப்ப. களபம் : கலவைச் சாந்து.

" கருங்கண் சிவப்பக் கனிவாய் விளர்ப்பக் கண்ணுரளியின்
வருங்கண் மலைமலர் சூட்டவற்றோ மற்றவான் சுனையே."
(திருச்சிற். கோ. 70).

### நடுங்க நர்ட்டம்

(தலைவி நடுங்குமாறு பாங்கி நாடுதல்.)

68. படநாக மேல்வைத்த பார்மேற் பிரம்பையப் பாற்கடல்செய்
யிடனுகை வைகிய வாநந்த ரங்க னிலங்குவெற்பிற்
கடநாக மொன்றுரு மேறெனப் பாயுமுன் கால்விசைக்கொண்
டடனுகம் வேல்கொண் டடர்த்தா னொருவள்ள லாயிழையே.

**குறிப்பு.**—படநாகம் : படத்தையுடைய சேடன். இடன் : இடம் ; ஈற்றுப் போலி. இலங்கு : விளங்கு. கடநாகம் : மதமலை ; எனவே, யானை. உருமேறு : கோடையிடி. அடல்நாகம் : வலியயானை. அடர்த்தான் : எதிர்த்தான்.

பெட்டவாயில் பெற்றிரவு வலியுறுத்தோன்,
கண்ணியுந் தழையு மேந்தி நண்ணியூர் வினுதல்.

(பெட்டவாயில் : விரும்பியவாயில் ; என்றது பாங்கியை. இரவு வலியுறுத்தல் : இரத்தற்குத் தலைவன் துணிதல். அங்ஙனம் துணிந்தோன் பாங்கியை நண்ணி ' நுமது ஊர் யாது ? ' என்று வினுதல்.)

69. பொன்னுருந் திண்புய மால்பிரம் பூரன் புவிபுரக்கு
மன்னூர் களிற்றுக் கிறையரங் கேந்த்ரன் மணிவரையிற்
கொன்னூர் பிறைநுதற் கொம்பனை யீர்செங் குமுதமலர்ந்
தென்னூ ரிதுவென் றுரைத்தா லிழுக்குமற் றேதுமக்கே.

**குறிப்பு** :—பொன் : வீரலட்சுமி. ஊரும் : வீற்றிருக்கும்; 'பொன்' என்றதற்கேற்ப 'மால்' என்றார். கொன் : அழகு. பிறைபோன்ற நுதலை யுடையீர், கொம்பு அனையீர் என்று தனித்தனி கொள்க. செங்குமுதம் : ஈண்டு வாய். இழுக்கு : குறைவு.

### பேர் வினுதல்

(உமது பேர் என்ன என்று பாங்கியைத் தலைவன் கேட்டல்.)

70. பாருரைக் குந்திறற் பார்த்திபன் சீர்த்தி படர்பிரம்பை
யூருரைக் குந்துரை யாநந்த ரங்க னுயர்வரையின்
சீருரைக் கும்மெழிற் சேயிழை யீர்நிலச் சேய்திறந்து
பேருரைத் தாற்குறை யுண்டோவண் டார்குழற் பேதையர்க்கே.

**குறிப்பு**.—திறல் : வலிமை. சீர்த்தி : பெருமை. சேயிழையீர் : சிவந்த அணிகளையணிந்துள்ளவரே ; ஈண்டுத்தோழி. நிலச் சேய் : செவ்வாய் என்னும் கோள் ; செவ்வாயை பூமியின் மகன் என்ப ; ஈண்டுச் சிவந்த வாய் என்னும் பொருளது.

### மானொடு மனம் வினுதல்

(வேட்டையிற் றப்பிய மானும் தன் மனமும் வந்தனவோ
என்று பாங்கியைத்தலைவன் வினுதல்.)

71. மழைவந்த செங்கைய னாநந்த ரங்கன் வளர்ந்திடும்பூங்
கழைவந்த தோளியர் வேள்பிரம் பூரன் கனகவெற்பி
னுழைவந்த தோநும் முழையென் மனம்பின்ன ருற்றதுண்டோ
குழைவந்து லாவிக் குமிழ்மேன் மறிவிழிக் கோமளமே.

**குறிப்பு** :—மழை : மேகம். வந்த : உவம உருபு. கழை : மூங்கில். உழை : மான், இடம். குழை : குண்டலம். குமிழ் : நாசி. மறிதல் : திரும்பு தல். கோமளம் : மென்மைத்தன்மையுடைய பாங்கி.

### வேழம் வினுதல்

(வேழம் : யானை ; வேட்டையிற் றப்பிய யானைவந்ததோ என்று
பாங்கியைத் தலைவன் வினுதல்.)

72. சுதைகொண் டமரர்க் கருத்தி யமர்கஞ்சன் சூழ்சகட்டை
யுதைகொண் டடர்த்த பிரம்பைரங் கேந்த்ர னுயர்வரைமேற்
குதைகொண்டு வெஞ்சினங் கொண்டிரு கோட்டொரு குஞ்சரம் [வேற்
புதைகொண்டிந் தப்புனம் வந்ததுண் டோசொல்லும் பூவையரே.

**குறிப்பு** :—சுதை : அமுதம். அமரர் : தேவர் ; மரணமில்லாதவர். அமர் கஞ்சன் : அமர் செய்யும் கம்ஸன். சூழ் : வஞ்சனை (ஆராய்ச்சி) யாலனுப் பின. கண்ணன் சகடாசுரனைக் கொன்ற வரலாறு ஈண்டுக் காண்க. 'அமரர்க் கருத்தி, உதை கொண்டடர்த்த ரங்கேந்த்ரன்' என்க. குதை : முனை ; ஆகு

பெயராய் ஈண்டு அம்பினை யுணர்த்திற்று. பூவை : நாகணவாய்ப்புள், பூவையர் ; ஈண்டுத் தோழியைக் குறித்தது. 'இரு கோட்டு ஒரு குஞ்சரம்' : முரண்தொடை. பாட்டுடைத் தலைவனைத் திருமாலாகக் கூறும் மரபுபற்றி அமரர்க்கருத்தியதாகவும், உதைகொண்டடர்த்ததாகவும் கூறினர்.

### யாரே யிவர் மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்.

(இங்ஙனம் வினவிய இவன் யாவனோ, இவன் எண்ணம் யாதோ என்று பாங்கி யாராய்தல்.)

73. கைவேல் களிற்றொடு போக்கினர் போற்சிலை கைப்பிடித்துச்
செவ்வேளை மானு மொருகானை யாடிடஞ் சேர்குவரா
லவ்வேளை யொத்த பிரம்பைரங் கேந்த்ர னடுக்கலின்வா
யிவ்வேண் மனத்தெண்ண மென்னுங் குறவ ரிளங்கொடியே.

**குறிப்பு.**—கைவேல் : தன்கைப்படையாய வேலை. களிற்றொடு போக்கினர் : தன்மேல் எதிர்த்து வந்த யானையினது உயிரைக் கொண்டு போமாறு விடுத்தவர். சிலை : வில். கைப்பிடித்து : கையிற் பிடித்து. வேல் போக்கப்பட்டது, ஆதலால் சிலை கையில் எஞ்சிற்று என்க. செவ் வேள் : குமாரக் கடவுள். ஆடிடம் : நாம் விளையாடுமிடம். அவ்வேள் : மன்மதன் : அஉலகறிசுட்டு, இலனுதலின் சேய்மைச் சுட்டாயிற்று எனலுமாம் ; அடுக்கல்: மலை. வாய் : ஏழனுருபு. இவ்வேள் : இந்த விரும்பத்தக்க தலைவன் ; ஆண்பாற் யெயர். 'இளங்கொடியே' என்பதுவிளியாயினும் தன்னொடு தான் கூறிய கூற்றாகவேகொள்க.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" (குறள். 774.)

### எண்ணந் தெளிதல்

(அங்ஙனம் ஆராய்ந்த பாங்கி தலைவன் எண்ணத் தினைத் துணிந்தறிதல்.)

74. முன்னொரு வேழம் வினவியங் கோல முறைதெரிந்து
பின்னொரு மான்வந்த துண்டோ வெனுமவர் பேச்சனைத்தும்
பொன்னொரு கோடிசெய் யாநந்த ரங்கன் புகழ்ப்பிரம்பை
மின்னொரு வாநின் னிடைபோன்றிப் போது வெளிப்பட்டதே.

**குறிப்பு.**—வேழம் : யானை. கோலம் : பன்றி ; கோல முறை தெரி தலாவது பன்றி சென்றவழியையறிந்து கொள்ளுதல். எனும் அவர் : என்று வினவும் அவர். பேச்சு அனைத்தும் : கூற்றுக்கள் எல்லாம். ஒருவா : நீங்காத. இடை போன்று பொய்யாய்வெளிப்பட்டதே என்பது இதன் கருத்து.

**தலைவன் கையுறை யேந்திநின் றவ்வகை வினுதல்**

(கையுறை: காணிக்கை. தலைவியின் கையிற் சேர்த்தற்குரிய அரும் பொருள். அவ்வகை: முன்வினவியவாறே.)

75. சொல்லாற் கிளியு நடையாற் பிடியுந் தொடரச் செய்யு
மல்லார் குழற்கொம் பனையார் திறமறி யாதளிக்குங்
கல்லா னெனச்சொல் பிரம்பைரங் கேந்த்ரன் கனகவெற்பி
னல்லா ரெனவிப் புனங்காத் திடவைத்த ஞாயநன்றே.

**குறிப்பு.**—கிளியும் பிடியும் 'அல்லார் குழற் கொம்பனையாரைத் தொடர்வது' அவர்தம் சொல்லும் நடையும் தம் முடையவை போலவே இருத்தலால். அல்: இருள். திறம்; தன்மை, திறம் அறியாது அளிக்கும்: யாவரையும் ஒப்பநோக்கி யளிக்கும். கல்: சிந்தாமணி. ஆன்: காமதேனு. கல்லானெனச் சொல்: கல்' என்றும் 'ஆன்' என்றும் சொல்லப்படும். நல்லார்: நல்லவர், மகளிர்.

*" தழைக்கின்ற சந்தனத் தண்ணருஞ் சாரற் றவழுங் [கொண்டன்
மழைக்குன்ற வாணர் மடவிய ரேநும் மலர்கண்களா
லுழைக்கன்றை யும்மொழி யாலொரு கோடிபைங் கிள்ளையையு
மழைக்கின்ற வுங்களை யோபுனங் காவல ராக்குவதே."

(அம்பிகா. கோ. 94)

**பாங்கி யெதிர் மொழிகொடுத்தல்**

(எதிர்மொழி: விடை, மறுமொழி.)

76. மான்வந் திவளிரு கண்ணு னதுமத வாரணமுந்
தான்வந் தெழுந்து தடமுலை யாயின தண்டமிழ்ப்பொற்
றேன்வந்த தாரன் பிரம்பைரங் கேந்த்ரன் சிகரவெற்பி
னூன்வந்த வேற்கை யொளிகான் றிடவரு முத்துங்கனே.

**குறிப்பு.**—இவள்: தலைவி. ஆனது: ஆயிற்று. தேன்வந்ததாரன்: தேன் பொருந்திய மாலையையுடையான். ஊன்: மாமிசம். கான்றிட: கக்க. உத்துங்கன்: தலைவன். தண்டமிழ்த்தாரன், பொற்றாரன், தேன்வந்த தாரன், என்றுதனித்தனி கூட்டுக. தலைவனுக்கு மறுமொழி கூறுமுகத்தால் தலைவியின் தன்மையையும் பாங்கி விளக்கிய திறம்காண்க.

---

* இச் செய்யுளின் பொருளை நோக்குமிடத்து இது 'முன்னிலையாக்கல்' என்னும் துறைப் பாற்படும் என்று தோன்றுகிறது, இச் செய்யுளில் 'அவ்வகை வினுதல்' இல்லை. 'முன்னிலை யாக்கல்' என்பது 'தலைவன் தலைவியையும் பாங்கியையும்' முன்னிலையாக்கிக் கூறுதல்: அதாவது 'விளித்துரைத்தல்'; ஆயினும் கையெழுத்துப் பிரதியில் கண்டவாறு அப்படியே இங்குப் பதிப்பிக்கப்பெற்றது.

**இறைவனை நகுதல்**

(நகுதல் : பரிகசித்தல்.)

77. உவரிக் இணையுற் றடுபடை யோன்பிரம் பூரன்வெற்றித்
தவருற்ற செங்கை யரங்கேந்த்ர னேங்குந் தடஞ்சிலம்பிற்
றுவருற்ற செந்தளிர்க் கையுமெய் யாவொரு சொல்லுமன்றி
யிவர்கற்ற வித்தைக ளத்தனை யும்மிந்தர ஞாலமதே.

**குறிப்பு.**—உவரி : கடல். இணை : நிகர். அடுபடை-வினைத்தொகை ; அடுதல் : கொல்லுதல். தவர் : வில். துவர்:சிவப்பு. எய்யா:அறியாத, விளங் காத ; '' எய்யாமையே அறியாமையே '' (தொல். சொல். 342) மெய்யாவொரு சொல்லுமன்றி : சொல்லுகின்ற சொற்கள் எல்லாம் பொய்யாக. இந்த்ர ஞாலம் : பொய். அது,-ஏ-அசை ; ' கையும்மெய்யா ' என்னும் சொற்றொடரில் ' கையும் மெய்யுமாய் ' என்னும் உலகவழக்கு தொனிக்கிறது.

**மதியினவரவர் மனக்கருத்துணர்தல்**

(தலைவன் தலைவியரின் எண்ணங்களைத்தன் ஆராய்ச்சியினால் பாங்கி அறிந்து கொள்ளுதல்.)

78. செந்தினை காத்திடும் பைந்தொடி யல்லளிச் சேயிழைபொன்
னந்தளி ரேந்திப் பிடிவேட்டை யாடு மவனிவகை
தந்திரஞ் சூழும் பிரம்பைரங் கேந்த்ரனற் சாரலின்வாய்
வந்தவர் தங்கருத் தொன்றேய னேகஞ்சொல் வார்த்தைகளே.

**குறிப்பு** :—செந்தினை, பைந்தொடி : முரண்தொடை. பொன்னந்தளிர் : அம், சாரியை. பிடி : பெண்யானை. ஆடுமவன் : தலைவன். இவகை : இவ் வகை, இவ்விதம். வந்தவர் : தலைவன் தலைவியர். அவர்தம் கருத்து ஒன் றுயினும் சொல்லும் சொற்கள் பல என்க.

'' ஏனல் காவலிவளுமல்லள்
மான்வழிவருகுவன் இவனும் அல்லன் ''

(இறை. அகப், 7 உரை)

**பாங்கிமதியுடன் பாடு முற்றும்.**

## 10. பாங்கியிற் கூட்டம்

(பாங்கியால் தலைவியைத் தலைவன் அடைதல்.)

**தலைவனுட்கோள் சாற்றல்**

(தன்னுள்ளத்திற் கொண்ட காதலைத் தலைவன் பாங்கிக்குக்கூறல்.)

79. குழைக்கோ பசுந்தினை செந்தேன் கலந்து குளிர்பொழிலாய்த்
தழைக்கோ பிரம்பையி னுநந்த ரங்கன் தடஞ்சிலம்பிற்
கழைக்கோல மிட்டமென் றேளீர் மணிபொன் கலந்துசிற்றி
லிழைக்கோ சிலம்பழைக் கோசெய்குற் றேவன் மற்றேதுமக்கே.

**குறிப்பு.**—‘ பசுந்தினை (யைச்) செந்தேன் கலந்து குழைக்கோ ’, என்க. குழைக்கோ : குழைக்கவோ. ‘ யான் குழைக்கோ, தழைக்கோ, இழைக்கோ, அழைக்கோ என்றனன் ’ என்க. கழைக் கோலமிட்ட : கரும்பினுருவம் பொறித்த, மூங்கிலினழகு செறிந்த தோள் எனினுமாம். மகளிர் தோளில் மன்மதன் வில்லான கரும்பின் உருவத்தைப் பொறித்தல் மரபு. சிலம்பழைத்தல் : மலையெதிர் கூவல். செய்குற்றேவல் : யான் செய்யக்கூடிய குற்றேவல்.

“ மடுக்கோ கடலின் விடுதிமி லன்றி மறிதிரைமீன்
படுக்கோ பணிலம் பலகுளிக் கோபரன் றில்லைமுன்றிற்
கொடுக்கோ வளைமற்று நும்மையர்க் காயகுற் றேவல்செய்கோ
தொடுக்கோ பணியீ ரணியீர் மலர்நுஞ் சுரிகுழற்கே. ”

(திருச்சிற். கோ. 63.)

### பாங்கி குலமுறை கிளத்தல்

(தலைவன் குலத்தின் மேம்பாட்டையும் தங்கள் குலத்தின் தாழ்வையும் பாங்கி தலைவற்குச் சொல்லுதல்.)

80. கயல்பாய் தடத்திற் கமல முகைவிண்டு காலுஞ்செந்தே
னயல்பாயும் வாழ்க்கைத் தருமூர முமமை யாந்தமிழி
னியல்பாயுந் தென்பிரம் பூரரங் கேந்த்ர னிலங்குவெற்பின்
மயல்பாய் களிறுகள் சீறூர்க் கொடிச்சியெம் மாமயிலே.

**குறிப்பு.**—கயல் : மீன். தடம் : தடாகம். கமலம் : தாமரை. முகை : அரும்பு. விண்டு சொரியும் : விள்ளுவதால் சொரியும் ; எச்சத்திரிபு ; வினையெச்சம் காரணப் பொருட்டு. காலும் : சொரியும். மும்மையாம் தமிழ் : இயல், இசை, நாடகம். இயல்பு ஆயும் எனப் பிரிக்க. மயல்பாய் : மதமயக்கத்தையுடைய. களிறுகள் : யானைகள் புரளுகின்ற. கொடிச்சி : குறிஞ்சி நிலப் பெண் ; பூங்கொடி போன்றவள். மயில் : ஆகுபெயரால் தலைவி.

### தலைவன் தலைவி தன்னை யுயர்த்தல்

(உயர்த்தல் : மேம்படுத்திப் பேசல்)

81. அவ்வுல கத்துட் டிலோத்தமை யைப்பெற்ற வந்தணனே
யில்வுல கத்தழ கெல்லாந் திரட்டி யினிதளித்த
நவ்வியன் னாளைப் பிரம்பைரங் கன்றுரை ராயன்புகழ்
மைவரை வைகுங் கொடிச்சியென்றே சொல்லும் வார்த்தை [நன்றே.

**குறிப்பு.**—அவ்வுலகம் : தேவருலகம் ; அ-சேய்மைச் சுட்டு. அந்தணன் : பிரமன். நவ்வி : மான். மை : மேகம். தேவருலகில் திலோத்தமைக்கு ஒப்பாக இவ்வுலகத்து இத்தலைவியைக் கொடிச்சி என்றது நகைக்கிடமாகும் என்றவாறு.

### நன்னுதற் பாங்கியறியாள் போன்றுவினுதல்

(தலைவன் விரும்பிய மங்கையை இன்னுளென்று அறியாள் போன்று அவனைப் பாங்கி வினுதல்.)

82. வந்தாரை வாழ்விக்குஞ் சீர்ப்பிரம் பூரன் வடிதமிழ்க்குச்
சந்தான மொத்தரு ளாநந்த ரங்கன் றடஞ்சிலம்பிற்
பந்தாடு கின்றவ ரெண்ணில ருண்டவ ரிற்பசுந்தேன்
கொந்தாரும் பூங்குழன் மாதெவ ணீயன்பு கூர்ந்தவளே.

**குறிப்பு.**—வந்தாரை : தன்னை அண்டி வந்தாரை ; வடிதமிழ் : ஆய்ந்து தேரப்பட்டதமிழ். சந்தானம் : ஐந்தருக்களில் ஒன்று ; கற்பகம் எனலுமாம். எண்ணிலர் : எண்ணற்றவர். கொந்து : பூங்கொத்து.

### இறையோ னிறைவி தன்மை யியம்பல்

(இறைவி தன்மை—தலைவியின் சிறப்பிலக்கணம்.)

83. கருங்கட னீருண் டிருண்டெழுங் கொண்டல் கதுப்பதனே
டொருங்கெழு மாமதி யானனம் வேனகு முண்கண்மிக்க
வருந்தமிழ் தேர்பிரம் பூர்வரு மாநந்த ரங்கன்வெற்பாம்
பெருந்தன பாரங்க ளாரங்க ளெங்கும்ப்ர காசிக்குமே.

**குறிப்பு.**—கொண்டல் : மேகம். கதுப்பு : கூந்தல். ஆனனம் : முகம். 'வேல்நகும் உண்கண்'. நகும்-பிரகாசிக்கும். உண்-மையுண்ட. பிரகாசிக்குந் தனபாரங்கள் வெற்பாமென முடிக்க. கதுப்பு கொண்டல், ஆனனம் மதி, உண்கண் வேல், தனபாரங்கள் வெற்பாம் என்க.

### பாங்கி தலைவி யருமை சாற்றல்

('நீ குறித்த மங்கை பெறுதற்கறியள்' என்பதைப் பாங்கி தலைவனுக்குச் சொல்லுதல்.)

84. மின்போ னுடங்கு மருங்குற் கருங்குழல் வெண்ணகையா
ளென்போல் பவருக் கெளியவ ளோவிசை வாணருக்குப்
பொன்போலு மாநந்த ரங்கன் பிரம்பையம் பொன்னகர்வா
யன்போ ருருக்கொள ணங்கென லாமெனக் காண்டகையே.

**குறிப்பு.**—நுடங்கும் : துவளுகின்ற. மருங்குல் : இடை. கருங்குழல், வெண்ணகை-முரண்தொடை. வாய் : ஏழனுருபு. அணங்கு : தெய்வப் பெண். 'எனக் காண் தகையே' என்றோ 'எனக்கு ஆண்தகையே' என்றோ பிரிக்க.

### தலைவனின்றி யமையாமை யியம்பல்

(தனக்குத் தலைவி யின்றியமையாதவள் என்பதைத் தலைவன் சொல்லுதல்; தலைவன்—எழுவாய்.)

85. நன்புகழ் தேடு மெழிற்பிரம் பூர னளினமலர்ப்
பொன்புனை யாநந்த ரங்க மகிபன் பொருப்பனையா
யின்புற நானரு ளிப்போது நீவைத்தென் பாற்சிறந்த
வன்புசெய் யாவிடி னென்னுவிக் கோர்துணை யாதுமின்றே.

**குறிப்பு.**—பொன் : இலக்குமி. நளினம் : தாமரை. அனையவள் : பாங்கி. பொருப்பு : மலே. 'நான் இன்புற, நீ இப்போது என்பாற்சிறந்த அருள் வைத்து, அன்பு செய்யாவிடின், என் ஆவிக்கு ஓர் துணையாது மின்றே' என்று கூட்டிமுடிக்க.

**நின்குறை நீயே சென்றுரையென்றல்**

(குறை : காரியம். 'நின் காரியத்தை நீயே சென்று தலைவியிடம் சொல்லுக' என்று பாங்கி கூறுதல்.)

86. தென்னவன் செம்பியன் சேரல ளுமெனச் சீர்த்திபெற்ற
மன்னவ ளுநந்த ரங்கன் பிரம்பை வளங்கொள்வெற்பா
வின்னவன் பாற்சென்று நின்றெனக் கோதிடு மித்திறத்தை
முன்னவன் ளுடன் னிடமேவி நீயே மொழிகுவையே.

**குறிப்பு.**—தென்னவன் : பாண்டியன். செம்பியன் : சோழன். சேரலன் : சேரன். வெற்பன் : தலைவன். இன்னஅன்பால் : இத்தகையஅன்போடு. முன்ன : கருத. அன்னுள் : அவள், தலைவி.

**பாங்கியைத் தலைவன் பழித்தல்**

(பழித்தல்-நிந்தித்தல்.)

87. ஊராம லோடும்வெம் பேய்த்தேரை நீரென் றுழையினங்க
ளாராத காத லொடுஞ்சென்ற வாறுன்னை யாசரித்தேன்
பாராளு மாநந்த ரங்கன் பிரம்பைப் பதியணுகா
நேரார் பயனி னெடுமொழி யானது நின்மொழியே.

**குறிப்பு.**—ஊராமலோடும்-முரண். பேய்த்தேர்-கானல் நீர். பாலை நிலத்தில் நீர்நிலைபோல் தோன்றும் ஒரு பொய்த் தோற்றம். 'உன்னை நான் வேண்டியது நம்பத்தகாத பொய்யான பேய்த்தேரை நம்பியவாறுயிற்று' உழை : மான். என்று : என்று கருதி. ஆசரித்தேன் : வேண்டினேன். நேரார்: பகைவர். பயனில் நெடுமொழி : பயனற்ற பேச்சு. 'ஆநந்த ரங்கன் பகைவர் அவனை வெல்வதாகக் கூறும் பயனற்ற சூளுறவு போல் நினது சொற்களும் முடிந்தன' என்றவாறு.

"மாதர் குறைமுடிக்க வல்லாயை வல்லையெனக்
காதல் சிறப்பக் கருதியது—மேதகைய
பாம்படுதே ரல்குல் பயம்படுநீர் மானமான்
றேம்படுதேர் மீது செலல்." [சிற்.]

**பாங்கி பேதைமை யூட்டல்.**

(தலைவியின் அறியாமையை மனங் கொள்ளும்படி பாங்கிதலைவனுக்குச் சொல்லுதல்.)

88. ஏலமுஞ் சந்து மெழுகோட்ட மும்புத லென்றெறிந்து
சாலவுஞ் செந்தினை தான் விரைப் பார்திருத் தங்கைதுங்க
மாலெனு மாநந்த ரங்கன் பிரம்பை வரையினின்பொற்
சிலமும் செய்கையுங் கண்டாங் கிரங்கும் திறமரிதே.

குறிப்பு.—சந்து : சந்தனம். கோட்டம். மலைபடும் ஒரு வாசனைத் திரவியம். புதல் : புதர். எறிந்து : வெட்டி. திருத்தங்கை : தலைவி. பொன் : அழகிய. " நின்றிலைமைக்கு அவள் (தலைவி) இரங்க மாட்டாதவள் " என்றவாறு.

> " நறுந்தண் டகரம் வகுள மிவற்றை
> வெறும்புதல்போல் வேண்டாது வெட்டி—யெறிந்துழுது
> செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
> நொந்தினைய வல்லளோ நோக்கு "

(திணை. நூற். 24.)

### காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்

(தலைவி முதிர்ந்த அறிவுடையவள் என்பதைத் தலைவன் பாங்கிக்குக் கூறுதல்.)

89. தருநாளு மொத்தகொடையண்ணல் கண்ணனைத் தான்வளர்த்த
பெருமான் பிரம்பையி னுநந்த ரங்கன் பிறங்கலின்வாய்
வருநாள் பலவுண் டெழுந்தாடுந் தோகை மயிலனையா
ளொருநா ளிருகண் ணுறக்கண்ட துண்டென்னை யொண்ணுதலே.

குறிப்பு.—தரு : ஐந்தரு. நாளும் : எஞ்ஞான்றும். கண்ணனை வளர்த்த பெருமான் : நந்த கோபன் ; அவன் இடையர் குலத்தவனுதலின் ஆநந்த ரங்கனுக்கு உவமையாவன் ; ஒண்ணுதல் : தலைவி ; ஒரு நாள் இருகண் : முரண்தொடை.

### பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்

(முன்னர்க் கூடியாங்கு இன்னும் கூடுக வென்று பாங்கி தலைவற்குக் கூறல்.)

90. அரும்பவிழ் கால மறிந்துநன் மன்ற லதுவழியே
சுரும்புறு மென்ப தியல்பன்றி வேறென்று சொல்லவுண்டோ
கரும்புய லாநந்த ரங்கன் பிரம்பையங் காமர்வெற்பா
விரும்பிளங் கொங்கையென் மங்கையு மத்திற மேயவளே.

குறிப்பு.—மன்றல் : மணம், வாசனை. சுரும்பு : வண்டு. உறும் : வந்து அடையும். இயல்பு : இயற்கை, புயல் : மேகம் ; காமர் : அழகு, விரும்பப் படுவது. கொங்கை என் மங்கை : கொங்கையையுடைய என் மங்கை. தலைவி. திறம் : தன்மை ; மேயவள், பொருந்தியவள்.

### தன்னிலை தலைவன் சாற்றல்.

(தான் வேட்கைநோயால் உழக்குந்தன்மையைத் தலைவன் பாங்கிக்குக் கூறல்)

91. அந்தளிர் மேனியும் பானலங் கண்ணு மவிரளக
பந்தியு முந்துறப் பாராட்டி னுலின்பம் பாலிக்குமோ
செந்தமிழ் தேர்பிரம் பூராங் கேந்தரன் செழும்பொழில்வா
யிந்திரைக் கொப்ப விருப்பார் விருப்பமெய் தாவிடிலே.

**குறிப்பு.**—அந்தளிர்:அழகிய மாந்தளிர். பானல்:நீலோற்பலம். அம்: சாரியை. அவிர்:ஒளிவீசும். அளகம்:கூந்தல். பந்தி:வரிசை. பாலிக்கும்: கிட்டும். இந்திரை:இலக்குமி. 'இருப்பார் விருப்ப மெய்தாவிடில் இன்பம் பாலிக்குமோ' என்க. "தோளுங் கூந்தலும் பல பாராட்டி, வாழ்த லொல்லுமோ" (ஐங். 178.)

### பாங்கி யுலகிய லுரைத்தல்

(உலகியல்:ஆன்றோரொழுக்கம். மணஞ்செய்து கொள்ளுதலே முறை யென்று தலைவனுக்குப் பாங்கி சொல்லுதல்.)

92. தளைகொண் டவிழ்மலர் தங்குமைம் பாலன்பு தன்னையுன்னிற்
கிளைகொண் டெவருங் களியாட் டெடுத்திடக் கீழுறியி
னளைகொண்ட வாநந்த ரங்கன் பிரம்பை யடுக்கலிடத்
துளைகொண்ட வாம்பரி யூர்கொள்ள நீவரைந் தோங்குவையே.

**குறிப்பு.**—தளை:கட்டு; முறுக்குமரம். ஐம்பால்:கூந்தல். கிளை-உறவு; மங்கல இசைப் பாட்டு எனினுமாம். அளை:தயிர். அடுக்கல்:மலை. உளை:தலை யாட்டமென்னும் அணி; பிடரிமயிருமாம். வாம்பரி:தாவுங் குதிரை. ஊர் கொள்ள:பவனிவர. வரைதல்:மணத்தல். ஓங்குதல்:சிறப்புறுதல்.

### தலைமகன் மறுத்தல்

(இது வெளிப்படை.)

93. கன்மே லடிவைத் தொருபாவை யாகச்செய் கார்மதுரச்
சொன்மேல் விரும்பும் பிரம்பூ ரரங்கனுத் துங்கவெற்பின்
மின்மே லெழுமலை போலிடை மேன்முலை மெல்லியலா
டன்மேன் முயங்குவ னென்மேலிப் போதன்பு தான்செயவே.

**குறிப்பு.**—பாவை:அகல்யை. கார்:இராமன். மதுரச்சொல்:இராமா யணம்; பொதுவாக இனியசொல் எனினுமமையும். உத்துங்கம்:உயர்வு. மின்: இடை மலை:முலை. தன்மேல்:தன்னை; வேற்றுமை மயக்கம்.

### ஆற்று நெஞ்சினோடவன் புலத்தல்

(பாங்கி மறுத்தலைப் பொறாத நெஞ்சை யுடையவனாகித் தலைவன் வெறுத்துக் கூறல்.)

94. கார்கொண்ட நீலங் கயத்துணில் லாமற் களைவதன்றி
யேர்கொண்ட தொண்டை யிதழூற லுண்டின்ப மெய்தினமோ
பார்கொண்ட சீர்ப்பிரம் பூரரங் கேந்த்ரன் பருப்பதத்தி
னூர்கொண்ட கல்லத ருங்குழி யக்கடி தோடிவந்தே.

**குறிப்பு.**—நீலம் களைதல்கையுறைக்காக. கார்:கருநிறம். கயம்:குளம். ஏர்:அழகு. தொண்டை: ஆதொண்டைக்கனி. இதழூறல்: அதரபானம். 'கார்கொண்ட நீலங் கயத்துணில்லாமல்' என்றதால் தலைவன் தான் கண்

கலக்க மொன்றையே யெய்துதலைத் தொனிப்பித்தலுங்கூடும். பருப்பதம்: பர்வதம், மலை ஊர்கொண்ட:வளைந்த. ஊர்தலைப் பொருந்திய எனினுமாம். அதர்:வழி. குழிய:பல்கால் நடத்தலாலும், விரைந்தோடி வருவதாலும, குழி உண்டாகும்படி. கடிது:விரைந்து.

### பாங்கி யாற்றுவித்தகற்றல்

(பாங்கி தலைவனது துயரையாற்றி அவனை விடுத்தல்.)

95. நெய்யுறை வேற்கைப் பிரம்பைரங் கேந்த்ர னீள்வரைவா
யையுறவாய் நின்ற வலமர னீயெய்த லாங்கணெய்தின்
மையுறை வாட்கண் மயிலனை யாடன் மனமறிந்து
கையுறை யேற்பன் பணைசூழுந் தண்ணடைக் காவலனே.

**குறிப்பு.**—நெய்:கொழுப்பு. ஐயுறவு:சந்தேகம். அலமரல்:சுழற்சி, மனக்கவலை. எய்தல்:அடையவேண்டாம், எதிர்மறை வியங்கோள்ன்மை: அஞ்சனம். அனையாள்:தலைவி. பணை:வயல். தண்ணடை:மருதம்.

### இரந்து குறை பெறுது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்

[பனைமடலாற் செய்த குதிரை மீதேறி வீதியிற் செல்லுதலே தலைவியைப் பெறுதற்குரிய வுபாயமென்று தலைவன் கருதுதல். மடல்-ஆகுபெயர்; முற்பட்ட நட்புடைய தலைவியைப் பின்னர்ப் பெறுதற்கியலாவிடின் அவளுருவத்தையும் இருவர் பெயரையும் ஒரு படத்தில் எழுதுவித்துப் பனைமடலாற் செய்த ஒரு குதிரை மேலேறிப் பூளைவன பூளைந்துகொண்டு தலைவன் வீதியில் ஊர்ந்து வருதல் மடலேறலாம். அதனை யுணர்ந்த பெரியோர் உண்மை யறிந்து அவ்விருவர்க்கும் மணம் செய்விப்பர். இஃது புலவர் நாட்டிய வழக்கு.]

96. காமக் கடலின் கரைகா ணுதற்குக் கலனெனவே
நாமக் கடற்புவி சொல்வதெல் லாம்பெண்ணை நன்மடலே
யாமத் திறமின்றி யுண்டோ பிரம்பைக் கதிபன்முல்லைத்
தாமப் புயனெனு மாநந்த ரங்கன் றடவரைக்கே.

**குறிப்பு.**—கலன்:மரக்கலம் ; மொழியிறுதிப்போலி. நாமம்:அச்சம். பெண்ணை:பனை. அத்திறம்:மடலேறுதல். தாமம்:மாலை. புயன்:புயத்தை யுடையவன் ; ஏகதேச வுருவகம்.

### பாங்கிக்குலகின் மேல் வைத்துரைத்தல்

(ஒருவன் முன்னட்புள்ள தலைவியைத் தான் பெறுவிடின் மடன் மாவூர்ந்து சென்று பெறுவது வழக்கமென்று தலைவன் பாங்கிக்கு உலகின் மேல்வைத்துக் கூறுதல். இது பாங்கிக்குத் தலைவன் உரைத்தல்.)

97. பாவென வின்புசெ யாநந்த ரங்கன் பகர்பிரம்பைக்
காவெனு மோதியர் கண்வலை வீசக் கருத்திழந்தோர்
பூவென மேற்கொண் டெருக்கணிந் தீசன் பொடியணிந்து
மாவெனச் சீறு ரிடைமட லேறி வருகுவரே.

**குறிப்பு.**—பா:செய்யுள். கா:சோலை. ஓதி:கூந்தல். ஈசன்பொடி:விபூதி. மா:குதிரை. மடல்:மடன்மா.

**அதனைத்தன்மேல் வைத்துச் சாற்றல்**

(அம்மடலூர்தலைத்தான் செய்வதாகத் தலைவன் பாங்கிக்குச் சொல்லல்.)

98. வடத்திலை மேற்கண் வளர்ந்தருண் மாலை வளர்த்தவனீள்
தடக்கடல் சூழ்பிரம் பூரரங் கேந்த்ரன் றடங்கிரிமேற்
படத்தினி லென்னையு முன்மயி றன்னையும் பார்த்தெழுதி
யிடத்தினின் மிக்கநுஞ் சீறூர் மறுகிடை யெய்துவனே.

**குறிப்பு.**—வடத்திலை:ஆலிலை; உன் மயில்:தலைவி; மால்:திருமால். மாலைவளர்த்தவன்:நந்தகோபன். இவன் ஆநந்தரங்கனுக்கு, இடைக்குலத் தவனுதவின் உவமை. மறுகு:வீதி. கண்வளர்தல்:துயிலுதல்.

**பாங்கி தலைமகளவயவத் தருமை சாற்றல்**

(தலைமகளுடைய அவயவங்கள் படத்தில் எழுதுவதற்கு அரியன என்பதைப் பாங்கி தலைவனுக்குச் சொல்லல்.)

99. நன்னு வலர்புக ழும்பிரம் பூர னளினமலர்ப்
பொன்னுர் வழுத்திடு மாநந்த ரங்கன் பொருப்பிறைவா
மின்னுர் திருவுரு வெல்லா மெழுதினும் வேற்கணிடத்
தின்னு விடமு மமுதமுந் தோன்ற வெழுதரிதே.

**குறிப்பு.**—நாவலர்:புலவர்; நளினம்:தாமரை; நளின மலர்ப்பொன்னுர்: நாமகள், பூமகள்; வழுத்துதல்:போற்றுதல். பொன்னுர்:திருமகளனைய மாதர்களுமாம். கல்வியும் செல்வமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஆநந்தரங்கன் என்க. பொருப்பு:மலை. மின் ஆர்:ஒளிவீசும். இன்னு:தீய. வேற்கண் இடத்து விடமும் அமுதமும் தோன்றுதல் செய்யுள் 4-ல் காண்க.

**தலைமகன் றன்னைத்தானே புகழ்தல்**

(தலைவன் 'தலைவியைப் படத்திலெழுதும் வன்மையுடையேன்' என்று தன்னைத்தானே புகழ்தல்.)

100. வல்லொக்கு மாமுலை வாளொக்கு நீர்விழி வார்கணைசேர்
வில்லொக்கும் வாணுத ணுணயந்தீட்டும் விதமெனக்காஞ்
சொல்லொக்குஞ் செய்கைப் பிரம்பைரங் கேந்திரன் றுங்க [வெற்பிற்
கல்லொக்கு முங்கணெஞ் சொன்றே யெழுதக் கடவதின்றே.

**குறிப்பு.**—வல்:சூதாடுகாய், வட்டு. நுதல்:புருவம். நாணயம்:அழகு. 'ஏரார் திருவுரு வெல்லா மெழுத வருமெனக்கு, வாராதிருப்பதை யோமட வீருங்கள் வன்கண்மையே'

[கப். கோ. 89.]

'வல்லொக்கும் முலை, வாளொக்கும் விழி, கணைசேர் வில்லொக்கும் நுதல் ஆகியவற்றின் நாணயம் தீட்டும் விதம்' என்க. 'சொல்லொக்கும் செயல், திரிகரண சுத்தியுடைமை:மனத்தை உபலக்கணத்தாற் கொள்க.

செய். 242 காண்க.

### அலர்முலைப்பாங்கி அருளியல் கிளத்தல்

(மடலின் பொருட்டுப் பனையை வெட்டினுல் ஆண்டுள்ள பறவைகள் துன் புறும். அப் பறவைகளின் முட்டைகளும் உடையும். ஆதலால் அச் செயல் அருளியல்புக்கு மாறென்று பாங்கி தலைவனுக்குக் கூறல்.)

101. மன்றப் பனையிடை வைத்தநன் முட்டை மறுகவெழுந்
தன்றிற் குருகும் பெடையுமப் பாற்சென் றயர்ந்துருக
வென்றித் துரையரங் கேந்த்ரன் பிரம்பை விளங்குஞ்செம்பொற்
குன்றத் திடைவன் பனைமட லேறக் குறிப்பதன்பே.

**குறிப்பு.**—மன்றமறுகனெனக்கூட்டுக. முட்டை:இளங் குஞ்சு. மறுக: சுழல. குருகு:ஆண் பறவை. அன்பே:ஏ எதிர்மறைவினுப்பொருள். இல்லையென்பது குறிப்பு.

### கொண்டு நிலை கூறல்

(தலைவன் குறையை யுட்கொண்டு தான் உதவி செய்ய நிற்றலைப் பாங்கி அவனுக்குக் கூறல். நிலை:உடம்பட்டு நிற்கும் நிலை.)

102. பார்வாய் விளங்கும் பிரம்பையர் கோன்பற்ற லார்வெருவக்
கூர்வாள் பிடித்திடு மாநந்த ரங்கன் குலவரையிற்
கார்வாய் குழலிக்குன் காதலெல் லாஞ்சொல்லிக் கண்டபின்ன
ரூர்வாய் தவிர்வா யுயர்மா வெனமட லூருவதே.

**குறிப்பு.**—பார்:பூமி, பார்வாய் விளங்குதல் கோன்; பற்றலார்:பகைவர். வெருவ:அஞ்ச. கார்வாய் குழலி:மேகத்தின்றன்மை வாய்ந்த கூந்தலை யுடைய தலைவி. தவிர்வாய்:நீங்குவாய்.

"ஊர்வா யொழிவா யுயர் பெண்ணைத் திண்மடல்" [திருச்சிற். கோ. 80.]

### தலைவியிளமைத்தன்மை பாங்கி தலைவற் குணர்த்தல்

(இளமைத்தன்மை—பேதைமை)

103. ஐம்பான் முடிக்க வளவுப டாகொங்கை யங்குரும்பை
தம்பான்மை யெய்த வடியிட் டதுசெந் தமிழ்வினவி
நம்பான் மகிழ்பிரம் பூரரங் கேந்த்ர னலங்கொள்வெற்பா
செம்பான் மொழியறி யாச்சிறி யாட்கென்கொல் செப்புவதே.

**குறிப்பு.**—ஐம்பால்:கூந்தல். பான்மை:தன்மை. நம்பால்:நமதிடத்து. 'நம்பால் செந்தமிழ் வினவிமகிழ் ரங்கேந்த்ரன்' என்க.

**தலைவன் தலைவி வருத்திய வண்ண முரைத்தல்**

(பார்வை முதலியவற்றால் தலைவிதன்னை வருத்திய வண்ணம் உரைத்தல். இது தலைவி மங்கைப் பருவ முடையாள் என்று தெரிவித்தபடி.)

104. சிங்கமு நஞ்சுமிழ் தீவா யரவுஞ்செந் தீயுமுன்னி
னங்கது தான்சிறி தாயினு மாற்றற் களவிலையால்
மங்கையர் வேள்பிரம் பூரரங் கேந்த்ரன் வரையனைய
அங்கலுழ் மேனியு மவ்வாறு காணெழி லாய்தொடியே.

**குறிப்பு.**—உன்னின்:ஆலோசித்தால். ஆற்றல்:வலிமை. அங்கலுழ் மேனி:அழகுதிகழுருவம். செய். 157, 175 காண்க. தலைவியின் உருவம் மிக்க எழிலுடைத்தாயினும் வருத்தும் தன்மை மிகவும் உடையது என்பது கருத்து.

" அளைதா மரவு மரியும்வெந் தீயு மரசுமிங்ங
னிளைதா யினுங்கொல்லும்." [அம்பிகா. கோ. 126.]

" அளையுறை பாம்பு மரசு நெருப்பு
முழையுறை சீயமு மென்றிவை நான்கு
மிளைய வெளிய பயின்றனவென் றெண்ணி
யிகழி னிழுக்கந் தரும்." [ஆசாரக். 84.]

**பாங்கி செவ்வியருமை செப்பல்**

(தலைவியைப் பார்த்தற்குரிய காலம் பெறுதற்கு அரியது என்பதைப் பாங்கி தலைவனுக்குக் கூறல்.)

105. அன்னமு மின்ன நடைகற் றிலகிளி யாருமவள்
சொன்னயங் கண்டு பிடியா வடிக்கணை தொட்டொருமான்
பின்னடந் தெய்திடு மாநந்த ரங்கன் பிரம்பையுற்ற
மன்னவன் பொன்னஞ் சிலம்பனை யாள்செவ்வி வாயநின்றே.

**குறிப்பு.**—இன்ன : இத்தன்மைய தான. நயம் :அருமை. அன்னம், கிளி: பால்பகாஅஃறிணைப் பெயர்கள் பன்மை வினை கொண்டு முடிந்தன. வடி:கூர்மையான. கணை:அம்பு. ஒருமான்:மாரீசன் ; பிறமான்களைப் போலாது பொன்னுலாய மாயமானுதலின், 'ஒரு' என்று அடை கொடுத்தார். ஒரு மான்பின் நடந்து கணை எய்தது இராமன். அச்செய்தியைப் பூவை நிலையால் பாட்டுடைத்தலைவன் மீது ஏற்றிக் கூறினர். சிலம்பு: மலை. சிலம்பனையாள்:தலைவி. செவ்வி:காலம். சிலம்பனையாளது செவ்வி வாய நின்றும் அன்னம் நடை கற்றில, கிளி சொன்னயங் கண்டு பிடியா என்றதால் அவள் செவ்வியின் அருமை கூறப்பட்டது. அதனுல் தலைவியைப் பார்ப்பதற்குரிய காலம் பெறற்கரிது என்றவாறு.

" கற்றில கண்டன்ன மென்னடை கண்மலர் நோக்கருளப்
பெற்றில மென்பிணை பேச்சுப்பெறு கிள்ளை பிள்ளையின்றென்
றுற்றில ளூற்ற தறிந்திலள். " (திருச்சிற். கோ. 97.)

### தலைவன் செவ்வி யெளிமை செப்பல்

(' என் பெயரைக் கேட்கு முன்னமே தலைவி செவ்வியெளியள்' என்பதைத் தலைவன் பாங்கிக்குக் கூறுதல். செவ்வி : காலம்.)

106. தென்வர வுற்ற தமிழ்ப்பிரம் பூரன் றிசைக்கணின்றும்
பொன்வர வுற்றரு ளாநந்த ரங்கன் பொருப்பனையா
யென்வர வுற்றவ ளுக்குரைத் தாலெதிர் கொண்டுவந்து
தன்வர வுற்றதெல் லாஞ்சொல்லி யாரத்த ழீஇக்கொளுமே.

குறிப்பு.—தென்:அழகு; தெற்குமாம். தமிழை ஊரனோடு கூட்டுக. திசை:நாற்றிசை. பொன்:திறை. பொருப்பு:மலை. 'அவளுக்கு என் வரவு உற்று உரைத்தால்' என்க. தான் வரவுற்றது:தனக்கு நேர்ந்தது.

### பாங்கி யென்னை மறைப்பின் னெளிதென நகுதல்

('நீவிரிருவரும் ஒத்து என்னை மறைத்தபின் இக்களவொழுக்கம் ஒழுகுதற்கு எளிது' என்று பாங்கி நகையாடிக் கூறுதல்; எளிது என்றது தலைவிக்கு இன்றியமையாத தன்னை மறைப்பின் களவொழுக்கம் எளிது அன்று என்றபடி; இது எதிர்மறை யிலக்கணையின் பாற்படும்.)

107. பொன்னை மறைத்த வெழிற்கோ பியர்வைத்த பூந்துகிலை
முன்னை மறைத்தரு ளாநந்த ரங்க முகில்பிரம்பூ
ருன்னை மறைத்திட வொன்றுள தோநன்றி யுள்ளியிடு
மென்னை மறைப்பி னெளிதாகு மின்ப மிருவர்க்குமே.

குறிப்பு.—பொன்:இலக்குமி. மறைத்த எழில்:தோல்வியுறச் செய்யும் அழகு. துகில்:வஸ்திரம். மறைத்திட:மறந்துவிட;பரவசமாக்க. உள்ளிடும்:எண்ணும். இன்பம் ஒன்று உளதோ என்று முடிக்க. எளிதாகும்: எளிதாகாது என்றபடி. நீராடவந்த கோவியர்தம் துகிலை மரக்கிளைகளில் மறைத்துவைத்து, அவர்கள் தம்மை வணங்கி வேண்டியபின் திரும்பத் தந்தருளிய கண்ணன் திருவிளையாடல் ஈண்டுக் குறிக்கப்பெற்றது; ஆநந்த ரங்கனைக் கண்ணனாகக் கூறினமையின் பூவை நிலை. " என்னைநீர் மறைத்தாலிங் கியல்வதன்றே. " (தஞ்சை. கோ. 112.)

### அந்நகை பொறுஅதவன் புலம்பல்

(அவ்வாறு தோழி நகையாடியதைக் கண்டு பொறாத நெஞ்சத்தனாய்த் தலைவன் வருந்திக் கூறல்.)

108. வேல்பாய்ந்த புண்வழி யிற்செம் புருக்கினை விட்டதெனச்
சேல்பாய் கருங்கட் டிருவே நின் வார்த்தை செவிப்புகுந்த
கால்வாய் மதுவிற் கயல்பாய் மேதிக் கணஞ்சொரிதீம்
பால்பாய் வயற்பிரம் பூரரங் கேந்த்ரன் பதியணங்கே.

**குறிப்பு.**—வேல் பாய்ந்தபுண்:வேல் பாய்ந்ததாலாய புண்;வினையெச்சம் காரணப்பொருட்டு. செம்பு உருக்கு:உருக்கிய செம்பு. "வேல் பாய்ந்த, புண்ணிலாம் பெரும்புழையிற்கனல் நுழைந்தால் என" (கம். ரா. கையடை. 11.) சேல்:மீன். திரு:திருப்போன்றவள்; கண்டால் விரும்பும் தன்மை நோக்கத்தையுடையாள் எனினுமமையும். புகுந்த: 'ன' வ்வீற்றுப்பன்மை வினைமுற்று ஈறுகெட்டது. மது:தேன். மதுவிற் கயல்பாய்ந்தது; பால் வயலிற்பாய்ந்தது. கணம்:கூட்டம். தீம்பால்: இனியபால். 'அணங்கு' என்றது அவள் கூற்று வருத்தம் செய்தலால்.

### பாங்கி தலைவனைத் தேற்றல்

(இது வெளிப்படை.)

109. முன்னாவி வந்த முருகன் பிரம்பை முதல்வன்கற்றோர்
பொன்னாவி யொத்தரு ளாநந்த ரங்கன் பொருப்பிறைவா
வுன்னாவி யன்னவ ளென்னாவி யென்ன வுரைப்பதல்லாற்
றன்னாவி யிற்பிறி தோபிழை யெண்ணித் தளருவதே.

**குறிப்பு.**—ஆவி:பொய்கை, சரவணம். ஆவி:நீராவி, மேகம். பொன் ஆவி:பொன்னைத்தரும் மேகம், புஷ்கலாவர்த்தம். பொன்னாவி இலக்குமிக்கு ஆவி போன்ற திருமாலை நிகர்த்தவன் என்றும் பொருள்படும். உன் ஆவி அன்னவள்:உனது உயிர் போன்ற தலைவி. என் ஆவி:எனது பிராணன்.

> "எனக்காவி நின்னை வருத்திய மானவ் விளங்கிழையாள்
> தனக்காவி நானும்." [அம்பிகா. கோ. 132.]

எண்ணித்தளருவது பிழை என்க. 'தன்னாவி யிற்பிறி தென்னகை வெண்ணித் தளருவதே' என்றும் பாடம். 'தனது ஆவியில் வேறாக வெண்ணித் தளருவது என்?' எனப் பொருள்படும்.

### பாங்கி கையுறை யேற்றல்

(தலைவன் தந்த கையுறையைப் பாங்கி யேற்றுக்கொள்ளல்.)

110. வெங்கொலை யானையெம் மேல்வரக் காத்தும் வியன்பொழில்வா
யிங்கய ராம லெடுத்தத னாலுங்கை யேற்பதல்லாற்
சங்கரற் கன்புசெய் யாநந்த ரங்கன் றமிழ்ப்பிரம்பை
யங்கசன் போலுந் துறைவா முறித்துண் டடாதெமக்கே.

**குறிப்பு.**—தோலாக்கரி வென்றதற்கும் துவள்விற்கு மில்லின் றொன்மைக் கேலாப் பரிசுள வேயன்றி யேலேம்." (திருச்சிற். கோ. 110.]

கை:கையுறை. துறைவா:விளி "நீ செய்த உதவிக்கும், நினதுபேரன் பிற்கும் ஏற்றேம்" என்பது கருத்து. அங்கசன்:மன்மதன். முறி:தழை.

### கிழவோ னுற்றல்

(தலைமகன் தன் துயரைத் தணித்துக் கொள்ளல்.)

111. அக்கிணை யார்க்கும் வயற்பிரம் பூர னளக்கருண்ட
மைக்கிணை கொண்ட கொடையிரங் கேந்த்ரன் வரைப்புறத்திற்
பொய்க்கிணை கொண்ட விடையாயென் கையுற்ற பூந்தழைகொள்
கைக்கிணை வேறுமுண் டோவண்டு பாடுங் கருங்குழலே.

**குறிப்பு.**—கிணை:மருதப்பறை. அளக்கர்:கடல். மை:மேகம். " அளக் கருடன் மைக்கிணை கொண்ட " என்றும் பாடம், " மைக்கு இணை கொண்ட கொடை இரங்கேந்த்ரன் " என்க. இணையாவது ஒப்பு. இடையரள்:தோழி. கருங்குழல்:தலைவி. கருங்குழலே இணையென்றவாறு. பொய்க்கு இணையாய இடையாவது, இல்லை என்று சொல்லலாமாறு சிறுத்த இடை.

### இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி யிறைவிக்கவன் குறையுணர்த்தல்

(அவன் குறை-தலைவன் குறையை.)

112. வேல்கொண்ட கையும் விரைசூழு மான்மதம் வீசுமெய்யுங்
கால்கொண்ட வீரக் கழலுங்கொண் டேயொரு காளையன்னர்
சூல்கொண்ட கார்பிரம் பூரரங் கேந்த்ரன் றுதிகொள்வெற்பின்
மால்கொண் டவரின் வருவாரென் செய்வது வாணகையே.

**குறிப்பு.**—விரை:வாசனை. மான்மதம்:கஸ்தூரி. காளை அன்னர்:தலைவன். மால்:பித்து. வாணகை:வாள் நகை, ஒளி மிகுந்த புன்னகையுடையாளாய தலைவி.

### இறைவியறியாள் போன்று குறியாள் கூறல்.

(தலைவனை முன்பு அறியாதவள் போன்று தலைவி, பாங்கி கூறியவற்றையும் கொள்ளாதவளாகி அவனை நோக்கி வேறொரு செய்தியைக் கூறுதல். இங்ஙனம் தலைவி கூறுவதற்குக் காரணம் அவளது நாணமே.)

113. சிந்திக்க நல்குந் திறத்தசிந் தாமணி செந்தமிழோர்
சந்திக்க வெல்லாந் தருமைந் தருமுக்கட் சங்கரனை
வந்திக்கு மாநந்த ரங்கன் பிரம்பை வரோதயனே
தந்திக்கு முன்வந்த சக்ரா யுதனென்பர் தாழ்குழலே.

**குறிப்பு.**—சிந்தாமணி:தேவரத்னம். ஐந்தரு:பஞ்சகற்பகம். தந்தி:யானை, கஜேந்திரன். சக்ராயுதன்:திருமால். இச்செய்யுள் முழுமையும் பாட்டுடைத் தலைவன் புகழாகவே அமைந்தமை காண்க. 'ஐந்தரு முக்கண்' என்று எண்கள் அமைந்தன. பாட்டுடைத்தலைவன் சிவபக்தியிற் சிறந்தமை செ. 110, 225-லும் பெறப்படும்.

### பாங்கி யிறையோற் கண்டமை பகர்தல்

(தலைவனைத் தான் கண்டமையைப் பாங்கி தலைவிக்குச் சொல்லுதல்.)

114. பூண்டவன் பான்மெய்ப் புகழ்தேடுந் தென்பிரம் பூரனல்லார்
வேண்டவன் புற்றரு ளாநந்த ரங்கன் விளங்குவெற்பிற்
காண்டகு வேற்கரங் கொண்டொரு நாண்மலர்க் காவகத்தோ
ராண்டகை யைக்கண்டு வந்தேன் மணிவண்ட லாடிடத்தே.

குறிப்பு.—பூண்டவன்பான் : அன்பு பூண்டவன் ; விகுதிபிரித்துக் கூட்டப் பெற்றது. நல்லார் : நல்லவர், மடந்தையர். காவகம் : சோலை. ஆண்டகை : தலைவன். மணி : அழகு, நவமணிகளுமாம்.

### பாங்கியைத் தலைவி மறைத்தல்

(இது வெளிப்படை)

115. பொதுவரை மேற்கரு டக்கொடி செய்பிரம் பூரனொளிர்
விதுவரை வாண்முக ளுநந்த ரங்கன்றன் வெங்கயமா
மூதுவரை யின்னிளஞ் சேயனை யான்வரு முன்னமென்னென்
றிதுவரை யும்பிற வாவொரு வார்த்தையிப் போதுற்றதே.

குறிப்பு.—பொதுவரை : பொதியமலை. கருடக்கொடி திருமாலுக்குரியது. விது : சந்திரன். வரை : உவம வுருபு. சேய் : குமாரக் கடவுள்.

" இன்றளவும், பிறவாததொன்று பிறந்ததுவே " [கப். கோ. 103].

### பாங்கி யென்னை மறைப்ப தென்னெனத் தழாஅல்

(என்னென - யாது காரணம் என்று ; தழா அல் - தழுவுதல்.)

116. மின்னுல் விளங்கும் புயல்பொரு கூந்தலின் வேய்ந்திருக்கும்
பொன்னுருஞ் சண்பகப் பூமாலை நீத்துப் புலம்புவதென்
நன்னு வலர்சொல் பிரம்பைரங் கேந்திர னுடனையா
யென்னு லறியாத் துயரமென் னேயுனக் கெய்திபதே.

குறிப்பு.—புயல் : மேகம். பொரு : நிகர்த்த. புயல் கூந்தலுக்கும் மின் மாலைக்கும் உவமை. புலம்புவது : வருந்துவது. அறியா : அறியப்படாத.

### கையுறை புகழ்தல்

(தலைவன் கொடுத்த கையுறையைப் பாங்கி புகழ்தல்.)

117. மெய்க்கொண்ட போதொரு சக்ரா யுதனர விந்தநிகர்
கைக்கொண்ட போது கறைமிடற் றேனிடங் காட்டுமிக்க
மைக்கொண்ட லாநந்த ரங்கன் பிரம்பை வரையரையன்
செய்க்கொண்ட கஞ்சக் கரத்தா லளித்த திரவியமே.

குறிப்பு.—மெய்க் கொண்டபோது : மெய்யில் அணிந்து கொண்டபோது. சக்ராயுதன் : திருமால். சக்ராயுதன் அரவிந்தம் நிகர் : திருமாலின் நாபிக் கமலத்தின் ஒளியை வீசும் என்றபடி ; உயர்ந்த பதுமராக வொளி வீசும். கைக் கொண்டபோது : கையில் வாங்கி மூடிக்கொண்டபோது. கறைமிடற்

றேன் : நீலகண்டனுகிய சிவன். இடம் : இடப்பாகம். சிவனது இடப்பாகம் பார்வதியின் உருவாதலின் 'கறைமிடற்றேனிடங் காட்டும்' என்றது இருண்டு காட்டுமென்றதாம். கொண்டல் : மேகம். வரை அரையன் : தலைவன் ; திரவியம் என்றது உயர்ந்த பதுமராக மணியினை யென்பது உவமையாற் பெறப்பட்டது. செய் : வயல்.

### தோழி கிழவோன்றுயர் நிலைகிளத்தல்

(கிழவோன் - தலைவன் ; தலைவன் தலைவியைப் பெருது வருந்துதலைத் தோழி தலைவிக்குக் கூறுதல்.)

118. மழைகொண்ட வண்கைப் பிரம்பையர் வேந்தன் மணிமகரக்
குழைகொண்ட வாநந்த ரங்கன் விளங்குங் குலவரைக்கண்
கழைகொண்ட விற்கொண்டு கைத்தழை கொண்டொரு [கானையந்தோ
உழைகொண்ட பித்தழை யாநின்று வந்தங் குலாவுவதே.

**குறிப்பு.**—மழை : மேகம். குழை : குண்டலம். மகரக்குழை : மீன் வடிவாகச் செய்யப்பட்ட குண்டலம். குலம் : சிரேஷ்டம். கழை : மூங்கில். உழை : உன்னுழை யென்றும், மான் என்றும் இரு பொருள் பயக்கக் கூறியது வியக்கற்பாலது ; 'பித்து' என்றது ஈண்டுப்பித்தாற் பிறந்த அழைப்பை. அழைப்பு : பொருள் புணராவோசை.

" பித்தழையா நிற்பரால் " (திருச்சிற். கோ. 102.)

### மறுத்தற்கருமை மாட்டல்

(உடன்படாமல் இருத்தல் அருமை என்பதைப் பாங்கி தலைவிக்குக் கூறுதல்.)

119. பந்தித் பலவின் சுளையைக் கடுவன் பரிந்தன்பினேன்
மந்திக் களிப்பது கண்டேங்கி யாங்குறு மன்னவனைச்
சந்திக்கு மேலிரு கண்ணியென் சொற்குத் தடையுமுண்டோ
சிந்திக்கு மாநந்த ரங்கன் பிரம்பையந் தெள்ளமுதே.

**குறிப்பு.**—பந்தி : வரிசை. பலவு : பலா. கடுவன் : ஆண் குரங்கு. மந்தி : பெண் குரங்கு. இருகண்ணி : இரண்டு கண்களையுடைய ஒரு பெண். தெள்ளமுது: தலைவி.

" ................................ அம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதோர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகி நின்றானப் பெருந்தகையே."
[திருச்சிற். கோ. 84.]

### தலைவன் குறிப்பு வேருக நெறிப்படக்கூறல்

(குறிப்பு வேறு என்பது மடலேறலை.)

120. இன்மல ரென்ன வெருக்கணிந் தீச னிடும்பொடியே
நன்மணஞ் செய்பொடி யாகப் பிரம்பையி னண்ணுவராற்
பொன்மகிழ் ரங்கனைச் சூழ்தலை யாயநண் புற்றசுற்றத்
தன்மைய ரேயெமைத் தாங்கவல் லாரெனத் தான்குறித்தே.

**குறிப்பு.**—ஈசனிடும் பொடி : விபூதி. நன்மணஞ் செய்பொடி : கதம்பப் பொடி. பொன் : இலக்குமி. தலையாய : முதன்மையான. தன்மையார் : பெரியோர். தலைவன் மடலேறின், பெரியோர் கூட்டுவிப்பர் என்றபடி.

### பாங்கி தலைவியை முனிதல்

(இது வெளிப்படை.)

121. எனக்குயிர் நீயென் றிதுவரை யும்நினைத் தியானிருந்தே
னுனக்கினி யார்தம் மொடுமகிழ்ந் துற்ற துரைத்திடுவாய்
கனத்தினை யொத்த பிரம்பைரங் கேந்த்ரன் காவினிற்சே
ரனத்தினை யொத்திடு மென்னடைப் பொன்னிக ராரணங்கே.

**குறிப்பு.**—இனியார் : இனிமையானவா. கனம் : மேகம். அனம் அன்னம்.

" உன்னைய மாதருக் கோதிடு நீடுன் னுளக்கருத்தே"
(கோவ. கோ. 135.)

" சுற்றங்க ளாமுன் னுயிரப்பாங் கியர்குண்மை சொல்லுகவே."
(திருவா. கோ. 152.)

### தலைவி பாங்கி தன்னை முனிதல்

(இது வெளிப்படை.)

122. வாயிற் பிறவா வசனமெல் லாஞ்சொல்லி வல்லவண்ணம்
வேயிற் சிறந்தமென் றேளியென் சொல்லி மெலிவதுநற்
றுயிற் சிறந்த பிரம்பைரங் கேந்த்ரன் றடஞ்சிலம்பி
னீயித் திறஞ்சொலி னென்னுமுன் கேண்மை நிலையெனக்கே.

**குறிப்பு.**—வல்ல வண்ணம் : கூடிய வளவும். வேய் : மூங்கில். தாயில் : இல் ஐந்தனுருபு உறழ்வுப் பொருள். கேண்மை : நட்பு.

### தலைவி பாங்கிதன் கையுறையேற்றல்

(இது வெளிப்படை.)

123. சேய்கொண்ட வேற்கரன் றென்பிரம் பூரன் சிறந்தவுயிர்க்
காய்கொண்ட வன்புகொள் ளாநந்த ரங்க னடுக்கலின்வாய்க்
காய்கொண்ட பூக மிடற்றுய் சிலம்பர்கை யாலளிக்க
நீகொண்ட மாணிக்கம் யானென்கைக் கொண்டது நேரிழையே.

**குறிப்பு.**—சேய் : குமாரக் கடவுள். உயிர்க்கு : உயிருக்காக. ஆய் கொண்ட : ஆராய்தலைப் பொருந்தின. அடுக்கல் : மலை. பூகம் : கமுகு. காய்கொண்ட பூகம் : கோட்புக்க கமுகம்.

" யாதாகிலென்வந்து நின்கைய தானதின் றென்கையதே."
(அம்பிகா. கோ. 147.)

**இறைவி கையுறையேற்றமை பாங்கி யிறைவற் குணர்த்தல்**
(இது வெளிப்படை.)

124. தருமத்தை நாளும் வளர்க்கும் பிரம்பைத் தலைவனெதிர்
பொருமத்த யானை யிரங்கப்ப தீரன் பொருப்பிடைவித்
துருமத்தை யொத்தசெவ் வாயென்ன நீயீ சுடர்மணியை
மருமத்தி டைவைத் திறுகத்த மீஇயினண் மன்னவனே.

**குறிப்பு.**—பிரம்பைத் தலைவன் : பிரம்பைக்குத் தலைவன். மத்த யானை : மத யானை. வித்துருமம் : பவளம். மருமம் : மார்பு. செவ்வாய் அன்னம் : தலைவி. நீயீ சுடர்மணி : நீ தந்த பதுமராகமணி. மன்னவன் : தலைவன்.

**குறியிடங் கூறல்**

(குறியிடம் - தலைவன் தலைவியைக் காண்பதற்குக் குறித்த இடம்.)

125. புறந்தழை கொண்டொரு வெய்யோன் புகாமற் பொலிந்து [வெற்றித்
திறம்பெறு மால்பிரம் பூரிரங் கேந்த்ரன் செறுநர்நெஞ்சி
னிறங்கிளர் ரும்மிருள் கொண்டகத் தோர்வெண் ணிலவுதித்தாங்
குறைந்திடல் போலும் பளிங்கொன் றிலங்குமுய் யானமொன்றே.

**குறிப்பு.**—வெய்யோன் : சூரியன். பெறும் ஆல் : ஆல் - அசை. செறுநர் : பகைவர். அகம் : உள்ளிடம். நிலவு : திங்கள். உய்யானம் : பூஞ்சோலை.

**குறியிடத் திறைவியைக் கொண்டுசேறல்**

(சேறல் - செல்லுதல்.)

126. புயல்வள ரும்பொழில் வாயெழில் வாய்நறும் போதுகொய் தாங்
கயல்வளர் குன்றி னருவியெற் றீச்சுனை யாடுவம்யா
மியல்வள ரும்பிரம் பூரிரங் கேந்த்ரனை யெய்தினர்போற்
கயல்வள ருங்கருங் கண்வெண் ணகைச்செங் கனிமொழியே.

**குறிப்பு.**—வாய் : ஏழனுருபு. வாய் : வாய்த்த. இயல் : இயற்றமிழ், இலக்கணமுமாம். கருங்கண் வெண்ணகைச் செங்கனி : முரண்தொடை.

**குறியிடத்துய்த்து நீங்கல்**

(உய்த்து - செனுத்தி. தலைவியை யனுப்பிவிட்டு. நீங்கல் - மலர் கொய்து வருவேன் என்று பாங்கி நீங்குதல்.)

127. வாசனை வீசு மதுமலர் கொய்து வருகுவன்யான்
பாசடை மாதவிப் பந்தரின் கீழ்நின்று பார்பசும்பொன்
வீசிடுந் யாக விநோதன் பிரம்பையில் வீற்றிருந்து
தேசுய ருந்துரை யாநந்த ரங்கன் சிலம்பமுதே.

**குறிப்பு.**—மது : தேன். பாசடை : பசுமை அடை, பசிய இலை. மாதவி : குருக்கத்தி. தியாகம் : கொடை. தேசு : புகழ். ஒளியுமாம்: தியாக விநோதன்: பிறர்க்குரியாளனுய்த் தனக்கென வாழாமையையே பொழுது போக்காகக் கொண்டவன்.

### இறையோனிடத் தெதிர்ப்படுதல்

(இறையோன் : தலைவன் ; இடம் : குறியிடம் ; எதிர்ப்படுதல் : தலைவியைச் சந்தித்தல்.)

128. பன்னகப் பள்ளி யிதுமாலி யானெனப் பாவித்துவந்
தென்னகத் தாமரை யேயிட மாக வினிதெண்ணியோ
பொன்னகத் திற்பெறுங் காரிரங் கேந்த்ரன் புகழ்ப்பிரம்பூர்
தன்னகத் திற்பொலி மின்னேநன் னேயத்திற் சார்ந்ததுவே.

**குறிப்பு** :—பன்னகம் : பாம்பு. இது பன்னகப் பள்ளி, யான்மால் என்க. பாவித்து வந்து : பாவித்து உவந்து என்றுமாம். பொன் அகத்திற் பெறுங் கார் : பொன்னையுள்ளே கொண்டு வெளிச்சொரியும் புட்கலாவர்த்த மேகம் ; இரங்கேந்திரன் புலவர்க்குப் பொன் சொரிதலால் புட்கலாவர்த்தம் கூறினர். இனிப் பொன் திருமகளைக் கொண்டு கருநிறமுடைய திருமாலெனக் கூறலுமாம். அகம் : இடம். நேயம் : அன்பு. 'நேயத்திற் சார்ந்தது........ எண்ணியோ ?' என்று முடிக்க.

"படமா சுணப்பள்ளி யிக்குவ டாக்கியப் பங்கயக்க
ணெடுமா லெனவென்னை நீநினைந் தோநெஞ்சத் தாமரையே
யிடமா விருக்க லுற்றே" (திருச்சிற். கோ. 120).

### இயைதல்

(புணர்ச்சியின் மகிழ்தல்.)

129. மானு மெனும்விழி மாதே வரையகம் வைத்தசெழுந்
தேனு மதனுட் சுவையான் புவியிற் சிறந்திருக்கும்
நானு கலைதே ரிரங்கன் பிரம்பையி னுமுவந்து
மேனு ளிழைத்த தவமிவ ளாக வெளிப்பட்டதே.

**குறிப்பு.**—தேன் தலைவிக்கும், சுவை தலைவற்கும் உவமை. "மாதே தேனும், சுவையான்" என்க. நானு-பலவகைப்பட்ட. நாம், நெஞ்சை உளப் படுத்தலிற் பன்மையாயிற்று.

### புகழ்தல்.

(இது வெளிப்படை.)

130. அவிராழி சூழ்புவி காக்கும் பிரம்பைக் கரசனென்றுந்
தவிரா தளித்திடு மாநந்த ரங்கன் சயிலமன்னுள்
நவிர்வாய் தருங்குழற் கொவ்வாமற் கார்மலை நாடுமிவள்
கவிர்வாயி னூறலுக் கொவ்வா தமுதுங் கடைபடுமே.

**குறிப்பு**—அவிர் : விளங்கும். கார் : மேகங்கள். அமலை : அம்மலைகளை. நாடும் : சென்றடையும். சயிலம் : மலை. நவிர் : அளகம். கவிர் : கல்யாண முருங்கை. கடைபடும் : கடையப்படும். 'கடைப்படும்' என்ற பாடத்திற்குக் கீழ்ப்படும் என்றும் கடையிலகப்படும் என்றும் பொருள் கொள்க. இச் செய்யுள் தற்குறிப்பேற்றவணி.

## விடுத்தல்.

(தலைவியைத் தலைவன் பாங்கியின்பால் அனுப்புதல்.)

131. வாகைப் புயாசல வேடிரு வேங்கட மால்புதல்வ
னீகைக் குபேரன் பிரம்பைரங் கேந்த்ர னிரும்பதியி
லோகைக் குடஞ்செய் தெனக்கிந்த்ர போக மினிதளித்த
தோகைக் குழாத்துட னீயனம் போற் சென்று தோன்றுவையே.

**குறிப்பு**.—வாகை : வெற்றிமாலை. ஈகைக் குபேரன் : ஈகையையுடைய குபேரன். ஈகை : பொன்னுமாம். உடஞ்செய்தல் : உடன்படுத்துதல். தோகைக்குழாம் : மயிற் கூட்டம்போன்ற ஆயம்.

## பாங்கி மெல்லியற் சார்ந்து கையுறைகாட்டல்

(கையுறை—தான்பரித்துவந்த பூக்களை.)

132. துப்போது சேயிதழ்த் தூநகை யாய்மிகை சூழலுன்செங்
கைப்போதுக் கொப்பெனுஞ் செங்காந் தளும்நகை காட்டுகற்பு
முப்போது நன்மைசெய் ரங்கன் பிரம்பைமொய்ம் மால்வரைவா
யிப்போது யான்கொய்து வந்தே னெழில் குழற் கேய்வனவே.

**குறிப்பு**.—துப்பு : பவளம். நகையாய் : நகையையுடையாய். மிகை சூழல் : கோபங் கொள்ளாதே. 'எனது தவற்றினைக் கருதற்க' எனினுமாம். கற்பு : முல்லை. மால் : மேகம். குழற்கு எழில் எய்வன, என மாறுக.

## மையுறை கண்ணியைப் பாங்கிற் கூட்டல்

(மையுறை கண்ணி-தலைவி ; பாங்கு-பாங்கியர் கூட்டம்.)

133. தூங்கிசை வண்டு ஞிமிறுங் குமுறத் துதைந்திருள்கொண்
டோங்குறு கான நிகர்மது வார்குழ லேந்திழையே
பாங்கியர் சூழ்ந்திட ரங்கன் பிரம்பைப் பதியிடத்தி
லோங்கிய பூம்பொழில் வாயெழில் வாய்க்க வுறைகுவையே.

**குறிப்பு**.—வண்டு, ஞிமிறு என்பன தும்பி வகைகள். துதைதல்-நெருங்குதல். கானம் நிகர் குழல் என்க.

## பாங்கி தலைவியை நீங்கித் தலைவற் கோம்படை சாற்றல்

(தலைவியை எப்பொழுதும் பாதுகாக்க வேண்டுமென்று பாங்கி தலைவற்குச் சொல்லுதல். ஓம்படை : பாதுகாப்பு.)

134. கன்ன னெனச்சொல் கொடையான் பிரம்பை களிக்கவரு
மன்னன் புகழ்செய் வரரங்கன் றுங்க வரைச்சிலம்பா
நின்னை மறப்ப தெமக்கில்லை மாவையொண் ணீழறந்த
வென்னை மறக்கினு மின்னுயிர் நீயென் னிளங்கொடிக்கே.

**குறிப்பு.**—கன்னன் : கர்ணன். சிலம்பா : விளி ; ஈண்டுப் பெயரளவாய் நின்றது. மா:இலக்குமி, தலைவி. 'வுன்னை மறப்பதெமக்கில்லை மாவை யொண் ணீழல் செய்த' என்றும் பாடம்.

" காவைப் பொருவு செங்கைகரு மாணிக்கன் கப்பல்வன்னிக்
கோவைப் பொருசெய்ய வேற்கொற்ற வாநின் குறைநயந்து
மாவைக் குளிர்நிழ லாக்கிய வென்னை மறப்பினுமென்
பூவைக்கு நல்லுயிர் நீயுடம் பேகொண்டு போகின்றதே. "

(கப். கோ. 132.)

### உலகியன் மேம்பட விருந்து விலக்கல்

(உலகியல் மேம்பட-உலகத்தில் பெரியாரொழுகு மொழுக்கம் பெருமை யோடு தன் மாட்டுப் பொருந்த. விருந்து விலக்கல்-செல்வனென்ற தலைவனை நோக்கி விருந்துண்டு செல்கவென்று கூறிப் பாங்கி விலக்கல்.)

**135.** கறங்கு மருவியஞ் சீறூ ரிதுமதுக் கால்கனியும்
பிறங்குங் கிழங்கு மயின்றிருங் குன்றவர் பெட்புறச்செய்
திறங்கொண் டெடுக்கும் வெறியாடல் காணன்பு செய்தருள்பொன்
னிறங்கொண்ட வாநந்த ரங்கன் பிரம்பை நெடுந்தகையே.

**குறிப்பு.**—கறங்கும் : ஒலிக்கும். காலுதல் : கக்குதல். அயின்று : உண்டு. பெட்பு : விருப்பம். 'பார்க் கன்பு' என்று பாடமாயின், பார்க்கன்பு-பார்க்க வன்பு எனக். பொன் : இலக்குமி. நிறம் : மார்பு. திருமால் இலக்குமி யைத் தமது மார்பகத்தே கொண்டுள்ளமை ஈண்டுக் கருதப்பட்டது. 'கிழங் கும் கனியும் அயின்று வெறியாடல் காண்' என்று முடிக்க.

### பெருந்தகை விருந்து விரும்பல்

(விருந்தைத் தலைவன் விரும்புதல்.)

**136.** நன்றாகி லென்னஃ தன்றாகி லென்னுங்கை நல்குவதே
நின்றார்வ முற்றிடு மின்னமு தாமெனக் கேத்தலரை
வென்றார்வ முற்ற பிரம்பூ ரிரங்கப்பன் வெற்பிடத்தி
னென்றார் கரஞ்சுருக் கிச்செல்ல வைகுதற் கேதுவுண்டே.

**குறிப்பு.**—'அதுவென்றாகி லென்' என்றும் பாடம். ஆர்வம் : அன்பு. ஏத்தலர் : துதியாதவர், எனவே பகைவர். ஆர்வம் : களிப்பு. என்றா : சூரியன். கரம் : கதிர்.

**பாங்கியிற் கூட்டம் முற்றும்.**

## 11. ஒருசார் பகற்குறி

[ஒரு சார் பகற்குறி என்பது ஒரு கூற்றுப் பகற் குறி. ஒரு கூற்றுப் பகற் குறி யாதெனில், தலைவன் மற்றைநாள் தன் வேட்கை மிகுதியால் பகற்குறி யிடத்து வந்து நிற்க, தலைவியைப் பாங்கி குறியிடத்துச் செலுத்தாது மறுத் துக் கூறுதல். தலைவன் வருந்திப் போதலாதலான் இது பகற்குறியாகாது, ஒரு சார் பகற்குறியாயிற்று.]

### பெருந்தகைக் கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கல்

(தலைவன் பிரிந்த விடத்து அந்திப்பொழுதைக் கண்டு தலைவி ஆற்றுது வருந்துதல்.)

137. செங்கதிர் மேற்றிசைச் சென்றனன் காப்பவர் சேயர்பொங்கு
மங்கழி மீனுண் டனஞ்சேக்கை நோக்கின வாரமுகுஞ்
சங்கின மூரும் பணைசூழ் பிரம்பை தழைக்கவந்த
விங்கித ளுநந்த ரங்கன்முந் நீர்த்துறை யின்னெழுந்தே.

குறிப்பு.—காப்பவர் : துன்பத்தினின்றும் காப்பவர், தலைவர். சேயர் : சேய்மையிலுள்ளார். சேக்கை : படுக்கை, கூடு. ஆரம் : முத்து. இங்கிதன்- அன்பன்.

" பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
தகலோன் பயிறில்லைப் பைம்பொழிற் சேக்கைகண் ணேக்கினவா
லகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே. "

[திருச்சிற். கோ. 188.]

### பாங்கி புலம்பல்

(இது வெளிப்படை.)

138. திறங்கொண்ட மால்பிரம் பூரரங் கேந்த்ரன் செயித்தகள
நிறங்கொண்ட வானங் கழியெனுந் தேவிமுன் னீள்விசும்பி
னறங்கொண்ட செஞ்சுடர்க் கைப்பற்றி யாங்கம் புயங்குவியப்
புறங்கொண்டு பஞ்சரம் புக்கன தொக்கநம் புள்ளினமே.

குறிப்பு.—திறம் : வலிமை. களம் : யுத்தகளம். செயித்த கள நிறம் : சிவப்பு. அறங்கொண்ட செஞ்சுடர் : சூரியன். ' ஞாயிறன்ன வாய்மையும் ' என்றது காண்க. ஆங்கு-உவம வுருபு. அம்புயம் : தாமரை. பஞ்சரம் : கூடு. புள் : பறவை.

### தலைவனீடத் தலைவி வருந்தல்

(நீட-தாமதிக்க.)

139. நல்லார் துதிக்கும் பிரம்பூ ரிரங்கப்ப ளுட்டகத்தி
னெல்லார் தமவிரு கண்களு றங்கு மெழிற்பெடையோ
டல்லார் பொழிலிற் குருகுறங் காநிற்கு மார்வமுற்று
வல்லா ருறங்குவ ரெல்லா வுறக்கம் வராதெனக்கே.

குறிப்பு.—நல்லார் : சான்றோர். எல்லார் தம : எல்லோருடைய. தம-அ , ஆறனுருபு. அல் : இருள். வல்லார் : தலைவர். எல்லா : தோழி. முன்னிலைப் பெயர் ; " எல்லா வுனக்கினி " (செ. 206.)

### தலைவியைப் பாங்கி கழறல்

(கழறல்-இடித்துரைத்தல்.)

140. காம னெனக்கட் டழகுற் றிடுநளன் காதலிதா
னேமுற வன்று பிரியவு மாற்றின ளேர்செய்முல்லைத்
தாமன் பிரம்பையி னுநந்த ரங்கனைச் சார்ந்திலர்போ
னீமயல் பூண்டு வருந்தவென் னேயிங்கு நேர்ந்ததுவே.

**குறிப்பு.**—காமன் : மன்மதன். காதலி : தமயந்தி. ஏமுற-மயங்க. ஆற்றினள் : பொறுத்தாள். தாமன் : மாலையையுடையான். தாமம் : மாலை. "நீ வருந்துமாறு என்ன நேர்ந்துவிட்டது" என்று தலைவியைப் பாங்கி இடித்துரைத்தல்.

### தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்

[பாங்கி முன்னே நிற்க அவள் மேலுள்ள வெறுப்பால் அவளை நோக்கிக் கூறாமல் புறமாக மொழிந்து தலைவி அவளுக்கறிவுறுத்தல்.]

141. தாயின்றி முட்டையி னுட்கிடந் தாங்கெனச் சாய்வதன்றி
யாயி னுறுதுணை யாருரைப் பார்சொற் களவுமுண்டோ
காயுங் கரடக் களிற்றான் பிரம்பையிற் கண்ணலர்க்குச்
சீயம் பொருதுரை யாநந்த ரங்கன் சிலம்பிடத்தே.

**குறிப்பு.**—ஆயின் : ஆராயின் ; தாயைப்போன்ற எனினுமாம். "உறு துணையார் ? உரைப்பார் சொற்கு அளவுமுண்டோ ?" என்க. கண்ணலர்-பகைவர் ; கண் : இரக்கம். சீயம் : சிங்கம்; "கண்ணலர்க்குச் சீயம் போன்ற துரையாநந்த ரங்கன்" என்க ; காயும்-கோபிக்கும்.

"தீம்பெரும் பொய்கை யாமை யிளம்பார்ப்புத்
தாய்முக நோக்கி வளர்ந்திசி னுஅங்கு" [ஐங். 44].

"நோக்கினுற் பாவகத்தா னுவலரும் பரிசநத்தாற்
காக்குமீ னுடலடக்குங் கமடமொண் பறவையென்ன
வாக்கினன்." [திருவால. புரா. ஞாநோ. 48].

"யாவரு மறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தே
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே" [குறுந். 152]

### தலைவி பாங்கியொடு பகர்தல்

(இது வெளிப்படை)

142. கண்ணிற் கினிய மலர்பூத்துள் ளேமுட் கலந்துயர்ந்த
மண்ணிற் செறிந்த நெருஞ்சிக்கொப் பாமவர் மாசுதனை
யெண்ணிற் புவியிய லென்பதல் லாற்சொல்ல வேதுவுண்டோ
பண்ணிற் பொலிந்த பிரம்பூ ரிரங்கன் பதிமயிலே.

குறிப்பு.—உயர்ந்த மண்:புன்செய். ' மாசிதனை ' யென்றும் பாடம். மாசு : குற்றம். பண் : இராகம் ; "நெருஞ்சியில், புறம்பே இனிய மலர் பூத்து, உள்ளே முள் கலந்தாற்போல, இவரும் புறம்பே இனியராய்த்தோன்றி உள்ளத்தே தீமை பயப்பவராயினர் " என்பது கருத்து.

" புன்புலத் தமன்ற செறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தியல் காதல
ரின்னு செய்த னோமே நெஞ்சே. " [குறுந். 202.]

**பாங்கி யஞ்சி யச்சுறுத்தல்**

(அச்சுறுத்தல்-அச்சமுறச் செய்தல்.)

143. சேந்தனை மானும் பிரம்பூ ரிரங்கன் சிலம்பிடத்தில்
வாந்தணில் வால்பொருஞ் செந்தினை காத்தற்கு வைத்ததுதான்
காந்தனை யுள்ளக் கருத்துள்வைத் தோரிடங் காப்பதென்றால்
மாந்தளிர் மேனிக்கு மோர்காவல் வைக்க வருமினியே.

குறிப்பு.—சேந்தன் : முருகன். வாந்து : வாவுகின்ற, தாவுகின்ற. அணில் : அணிற்பிள்ளை ; தினைக்கதிர்க்கு அணில்வால் உவமை. காந்தன் : தலைவன். மேனி : தலைவி. தலைவி பிறிதொன்றைக் காக்கச் சென்றாளாகவும் தன்னையே பிறர் காக்கவேண்டிய நிலை இவட்கு வரும் என்று கூறிய நயம் காண்க.

**நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கல்**

(தலைவனைப் பிரிதற் கருமையை நினைத்துத் தலைவி யிரங்கல்.)

144. ஓதுவ தேது பிரம்பைரங் கேந்த்ரன்பொன் னோங்கலொப்பாய்
சீதரன் மார்பினுந் தோளினும் பூமங்கை சேர்ந்திருப்பார்
மேதகு மஞ்சு வரைமான் பிரியும் விதத்துக்கஞ்சிப்
பாதியு மீசனைப் பெற்று ளருந்தவம் பண்டுசெய்தே.

குறிப்பு.—ஓங்கல் : மலை. சீதரன் : திருமால். பூமங்கை : திருமகளும், நிலமகளும், மஞ்சுவரை : இமயம். மஞ்சு : மேகம். பனியை மஞ்சாகக் கூறியது ஔபசாரிகம் என்னும் வழக்கு. மான் : உமை.

**தலைவிக்கவன்வரல் பாங்கி சாற்றல்**

(அவன் வரல்-தலைவன் வருதல்)

145. ஓங்கிருஞ் சாரலி னாடிட நீங்கி யொளித்துநின்று
லீங்குறு மண்ணல் விரங்குதல் கண்டுபின் னெய்தியன்பின்
பாங்குறு வாமிசைப் பண்பிரம் பூரன் பகைஞரஞ்ச
வாங்குவிற் கொண்டரு ளாநந்த ரங்கன் வரைமயிலே.

குறிப்பு.—இரும் : பெரிய. ஆடிடம் : விளையாடுமிடம். அண்ணல் : தலைவன். வாங்கு : வளைந்த

### பாங்கி சிறைப் புறமாகச் செறிப்பறிவுறுத்தல்

(சிறைப்புறம்-வேலிப்புறம். செறிப்பு-தலைவியை வீட்டின் கண் செறித்தல். தலைவன் வேலிப்புறத்தே நிற்பத் தலைவியை யிற்செறித்தலைப் பாங்கி அவனுக்கறிவித்தல்.)

146. வாரம் பலித்த தினைகொய் திடக்குன்ற வாணரினிக்
கோரம் படைத்து வருகுவ ராற்கடற் கோமறுக
வோரம்பு தான்றொட்ட வாநந்த ரங்க னுயர்பிரம்பை
வீரந் தனில்விளை யாடவல் லாரெவர் மேவிநின்றே.

குறிப்பு.—வாரம் : மலைச்சார்பு ; வாரம்பலித்த:முற்றிய என்றும் பொருள்படும். கோரம் : கொடுமை. கடற்கோ : வருணன். மறுக : கலங்கி நிற்க. வீரம் : மலை ; கடற்கோ மறுக அம்பு தொட்டவன் இராமன்.

### முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தல்.

(தலைவன் எதிரே நிற்ப அவனை நோக்கிக் கூறாமல் புட்களை நோக்கிக் கூறுவாள் போன்று பாங்கி யறிவுறுத்தல்)

147. அளிகாண் மயிலினங் காளனங் காடினை யாரவருங்
கிளிகா ளெமைமற வீர்புள் ளரசுயர் கேதனத்தா
ஞெளிகாலும் வெற்பன் பிரம்பைரங் கேந்த்ர னுயர்பொழில்வாய்
வெளிகா ணிடையின்பம் வெஃகிய வேலன் விடினுமன்றே.

குறிப்பு.—ஆர : உண்ண. ' தினையை உண்ணவரும் கிளிகாள் ' என்க. புள்ளரசு : கருடன் ; கேதனம் : கொடி ; கேதனத்தான்:திருமால் ; வெளிகாண் இடை-தலைவி. வெளி : வெற்றிடம். " வேலன் விடினும் நீர் மறவீர் " என்க. இச் செய்யுள் முதலிரண்டடிகளை செ. 153 முதலிரண்டடிகளோடு ஒப்பிடுக.

" ஒளிகாலும் வேற்கைப் பிரம்பைரங் கேந்த்ர னுயர்வரைப்பால்
வெளிகாண வந்தவை வேலன் மறந்து விடினுமன்றே "

என்றும் பாடம்.

### முன்னின் றுணர்த்தல்

(தலைவன் முன்னே நின்று தலைவியை வீட்டின் கண்செறித்தலைப் பாங்கி யறிவித்தல்.)

148. முந்தப் பயன்சொல் பிரம்பூ ரிரங்கன் முறைசெய்வெற்பா
விந்தப் புனத்தி னெமர்கூடி முற்றிய வேனல்கொய்யு
மந்தப் பருவ மடுத்த தினிவிட் டகலுதும்யாஞ்
சந்தப் பிறைதவழ் சீரா ருதுவரை தானதுவே.

குறிப்பு.— ' யாம் ' என்றது தலைவியையும் தன்னையும், குறிப்பால் தலைவனையும் அகல வேண்டிற்று. எமர் : எம்மவர். ஏனல் : தினை ; சந்தம் : அழகு.

**முன்னின்றுணர்த்தி யோம்படை சாற்றல்**

(முன்னின்று-தலைவன் முன்னின்று ; ஓம்படைசாற்றல்-பாதுகாக்கவேண்டு மென்று பாங்கி சொல்லுதல்)

149. முனைமறந் தும்பழி யுன்னுப் பிரம்பை முதல்வன்கற்றோ
ரனைமற வாக்கல்வி யாநந்த ரங்க னணிகொள்வெற்பா
வெனைமறந் தாலுமென் னுருயி ருக்குயி ரென்றுரைப்ப
தனைமறந் தாங்க னொருநாளும் வைக றகாதுனக்கே.

**குறிப்பு.**—முனை : போர். அனை : அன்னை. உயிருக்குயிர் : தலைவி. வைகல் : தங்குதல். ' வைகத்தகாது ' என்றும் பாடம்.

**மேம்படு கிழவோன்றஞ்சம் பெறுது**
**நெஞ்சொடு கிளத்தல்**

(மேம்படுகிழவோன்-தலைவன். தஞ்சம்-பற்றுக்கோடு.)

150. இனங்காத் தருள்பிரம் பூரரங் கேந்திர னிருந்தமிழோர்
தனங்காப் பொருங்கொடைத் தண்டா மரைக்கரன் சாரலின்வாய்ப்
புனங்காத் திருப்பது நாமே குறிச்சியிற் போந்துமிக்க
மனங்காத் திருப்பதென் னுருயி ராகு மதித்திடிலே.

**குறிப்பு :**—இனம் : சுற்றம். தனம் : செல்வம். கா : கற்பகச்சோலை. பொரும் : நிகர்த்த. கரன் : கையையுடையவன். குறிச்சி : குறிஞ்சிச்சீறூர். மனம் : அண்மை விளி. ஆருயிர் : தலைவி.

ஒரு சார் பகற்குறி முற்றும்.

## 12. பகற்குறி யிடையீடு

[பகற் குறிக்கு இடையில் சில தடைகள் நிகழ்தல்]

**இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்**

(குறிவரல்-குறித்தவிடத்தில் வருவதை)

151. தந்திரம் சூழ்ந்திடு மைம்பெருஞ் சுற்றத் தவர்களொடு
மந்திரம் சூழ்பிரம் பூரரங் கேந்த்ரன் வரைச்சிலம்பா
வெந்திரஞ் சூழ்ந்திடுங் கானவர் நாளை யிதைப்புனஞ்செ
யுந்திரஞ் சூழ்வ ரினிநீ வரத்தக்க தொன்றில்லையே.

**குறிப்பு.**—தந்திரம் : சேனை. ஐம்பெருஞ்சுற்றம் : அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதர், ஒற்றர். எந்திரம் : தினைகொய்யுங்கருவி. கானவர் : குறவர். இதைப்புனம் : தினைக்கொல்லை. திரம் : தன்மை; சூழ்வர் : எண்ணுவர்.

**இறைவியைக் குறிவரல் விலக்கல்**

(இது வெளிப்படை.)

152. மெய்கண்டு தோள்கண்டு மேனிகண் டுள்ளத்து வேறுகண்டு
கைகண் டுனது கணைகண் டனைதான் கவற்சிகொண்டாள்
செய்கண்ட தென்பிரம் பூர்த்துரை ரங்கன் சிலம்பிடத்திற்
பொய்கண்ட நுண்ணிடைப் பெண்ணே யினிப்பண்ணை போவ
தின்றே.

**குறிப்பு.**—வேறு : வேறுபாடு. கணை : அம்பு. ஈண்டு கண் ; உவமையாகு பெயர். அனை : தாய். கவற்சி : மனவருத்தம். செய் : வயல். பண்ணை : ஆடிடம். நான்காம் அடியில் ‘ கண்ட’ உவம உருபு. இச்செய்யுள் சொற் பின்வரு நிலையணி.

### இறை மகளாடிட நோக்கியழிதல்

(இறைமகள்-தலைவி ; ஆடிடம்-விளையாடுமிடங்களை ; அழிதல்-இரங்குதல்.)

**153.** புனங்காண் மயிலினங் காள்கிளி காளெழிற் பூங்குயில்கா
ளனங்காள் பிரித லரிதென வோவிவ் வகன்பொழில்வா
யினங்காண நீருற் றிருத்தல் பிரம்பைக் கிறைமறையோர்
தனங்கா ணெனச் சொல் லரங்கேந்த்ர னேங்குந் தடவரைக்கே.

**குறிப்பு.**—புனம் : வயல். காண் : காணும். இனம் காண : கூட்டம் பொருந்த. மறையோர் : வேதியர். தனம் : செல்வம் “ அரங்கேந்திரன் மறையோர் தம் தனம் ” என்க. “ தவடரைக்கே நீருற்றிருத்தல் பிரிதல் அரிதெனவோ ” என்று கூட்டுக. ‘ மயிலினங்காள் கிளிகாள் எழிற்பூங்குயில் காள் அனங்காள் ’ - செ. 147 காண்க.

### பாங்கியாடிடம் விடுத்துக் கொண்டகறல்

(பாங்கி தலைவியை விளையாடுமிடங்களை விட்டு நீக்கி யழைத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்லுதல்.)

**154.** ஓடாத் திமின்மல ருற்றது வேலன்புள் ளூர்தியொப்பீர்
கூடாத் திறஞ்செய் குறியல்ல வோமல்லர் கூட்டமுற
வாடாத வென்றிகொள் ரங்கன் பிரம்பை வரையினன்பர்
தேடா வருந்தி யிருந்தா லிதுவென்று செப்புமினே.

**குறிப்பு.**—ஓடாத்திமில் - வேங்கை மரம் ; இது வெளிப்படை. வேலன் புள்ளூர்தி:மயில். உற : எதிர்க்க. தேடா : தேடி ; உடன்பாட்டு எச்சம். வேங்கை மரம் பூக்கின்ற காலத்தில் தினை கொய்வது மரபு. வேலன் புள் ளூர்தி ஓடாத்திமில் மலருற்றது ஒப்பீர் என்க.

### நெடுந்தகைக் குறிவயினீடு சென்றிரங்கல்

(நெடுந்தகை - தலைவன். குறிவயின் - குறித்தவிடம் : நீடு சென்று - தாமதித்துச் சென்று.)

**155.** தாரணி போற்றும் பிரம்பூ ரிரங்கன் றடஞ்சிலம்பிற்
காரமர் பூம்பொழில் காணு மெழில்போய்க் கரந்ததெங்கே
பாரிடை யாருமக் கீதுசெய் தார்நம் பரிசிதுவே
யாரமு தத்தின் விடம்வைத் ததனுக்கொப் பாமிதுவே.

**குறிப்பு.**—தாரணி : உலகு. கார் : மேகம். எழில் : அழகு. பொழில் காணும் என்க. கரந்தது : ஒளித்தது. ஈது : இது. பொழிலையுளப்படுத்தி நம் என்றனன். பரிசு தன்மை ; பரிசு இது ஏ - ‘ ஏ ’ வினாப் பொருளில் வந்தது. இது : புனம்.

" மதுவினிற் கைப்புவைத் தாலொத்த வாமற்றிவ் வான்புனமே "
[திருச்சிற் கோ. 146]

**தலைமகன் வறுங்கள நாடி மறுகல்**

(வறுங்கள நாடி மறுகல் - தலைவியில்லாத இடத்தைக் கண்டு வருந்துதல்.)

156. பொறியார் மதிற்பிரம் பூர்த்துறை ரங்கன் பொருப்பணங்கை
வெறியாரும் வேலர்வந் தேகென்ற போதென்மெய்த் தொண்டு [கந்த
முறியா ரடியர் நடையுங் கனங்கொண்டு முன்புயர்ந்த
நெறியா ருறவு மறிந்தேன்முன் சென்றுபின் னின்றிடவே.

**குறிப்பு.**—பொறி : மதிலுறுப்பு. அணங்கு : தலைவி. வேலர் : குறவர். முறி : தளிர் ; முறியார் அடியார் - இளந்தளிர் போலும் மென்மை வாய்ந்த அடியையுடைய தலைவி. கனங்கொண்டு முன்புயர்ந்த நெறியார் : மேகம் பொருந்திய மலைவழிச் சென்ற தலைவி ; பெருமையுடன் முன் உயரிய வழியினின்ற தலைவி என்பது தொனிப்பொருள் ; 'மேகம் போன்ற கூந்தலையுடைய' என்றும் 'காதளவோடிய கண்ணுடைய' என்றும் பொருள் கூறுவர். முன் சென்று பின் நிற்றல் நடைக்கும், உறவுக்கும், பொருந்தும்.

**குறுந்தொடி வாழுமூர் நோக்கி மதி மயங்கல்**

(குறுந்தொடி - தலைவி ; தலைவி - வாழு மூரை நோக்கித் தலைவன் மதி மயங்கிக் கூறுதல்.)

157. மங்கையர் சூழும் பிரம்பூ ரரங்கன் வரையிடத்தி
லங்கலும் மேனி யவளூ ரிதுசெய்ய லாவதுண்டோ
திங்களின் வைகுஞ் சிறுமானைக் கண்டு சிறூர்விரும்பி
யிங்கழு கின்றதற் கொப்பாயிப் பானின் றிரங்குவனே.

**குறிப்பு.**—அம்கலும்மேனி : அழகு திகழ் உருவம் ; செ. 104, 175 காண்க. 'அவளூருது' என்றும் பாடம். 'பார் நின்றிரங்குவனே', என்றும் பாடம். கிடைக்காத பொருளை வேண்டி வருந்துதலுக்குச் 'சந்திரனை வேண்டியழுதல்' உவமை.

ஆனந்த மாக்கட லாடுசிற் றம்பல மன்னபொன்னின்
றேனுந்து மாமலைச் சீறூ ரிது செய்ய லாவதில்லை
வானுந்து மாமதி வேண்டி யழுமழப் போலுமன்னோ
நானுந் தளர்ந்தன னீயுந் தளர்ந்தனை நன்னெஞ்சமே.

[திருச்சிற். கோ. 147]

**பகற் குறியிடையீடு முற்றும்.**

## 13. இரவுக் குறி

(தலைவன் தலைவியை இரவுக்குறியில் கூடுதல்.)

### இறையோ னிருட்குறி வேண்டல்

(இறையோன் - தலைவன். இருட்குறி-இரவுக்குறி.)

158. மங்கு லெனச்சொல் பிரம்பூ ரிரங்கன் வரைப்புறத்திற்
பங்கயம் கூம்பக் குமுதங்க ளோங்கிடும் பாண்மை யென்னச்
செங்கதிர் செல்லத் தழற்கண் ணரக்கர் செறிந்ததெனுங்
கங்குலி னுங்கட் கொருவிருந் தாவன் கனங்குழையே.

**குறிப்பு.**—மங்குல் : மேகம். கூம்ப : குவிய ; பங்கயத்திற்குச் செங்கதிரும், குமுதத்திற்குக் கண்ணும், கங்குலுக்கு அரக்கர் நிறமும் உவமை. 'திசைக் கண்ணரக்கர்' என்றும் பாடம். கங்குல் : இரவு.

### பாங்கி நெறியின தருமைகூறல்

(நெறியின தருமை : வழி வருதற்கரியதாயிருத்தல்.)

159. சங்கத்தமிழ்தேர் பிரம்பைரங் கேந்த்ரன் றரும்புகழ்போற்
றிங்கட் கதிர்தவ ழுஞ்சிக ரத்தெமர் சேர்பதியாம்
வெங்கட் களிறு பிளிறிடச் சீய மிகமுழங்கு
மங்கட் சிறந்தகண் ணேணிகொண் டேறு மருநெறியே.

**குறிப்பு.**—தரும்புகழ் : கொடையாலாகிய புகழ். கண் ஏணி : மூங்கிலேணி "விசும் பினுக்கேணி நெறியன்ன சின்னெறி" [திருச்சிற். கோ. 149] வருகின்ற வழியில் பிளிறும் சீயமும் உள என்றவாறு. வரும் வழியில் ஓரிடம் மிகத் தாழ்ந்தும் மற்றோரிடம் மிகவும் உயர்ந்தும் இருத்தலால் ஏணி கொண்டு ஏறுதல் கூறினர்.

### தலைவனெறியின தெளிமை கூறல்

(எளிமை - சுலபமாயிருத்தல்.)

160. விடநாக மேவினுன் மெல்லியல் சாயல் வெளிப்படுமுக்
கடநாக மெய்தி னவரிடைச் சிங்கமுன் காணுமிக்க
வடநாகம் வெல்பிரம் பூரரங் கேந்த்ர னரணெனச்சொல்
தடநாகந் தங்கிருட் கங்கே யெழுமுக சந்திரனே.

**குறிப்பு.**—விடநாகம் : விடத்தையுடைய பாம்பு. மெல்லியல் : தலைவி. சாயல் : மயிலினது சாயல். வெளிப்படும் : உரு வெளிப்பாடு தோன்றும். முக்கடநாகம் : மும்மதயானை. இடைச் சிங்கம் : இடையாகிய சிங்கம். மிக்க அடல் நாகம் : மிக்க வலிமையுடைய குரங்கு ; வாலி. நாகம் : பாம்பு எனக் கொளின் காளியனையும், யானை எனக் கொளின் குவலயாபீடத்தையும் குறிக்கும். அரண் : கோட்டை. தடநாகம் : பரந்தமலை. இருட்கு : இருளில்; உருபு மயக்கம். முகசந்திரன் : முகமாகிய சந்திரன். தலைவியின் சாயலுக்கு மயிலின் சாயலும் இடைக்குச் சிங்கமும் உவமை.

" தெளியா ரமுதந் தருகா ரிகைமுகத் திங்களுரு
வெளியா யுறும்போ திருளெனக் கேதன்றி மேலுமந்தக்
களியார் மயின்முற் பணிதோன்ற லேது கனங்குழையே "
[கோ டீ. கோ. 174]

" அரவுக்கு மெல்லியல் சாயலுள் ளேயுண் டறவிருண்ட
விரவுக் கினிய திருமுகந் தோன்று மெடுத்தவெண்ணெய்க்
கரவுக் கடியுண்ட மால்கரு மாணிக்கன் கப்பலன்ன
யுருமுக்கு நீதந்த காமவெந் தீயுண்டென் னுள்ளத்திலே "
[கப். கோ. 144]

### பாங்கி யவனுட்டணியியல் வினுதல்

(தலைவனது நாட்டிலுள்ள மகளிரது அணிகளையும் இயலினை
யும் என்னவென்று தலைவனைப் பாங்கி வினுதல். அணியியல் :
உம்மைத் தொகை.)

161. கோமக னுநந்த ரங்கன் பிரம்பையங் குன்றிடத்திற்
காமர்செவ் வேல்கொண்ட காளையொப் பாய்மதுக் கான்றவிழுந்
தேமல ரேதணி செஞ்சாந்த மேது செழுந்தளிரான்
மாமைசெய் பூம்பொழி லேதுரைப் பாய்நன் மனங்களித்தே.

**குறிப்பு.**—கோமகன் : அரசன். காமர் : அழகு. காளை : குமரன் ; கான்று : சொரிந்து. சாந்தம் : சந்தனம். மாமை : கருமை. ஏது : எவ்வகைத்து ; உமது நாட்டில் " தேமலர் ஏது ; சாந்தம் ஏது ; பொழிலேது உரைப்பாய் " என்க.

### கிழவோ னவனுட்டணியியல் வினுதல்

(அணியியல் - அணியையும், இயலையும் ; அவள் : தலைவி, பாங்கி.)

162. வெண்ணெய் கவர்ந்துண்டு கோபியர் தோட்டுயில் வேட்டருளுங்
கண்ணன் பிரம்பையி னுநந்த ரங்கன்பொற் காவனையீர்
பண்ணை பயிலு மிடமெது போதுகொய் பைம்பொழிலின்
வண்ண முறுமின் கனியெது நீருண்டு வாழ்வதுவே.

**குறிப்பு.**—கவர்தல் : திருடுதல். தோள் துயில் வேட்டு : தோளின்கட் துயிலுதலை விரும்பி. கா : சோலை. பண்ணை:விளையாட்டு; " பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் " (தொல் பொருள் . மெய்ப் - 1. ) போது : மலர். வண்ணம் : நிறம். வெண்ணெய் கவர்ந்துண்டதும், கோபியர் தோட்டுயில் வேட்டருளியதும் கண்ணன் திருவிளையாடல்கள்.

### அவற்குத் தன்னுட்டணியியல் பாங்கி சாற்றல்

(இது வெளிப்படை.)

163. பைந்தினை யுண்டு செந்தேனுண் டருவி படியவுண்டு
கொந்தவிழ் காந்தட் கொழுமல ருண்டு குவலயத்தோர்
தந்தன மென்னும் பிரம்பைரங் கேந்த்ரன் றடஞ்சிலம்பிற்
சிந்தூர முண்டு பிடியுண் டெமது செழும்பொழிற்கே.

**குறிப்பு.**—தனம் : செல்வம். சிந்துரம் : களிறு. பிடி : பெண் யானை. பொழிற்கு : பொழிலில் உருபு ; மயக்கம்.

### இறைவிக் கிறையோன் குறையறிவுறுத்தல்

(குறிப்பு அறிவுறுத்தல் என்றும் பாடம் , குறிப்பு - கருத்து.' குறை ' யாயினும் ' குறிப் 'பாயினும் ' இரவுக் குறி ' யேயாம். )

**164.** வெங்கட் கரடக் களிற்றிறை தேடி வெகுண்டுகொடுஞ்
சிங்கக் குருளை வழங்குமஞ் சாரற் றிரிகுவரால்
துங்கப் புயனரங் கேந்த்ரன் பிரம்பைத் துதிக்கும்வெற்பிற்
கங்குற் பொழுது கதிர்வே றுணையெனக் கைப்பிடித்தே.

**குறிப்பு.**—கரடம் : மதம். களிற்றிரை : களிறுகிய இரை. குருளை : குட்டி. வழங்கும் : சஞ்சரிக்கும் ; இச் செய்யுளின் முதலிரண்டடிகளையும் 231-ம் செய்யுளின் முதலிரண்டடிகளோடு ஒப்பிடுக.

### நேராதிறைவி நெஞ்சொடு கிளத்தல்

(நேராது - உடன் படாமல் ; கிளத்தல் - கூறுதல்.)

**165.** அரையிருள் யாமத் துருமுகத் தாக்கொண் டடுந்திறலான்
வரைபொரு வேழம் வழங்கு மதரின் வருவர்கொல்லாங்
கரைபொரு தெண்டிரை சூழ்பிரம் பூரன் களிவண்டுசூழ்
விரைகமழ் முல்லைப் புயனரங் கேந்த்ரனல் வெற்பண்ணலே.

**குறிப்பு.**—உரும் : இடி. உக : விழ. தாக்கொண்டு : பாய்ந்து. வரை : மலை. அதர் : காட்டுவழி. அண்ணல் வருவர் கொல் என முடிக்க. விரை:வாசனை.

### நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத்தல்

(தலைவி பாங்கியொடு உடன் பட்டுரைத்தல் ; நேர்தல்—உடன்படுதல்.)

**166.** வானங் குமுறி யிடித்தப்பு மாரி வழங்குபுனல்
தானுந்தி வாவி யெனையீர்த்த போதுயிர் தந்தளித்த
கோனன்பு கொள்வதல் லாமலுண் டோசெய்ய கோகநகத்
தேனுந்து தென்பிரம் பூரரங் கேந்தரன் சிலம்பமுதே.

**குறிப்பு.**—அப்பு : ஜலம். மாரி : மழை. புனல் : நீர். ' வழங்குவது, ' என்றும் பாடம். உந்தி : தள்ளி. வாவி : தாவி. 'தானுந்துவாவி, ' என்றும் பாடம் ; நீர்தள்ளி விழும்சுனை , என்பது பொருள். 'வழங்குவது தானுந்தி யாகி, ' என்று மற்றொரு பாடம். உந்தி : நீர்ச்சுழி. கோன் அன்பு : கோன் மேல் அன்பு. கோகநகம் : தாமரை. தேன் : இலக்குமி. தலைவி கயத்தில் மூழ்காமல் தலைவன் காத்த செய்தி செய்யுள் 284 லும் காண்க.

**நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்குரைத்தல்**

(தலைவி உடன்பட்டமையைப் பாங்கி தலைவற் குரைத்தல்)

167. செந்தினை முன்னம் பரப்பி யமர்முரு கன்றிறத்து
வந்தனை செய்யு மரையிருள் யாமத்தின் வந்தெய்துவாய்
கந்தனைப் போலும் பிரம்பைரங் கேந்தரன் கனகவெற்பின்
மைந்துறு காளை யனையாயின் பம்பெறு மாட்சியுற்றே.

**குறிப்பு.**—தினைபரப்பி முருகனுக்கு வழிபாடு செய்தல் மரபு. **முன்னம்** : இடமுன். அமர் : விருப்பம். வந்தனை : பூசை ; வெறியாட்டு. **மைந்து** : வலிமை.

**குறியிடை நீறீஇத்தாய் துயிலறிதல்**

(குறியிடத்திற்றலைவனை நிறுத்திவந்து தாயினது துயிலைப் பாங்கி சோதித் தறிதல்)

168. பஞ்சர முற்ற கிளிதான் விரலிற் பதியணியில்
விஞ்சையின் வைத்த வயிடூ ரியத்தை வெருகிற்கண்டு
சஞ்சல முற்றிங் கரற்ற விழித்திலள் தாய்பருவ
மஞ்செயில் சூழ்பிரம் பூரரங் கேந்த்ரன் வரையிடத்தே.

**குறிப்பு.**—பஞ்சரம் : கூடு. விரலிற்பதியணி : மோதிரம். **விஞ்சையின் வைத்த** : தொழின் முறைப்படி பதித்த. வயிடூரியம் : வைடூர்யம். வெருகு : **பூனை.** அரற்ற : கத்த. பருவமஞ்சு : கார். ' மஞ்சயல் சூழரங் கேந்த்ரன் பிரம்பை வரையிடத்தே ' என்றும் பாடம்.

**தலைவிக்கு அவன் வரல்பாங்கிசாற்றல்**

(இது வெளிப்படை.)

169. கனங்கண் வளரும் பொழிற்பிரம் பூரன் கவிஞர்கடம்
மனங்கண் களிக்க வருமரங் கேந்த்ரன் வளங்கொள்வெற்பி
னினங்கண் வளரு மிருளிடை யுன்னடை யென்னவிய
லனங்கண் வளரா தழுங்குவித் தான்புறத் தன்பனின்றே.

**குறிப்பு.**—கனம்:மேகம். கண்வளரும்:தூங்கும் ; ஈண்டு தங்கும். மனங் கண்:உம்மைத்தொகை. இனம்:கூட்டம். கண்வளரும்:பொருந்தும். இயல்: சஞ்சரிக்கும். இலக்கணமமைந்த எனினுமாம். அனம் : அன்னம். கண் வளராது:தூங்காது. அழுங்குவித்தான்:துன்புறுத்தினன். 'வெற்பரினம்' என்றும் பாடம், கண் வளரும் அன்னங்களின் துயிலைக் கெடுத்தான் எனவே தலைவன் இரவில் வந்தான் என்பதாயிற்று.

**பாங்கி குறியிடத்திறைவியைக் கொண்டுசேறல்**

(இது வெளிப்படை.)

170. பண்ணுக்கொப் பான தமிழ்தேர் பிரம்பைப் பதியிறைவ
னெண்ணுக்கு முன்சொல்லு மாநந்த ரங்க னெழில்மருமப்
பெண்ணுக்கொப் பான பிறைநுத லாய்கறை பெற்றிடுவேற்
கண்ணுக்கொப் பாஞ்செங் கழுநீர் மலர்வது காண்சுனைக்கே.

**குறிப்பு.**—'எண்ணுக்கு முன் சொல்லும்' என்றதாற் பாட்டுடைத் தலைவனது அதிதீவிர புத்தி நுட்பத்தைத் தெரிவித்தார்; மருமம்: மார்பு; பெண்:திரு.

**குறியுய்த்தகறல்**

(தலைவியைக் குறியிடத்துச் செலுத்தி நிறுத்திப் பூக்கொய்து வருவேனென்று சொல்லிப் பாங்கி பிரிதல்)

**171.** வேயொக்குந் தோளியர் வேள்பிரம் பூரன் விளங்கும்வைவேற்
சேயொக்கு மாநந்த ரங்கன் பிரம்பைச் சிலம்பினினின்
வா யொக்கு மாம்பன் மலர்வன கண்டுநில் வார்குழற்கன்
பாயொக்கு நாண்மலர் கொய்திங் ஙனேவந்து பாலிப்பனே.

**குறிப்பு.**—வேய்: மூங்கில். வேள்: மன்மதன். வேற்சேய்: குமரன். அன்பாய்:அன்புடன். ஒக்கும்-தகுந்த.

**வண்டுறை தாரோன் வந்தெதிர்ப்படுதல்**

(வண்டுறை தாரோன்: தலைவன். எதிர்ப்படுதல்: தோன்றுதல்.)

**172.** நாமக் கடற்புவி காக்கும் பிரம்பை நராதிபன்பூந்
தாமப் புயாசல னாநந்த ரங்கன் றடஞ்சிலம்பின்
யாமத் தினிலென் னிதயா ரவிந்தத் தினைக்குறித்தோ
காமுற் றதுமது வார்கஞ்சங் கூம்பக் கனங்குழையே.

**குறிப்பு.**—நாமம்: அச்சம். கடற்புவி: கடலாற் சூழப்பட்ட புவி என்று மூன்றனுருபும்பயனும் விரிக்க. திருமகள் போன்ற தலைவி இரவில் தலைவனது இதயமாகிய தாமரையை விரும்புதலால் ஏனைய தாமரைகளை விட்டு நீங்குவளாதலின் அவை கூம்பும் என்க. தலைவி இலக்குமி போன்றவளாதலின் இங்ஙனம் கூறினர். இச்செய்யுள் ஏகதேசவுருவகம். நராதிபன்: நரஅதிபன்; மக்கள் தலைவன். தாமம்: மாலை. புய அசலம்: புயமாகிய மலை என்று உருவகம்; வடமொழி நெடிற் சந்தி.

**தலைவி யாற்றின தருமை நினைந்திரங்கல்**

(ஆற்றினதருமை-வழிவருதற்கரிதாயிருத்தல்.)

**173.** கால்கொண் டிடித்துத் தடித்துப் படைத்துக் கனம்பிறங்கன்
மேல்கொண் டொலித்து விடாமற் சொரியுமவ் வேலையினீ
யால்கொண்ட பாயல்விட் டெவ்வாறு வந்தனை யம்பிரம்பைச்
சேல்கொண்ட கண்ணியர் சூழரங் கேந்த்ரன் சிலம்பிடத்தே.

**குறிப்பு.**—கால்: மழைக்கால். தடித்து: மின்னி. படைத்து: அடுக்கினைக் கொண்டு. கனம்: மேகம். பிறங்கல்: மலை. ஆல் ஆலிலை. சேல்: மீன் இச் செய்யுள் ஏகதேசவுருவகம்.

### புரவலன் தேற்றல்

(வழிவருதற் கெளிதாயிருந்ததென்று கூறித்தலைவன் தலைவியைத் தெளிவித்தல்)

174. உன்னிடை யைக்கண் டொளித்திடுஞ் சீயம்பொன் னோங்கலென்ன
மன்னிய கொங்கைக் கிடைந்திடும் வேழமுன் மாதவத்தா
லென்னிடத் தொன்று மெதிரா பிரம்பைக் கிறைவன் வெற்றிக்
கொன்னவில் வேற்செங்கை யாநந்த ரங்கன் குலவரைக்கே.

**குறிப்பு.**—ஓங்கல் : மலை. எதிரா-எதிர்க்காது ; கொல்நவில் வேல் என்க ; கொலைத்தொழில் புரியும் வேல் என்பதாம். வரைக்கு : வேற்றுமை மயக்கம் ; 'வரைக்கண்' என்பது பொருள். தலைவியின் இடைக்குச் சிங்கமும், கொங்கைக்கு வேழமும் உவமை. இடைந்திடும் : தோற்றுப் போகும்.

### புணர்தல்

(இது வெளிப்படை.)

175. திங்க ளிடத்திற் சிறுமுத் தரும்பச்செவ் வாயினமு
தங்குதி கொள்ளக் குழைகிழிக் குங்கயல் தான்பிறழ
வங்கலுழ் மேனி துவளவின் பத்தி னழுந்தினமால்
மங்கையர் சூழரங் கேந்த்ரன் பிரம்பை வரையிடத்தே.

**குறிப்பு.**—திங்களின் முத்தம் முகத்தின் குறுவேர்வைக்குவமை. முத்துப் பிறக்கும் இடங்களில் திங்களும் ஒன்று என்பர் ; இரத்தினச் சருக்கம் 35. அமுதம் : இதழூறல். குழை : குண்டலம். கயல் : கண். அங்கலுழ்மேனி : அழகுதிகழ் உருவம் ; 104, 157, செய். காண்க. அழுந்தினமால் : ஆல் அசை.

### புகழ்தல்

(இது வெளிப்படை.)

176. அங்கச வேள்பிரம் பூரன் றமிழிற் ககத்தியன்போ
லிங்குய ருங்கல்வி யாநந்த ரங்க னிருந்துறைவாய்ச்
செங்கழு நீர்மல ராகுமிப் பாவை திளைத்ததனிற்
பொங்கிய தேனுண் டிடுவண்டு நானே புகலுதற்கே.

**குறிப்பு.**—அங்கசன் : மன்மதன். செங்கழு நீர் மலர் தலைவிக்கும், வண்டு : தலைவற்கும் உவமை. திளைத்தல் : அநுபவித்தல்.

### தலைவி தலைவனைக் குறிவரல் விலக்கல்

(இரவுக் குறிவரல் ஏதம் பயக்கு மென்று கூறி இறைவனை இறைவி இரவு வரல் விலக்குதல்)

177. உள்ளத் துவகை யொருப்பட் டிருள்பட் டுறங்குமிரா
நள்ளிற் கதிர்வேல் துணையாக நீவர லும்விரும்பே
மள்ளற் பழனஞ் செறிபிரம் பூர னடுந்திறல்சேர்
வெள்ளக் கடற்படை யாநந்த ரங்கன்றன் வெற்பிடத்தே.

**குறிப்பு.**—ஒருப்பட்டு : கலந்து. நள் : நடு. கதிர்வேல் : ஒளி வீசும்வேல். அள்ளல் : சேறு. பழனம் : வயல். வெள்ளம் : ஒரு பெரிய எண்ணிக்கை.

**தலைவன் றலைவியை யில்வயின் விடுத்தல்**

(இல்வயின்-வீட்டில்)

178. சித்தச னென்னும் பிரம்பைரங் கேந்த்ரன் சிகரவெற்பிற்
புத்தமு தம்பொரு முத்துறழ் வெண்ணகைப் பூங்கொடியுன்
கைத்தொடி வைத்த மணிவிளக் காகக் கவிரையெள்ளும்
வித்துரு மச்செவ் விதழார் மனைக்கினி மேவுகவே.

**குறிப்பு.**—சித்தசன் : மன்மதன். உறழ்தல் : ஒத்தல். தொடி : வளை. மணி : மாணிக்கம். கவிர் : கல்யாணமுருங்கை, செய் 130 காண்க. எள்ளும் : இகழும். வித்துருமம் : பவளம். இதழார் : பாங்கியர்.

" கழற்கான் மதன்கணை போல்விழி யார்தங் கடிமனைக்கே "
[அம்பிகா. கோ. 212]

' வித்துரு மச்செவ் விதழ்சேர் மலர்மனை மேவுகவே ' என்றும்
[பாடம்.

**பாங்கி யிறைவியை யெய்திக் கையுறை காட்டல்**

(கையுறை-தான்பறித்துக் கொணர்ந்த மலர் முதலியன)

179. வேயஞ்சு தோளியர் வேளிரங் கேந்த்ரன் விழைபொதும்பர்
வாயஞ்சு கந்தமிழ் பாடும் பிரம்பை வரைமயிற்கொய்
பாயஞ் சிறைவண்டு கிண்டாமுன் சென்று பரிந்துகொய்தேன்
நீயஞ்ச லஞ்ச லடியே னகன்ற நிலையினுக்கே.

**குறிப்பு.**—வேய் : மூங்கில். விழை : விரும்பும். பொதும்பர் : சோலை. வாய்-ஏழனுருபு. அஞ்சுகம் : அழகியகிளி. அஞ்சிறை : அழகிய சிறை, அகம் சிறை என்றுமாம் ; அங்கை என்றாற் போல. கிண்டாமுன்:கிளறுதற்கு முன்னம் ; வண்டுகிண்டாமுன் கொய்தாள் எனவே, அவள் கொணர்ந்த கையுறையாகிய மலர்களில் தேன்நிறைந்திருந்தமைபெறப்படும். " அஞ்சேல ரிவையஞ் சேலடியேன் விட்டகன்றதற்கு. "
[அம்பிகா. கோ. 211]

**பாங்கி தலைவியை யிற்கொண்டேகல்**

(இற் கொண்டு-வீட்டிற்கழைத்துக் கொண்டு)

180. வாசங் கமழுநன் மௌவலு மிந்தீ வரமுங்கண்டே
யாசங்கை யுட்கொண் டிடக்கொய் திடுவ தடுப்பதுண்டோ
வீசுந்தி யாகன் பிரம்பைரங் கேந்த்ரன் விளங்குவெற்பிற்
பாசம் புரியன்னை கண்விழிக் காமுன் படர்குவமே.

**குறிப்பு.**—மௌவல் : முல்லை. இந்தீவரம் : நீலம். ஆசங்கை : ஐயம். அடுப்பதுண்டோ : தகுமோ. பாசம் : அன்பு. கண்விழித்தல் : துயில் நீங்குதல். படர்குவம் : செல்லுவோம். முல்லையும் நீலமும் கொய்யப்படுதல் பிறர்ஐயத்திற்கு இடனுண்டாக்கும் என்றவாறு.

### பாங்கி தலைவனை வரவு விலக்கல்

(வரவு-இரவின்கண் வருதல்)

181. வேரல டர்ந்து கடந்தரு வாரணம் வேங்கையுலாஞ்
சாரலி டத்திரு டங்குமக் கங்குலிற் சார்ந்தொருநீ
வாரலி னிப்பிரம் பூரரங் கேந்த்ரன் வரைப்புறத்திற்
சேரல ரிற்பல ருங்கண் வளருந் திறங்குறித்தே.

**குறிப்பு.**—வேரல் : மூங்கில். கடம் : மதநீர். உலாம் : உலவும். ஒருநீ : ஒப்புயர்வற்றநீ. வாரணம் : யானை. வாரல் : வாரலை. சேரலர் : பகைவர். இல்-ஒப்புப் பொருட்டு. திறம் : பண்பு. இருள்தங்கும் எனவே நீங்காத இருள் என்பதாயிற்று.

### தலைமகன் மயங்கல்

(வரவு விலக்கியதை யாற்றுத்தலைவன் வருந்திக் கூறல்)

182. பூவு மணமு மணியு மொளியும் புலவர்புகல்
பாவும் பயனு மெனப்பிரி யாமற் பகலிரவாய்
மேவும் படிக்கற்ற விஞ்சையுற் றுளுண்டு மிக்கசெம்பொற்
காவும் பொரூஉங்கைப் பிரம்பைரங் கேந்த்ரன் கவின்வரைக்கே.

**குறிப்பு.**—பயன் : பொருள். விஞ்சை : வித்தை. பொற்கா : ஐந்தரு. மலருக்கு மணமும், மணிக்கு ஒளியும், பாவிற்குப் பயனும்போலத் தலைவன் தலைவியர் உறவு என்க.

" தரியாத வன்பு தயங்க முயங்குந் தகைபகனும்
பிரியாம லிங்கெவர்க் குந்தெரி யாவிஞ்சை பெற்றிலமே. "
[அம்பிகா. கோ. 208]

### தோழி தலைமகள் துயர்களைந்து விடுத்தல்

(தலைமகள்துயர்-தலைவன் வரும்வழி அவனுக்கு ஏதம் பயக்கு மென்று கருதித் தலைவிகொண்ட துன்பம். களைந்து-கூறி.)

183. கன்மா தெனப்புரி காரிரங் கேந்த்ரன் கமலமலர்ப்
பொன்மான் மகிழும் பிரம்பூர்க் கரசன் பொருப்பிறைவா
கொன்மா வினமஞ்சக் கூரயில் கொண்டநின்கொள்கையுன்னு
மென்மா தினக்குயி ருன்மா திரமுற் றிசைத்தகொம்பே.

**குறிப்பு.**—கல்மாது : அகலியை. கல்லை மாது எனப்புரி இரங்கேந்த்ரன் என்க; கல்லை மாதாக்கியவன் இராமன்; கார் : கருநிறமுடைய இராமன். பொன்மான் : இலக்குமி. கொல்மா : கொல்யானை. மாவினம் : யானைக் கூட்டம். அயில் : வேல். ' கொன்மாவின் வஞ்ச முருக்கயில் ' என்றும் பாடம்; கொல்லும் மாக்களின் வஞ்சத்தை யழிக்குமயில் என்பது பொருள்; மாதிரம் : திசை. கொள்கை : இரவில் வருதலாகிய உட்கோள். கொம்பு : ஊதுகொம்பு. தலைவன் வரும்வழியில் உள்ள ஏதத்தை நினைத்து வருந்தும் தலைவிக்கு, அவன்வருகையை உணர்த்தும் ஊதுகொம்பே உயிர் என்க.

**திருமகட்புணர்ந்தவன் சேறல்**

(திருமகள்-தலைவி. சேறல்-செல்லுதல்.)

184. சங்கந் தவழும் வயற்பிரம் பூரன் றரியலர்க்கோர்
சிங்க மெனுந்துரை யாநந்த ரங்கன் சிலம்பனையீர்
அங்கங்கு நீர்விளை யாடிட நீத்த வருங்கனல்கள்
பொங்கு மணிவிளக் காகுமெம் மூர்க்குப் புகுவதற்கே.

**குறிப்பு.**—தரியலர் : பகைவர். கனல்கள் : கனலாகக் கொண்ட செம்மணிகள். நீர்விளையாடிட நீத்த : நீர் நிலைகளில் விளையாடுவோர் நீத்த ; நீர் விளையாடுமிடங்களில் அவ்வாறு விளையாடுவோர் நீத்த ; நீர் (தலைவி, பாங்கியர்) விளையாடும்போது நீத்த.

**இரவுக்குறி முற்றும்.**

## 14. இரவுக் குறி யிடையீடு.

**இறைவிக்கிகுளை யிறை வரவுணர்த்துழித்தான் குறிமருண்டமை தலைவியவட் குணர்த்தல்**

(இரவுக் குறிக்கண் தடைகள் நிகழ்தல்.)

(இகுளை-தோழி ; இறைவரவு-தலைவன் வந்தமை ; குறிமருண்டமை : வேறொரு குறியைத் தலைவன் செய்த குறியாக மயங்கினமை. அவட்கு : தோழிக்கு.)

185. காரொலி செய்யுங் களிற்றுன் கமழ்செங் கமலவய
லேரொலி செய்யும் பிரம்பைரங் கேந்த்ர னிருந்துறைவாய்த்
தேரொலி யாமென் றகத்தின் புறநான் செலவருவி
நீரொலி யாகத் திரும்பிவந் தேனென்னல் நேரிழையே.

**குறிப்பு.**—ஏரொலி : ஏர்மங்கலம் ; உழவர் ஒலியுமாம். அகத்தின் புறம் : முரண். நென்னல் : நேற்று.

**பாங்கி தலைவன் றீங்கெடுத்தியம்பல்**

(தீங்கு-பொல்லாங்கு ; என்றது தலைவியறிந்து கொள்ளாதபடியவன் குறிப்புச் செய்தது)

186. மல்லல் செறியும் வயற்பிரம் பூரன் வரகவிஞர்
செல்லவத் தம்பொழி கையா னரங்கன் சிலம்பிடத்தின்
முல்லையை ரும்பின் விரும்பும்வெண் மூரன் முகிணகையா
யல்ல குறிசெய் தனன்வய லூர னணியுறவே.

**குறிப்பு.**—மல்லல் : வளப்பம். செறியும் : மிகுதியும் பொருந்திய. அத்தம் : செல்வம். மூரல் : புன்னகை. முகிணகை : முகிழ் நகை.

### புலந்தவன் போதல்

(தலைவன் தான் குறித்த குறியிலிருந்து தலைவி அல்ல குறிப்பட்டு வராமையால் வருந்தித் தன் ஊர்க்குப் போதல்.)

187. காதுக் கினிய புகழ்ப்பிரம் பூரன் களித்தொரைவர்
தூதுக்கு வந்தருளாநந்த ரங்கன் றுதிகொள்வெற்பின்
மாதுக் குறையுள்வண் டாமரை யென்ன மதித்தும்நெஞ்சே
யேதுக் கெனையரை யாமத்து நீயிங் கிழுத்ததுவே.

**குறிப்பு.**—ஐவர் : பாண்டவர். ஐவர்தூதுக்குச் சென்றவன் **கண்ணன் ;** பாட்டுடைத்தலைவனைக் கண்ணனாகக் கூறியது பூவைநிலை. மாது : **தலைவி.** உறையுள் : தங்குமிடம். இலக்குமிக்கு உறையுள் தாமரை யாதலினாலும் இரவில் அது மூடியிருக்கு மாதலினாலும் தலைவியைக் காணவியலா தென் பதை யீண்டுக் குறித்தனர்.

“ நம்போ லெளியவ ரில்லைநெஞ் சேயிந்த நானிலத்து
வம்போட வென்ற வனமுலை மாதர்க்கு மாளிகையின்
றம்போ ருகமென் றறிந்தும்வம் பேயென்னை நீயலைத்து
வெம்போ தகந்திரி கங்குலென் னேவிங்கு மேவியதே. ”

[அம்பிகா. கோ. 223.]

### புலர்ந்தபின் வறுங்களம் தலைவி கண்டிரங்கல்

(புலர்ந்தபின்-பொழுது விடிந்த பின்பு ; வறுங்களம்-வெற்றிடம், அதாவது தலைவனில்லாத விடம்)

188. தேங்கமழ் சோலை திகழ்பிரம் பூரன் றிருக்கரத்தி
னோங்கவிற் கொண்டரு ளாநந்த ரங்க னுயர்வரைமே
லீங்குயி ரன்னவர் யான்வந்து போனபின் னெய்தினரோ
கோங்கினங் காளனங் காள்வனங் காளொன்று கூறுமினே.

**குறிப்பு.**—தேம் : வாசனை. திரு : வீரலக்ஷ்மி. உயிரன்னவர் : **தலைவர்.**

### தலைவி பாங்கியொடு பகர்தல்

(பாங்கியொடு-பாங்கிக்கு ; பகர்தல் : உரைத்தல்.)

189. பூமே லுயர்ந்திடும் பொன்மேரு வொத்த புயாசலவேள்
காமே லெனச்செ யரங்கன் பிரம்பையங் கார்மயிலே
நாமே லினியெவன் சொல்வது கல்வி நலமிலர்சொல்
பாமே லதென்னக் குறிபிழைத் தார்நம் பரிசனரே.

**குறிப்பு.**—பூ : பூமி. புயாசலம் : இருபெயரொட்டு ; வடமொழி நெடிற் புணர்ச்சி. காமேல் எனச்செய்-காவிற்குமேல் எனச்சொல்லும்படித் தருமம் செய்யும் ; கா-கற்பகக் கா. எவன் : என்ன. மேல் **இனி-இனி** மேல். பா : செய்யுள். பரிசனர் : உறவு கொண்ட தலைவர். ‘ பரிவினரே ’ **என்பதும் பாடம்.**

**(தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்.)**

(அவலம்-துன்பம்.)

190. வேனலங் கொண்ட பிரம்பைரங் கேந்த்ரன் விளங்குமலைத்
தேனலங் கொண்டசெவ் வாய்வெண் ணகைப்பச் சிளங்கிளியே
கானலங் கொண்ட கழியூ டுனதெழிற் கண்ணின்மலர்
பானலங் கொண்டபைந் தாருள தோநம் படப்பையிலே.

**குறிப்பு.**—வேல்நலம்-வேலின் வெற்றி. தேன்நலம் ; தேனின் இனிமை. கான் ; மணம். கண்ணின்: ஐந்தனுருபு ஒப்புப் பொருள். பானல் ; நீலம். படப்பை ; தோட்டம். செவ்வாய், வெண்ணகை, பச்சிளங்கிளி-முரண்.

**இறைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றல்**

(குறி தவறியதைத் தலைவன் மேலேற்றிப் பாங்கி கூறுதல்.)

191. மின்கொடி யென்ன மதில்சூழ் பிரம்பையர் வேந்தன்மலர்ப்
பொன்கொடி சேர்ந்திடு மாநந்த ரங்கன் பொருப்பிறைவா
வென்கொடி வாடிப் பெருமூச் செறிய விதுபுரிந்தாய்
நின்கொடி மாநக ரேதுரைப் பாயின்று நீயெமக்கே.

**குறிப்பு.**—மின்கொடி மதிலுக்கு ஒளியாலும், வளைவாலும் உவமை. மலர்ப் பொன் கொடி ; இலக்குமி. என்கொடி ; தலைவி. நின்கொடி: கொடி துவசம்.

" காமங் கடவ வுள்ள மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவ மாயி
னோங்கித் தோன்று முயர்வரைக்
கியாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ. " [ஐங். 238.]

**இறைவி மேலிறைவன் குறிபிழைப்பேற்றல்**

(குறிபிழைப்பு-குறி தவறியது.)

192. தம்பாலென் னுள்ளம் வருதலைக் கண்டுதன் னுள்ளங்கொண்டு
நம்பாற் செயுமன்பு நாங்கண் டிலந்தொண்டை நாட்டின்வைகி
யெம்பாலன் புற்ற திருவேங் கடம்பெற்ற வேந்தல்வெற்றி
யம்பான்மை யுற்ற வரங்கன் பிரம்பையி னுரணங்கே.

**குறிப்பு.**—பான்மை-தன்மை.

**தலைவி குறி மருண்டமை தோழி தலைவற் குணர்த்தல்**

(மருண்டமை-வேறொன்றைத் தலைவன் செய்த குறியாக மயங்கியது.)

193. கோடை யெறியக் குளுகுளென் றுமிரங் கோட்டினின்று
மோடையின் வீழ்கனி யெல்லா மிரவினி லுன்குறியென்
றேடவிழ் கூந்தல்வந் தெண்ணுமெண் ணத்துக் கிலக்கமுண்டோ
வாடவர் மெச்சும் பிரம்பைரங் கேந்த்ரன்வெற் பாரண்ணலே.

**குறிப்பு.**—கோடை ; காற்று. எறிய-அடித்தலால், எச்சத்திரிபு. குளு குளு ; ஒலிக்குறிப்பு. ஆமிரம்-மா கோடு; கிளை, எடவிழ் கூந்தல்: தலைவி ; அன்மொழித்தொகை. இலக்கம்: எண்ணிக்கை, கணக்கு ; ' இலக்கு முண்டோ' என்றும் பாடம். இலக்கு: குறி.

" கடுங்கா லெறியக் கயத்துகு மாவின் கனியை யெல்லா
மொடுங்கா வரவல்கு லுன்குறி யாக வுளமகிழ்ந்து
நடுங்கா ரிருள்வந்து நாண்மலர்ச் சோலையி னண்ணியபி
னடுங்காய் களிற்றண்ண லேயெண்ணு மாறெரு ளளவில்லையே."

[அம்பிகா. கோ. 229.]

**அவன் மொழிக் கொடுமை சென்றவளவட்கியம்பல்**

(மொழிக்கொடுமை-சொல்லின் கொடுமை ; என்றது தான் செய்த குறியை யறிந்து தலைவி வரவில்லை யென்பது.)

**194.** தயங்கு மெழிற்பிரம் பூர்த்துரை ரங்கன் றடந்துறைவா
யியங்கவண் டாமரை மேற்றுயி லன்ன மெழுப்புவித்துங்
கயந்தனில் வாழைக் கனிசித றச்சிறு கல்லெறிந்து
மயங்கிவிட் டேனன்ப ராலன்பர் கூன்பிறை வாணுதலே.

**குறிப்பு.**—தயங்கும் : விளங்கும். கயம் : குளம்.

**என் பிழைப்பன்றென்றிறைவி நோதல்**

(பிழைப்பு-தவறு.)

**195.** தோகை யடிபொருங் கூரிலை நொச்சித் துணருகும்பூ
வாகையி னுற்கண் ணுறங்காமற் சற்று மயர்ந்திலன்யான்
வாகை புனைந்த பிரம்பைரங் கேந்த்ரன் வளம்பதியிற்
பாகை யனைய மொழியா யிமையோர் பரிசுபெற்றே.

**குறிப்பு.**—

" வியலூ ரெயிற்புற நொச்சியி னுழ்மலர் வீழ்தொறெண்ணி
மயலூர் மனத்தொடு வைகினன் யான். " [தஞ்சை. கோ. 201.]

என்னும் மூலமும் " அகலம் பரந்த மதிற்புறத்து நொச்சி மரத்தினது பழைய மலர் சரசரத்து வீழ் தோறும் வீழ் தோறும் தலைவர் வருகின்ரு றென்னும் ஆசை செல்லும் மனத்தோடு யானிருந்தேன். " [தஞ்சை. கோ. சொக்கப்ப நாவல ருரை] என்னும் அதன் உரையும் காண்க.

" கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சிலமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே. " [குறுந். 138.]

"ஏறிரங் கிருளிடை யிரவினிற் பதம்பெருஅன்
மாறினெ னெனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப
கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரனெச்சிப்
பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன் யானுக" [கலித். 46.]

**குறிப்பு** :—தோகை ; மயில். ஆகையினுல் ; உண்டாகையினுல். அயர்ந் திலன்-மறந்திலேன் ; பரிசு: தன்மை. இமையோர் பரிசு ஆவது கண்ணிமை யாமை ; வாகை-வெற்றி மாலை.

**தாயும் நாயும் ஊருந் துஞ்சாமை**

(துஞ்சாமை-தூங்காதிருத்தல்.)

196. விருந்தென வன்னே யுறங்கா திருகண் விழித்தல்கண்டோ
வருந்தியக் கால வயிரவ னூர்தி மருள்வதல்லா
லருந்திறற் காளே யனையார் மதுமகிழ்ந் தாடலென்னு
மிருந்தமிழ் ரங்கன் பிரம்பூர் மகிழ்நர்வந் தெய்துதற்கே.

**குறிப்பு** :—விருந்தென: விருந்தினர் வந்தனரென. * அ : உலகறிசுட்டு. காலவயிரவனூர்தி : நாய். காளையனையார்-ஊர்க்குறவர்.

" அன்னையொரு நாள்
நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே. " [குறுந். 292.]

**காவலர் கடுகுதல்**

(காவலர்-ஊர்க்காவலர் ; ஊர்க்காவலர் விரைந்து சென்று ஊரைச் சுற்றிக் காத்தல்.)

197. மேவல ரைப்புறங் கண்டே திறைகொண்டு வீற்றிருந்து
பாவல ருக்கருள் ரங்கன் பிரம்பைப் பதியினுறு
காவலர் கைப்பறைக் கண்படுந் தோறுங் கயல்பொருமென்
பூவலர் வாட்கண் படாமற் கலுழ்ந்து புலந்ததுவே.

**குறிப்பு** :—மேவலர் : பகைவர். புறங்கண்டு : வெற்றிகொண்டு;மேவல ரிடம் பெறும் திறையை அவன் பாவலர்க்கு அளிப்பன் என்றவாறு. பறைக்கண். பறையினது கண். படுதல் : ஒலித்தல்; கண்படாமல் ; தூங்காமல் புலந்தது ; வருந்திற்று.

**நிலவு வெளிப்படுதல்**

(நிலாவெறித்தல்)

198. வெம்புலி யொத்த விறலிரங் கேந்த்ரன் விளங்குமஞ்சூற்
கம்புக ளும்வயல் சூழ்பிரம் பூரன் கவினகர்வாய்ச்
செம்பது மக்கை யிடத்தொரு வேல்கொண்டு சேர்பவர்முன்
னம்புலி மேல்வந் தெதிர்த்தால் விளேவ தறிந்திலமே.

* என்றுமில்லாமல் இன்று புதுமையாக எனினுமாம்.

**குறிப்பு** :—அம்சூல் : அழகிய கருப்பம். கம்பு ; சங்கு ; உகளும் : புரளும். அம்புலி : சந்திரன். மேல் : ஆகாயம். 'வேல்கொண்டு சேர்பவர் முன்னம் புலி மேல் வந்தெதிர்த்தால்' என்றதன் சொற்போக்கு நயம் நோக்கற்பாலது.

**கூகை குழறல்**

(கோட்டானொலித்தல்.)

199. வாகை யிருந்த புயபூ தரத்தின் மடங்கலையூர்
தோகை யிருந்து மகிழரங் கேந்த்ரன் றுதிகொள்வெற்பி
னோகை யிருந்த வுளநடுங் கும்படி யோர்சுழல்கட்
கூகை யிருந்து முதுமரந் தோறுங் குழறுவதே.

**குறிப்பு** :—வாகை : வெற்றிமாலை. பூதரம் : மலை. மடங்கல் : சிங்கம், ஈண்டுத்தலைவனையுணர்த்திற்று. தோகை : மயில். முதுமரம் : ஆலமரம். பழைய மரமுமாம்.

**கோழி குரற் காட்டல்**

(கோழி கூவுதல்.)

200. கிளைவாய்த் திருக்குமி ராயகு லோத்தமன் கீர்த்தியெங்கும்
விளைவாய்த் தமிழ்புனே ரங்கன் பிரம்பை வியன்மறுகின்
வளைவாய்ச்செஞ் சூட்டுவன் புள்ளிடை யாமத்தெம் மன்னர்வர
வுளைவா யெழுந்துகுக் குக்கூ வெனுங்குர லொன்று கொண்டே.

**குறிப்பு** :—கிளை : உறவு. வியன் : பெரிய. மறுகு : வீதி. வளைவாய் : மூக்கு. புள் : கோழி. உளைவாய் : துன்பந்தருவதாய், எனவே தடையாய். குக்குக்கூ-ஒலிக்குறி.

"பொன்பதி தாள்வளை வாய்ச்செய்ய சூட்டுவன் புள்ளினமே."
[தஞ்சை. கோ. 208.]

**இரவுக்குறி யிடையீடு முற்றும்.**

## 15. வரைதல் வேட்கை

(வரைதல்-மணஞ் செய்து கொள்ளுதல்
இவ்வாறு இடையீடு பட்டதனால் தலைவி வரைதல் வேட்கையாற் கூறுவது.)

**பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி**
**யருமறை செவிலி யறிந்தமை கூறல்**

(பருவரல்-துன்பம் ; அருமறை-பிறரால் அறிதற்கரிய ரகசியமாகிய களவொழுக்கம்.)

201. இறைவார் குருகிய மெய்த மலர்விளக் கேந்தவிருந்
துறைவாய் மணந்தோர் தணந்தா ரெனப்படர் சூழுமென்னைக்
கறைவாய வேல்வேள் பிரம்பூ ரிரங்கன் பதிக்கணன்னை
பிறைவா ணுதலென்னை யென்றுண் மறைத் தொன்று பேசினனே.

**குறிப்பு** :—இறை : இறகு. வார் : நீண்ட. குருகு : பறவை. இயம்-வாத்தியம் ; தணந்தார்-பிரிந்தார் ; படர்-துன்பம் ; கறை-இரத்தக் கறை ; அன்னே-செவிலி.

**தலைமகன் வருந்தொழிற்கு அருமை சாற்றல்**

(தலைமகன் வருதற்கரிதாயிருத்தலைத் தலைவி பாங்கிக்குச் சொல்லுதல்.)

**202.** தாயுந் துயில மகாரு மடங்கத் தறுகணுறு
நாயு முடங்கப் பகலாக வேவெண் ணகைநிலவு
காயும் பொழுது கழற்கட் குராலொலி காட்டலென்னு
மேயும் புகழ்ப்பிரம் பூரரங் கேந்த்ரன்வெற் பேந்தலுக்கே.

**குறிப்பு**.— மகார் : மக்கள். தறுகண் : அஞ்சாமை. முடங்குதல் : படுத்து உறங்குதல். ‘ நிலவும் பகலாகவே காயும் பொழுது ’ என்க. கழல் : கழற்சிக்காய். குரால் : கூகை. “ தாயும், மகாரும், நாயும் துயிலும் பொழுது நிலவு பகல்போற் காயும் ; அப்பொழுது தலைவன் கூகைக்குரல் காட்டின் என்னும் ” என்றவாறு.

**தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல்**

(செலவொருப்படுதல்-போதற்கு மனமொப்பித் துணிதல்.)

**203.** மாரிபொய்த் தாலுநென் மாரிபொய் யாத வளம்படைத்த
சீரிய னுடன் பதியா தெனவிறுய் சேர்குவம்யாம்
பாரியொப் பான பிரம்பைரங் கேந்த்ரன் பதியனைய
காரிகை யேயனே தன்காவ னீவிக் கடிதெழுந்தே.

**குறிப்பு**.—பாரி : கடையெழு வள்ளலிலொருவன். அனே : அன்னே. நீவி : நீக்கி. கடிது : விரைந்து. ‘ கடையிறந்தே ’ என்பதும் பாடம்.

“ அருங்கடி யன்னே காவ னீவிப்
பெருங்கடை யிறந்து மன்றம் போகிப்
பகலே பலருங் காண * நாண்விட்
டகல்வயிற் படப்பை யவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி பன்னுட்
கருவி வானம் பெய்யா தாயினு
மருவி யார்க்குங் † கழைபயி னனந்தலை
வான்றோய் மாமலைக் ‡ கிழவனைச்
சான்றோ யல்லை யென்றனம் வரற்கே”. [நற். 365.]

**பாங்கி யிறைவனைப் பழித்தல்**

(இது வெளிப்படை)

**204.** இருங்கடல் வாய்க்கன்னிப் புன்னைநன் னீழ லினிதுவைகி
யருங்கலை சோரவந் நாண்மணந் தார்க்கிணை யாருலகிற்
பொருங்களம் வென்ற புரசைச் கிரிக்கட் புலிங்கமுக
வருங்களிற் றுன்பிரம் பூரரங் கேந்த்ரன் வரைமயிலே.

பி-ம் :— * வாய்விட். † மயந்திகழ் சிலம்பின். ‡ நாடனைச்.

**குறிப்பு.**—வாய் : எழனுருபு. கன்னி : இளமை. இணை யார் : (கொடுமையில்) யார் நிகர். புரசை : யானைக் கழுத்தில் அணியும் கயிறு. புலிங்கம் : தீப்பொறி. பொருங்களம் : யுத்தகளம். கிரிபோன்ற களிறு என்க் கூட்டுக.

**பூங்கொடி யிறையோன் தன்னை நேர்ந்தியற்பட மொழிதல்**

(பூங்கொடி : தலைவி. தலைவன் : நற்குணமுடையான் என்பது விளங்கப் பாங்கிக்குத் தலைவி சொல்லுதல்.)

**205.** உள்ளிக் கமட முறுபார்ப்பை விட்டுயிர் காத்தளிக்கு
மள்ளற் பழனத் தணிகெழு மூர னடாதெண்ணுமோ
வள்ளக் கமல வயல்சூழ் பிரம்பை வளம்பதியின்
வெள்ளப் படையுற்ற மாலரங் கேந்த்ரன்வெற் பாரமுதே.

**குறிப்பு.**—யாமை தன் பார்ப்பினை யிகந்தும் தானுள்ளுதலால் அதனை யுயிர்ப்பித்துக் காக்கும் என்பதை

"நோக்கினுற் பாவகத்தா னுவலரும் பரிசனத்தாற்
காக்குமீ னுடலடக்குங் கமடமொண் பறவையென்ன
வாக்கினுன்" என்னுமடிகளா னுணர்க.
[திருவால. புரா. ஞானோப. 48].

"யாமைதன் பார்ப்பை யிகந்துயிர் காக்கு மிருந்துறைவன்."
[அம்பிகா. கோ. 241].

இந்நூற் செய்யுள் 141 காண்க.

**உள்ளி** : எண்ணி. கமடம் : ஆமை. பார்ப்பு : குஞ்சு. **அள்ளல்** : சேறு. அடாது : தகாதது. வள்ளம் : கிண்ணம். **வெள்ளம்** : ஒரு பெரிய எண்ணிக்கை ; செய்யுள் 177 காண்க.

**கனவு நலி புரைத்தல்.**

(தலைவனைக் காணுங் கனவு தன்னை நலிகின்ற தென்பதைத் தலைவி கூறுதல் ; நலிபு - நலிதல்.)

**206.** எல்லா வுனக்கினி யென்சொல்லு கேனெதிர்த் தோரைவென்ற
மல்லாருந் திண்புய ஞநந்த ரங்கன் மகிழ்பிரம்பை
யல்லார் பொழுதினிற் கல்லார மார்ப னகலமுறப்
புல்லாது புல்லிப் புணர்ந்தேன் மணந்த பொழுதினுமே.

**குறிப்பு.**—எல்லா : தோழி. "எல்லா வுறக்கம் வராதெனக்கே" (செய். 139.) மல் : மற்போர். அல்லார் பொழுது : இரவு. **கல்லாரம்** : நீலமலர். அகலம் : மார்பு.

**கவினழி புரைத்தல்**

(கவினழிபு - அழகு அழிதல்.)

**207.** மானே யுனக்கினி யானென்சொல் கேனிசை வாணர்தமக்
கானே யெனும்பிரம் பூரரங் கேந்த்ரன்வெற் பண்ணலுக்குத்
தானே பயப்பதல் லாமற் பயலை தலைப்பட்டுமெய்
யூனே யுருகப் படர்ந்தா ரழகை யொழிக்கின்றதே.

**குறிப்பு.**—ஆன் : காமதேனு. பயப்பது : பயன்படுவது. பயலே : பசலே, தேமல். தலைப்பட்டு : உண்டாகி.

**தன்றுயர் தலைவற்குரைத்தல் வேண்டல்.**

(தலைவனுக்குத் தன் துயரத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று பாங்கியிடம் தலைவி விரும்பிக் கூறுதல்.)

208. அவ்வா ரணமன் றிடங்கர்க் குடைந்தன் றழைக்கவந்து
கைவாள் விதிர்த்தருள் ரங்கன் பிரம்பையங் காவனையா
யிவ்வா றெனப்பீர்க் கலர்கொய் தவர்முன் னியம்புவர்யார்
மெய்வாயிங் கேயங்கு நீர்தேடுஞ் செம்பொன் விளைந்ததென்றே.

**குறிப்பு.**—வாரணம் : யானை ; ஈண்டு கஜேந்திரன் ; 42-ம் செய்யுள் காண்க. இடங்கர் - முதலை ; கா : சோலை. ஆறு : விதம். பீர்க்கலர் : பீர்க்கம்பூ. அவர் : தலைவர். மெய்வாய் : மெய்யிடம். பொன் : பொருள், தேமல்.

“ இன்ன ளாயின ளன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே.” [குறுந். செ. 98].

“ பீரத் தலரொன்று காட்டிவந் தார்க்குப் பெரும்புகழே.”
[திருவா. கோ. 252].

**ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி**

(தலைவன் வரும்வழியின் ஏதத்தையறிந்து தானடைந்த வச்சத்தைத் தலைவி சொல்லுதல்.)

209. அரம்பொரு கூர்ங்கல் லதரிற் கொடுவரி யார்க்கவந்தோ
வுரம்பெறு கைம்மலை மைம்மலை போனின் றுலாநெறிக்கண்
வரம்பெறு செல்வப் பிரம்பூ ரரங்கன் வரையகத்தே
யிரங்கிட நாமவ ரெய்திடு மாறென்கொ லின்புறவே.

**குறிப்பு.**—கூர்ங்கல் : பரல். கொடுவரி : புலி. கைம்மலை : யானை. மைம்மலை : அஞ்சனகிரி.

**காமமிக்க கழிபடர் கிளவி**

(வேட்கை வயத்தான் மிக்க நினைவுற்று அதனாலுண்டாகிய துன்பத்தைக் கூறுஞ்சொல்.)

210. தண்டலை காள்வண் டுறைவாயி னீலந் தளையவிழக்
கண்டலை யுற்ற கழிகா ளெழில்பெறு கானினங்காள்
பண்டலை யிற்கண் வளரரங் கன்பிரம் பைப்பதியின்
வண்டலை நீத்ததென் னென்றுரை யீரென் வடிவங் கண்டே

**குறிப்பு.**—தண்டலை : சோலை. தளை : முறுக்கு. கண்டல் : தாழை. பண்டு: அனாதி காலமாக - அலை: பாற் கடல் ; அலையிற்கண் வளர்வது திருமால். வண்டல் : விளையாட்டு. உரையீர் : வினவுகின்றிலீர்.

### தன்னுட் கையா றெய்திடு கிளவி

(கை : செயல். கையாறு : செயலறுதல். தலைவி தன்பாற் செயலற வுண்டாதலால் வருந்திக் கூறல்.)

211. குவளைக்கண் ணீர்கொண்டு போதலர் கொண்டுசெங் கோகனகந்
துவளக் கயல்கொள் கழிகாள் கணவர் துறந்தனரோ
தவளக் குடைகொ ளரங்கன் பிரம்பையந் தண்டுறைவா
யிவளுக் கொருதுணை யாமென் றுரைக்கவென் போலிருந்தே.

**குறிப்பு.**—கண்ணீர் : கள்நீர், கண்நீர். போதலர் : போது அலர், போத அலர். செங்கோகனகம் துவளக் கயல் கொள் : சிவந்த தாமரை துவளும்படி கயல் மீன்களைக் கொண்ட ; முகமாகிய தாமரையில் வாட்டத்தை யுடைய கண்களை இருபுறமுங் கொண்ட. தவளம் : வெண்மை.

### நெறி விலக்கு வித்தல்

(ஏதந்தரும் வழியில் வாராவண்ணம் தலைவனை விலக்கப் பாங்கி யிடம் தலைவி கூறல்.)

212. நாளொன்று வந்து நலந்தரி னும்பழி நண்ணிடும்பூந்
தாளொன்று தாமரை வாவிகள் சூழுந் தமிழ்ப்பிரம்பை
வேளொன்று கட்டழ கன்றுரை ரங்கன் விளங்குவெற்பின்
வாளொன் றியசெங்கை மன்னனுக் கீதுரை வாணகையே.

**குறிப்பு.**—" ஒரு நாள்வரினு முறுபழி தூற்றும் " [அம்பிகா. கோ. 252.] **வேள்** : மன்மதன். மன்னன் : தலைவன். வாணகை : தோழி.

### குறி விலக்கு வித்தல்.

(குறியிடத்து வாராவண்ணந் தலைவனை விலக்குமாறு பாங்கிக்குத் தலைவி கூறல்.)

213. இப்புன முற்றிழு தைப்புன மாக வினைதப்புனமா
மப்புனங் காத்தற் கெமர்வைத் தனரென் றவர்க்குரைப்பாய்
கைப்புய லென்னும் பிரம்பைரங் கேந்தரன் கனகவெற்பிற்
றுப்புறழ் தோலடிச் செஞ்சூட் டனநடைத் தூமொழியே.

**குறிப்பு.**—இழுதைப்புனம் : பயனற்ற கொல்லை. இதை : தினை. துப்பு. பவளம்.

### வெறி விலக்குவித்தல்

(வெறி விளையாடலை விலக்கென்று தோழிக்குத் தலைவி கூறல். வெறியாட் டாவது தலைவியின் வேறுபாட்டைக் கண்டு அவளைப்பேய் தீண்டியதென நினைத்துத் தமர் வேலனைக் கொண்டு முருக வேட்கு ஆடு முதலிய வெட்டிப் பலியிடுவித்தல்.)

214. அசந மிளைப்பை யகற்றுமென் றன்னை யடுவதென்கொல்
தசநம வென்ன வொருகுடை நீழலிற் சாரச் செய்து
வசனந்தப் பாத பிரம்பைரங் கேந்தரன் வளங்கொள்வெற்பிற்
குசனன் புறுகுக் குடகே தன்னைக் குறித்தெழுந்தே.

**குறிப்பு.**—அசநம் : சோறு; அசம் நம் இளைப்பை என்றும் பிரிக்க: அசம். ஆடு. அடுவது : சமைப்பது, கொல்வது. தசம் : பத்துத்திக்கு. நம: நமவென்று வணங்க. வசனம் : சொன்ன சொல். குசன் : செவ்வாய். குக்குடம். கோழி கேதனம் : கொடி. குக்குட கேதனன் : முருகன் ; முருகனுக்குச் செவ்வாய்க்கிழமை உரிய தினம்.

**பிற விலக்குவித்தல்**

(மற்றவற்றை விலக்குமாறு பாங்கிக்குத் தலைவி கூறுதல். ஈண்டுத் தன்னை மணஞ் செய்தற் பொருட்டுத் தமர் பால் வரும் பிறரை உண்மை கூறி விலக்குதலாம்.)

215. கூடியன் புற்ற குரிசிலென் னெஞ்சிற் குடியிருக்க
வோடியிங் கேவந் தயலார்சொற் றூத ருரைப்பதென்னுந்
தேடிய கீர்த்திப் பிரம்பைரங் கேந்த்ரன் றிருந்தலரை
நாடிமுற் கோடி நிதியங் கடைக்க ணயந்ததுவே.

**குறிப்பு.**—குரிசில் : தலைவன். திருந்தலரை : பகைவரை. நாடி : விரும்பி. கடைக்கண் : கடைவாசலில். திருந்தலரை நாடிக் கோடி நிதியம் நயப்பது பயன் பெருதது போல் தூதருரையும் பயனிலதாய்க் கழியும் என்பதாம்.

**குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்**

(தலைமகன் மணம் பேச வருதலை ஏற்றுக் கொள்ளுமாறு குரவர்க்குச் சொல்லென்று பாங்கிக்குத் தலைவி கூறல். வரைவு : மணம். குரவர்: தாய், தந்தை, தமையன், அரசன், ஆசான் என்போர்).

216. அரவப் புணையி னறிதுயில் கூர்ந்தரு ளங்கணன்போற்
பரவக் கருணைசெய் ரங்கன் பிரம்பைப் பதியிடத்தின்
விரவச் சிறந்தவன் மெய்யன்பு தன்னை விரும்பிடநங்
குரவர்க்கெவ் வாறு குறிக்கொண் டெதிர்கொளக் கூறுவதே.

**குறிப்பு.**—அரவம் : சேடன். புணை : தெப்பம். அங்கணன் : திருமால் ; அழகிய கண்ணையுடையான் என்னும் பொருட்டு. பரவ : துதிப்ப. விரவுதல் : கலத்தல். சிறந்தவர் : தலைவர்.

**வரைதல் வேட்கை முற்றும்.**

## 16 வரைவு கடாதல்

(தலைவியை மணஞ் செய்து கொள்ளுமாறு தலைவனைப் பாங்கி வற்புறுத்துதல்.)

**வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்**

(வேறுபாட்டிற்குக் காரணம் யாதென்று வினவிய செவிலிக்குத் தலைவி வேறு காரணங் கூறியதைப் பாங்கி தலைவற் குரைத்தல்.)

217. அன்பன் பிரிய வவலித் திடுதலை யன்னைகண்டுன்
துன்பமென் னென்று வினவுத லுக்கொன்று சூழ்ந்துகற்றோர்க்
கின்பஞ்செய் யும்பிரம் பூர்த்துரை ரங்க னிருந்துறைவாய்
நன்பொன்செய் சிற்றிலை நீர்கொண்ட தென்று நவின்றனளே.

**குறிப்பு.**—அன்பன் : தலைவன். அவலித்திடுதல் : வருந்துதல். சூழ்ந்து : ஆராய்ந்து. பொன் : இலக்குமி ; தலைவி. 'நவின்றனனே' என்றும் பாடம்.

### அலரறி வுறுத்தல்

(பலர் கூறும் பழிமொழியைப் பாங்கி தலைவற்குத் தெரிவித்தல்.)

218. செம்பது மத்திற் கயல்பாய மாதர் திருமுகம்போ
லம்புவி போற்றும் பிரம்பூ ரிரங்க னணிகொள்வெற்பா
வம்புகொள் ளாத வலர்தோன்ற வம்பலிம் மானுக்கந்தோ
விம்பரிற் கைம்மிக்கு வீணே தலைப்பட்ட தேந்திழைக்கே.

**குறிப்பு.**—பதுமம் முகத்திற்கும், கயல் கண்களுக்கும் உவமை. வம்பு கொள்ளாத அலர், அலர் மொழி ; இது மலர்ந்த மலரன்று ஊரார் சொல்லும் சொல் என்று வேறுபாடு விளங்குவதற்கு அடைமொழி தந்தமையின், வெளிப்படை ; அம்பல் சொல் நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்வது. அலர் : இன்னானோடு இன்னாளிடை இதுபோலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது. 'அம்புலு மலருங்களவு' (இறை. அகப். 22) என்னு மிறையனாரகப் பொருட் சூத்திர வுரையை நோக்குக. அம்பல் : பெரும் போது. அலர் : மலர்ந்த மலர். இம்பர் : இவ்வுலகு : கைமிக்கு: மிகுந்து. தலைப்பட்டது : உண்டாயிற்று. இச் செய்யுள் உருவகவணி.

### தாயறி வுறுத்தல்

(களவொழுக்கத்தைத் தாயறிந்தன ளென்பதைத் தலைவனுக்குப் பாங்கி தெரிவித்தல்.)

219. வாடிய மெய்யும் வளைசோருங் கையு மனக்கவலை
கூடிய செய்கையுங் கண்டுன்னை யன்னையுட் கொண்டயிர்த்தாள்
தேடிய சீர்ப்பிரம் பூர்வர ரங்கன் சிலம்பின்வளை
யாடிய தன்மையு மேன்மையும் பார்த்தெழி லாரணங்கே.

**குறிப்பு.**—வரம் : உயர்வு. உட்கொண்டு : மனத்திற்கொண்டு. அயிர்த்தல்: சந்தேகித்தல். 'சீர் தேடிய' என்று மாறுக.

### வெறியச்சுறுத்தல்

(வெறியாடுவித்தலைக் கூறித் தலைவனுக்கு அச்சம் உண்டாக்குதல்.)

220. திருவையுற் றோங்குந் தமிழ்ப்பிரம் பூரன் சிறந்தருளைந்
தருவையொப் பான துரைரங்க னோங்குந் தடஞ்சிலம்பா
கருவையுற் றோங்குங் கமஞ்சூன் மழைமுழக் கத்தைவிட்டுத்
துருவையப் பாலுற்ற தோவெறி யாடத் தொடங்குவதே.

**குறிப்பு.**—ஐந்தரு : அரி சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிஜாதம், மந்தாரம் என்பவை ; தமிழை ஊரனொடுங் கூட்டுக. சிலம்பா : கிளவித்தலைவனைவிளி. கமஞ்சூன் மழை : நிறைந்த நீராகிய சூலையுடைய மழை; 'கம' என்னும் உரிச்சொல் நிறைவுப் பொருளைத் தந்தது. துருவை : ஆடு.

**பிறர்வரை வுணர்த்தல்**

(தலைவியை அயலார் மணக்க முயல்கின்றார்கள் என்பதைப் பாங்கி தலைவற்குக்கூறல்.)

**221.** ஏதிலர் தூங்கி யிருப்பதற் கென்செய்வ திப்புவிமேல்
மாதிர மெட்டுஞ் சயங்கொண்ட ராய வரோதயனுஞ்
சீதரன் செல்வப் பிரம்பைரங் கேந்தரன் றிருநகர்க்கண்
தாதுகு தண்டலை வாய்வண்டர் சாரும்வண் டார்மன்னனே.

**குறிப்பு.**—ஏதிலர் : அயலார். மாதிரம் : திசை. சீதரன் : திருமால். தாது : மகரந்தம். தண்டலை : சோலை. வண்டர் : வண்டு. வண்டார் : வண்தார் ; வளப்பம் பொருந்திய மாலை. மணங்காரணமாக வண்டாரினிடத்துத் தண்டலை வண்டர் சார்வது போல் தலைவியின் மணங் காரணமாக ஏதிலர் சார்வர் என்பது தொனிப் பொருள். இச் செய்யுள் கருத்தடையணி. 'வண்டர் மாறிடத்தார் மன்னனே' என்ற 'பாடத்திற்குத்' 'தண்டலை வாய் வண்டர் நிறம் மாறிடத் தாதுகுதார் மன்னன்', என்று கூட்டிப் பொருளுரைக்க.

**வரைவெதிர் வுணர்த்தல்**

(நீ மணம் பேசவரின் எம்மவர் ஏற்றுக் கொள்வாரென்று பாங்கி தலைவற் குரைத்தல்.)

**222.** ஏயு மகிழ்ந்திடு மெந்தையு முந்த வெதிர்ந்திடுமுன்
வாயு மனமுஞ் செயலுமொன் றுய்நிதி வந்திறங்க
வேயுந் தகுதி யெனக்குறிப் பாரெழுத் தோர்ந்து செஞ்சொ
லாயும் பிரம்பைத் துரைரங்க னுட்டி னகளங்கனே.

**குறிப்பு.**—ஏயும் : மனமியையும். எதிர்ந்திடும் : எதிர்கொள்ளும். வாய் மனஞ் செயல் - திரிகரணம் : ஏயுந்தகுதி - பொருந்துந் தகுதியுடைத்து. குறிப்பார் : சுற்றத்தார். எழுத்து : இலக்கணம். அகளங்கன் : குற்ற மற்றவன், தலைவன்.

**வரையு நாளுணர்த்தல்**

(மணஞ் செய்தற்குரிய காலம் இஃது என்பதைப் பாங்கி தலைவற் குரைத்தல்.)

**223.** ஊர்கொண் டதுமதி யோங்கிய வேங்கையொண் கண்ணிகொண்ட
பார்கொண்ட தாமரைப் பாதனக் கஞ்சன் பகைத்திடவெம்
போர்கொண்ட சக்ர தரன்பிரம் பூரன் புவியினென்றும்
வேர்கொண்ட கீர்த்தி வரரங்கன் றுங்கவெற்பாரண்ணலே.

**குறிப்பு.**—ஊர் : பரிவேடம். கண்ணி : பூங்கொத்து. பாதன்: திருமால். கஞ்சன்-கம்ஸன். வேர்கொண்ட : நிலைபெற்ற.

### தலைமகளறிவு தலைமகற்கறிவுறுத்தல்

(தலைமகளுடைய பேரறிவைப் பாங்கி தலைவற் கறிவித்தல்.)

224. ஓவிய மென்ன வுரைந்துகண் ணீர்வெள்ள மோடவன்பான்
மேவிய கூடல் விளைத்திளை யாநின்ற மென்கொடிக்குப்
பாவியென் சொல்வ தெழிற்பிரம் பூரன் பணிமொழியார்க்
காவியொப் பாகிய ரங்கேந் திரன்வரை யாடவனே.

குறிப்பு.—ஓவியம்: சித்திரம். கூடல்: கூடற்சுழி. பணிமொழியார்-மாதர். ஆவி: உயிர். ஆடவன்: தலைவன். கூடல் விளைத்தலாவது: தலைவனைப் பிரிந்ததலைவி மணலில் வட்டமாக ஒரு கோடு வரைந்து, அதனுட் பல சிறு கோடுகள் வரைந்து அவற்றை எண்ணுங்கால், அவை ஒற்றையாயின் தலைவன் வாரா னென்றும், இரட்டையாயின் தலைவன் வருவன் என்றும் கருதும் மரபு.

"......பையவ கன்றவர்தா மீள்வரெ னக்கருதிக் கூடல்வி ளைத்தறவே" (கலி. பரணி 51.)

### குறிபெயர்த் திடுதல்

(குறியிடத்தை மாற்றுதல்.)

225. கூறொரு பாலுமை கொண்டோனுக் கன்புளங் கொண்டுயர்ந்த
வீறொரு வாப்பிரம் பூரரங் கேந்த்ரன் விளங்குவெற்பா
மாறொரு வாது வகுப்பதென் பாங்கியர் வந்தணையா
வேறொரு நீழல் விளையா டுதற்கு விரும்புவையே.

குறிப்பு.—கூறு: பாகம். கொண்டோன்: சிவன். வீறு: பெருமை. ஒருவா: நீங்காத. மாறு: பகை. வாது: தர்க்கம். அணையா: சேராத.

"சங்காளை வந்திக்கு மாநந்த ரங்கன்" (செ. 113) காண்க.

### பகல் வருவாளை இரவில் வருகென்றல்

(வருகென்றல்: வருக என்றல்.)

226. கானவர் கூடிக் கமழ்நறுஞ் சந்தங் களைந்துவிளை
யேனெல்செய் வார்பக லெய்துவ ராலிர வின்னிமையா
வானவர் தம்மொடும் வந்தெய்து வாய்செழு மாமலர்ப்பூந்
தேனமர் சோலைப் பிரம்பூ ரரங்கன் சிலம்பண்ணலே.

குறிப்பு.—கானவர்: குறவர். சந்தம்: சந்தனம். ஏனல்: தினை. அமர்: பொருந்திய.

### இரவு வருவாரைப்பகல் வருகென்றல்

(இது வெளிப்படை)

227. வெண்சிங்க வேறு கருங்குஞ் சரமஞ்ச வேதிரியும்
வண்செங் குருதி யிணர்க்காந்த ளூடிரு வான்கங்குல்வாய்த்
தண்செங் குவளை வயலூர நீவரத் தக்கதன்று
லெண்செல்வ முற்ற பிரம்பூ ரரங்க னெழில்வரைக்கே.

**குறிப்பு.**—குருதி : இரத்தம். இணர் : (பூங்) கொத்து. இருவான்: மிகக் கருத்த, மீமிசைச்சொல். கங்குல் : இரவு. எண்-எண்ணுதலுற்ற. வயலூர : விளி. அஷ்டைசுவரிய மெனில் எண்வகைச் செல்வம். வெண்சிங்கம் கருங் குஞ்சரம் : முரண்.

**பகலினு மிரவினும் பயின்று வருகென்றல்**

(பயின்று-பலகாலும் நெருங்கி.)

**228.** இகலுஞ் செறுநர்க் கெழிற்செம்பொ னூடிங் கிருந்தளித்தே
யகறிண் புவிகொள் பிரம்பூ ரரங்க னடுக்கல்வெற்பா
புகலுந் திறமினி யென்மா தவிசூழ் பொருப்பிடத்திற்
பகலு மிரவும் வரவன்பு கூருமென் பைந்தொடியே.

**குறிப்பு.**—இகல் : பகைமை. செறுநர்-வீரர் : பொன்னூடு: விண்ணுலகு. அடுக்கல் : மலை. அடுக்கல் வெற்பா, என்புழி வெற்பன் பெயரளவாய் நின்றது. பாட்டுடைத் தலைவன் பகைவர்க்கு விண்ணுலகை யளித்துத்தான் புவியை ஏற்றுக் கொள்வன் என்றது அவன் போர்க்கள வெற்றியை. இது இகழ்ந்தது போற் புகழ்ந்தது. பைந்தொடி: தலைவி.

**பகலினு மிரவினும் அகலிவ ணென்றல்**

(அகல் இவண்-இவ்விடத்தினின்றும் நீங்குவாயாக.)

**229.** தோளுங் கவசமும் போல்வீர ரார்ப்பொலி சூழ்பிரம்பை
யாளுந் துரைரங்கன் றுங்கவெற் பாவுன்னை யன்புகொண்டு
நாளும் பகல்வரி னன்பழி யாமின்ப நாமுறவே
நீளு மிரவின் வரவேத நெஞ்சி னிலைநிற்குமே.

**குறிப்பு** :—தோளுங்கவசமும் போல் ஆளும் என்று கூட்டுக. ஆர்ப்பு ஆரவாரம். ஒலி : சத்தம். நன்பழி-உண்மையானபழி. ஏதம் : துன்பம். 'பகலிற் பழியும் இரவில் ஏதமும் ஆகும்; ஆதலால் பகலினும் இரவினும் வாரற்க' என்றவாறு.

**உரவோன் நாடும் ஊருங்குலனு மரபும் புகழும்**
**வாய்மையுங் கூறல்**

(உரவோன் : தலைவன். நீ இங்ஙனம் வரையாது வந்து ஒழுகுவது நின்னுடைய நாடு, ஊர், குலம், மரபு, புகழ்என்பவற்றின் பெருமைக்குத் தகாது என்று பாங்கி தலைவற்குக் கூறல்.)

**230.** மதிபொரு கல்விக்குஞ் செல்விற்கு மாண்மைக்கு மாநிலமேற்
றுதிபொரு கீர்த்திக்கும் வார்த்தைக்கு நின்குலத் தொண்மைக்[குமே
யெதிர்வதல் லாலுல கெல்லா முலைவிலைக் கேற்பதுண்டோ
பதிதருஞ் சீர்த்துரை ரங்கன் பிரம்பைப் பதியண்ணலே.

**குறிப்பு.**—மதிபொருகல்வி-"திங்களன்ன கல்வியும்" என்பது காண்க. செல்வு : இரு முதுகுரவராற் கொண்டாடப்படுதல். ஒண்மை : ஒளி. முலை விலை : பரிசம்.

### ஆறு பார்த்துற்ற அச்சங்கூறல்.

(வழியினேதம் நினைந்து தலைவி யஞ்சுதலைப் பாங்கி
தலைவற்குக் கூறல்.)

231. வெங்கட் கரடக் களிற்றிரை தேடி வெகுண்டுகொடுஞ்
சிங்கக் குருளை திரியுமஞ் சாரலிற் சீர்பரவுஞ்
சங்கத் தமிழ்க்கருள் ரங்கன் பிரம்பையைச் சார்ந்தெழுந்த
துங்கக் கிரியிற் சிலம்பா வருவது சூழ்ச்சியன்றே.

**குறிப்பு.**—இச்செய்யுளின் முதலிரண்டடிகளையும் 164-ம் செய்யுளின் முதலிரண்டடிகளோடு ஒப்பிடுக. துங்கம் : உயர்வு. சூழ்ச்சி : அறிவுடையோர் செயல்.

### ஆற்றுத் தன்மை ஆற்றக் கூறல்

(தலைவியின் ஆற்றுத் தன்மையை ஆற்றுதல் செய்யத் தலைவற்குக் கூறல்.
இனி, ஆற்றக்கூறல்-மிகுதியுமெடுத்துக் கூறல் எனினுமாம்.)

232. வயங்குங் கநக வளைசோருங் கூடு மலரமளி
யுயங்கும் விழுந்தே பெருமூச் செறியு முலகனைத்து
மியங்கும் புகழ்பிரம் பூர்வர ரங்க னிலங்குவெற்பா
தயங்குந் தளரும் விளரு மளிபொரு தாழ்குழலே.

**குறிப்பு.**—கநகம் : பொன் : உயங்கும் : வாடும் ; தயங்கும் : கலங்கும் ; விளரும்; வெளுக்கும். அளி : வண்டு. " தயங்கும் தமமும் விளரும் "என்ற பாடத்தில், தமம்:இருள் ; இருளும் விளர்க்கும் படியான குழல் என்றபடி. தாழ் குழல் : தலைவி ; அன்மொழித் தொகை. 'வளைசோரும் ; தாழ் குழல் உயங்கும், பெருமூச் செறியும் தயங்கும், தளரும், விளரும், என்க.

### காவல் மிகவுரைத்தல்

(காவலின் மிகுதியைப்பாங்கி தலைவற் கெடுத்துக் கூறல்.)

233. மேவல ரஞ்ச வரிவிற் பிடித்த விஜயனெழிற்
பூவலர் வாட்படை ரங்கன் புகழ்பிரம் பூரமறுகிற்
காவலர் கைப்பறைக் கண்படுந் தோறும் களித்துமுரல்
மாவலர் பூங்குழன் மான்கண் படாது மயங்கினவே.

**குறிப்பு.**—மேவலர் : பகைவர். வரி : கட்டு. விஜயன் : அருச்சுனன் ; ஈண்டு பாட்டுடைத்தலைவன். ஆநந்த ரங்கனுக்கு வஜாரத விஜயன் என்னும் பட்டமுண்மை காண்க : செய். 267 காண்க.

பூவலர்வாட்படை : மலர்க்கணை ; மலரணிந்த வாட் படையுமாம். மறுகு : தெரு. படுதல் : ஒலித்தல். மா : வண்டு. மான் : தலைவி. இச்செய்யுளை 197-ம் செய்யுளோடு ஒப்பிடுக.

" பறைக்கண் படும்படுந் தோறும் படாமுலைப் பைந்தொடியாள்
கறைக்கண் மலிகதிர் வேற்கண் படாது கலங்கினவே "

[திருச்சிற்.கோ. 258.]

### காம மிக வுரைத்தல்

(காம மிகவு-தலைவியின் காம மிகுதி)

234. தாமம் புனைந்து புலிவெண் குடைநிழல் சாரவைத்த
பூமன் பிரம்பை வரரங்க பூபன் பொருப்பிறைவா
வாமந் தருந்தண் புனலுட் புகினு மெழுந்துசுடுங்
காமம் பெரிது சிறிதுயி ராகுமென் காரிகைக்கே.

**குறிப்பு.**—தாமம் : மாலை. பூமன் : அரசன். ஏமம் : இன்பம். "இவ ளுயிர் தவச் சிறிது காமமோ பெரிதே" [குறுந். 18].

"ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும்-நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்" [நாலடி. 90].

### கனவு நலி புரைத்தல்

(கனவு நலிபு-கனு வருத்துதல்.)

235. அல்லார் பொழுதினெல் லார்கண் வளரு மமையத்தினிற்
கல்லார் மார்பனென் வல்லார முலையிற் கலந்திருக்க
வொல்லா திருகண் பொருமையி னுன்விழித் தூடியதால்
நல்லார் துதிக்கு மரங்கன் பிரம்பை நகரிடத்தே.

**குறிப்பு.**—எல்லார் : எல்லாரும். கல்லாரம் : நீலம். வல் : சூதாடு கருவி. ஆர் : உவம உருபு. ஒல்லாது : சகியாமல். நல்லார் : சான்றோர்

### கவினழி புரைத்தல்

(கவினழிபு-தலைவியின் அழகு அழிதல்.)

236. எழுந்தன பார மிணையார மார்பி னிறுகப்புல்லி
யழுந்துவ தன்றிப் பசலைகொண் டோங்கி யழகையுண்ணச்
செழுந்தளிர் மேனித் திருவனை யாளெவன் செய்யும்வையந்
தொழுந்திரு வார்துரை ரங்கன் பிரம்பையர் சூழ்வெற்பனே.

**குறிப்பு.**—தனம் : முலை. ஆரம்:மாலை : பசலை : தேமல். எவன் : யாது. வையம் : உலகு.

வரைவு கடாதல் முற்றும்.

## 17. ஒருவழித் தணத்தல்

[தலைவன் தன்னூர்க் கொருவழி போய் வருகிறேனென்று போதல். ஒரு வழித்தணத்தல் நெடுந்தூரம் பிரிதலின்றிச் சமீபத்தில் பிரிவு என்பது கொள்ளக்கிடக்கும்.]

### தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றல்

(தலைவன் தன்னூருக்குச் செல்வதைப் பாங்கிக்குக் கூறல்)

237. பொன்னக ருக்கு நிகர்பிரம் பூரன் புடவியின்கண்
மன்னிய கீர்த்திகொ ளாநந்த ரங்கன் வரையிடத்தின்
மின்னிகர் நுண்ணிடைப் பெண்ணுக் கிதுநீ விளம்புவிரைந்
தென்னக ரிற்சென் றிதோவந்து தோன்றுவ னேந்திழையே.

**குறிப்பு.**—பொன்னகர் : சுவர்க்கம். புடவி : பூமி. மன்னிய : நிலைபெற்ற. இதோ : உடனே.

### மென்சொற்பாங்கி விக்கல்

(விலக்கல் : செலவை விலக்கல்)

238. உயிரிற் சிறந்தவென் னொண்டொடி தன்னினு மொன்றுமக்குப்
பயில்வுற் றிடுமப் பரிசுள தேலென் பகருவன்யான்
செயிருற்ற நள்ளார் திறமறு கப்பொரு திண்டிறல் சேர்
மயிலுக்குத் தோள்செய் பிரம்பூ ரரங்கன் வரையண்ணலே.

**குறிப்பு.**—ஒண்டொடி : தலைவி. செயிர் : குற்றம்- நள்ளார் : பகைவர். மறுக : கலங்க. மயில் : வீரலக்ஷ்மி.

### தலைவன் நீங்கல் வேண்டல

(நீங்கல் : பிரிதல்)

239. அந்தா மரையின் மதுவுண்டு வண்டகன் றாலும்வந்து
பிந்தாமற் சேர்ந்திடும் பெற்றியுண் டேபிறை வாணுதலாய்
சிந்தா மணிபொரு ரங்கன் பிரம்பைத் திருநகர்க்கண்
வந்தார்வ முற்றவிம் மன்னரு மன்னர் வகுத்திடினே.

**குறிப்பு.**—மது : தேன். பிந்துதல் : பின்தங்குதல். ஆர்வம் : அன்பு. தலைவன் தன்னைப் படர்க்கையில் வைத்து 'இம்மன்னரும்' என்று கூறினன் ; அன்னர் : அத்தன்மையவர். தாமரையின் மதுவை முற்ற உண்டு நீங்கினும், வண்டு திரும்பவும் அம்மலரிடத்தேவருமாபோலே தலைவனும் தலைவியிடம் வருவன் என்றவாறு.

### பாங்கி விடுத்தல்

(விடுத்தல்: தலைவனைச்செல விடுத்தல்)

240. உன்னைப் பிரிந்திங் கிருக்கவொண் ணாதனு ருற்றிடுமென்
பொன்னைத் தணந்தங் கிருப்பதன் றால்மடற் பூகமெங்குந்
துன்னப் பொலிபிரம் பூர்வர ரங்கன் றுதிகொள்வெற்பில்
நன்னார்க் கிடஞ்செய் தினிவிரைந் தெய்துக நாயகனே.

**குறிப்பு.**—அஞர் : துன்பம் ; பொன் : தலைவி; தணந்து: நீங்கி ; அன்று : நீதியன்று; பூகம் : கமுகு; துன்ன : நெருங்க; நன்னர் : நன்மை.

**பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தல்**

(அவன் : தலைவன்)

241. மன்னிய சீர்ப்பிரம் பூர்த்துரை ரங்கன் வரையரையன்
றன்னிய லானென்று தன்பதிக் கேசென்று சார்வலென்று
முன்னிய னுந்நன் பரிசொன்று நோக்கி முயற்சியுற்று
னின்னியல் புற்றகட் பைந்தோகை யொத்த விளங்கொடியே.

**குறிப்பு.**—இயலான் ஒன்று : இலக்கணங்களோடு சேர்ந்த ; உருபுமயக்கம் ; இன்னியல்பு-இனிய பண்பு ; கட்பைந்தோகை-கண்ணையுடைய பசிய தோகை, மயில். 'அரையன் முயற்சியுற்றான்' எனக்கூட்டுக.

**தலைவி நெஞ்சொடு புலத்தல்**

(புலத்தல்-வருந்திக் கூறல்)

242. மைவண்ண முற்ற மழையொத்த கைபெற்ற வள்ளல்கற்றோ
ருய்வண்ண முட்கொண் டரங்கன் பிரம்பை யுயர்வரைவாய்
மெய்வண்ண மொன்று செயல்வண்ண மொன்றுள்ள [மேற்கொள்ளவே
யிவ்வண்ண முற்றெவ னெஞ்சே தனித்திங் கிருப்பதுவே.

**குறிப்பு.**—மை - அஞ்சனம் ; மெய் - உண்மை ; ஈண்டுச்சொல்லின் மேனின்றது. மெய்வண்ண.................... கொள்ளவே : சொல் வேறு செயல் வேறு மனம் வேறென்றபடி ; கூறிற்றிலராயினும் மனமும் உபலக்கணத்தாற் கொள்க; செய் 100 காண்க. எவன் : ஏன்.

**சென்றோனீடலிற் காமமிக்க கழிபடர் கிளவி**

(நீடலின்-தாமதித்தலால் ; இது தலைவி கூற்று)

243. மணிவண்டு கிண்டி மதுவுண் டிடக்கண் மலர்குவளை
யணிகின்ற பூங்கழி கானெழில் வாய்ந்தவம் போருகங்காள்
கணிகொண்ட காதல ரேதுரைத் தார்கரு தார்நடுங்கிப்
பணிகின்ற சீர்த்துரை ரங்கன் பிரம்பைப் பதியிடத்தே.

**குறிப்பு.**—கண்மலர் : கண்போல்மலரும் ; உவமத்தொகை. கணி : கண்ணி ; மாலை. கருதார் : பகைவர்.

**தலைவியைப் பாங்கியாற்று வித்தல்**

(இதுவெளிப்படை)

244. நலந்தந்து கன்னியம் புன்னையங் கானிடை நாளும்வந்து
கலந்தன்பு செய்தநங் காவலர் தாழ்க்கக் கடவதுண்டோ
நிலந்தந்த சீர்ப்பிரம் பூர்த்துரை ரங்க னெடுந்துறைசேர்
புலந்தந்த வாரி தருமிந்த வேரியம் போதுகண்டே.

**குறிப்பு.**—கன்னி : இளமைத்தன்மை ; தாழ்க்க : தாமதிக்க. புலம் : நிலம் ; வாரி : நீர் ; நதி. வேரி : தேன்.

**பாங்கி தலைமகட்குத் தலைமகன் வந்தமை சாற்றல்**

(சாற்றல்-கூறுதல்)

245. உள்ளக் கவலை யொழியப் பருவர லோடவுயர்
வெள்ளக் கடற்புவி வேந்தர் பொற் றேரொடு மேவினர்காண்
வள்ளக் கமல வயல்சூழ் பிரம்பை வரோதயன்பார்
கொள்ளச்செங் கோல்கொண்ட வாநந்த ரங்கன் கொடிநகர்க்கே.

**குறிப்பு.**—பருவரல் : துன்பம் ; வெள்ளம் : நீர் ; வள்ளம் : கிண்ணம்.

**வந்தோன்றன்னொடு நொந்து வினைதல்**

(பாங்கி கூற்று)

246. மேனியெல் லாங்கொண்டு மண்டிப் பசலை விளங்கிடவுன்
பானினை வாயெழும் விம்மு மெலியும் படருழக்கும்
மாநிலங் காக்குந் துரைரங்க பூபன் மணமலிபூந்
தேனின மார்க்கும் பொழிற்பிரம் பூரிற் சிறந்தவனே.

**குறிப்பு.**—மண்டி : மிகுந்து ; பசலை: தேமல் ; படர் : துன்பம் ; தேன் : வண்டு; ஆர்க்கும் : ஒலிக்கும்.

**வெந்திறல் வேலோன் பங்கியொடு நொந்து வினைதல்**

(வெந்திறல் வேலோன்-தலைவன்)

247. இருதலைப் புள்ளூற் றிடுமிட ரென்னவென் போலமம்ம
ரொருதலை யாகவுற் றெவ்வா றிருந்தனி ரொண்குழையீர்
மருதலை தந்த பிரம்பூ ரரங்கன் வழங்குகொடை
பொருதலைக் கண்படு மொண்முத்த வண்டல் புரிந்துறைக்கே.

**குறிப்பு.**—இருதலைப்புள்: ஒருடலும் இருதலையுமுடைய பறவை ; மம்மர்: மயக்கம்; ஒருதலை : நிச்சயம்; மருது : மருத மரம்; அலைதந்த : குலையும்படி செய்த ; பொருத : நிகர; படுதல் : உண்டாதல்; புரிம் : புரியும்.

**பாங்கி யிறைவியை யாற்றுவித்திருந்த வருமை கூறல்**

(ஆற்று வித்திருந்த அருமை-தலைவியின் துயரத்தைத் தணியச் செய்து கொண்டிருந்த அருமை.)

248. பாரிடங் கொண்ட பதபுண்ட ரீகன்பண் ணூர்பிரம்பை
யூரிடங் கொண்டரு ளாநந்த ரங்க னுயர்வரைமேல்
வாரிடங் கொண்ட முலைவருந் தாத வகைபுரிந்தேன்
காரிடங் கொண்ட பொழில்காட்டி யுஞ்சுனை காட்டியுமே.

**குறிப்பு.**—பார் : பூமி ; பதம் : பாதம் ; வார் : கச்சு ; கார் : மேகம்.

**ஒரு வழித்தணத்தல் முற்றும்.**

## 18. வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல்

[மணஞ் செய்தலை முன்னிட்டு இடையே பொருள் ஈட்டுதற்குத் தலைவன் பிரிதல். இடைவைத்து-இடையீடாக நீக்கிவைத்து (தொல். களவு. 21)]

### என் பொருட் பிரிவுணர்த் தேந்திழைக்கென்றல்

[ஏந்திழை-தலைவி; தான்பொருள்வயிற் பிரிதலைத் தலைவிக்கு உணர்த்து என்று தலைவன் பாங்கிக்குச் சொல்லுதல்]

249. அத்தங் கடந்து படர்ந்துமர் தாமன் பொடுபகரு
மத்தங் கொடுவந் தணுகுவன் யானகி லம்புரக்கு
மத்தன் பிரம்பைத் துரைரங்க பூப னரவிந்தனெ
னத்தன் வரையணங் கன்னுட் கிதுநீ யறிவிப்பையே.

குறிப்பு.—அத்தம் : வழி; படர்ந்து : சென்று ; உமர் : உம்மவர். பகரும் (வேண்டும் என்று) கூறும் ; அத்தம் : பொருள் ; அகிலம் : எல்லாவுலகம் ; அத்தன் : மேலோன் ; அரவிந்தன் : சூரியன் ; திருமாலுமாம் ; அத்தன் : பிதா.

### நின் பொருட் பிரிவுரை நீயவட் கென்றல்

('பொருள் வயிற்பிரிந்து செல்லுதலை நீயே தலைவிக்குரை' யென்று பாங்கி தலைவனுக்குரைத்தல்)

250. ஒருபக னீவிட் டுறைந்தாலுங் கூட லுழந்துழந்து
வருபக லோவெனு மென்கொடிக் கியான்சொலு மாறு [முண்டோ
இருபக லோர்பக லிற்காட் டியபிரம் பூர்க்கிறைவன்
பொருபக லோனெனுஞ் செம்மல்ரங் கேந்த்ரன் பொருப் [பண்ணலே.

குறிப்பு.—பகல் : தினம்; விட்டு : நீங்கி ; உறைதல் : தங்கி இருத்தல் ; கூடல் : கூடலிழைத்தல் ; பகலோ : பகற்காலமோ ; இரு பகல் ஒரு பகலிற் காட்டியது பாரதம் பதினெண்காநாள் போரில்; "இரவோர் பகலுறக் காட்டியமால்" (செய். 322) என்பது காண்க.

### நீடேனென்றவ ணீங்கல்

(சென்ற விடத்திற்றுமதியேன் என்று சொல்லித் தலைவன் நீங்குதல். 'அவணீங்கல்' என்றும் பாடம்.)

251. மணிகலன் கொண்டநின் பைந்தொடி தன்னை வரையநல்ல
வணிகல னுடை நிதிகொண்டு மீள்வ னுடரவப்
பணியிசைக் கண்வளர் மாலரங் கேந்த்ரன்பைங் காவின்மலர்க்
கணிகம ழும்பிரம் பூர்முற்று மங்கலங் காட்டுதற்கே.

குறிப்பு.—மணிகலன் : உம்மைத்தொகை; 'வல்ல' என்றும் பாடம். அணிகலன் ஆடைநிதி: உம்மைத் தொகை; மீளுவன்: தன்மை வினைமுற்று ; ஆடரவப் பணி : சேடன், அநந்தன் ; ஆடுதல் : அசைதல் ; இது பணியின் இயல்பளவாய் நின்றது; கணி : வேங்கை.

### பாங்கி ஓடரிக்கண்ணிக்கவன் செலவுணர்த்தல்

(ஓடரிக்கண்ணி : செவ்வரி படர்கின்ற கண்ணையுடையாள் ; தலைவி.)

252. அல்லும் வெளிறுங் குழலா யெவன்சொல்வ தாய்ந்துநமர்
சொல்லுந் திரவிய மெல்லாம் விடுத்தின்றத் துன்னலரை
வெல்லுந் திறங்கொள் பிரம்பூ ரரங்கனை மேவலர்தாஞ்
செல்லுங் கொடுங்கடஞ் சென்றுர்நங் கண்ணிற் சிறந்தவரே.

**குறிப்பு.**—அல்-இருள் ; வெளிறுதல்-வெளுத்தல் ; எவன்-என்ன ; அ : அறிசுட்டு ; துன்னலர்-பகைவர் ; கடம்-காடு ; சிறந்தவர்-தலைவர் ; இன்று சென்றுரென முடிக்க.

### பூங்குழையிரங்கல்

(பூங்குழை-தலைவி.)

253. ஆடவர் நம்மினு மாடகஞ் சீரிதென் றுர்வமுற்றுத்
தேடவன் கானிடஞ் சென்றனர் நாமின்று செய்வதென்னே
மாடம்விண் டோய மதில்சூழ் பிரம்பையின் வாழுந்தொண்டை
நாடனென் னுநந்த ரங்கனெண் ணுரி னமைமறந்தே.

**குறிப்பு.**—ஆடகம் : பொன் ; வன் : வலிய ; விண் : வானம் ; எண் ணுர் : பகைவர் ; எண்ணுரில் : இல்-ஐந்தனுருபு, ஒப்புப்பொருள்; நமை-நம்மை.

### பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்

(கொடுஞ்சொற் சொல்லல்-இடித்துரைத்தல்.)

254. நங்கேள்வர் பொங்கு நிதிகொண்டு நம்மிடத் தன்புசெய்ய
வங்கே யகன்றவர் முன்னமுன் னுமலமரலென்
வெங்கோப வேழப் பிடர்மேல் வருரங்கன் வீற்றிருந்து
செங்கோல்செய்ம் மால்பிரம் பூரி னலர்விண் செறிந்திடவே.

**குறிப்பு.**—கேள்வர்-தலைவன் ; நிதி-செல்வம் ; முன்னம்-எண்ணம் ; உன்னுதல்-எண்ணுதல் ; அலமரல்-வருந்துதல் ; வேழம் : யானை ; பிடர் : கழுத்து ; அலர்-அலர்மொழி ; விண்-விண்ணுலகு ; 'தலைவன் சென்ற கருத்தறியாமல் வருந்துவது என்' என்றவாறு.

### தலைவி கொடுஞ்சொற் சொல்லல்

(இது வெளிப்படை.)

255. வலம் பெற்ற கொற்றப் பிரம்பூ ரரங்கன் வளம்பதியி
னிலம்பெற்ற செல்வ வளவய லூரன்றன் நீதிநன்றே
கலம்பெற் றிருதோண் மெலியக் குவளைக் கணம்பொழிந்து
புலம்புற்று நைந்துரு கிப்பட ரார்தரும் பூவையர்க்கே.

**குறிப்பு.**—வலம்-பலம் ; கொற்றம் : வெற்றி ; கலம்-அணி ; குவளைக் கண் அம்பொழிந்து : கண்களினின்று நீர் மல்கி ; அம்-நீர் ; குவளைக்கண்-உவமைத் தொகை ; புலம்பு : தனிமையால் வரும் வருத்தம் ; படர்-துன்பம் ; ஆர்தரும்-அனுபவிக் ம்.

### வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்

(வலித்தல்-வற்புறுத்திக் கூறல்.)

256. ஓங்கும் பிரம்பையி னாநந்த ரங்கனை னொன்னார்முறிய
வாங்குஞ் சிலைக்கணை யொத்தகண் ணோக்கிவல் லேயெய்துவார்
ஈங்கென் பருவர லெய்துவ தோபுக ழெய்திடுமப்
பாங்கொன் றியநற் பரிசறி யாமற் படருழந்தே.

**குறிப்பு.**—ஓங்கும் : புகழ்வளரும் ; ஒன்னார்-பகைவர் ; வாங்கும்-வளைக்கும். ' கணையொத்த கண் ' என்க ; நோக்கி-விளி ; வல்லே-விரைவில் ; பருவரல்-துன்பம் ; பாங்கு-இடம் , பான்மையுமாம் ; ஒன்றிய-சேர்ந்த ; பரிசு-விதம், பண்பு ; படர்-வருத்தம்.

### பருவங்கண்டு பெருமகள் புலம்பல்

(பருவம்-மீண்டு வருவதாகத் தலைவன் குறித்த கார் காலம்.)

257. கொன்றையம் பொற்கண்ணி கொள்ளவண் டானங் குருகிவர்ந்து
நின்றெழுந் தந்தரம் போர்க்கமெய் யெங்கு னிறைந்தபசும்
பொன்றயங் கப்புரி கார்வந் ததுபிரம் பூரரங்கன்
வென்றிசெய் குன்றர் பொற் றேர்வரக் கண்டில மெல்லியலே.

**குறிப்பு.**—கண்ணி-பூங்கொத்து ; வண்டானம்-ஒருவித நாரை ; குருகு-இன்னொருவித நாரை ; அந்தரம்-வானம் ; பொன்-தேமல் ; குன்றர்-தலைவர். அந்தரம் போர்க்கப்புரிகார், பொன் தயங்கப்புரி கார் என்று கூட்டுக.

### இகுளைவம் பென்றல்

(இகுளை-தோழி ; வம்பு-காலமில்லாத காலத்திற் பெய்யும் மழை.)

258. மோடிவிட் டோடும் புயலன்று கூந்தல்வெண் முல்லையல்ல
வூடி விடச்செய் முறுவல்தன் மேற்கவி யொன் றுரைக்கப்
பாடிவிட் டன்புசெய் ரங்கன் பிரம்பைப் பதியனையா
யாடிவிட் டாலறி யப்படுங் கார்மயி லாவணியே.

**குறிப்பு.**—மோடி-காடுகாள் ; காளிதெய்வம் ; பாலை நிலத்தினின்றும் ிரிகின்ற மேகங்களல்ல என்க. முறுவல்-புன்னகை ; மயிலாவு அணி-மயில் அகவும் வரிசை. ' ஆடிவட்டாவணி ' என்ற நயம் உற்று நோக்கற்பாலது. ' இது கார் காலத்து மேகம் அன்று காலமல்லாத கார் ' என்றவாறு.

### இறை மகள் மறுத்தல்

(தோழி கூறியதைத் தலைவி மறுத்துக் கூறல்.)

259. நற்பால் விரும்பும் பிரம்பூ ரரங்கனன் னுடர்சொன்ன
சொற்பாற் பிறழா தினியெய்து வாரெனச் சூழ்ந்துரையா
நிற்பாய் செருந்தி யொடுமுல்லை மல்லிகை நீண்மறுகின்
விற்பா ருரையும்பொய் யாமோ சொலாய்நம் வியனகர்க்கே.

**குறிப்பு.**—பால்-ஊழ் ; சொற்பால்-பால்-ஏழனுருபு ; நாடர்-தலைவர் ; சூழ்ந்து : கருதி ; மறுகு-வீதி ; ' தலைவர் சொன்ன சொல் தவறாமல் வருவர் என்று கருதி நீ இது வம்பு என்று கூறுகின்றாய் ' என்றனள் தலைவி.

" .............போனவர் வார்த்தையிற் பொய் மையொன்று
மில்லை யெனுங்கொடி யேயது போக விவையும்பொய்யோ
மல்லிகை முல்லை செருந்திவிற் பார்சொல்லும் வார்த்தைகளே ".

[கப். கோ. 243.]

### அவர் தூதாகி வந்தடைந்ததிப் பொழுதெனத் துணைவி சாற்றல்

(மேகம் தலைவருடைய தூதாகி வந்ததிக்காலத்தில் என்று தலைவிக்குப் பாங்கி கூறல். தூதுக்குரிய பொருள்களுள் மேகமும் ஒன்று என்பது ஈண்டு உணரற்பாலது.)

260. கார்காலம் வந்த தவர்வந் திலரென்று கண்ணிணைகள்
நீர்கால வாடித் தளருவ தென்கொல்தன் னேமிகொண்டு
பார்காத் தளிக்கும் பிரம்பூ ரரங்கன் பதியினிதோ
கூர்கால நாரை குருகால மேகங் குமுறியதே.

**குறிப்பு.**—' பார்காதலிக்கும் ' என்றும் பாடம். நேமி-சக்கிரம் ; கால-காலையுடைய ; ஆல-பறக்க ; தலைவர்தம் தூதாய் மேகம் வந்து குமுறியது குறிப்பானுணர்த்தப்பட்டது.

### பிணைவிழியாற்றல்

(பிணை : மான். பிணைவிழி-தலைவி; ஆறும் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை.)

261. உருகிய வன்பாற் குருகுந் துணையை யொருவவஞ்ச
வருபுய லெங்கும் பஃறுளி சிந்தி வருதலினுற்
றிருவியல் வீதிப் பிரம்பூ ரரங்கனைச் சேர்ந்தவற்போற்
பருவரல் தீர்ந்தன நெஞ்சே யவர்வரும் பான்மைகொண்டே.

**குறிப்பு** :—துணை-பேடை ; ஒருவ-நீங்க ; பஃறுளி-பலதுளி ; ஆய்தம் உயிர் போல் அலகுபெற்று நின்றது ; பருவரல்-துன்பம் ; கொண்டு : உட்கொண்டு.

### அவனவட்புலம்பல்

(தான் பிரிந்து சென்ற அவ்விடத்தில் தலைவியின் பிரிவாற்றாமல் தலைவன் புலம்பல்.)

262. கார்வந்த பூங்குழல் கைவளை சோரக் கரியவிழி
நீர்வந் தகங்கை நிறையக் கிடக்குமந் நேரிழைபாற்
போர்வந்த செங்கை யரங்கன் பிரம்பையிற் போந்தநெஞ்ச
மார்வந் தவரெனி னென்சொலு மோமுன்சென் றுயிழைக்கே.

**குறிப்பு.**—அகம்கை-அங்கை ; நேரிழை பாற்போந்த நெஞ்சம் வந்தவர் ஆர்எனின் என்சொல்லுமோ என்று கூட்டுக.

### பாகன்றன்னெடு சொலலல்

(மீண்டு தேரூர்ந்து வருந்தலைவன் பாகனுக்குச் சொல்லுதல்.)

263. சிலவாய் முடிந்த குழலாணம் வார்த்தைத் திறத்தின் மெய்யொன்
றிலவாய தென்று புலர்ந்தவெல் லாஞ்சொல்ல வின்றமிழுக்
குலவாக் கிழியருள் ரங்கன் பிரம்பை யொளிகொள்வெற்பில்
வலவா வயனென் மனம்போற் பரிக்கால் வகுத்திலனே.

**குறிப்பு.**—'குழலாள் நம் வார்த்தைத் திறத்தில் மெய் ஒன்று இல ஆயது' என்க; தமிழ்: ஆகுபெயரால் தமிழ்ப்புலவரையும் குறிக்கும்; மெய்யொன்று இல வாயது: பொய்யாயிற்று; பரிக்கால்: தேரிற்கட்டிய குதிரையின் கால்கள்; உலவாக்கிழி-குறையாத பணப்பை; வலவன்: தோப்பாகன்; அயன்-பிரமன்; தலைவன் தன் மனோவேகத்திற்கு நிகராகத் தேர் செல்லாமையைக் குறித்து வருந்தியது.

" . . . . . . . மனத்தையின்றுன்
கையாக அம்பரிக் காலா கவுமயன் கண்டிலனே "

[அம்பிகா. கோ. 320.]

### தலைமகன் மேகத்தோடு சொல்லல்

(இது வெளிப்படை.)

264. கெண்டையங் கண்கலுழ் கின்றதெண் ணீருங் கிழமையுற்ற
வண்டலை நீத்த வரிமணற் கூடலு மாழைநிறங்
கொண்டநன் மேனியும் ரங்கன் பிரம்பையங் கோநகரிற்
கண்டயர் கொம்பினுக் கென்சொல்ல வோசெல்லுங் காரினமே.

**குறிப்பு.**—கெண்டை-மீன்; கிழமை-உரிமை; வண்டல்-விளையாட்டு; மாழை-பொன்; கொம்பு: தலைவி, உவம ஆகுபெயர். நீரும் கூடலும் மேனியுங்கண்டு என் சொல்லவோ செல்லும் என்று கூட்டுக.

" கிளைத்துக் கிடந்தெனைக் கேட்குந் தொறுங்கலுழ் கெண்டையுமுன்
வளைத்துக் கிடந்த வரிமணற் கூடலும் வண்ணமெல்லாம்
விளைத்துக் கிடந்த பசலையு மாயுள்ளம் விம்மிவிம்மி
யிளைத்துக் கிடந்தவர்க் கென்சொல மேகங்கண் முன்செல்வதே ".

[அம்பிகா. கோ. 322.]

### பாங்கி வலம்புரி கேட்டவன் வரவறிவுறுத்தல்

(தன் வரவைத் தலைவிக் கறிவுறுத்தற்குத் தலைவன் ஊதிய சங்க முழக்கத்தைப் பாங்கி கேட்டு அவன் வரவைத் தலைவிக்கு அறிவுறுத்தல்.)

265. சந்தத மைந்தியல் பாராட்டி மும்மைத் தமிழ்வளர்க்கு
மிந்திரன் செல்வப் பிரம்பூ ரரங்கன்வெற் பேந்திழையா
யந்தளிர் மேனி புலரா தணிவளை யங்கைகொள்ள
வந்தது கொண்கர்பொற் றேரெனக் கூறும் வலம்புரியே.

**குறிப்பு.**—ஐந்து இயல்-ஐந்து இலக்கணம்; எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன; மும்மைத் தமிழ்-இயல், இசை, நாடகம் என்பன; அலராது-வாடாமல்; கொண்கர்- தலைவர்.

" பொருகின்ற செங்கயல் போல்விழி யாய்பண்டு போயநின்கைக்
குருகின்று வந்திறை கொள்வது காண்கநங் கொண்கர் [பொற்றேர்
தருகின்ற சங்கந் தருவன்ன வாணன் றமிழ்த் தஞ்சைவாய்
வருகின்ற தென்றுமுன் னேயோகை கூறும் வலம்புரியே."

[தஞ்சை. கோ. 276.]

**வலம்புரி கிழத்தி வாழ்த்தல்**

(தலைவனூதிய சங்கைத் தலைவி வாழ்த்துதல்.)

266. மெய்வைத்த கீர்த்தி யரங்கன் பிரம்பை வியன்பதிக்கண்
ணெய்வைத்த வேலர்முன் னூலும் வலம்புரி நீணிலமே
லைவர்க்கும் வெற்றி தரச்சம ரத்திடை யார்ப்பவன்னுண்
மைவைத்த மேனியின் வாய்வைத்த சங்கென வாழியவே.

**குறிப்பு.**—மெய்-உண்மை; நெய்-கொழுப்பு; ஆலும்-சப்திக்கும்; ஐவர்-பாண்டவர்; சமரம்-பாரதப் போர்; மைவைத்தமேனியன்-கண்ணன்; சங்கு-பாஞ்ச சன்னியம்.

**தலைமகன் வந்துழி பாங்கி நினைத்தமை வினுதல்**

(தலைவன் வந்தபோது, பிரிந்திருந்த காலத்து நீர் தலைவியை நினைத்த துண்டோவெனப் பாங்கி யவனை வினுதல்.)

267. வெள்ளக் கடற்பொலி செல்வம் படைத்த விஜயன்மிக்க
வள்ளற் பழனப் பிரம்பூ ரரங்க னணிகொள் வெற்பின்
வள்ளைக் குழையூ டுருவிக் குமிழ்மேன் மறியுங்கண்ணுட்
குள்ளக் கமல மிடந்தந்த தோவொரு நாளண்ணலே.

**குறிப்பு.**—வெள்ளம்-நீர்; அள்ளல்-சேறு; விஜயன்-வஜாரத விஜயன்; பாட்டுடைத் தலைவற்கு இஃதோர் பட்டப் பெயர்; செய். 233 காண்க. வள்ளை காதிற்கும், குமிழ் நாசிக்கும் உவமை.

" ..............மடநோக்கிவண் மேவமனத்
திடந்தந் தறிவதுண் டோவொரு நாளெம் மிறையவனே."

(அம்பிகா. கோ. 324.)

**தலைமகனினைத்தமை செப்பல்**

(தலைவியை நினைத்ததைத் தலைமகன் கூறல்.)

268. மீன்சென்ற கண்ணியர் வேடிகை யெட்டும் விளங்கியுயர்
வான்சென்ற கீர்த்திப் பிரம்பைரங் கேந்த்ரன் வரைமயிலே
யான்சென்ற சென்ற விடமெங்கு முங்க ளிலிஞ்சியுமம்
மான்சென்ற மாதவிப் பந்தருஞ் சேர்ந்த மணற்குன்றுமே.

**குறிப்பு.**—வேள்-காமன். வான் ; விண்ணுலகு. வான் சென்ற கீர்த்தி ; இலக்கணை வழக்கு. இலஞ்சி-பொய்கை.

"கோவையை வென்றசெவ் வாய்க்கொடியே பொருள் கூட்ட [வென்னுந்
தேவையை மேற்கொண்டு தீவினை யேன்சென்ற சென்றவிடம்
யாவையு முங்க ளிளமரக் காவு மிழைத்தகுன்றும்
பாவையு நீயும் பரிமளச் சோலையும் பண்ணையுமே."
[அம்பிகா. கோ. 325.]

**தலைமகளை யாற்றுவித்திருந்த வருமை பாங்கி கூறல்**

(இது வெளிப்படை.)

269. சந்தார் வனமுலைத் தையலை வாசமென் ருழ்குழலைச்
சிந்தா குலஞ்செல்ல மாற்றிய தெட்டுத் திசைதுதிக்கு
மந்தார மொத்தருள் ரங்கன் பிரம்பை வரைச்சிலம்பா
முந்தார்வ முற்றசந் தாடவி காட்டியு முன்னியுமே.

**குறிப்பு.**—சந்து-சந்தனம் ; தையல்-பெண் ; தலைவி. மந்தாரம்-ஐந் தருவில் ஒன்று. ஆர்வம்—ஆசை. சந்தாடவி-சந்தனச் சோலை. முன்னுதல்-நினைத்தல்.

**வரை விடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் முற்றும்.**

**முதலாவது களவியல் முற்றிற்று.**

## II. வரைவியல்

### 19. வரைவு மலிதல்

[மணத்தைப்பற்றிய செய்திகளின் மிகுதி.]

**காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக் குணர்த்தல்**

[முலைவிலை—பரிசம். தலைவன் பரிசம் விடுத்தமையைத் தலைவிக்குப் பாங்கி யறிவித்தல்.]

270. கருங்கட லுண்டெழு கொண்டலைப் போற்கந கஞ்சொரியும்
பெருங்கொடை யண்ணலென் னுநந்த ரங்கன் பிரம்பை [யொப்பாய்
வருங்கரி யைப்புறங் கொண்டுயிர் தந்தார் வரவிடுத்தா
ரிருங்கடைக் கண்ணிது காண்வந்து தோன்று மிருநிதியே.

**குறிப்பு.**—கொண்டல் - மேகம் ; புஷ்கலாவர்த்தம் எனினுமாம் ; கரி-யானை ; கநகம் ; பொன். அவனிடம் தாமும் கொடையேற்ற உரிமையால் 'என்' என்றார். புறங்கொண்டு : வென்று. தந்தார் ; விலையாலணையும் பெயர். கடை : கடைவாயில்.

காதலி நற்றாயுள்ள மகிழ்ச்சி யுள்ளல்

(நற்றாயின் உள்ள மகிழ்ச்சியைத் தலைவி நினைத்தல்.)

271. ஆயும் புகழ்த்தமிழ் ரங்கன் பிரம்பை யனையநல்லா
யேயும் பிடியைக் களிற்றியானை யின்புற் றிடமிசைவிண்
டோயும் பெருவரை நாடர் விடுத்த சுடர்நிதியை
யேயு மணவணி யென்றுகண் டின்புறு மேந்திழையே.

**குறிப்பு.**—இன்புற்றிட - மகிழ்வுற ; மிசை - உண்பிக்கும் ; மணவணி : மணக்கலம் ஏந்திழை - நற்றாய் ; பொருந்தும் பிடியை மகிழ்வுறக் களிற்றி யானையுண்பிக்கும் மலை என்றதால் தலைவன் தலைவியை மணந்து மகிழ்வுற வளிப்பன் என்பது பெறப்பட்டது. ஈற்றடிக்கு " நயமாமணவணி கண்டியாயு மின்புறு நம் மினுமே." (தஞ்சை. கோ. 282) என்பது காண்க.

**பாங்கிதமர்வரை வெதிர்ந்தமை காதலிக்குரைத்தல்**

[தலைமகன் வரைதலைத்தமர் ஏற்றுக்கொண்டமையைப் பாங்கி தலைமகட்குக் கூறல்.]

272. அம்பல்கொள் ளூரு மவன்றிற மாயின தையருக்குந்
தம்பெரு மைக்கும் பெருமையென் றேதமர் தாமெதிர்ந்தார்
கம்புகள் செங்கை யரங்கன் பிரம்பையர் காதலிக்கு
மிம்பரி னும்பர் விழாப்போன் றருஞ்சிறப் பெய்தியதே.

**குறிப்பு.**—அம்பல் - சொல் நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்வது. 218-ம் செய்யுள் காண்க. ஐயர் - தலைவர் ; மணம் பேசவிடுத்த பெரியோர்.

எதிர்ந்தார் - எதிர்கொண்டார். கம்பு - சங்கு. உகள் - புரள். இம்பர் - இவ்வுலகம். உம்பர் - விண்ணுலகு. விழா - திருவிழா.

**தலைமக ளுவகையாற்று துளத்தொடு கிளத்தல்**

[அதனைக் கேட்ட தலைவி மகிழ்ச்சியினையுள்ளடக்க
முடியாமல் நெஞ்சொடு கூறல்.]

273. வருந்து நெறியுங் குறியிடை யீடும் வரையரையர்
பொருந்த வெடுத்த பெருவெறி யாட்டும் புகுந்துபிறர்
திருந்தும் வரைவுந் தவிரநெஞ் சேரங்கன் சீர்வளர
விருந்தன்பு கூர்பிரம் பூர்முற்று மங்கல மெய்தியதே.

**குறிப்பு.**—நெறி - வழி ; இடையீடு - தடை ; வரையரையர் - குன்றத் தலைவர். வரைவு - மணம் பேசுதல்.

" இன்று நெறியுங் குறியிடை யீடு மிலங்கிழையார்
பின்று விழைக்கும் பெருவெறி யாட்டும் பிறர்வரைவு
நின்று குலமுந் தவிரநெஞ் சேயின்று நின்னுயிரை
யன்னார் மணிமுர சார்க்கின்ற தான மருநகர்க்கே. "

[அம்பிகா. கோ. 333.]

**தலைவனைப் பாங்கி வாழ்த்தல்**

(இது வெளிப்படை.)

274. முப்போது மாலடி வந்திக்குஞ் செல்வன் முழங்குபுக
ழெப்போதுந் தேடும் பிரம்பைரங் கேந்த்ர னெழில்செய் [வெற்பா
கைப்போது கொண்ட தழைவாட்ட நீங்கக் கவலையற
விப்போது மாலுந் திருவுமொப் பாக விலங்குகவே.

**குறிப்பு.**—மால் - திருமால் ; வந்திக்கும் - வணங்கும் ; திரு-இலக்குமி ; ஒப்பாக - ஒப்பாக நீங்களிருக்க ; நாம் - உங்களைக் கண்டயாம். இலங்குக : விளங்குக.

" ..............மனக் கோட்டமுறின்
வண்டணி பைந்தழை வாட்டமுங் கண்டகண் மாலுமந்த
விண்டலர் தாமரைத் தேவியும் போலிங்கு மேவியது
கண்டனம்...................... "

[அப்பிகா. கோ. 334.]

**தலைவி மணம் பொருட்டாக அணங்கைப்பராநிலை காட்டல்**

[மணத்தின் பொருட்டுத் தெய்வத்தைத் தலைவி வழிபடும் நிலையைத்
தலைவனுக்குத் தோழி காட்டுதல்.]

275. அரிவையர் கொங்கைப் பொருப்புற்ற திண்புய னம்புயன்செய்
தெரிதமி ழாநந்த ரங்கன் பிரம்பைச் சிறப்பையுற்ற
பெருவரை யண்ணன் மணம் பொருட்டாகப் பிறைநுதலாள்
பரிவொடுந் தான்சென் றணங்கைப் பராநிலை பார்த்தருளே.

குறிப்பு.—அரிவையர் - வள்ளிதேவயானையார் ; அம்புயன் - அம்புஜன் ; குமாரக் கடவுள் (கங்கை நீரிற்றோன்றியோனாதலின்). பராநிலை - வணங்கு நிலை ; அண்ணல் - அண்மை விளி.

" கண்கமழ் சார லணங்கைப் பராநிலை கண்டருளே. "

(அம்பிகா. கோ. 335.]

**கண்டோன் மகிழ்வு**

(வணங்கும் நிலையைக் கண்டதலைவன் மகிழ்ச்சியடைதல்.)

276. உருகிய செம்பொற் பிதிர்வெனுங் காந்தளொண் போதுமுடி
செருகிய சாரற் சிலம்பிற் கடவுளைத் தேமலர்தூய்ப்
பெருகிய காதல்செய் யாநந்த ரங்கன் பிரம்பையொப்பார்
முருகிய லுந்திறங் காணெஞ்ச மேயன்பு முன்புகொண்டே.

குறிப்பு.—பிதிர்வு - பொடி ; காந்தள் : முருகனுக்கு உரிய அடையாளப் பூ. தூய் ; தூவி. கடவுள் - முருகன் ; ஒப்பார் - தலைவி ; முருகியலுந் திறம் - முருகனை வழிபடும் நிலை.

வரைவு மலிதல் முற்றும்.

## 20. அறத்தொடு நிற்றல்

[அறத்தொடு நிற்றல் - உண்மை கூறுதல் ; உண்மை கூறுதலேயற மாகலின் இஃதிப் பெயர் பெற்றது. அறம் என்பது தக்கது ; தக்கதனைச் சொல்லி நிற்றல் ; அல்லதூஉம், பெண்டிர்க்கு அறமென்பது கற்பு ; கற் பின்றலை நிற்றல் என்பதுமாம்.

(இறை. அகப். 29)].

**கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக் கலுழ்தற் காரணங் கூறல்**

(கை – செய்கை ; கையறுதல் – செயலற்று நிற்றல் ; கலுழ்தல் – கலங்கி யழுதல் ; தலைவியை யாற்றிச் செயலற்ற தோழி அவள் கண்ணீரைத் துடைத்தபொழுது தான் கலங்கி யழுதற்குக் காரணத்தைத் தலைவி பாங்கிக்குக் கூறுதல்.)

277. அன்று ணமக்குப் பரிவான்மை யூட்டிய வங்கையுற்ற
மின்னுர் சுடர்த்தொடி சோரவக் காந்தனை மேவிக்கண்ட
தென்னல் விளைந்த தெனக்கண் கலுழ்கின்ற திந்திரன்போல்
மன்னுண்மை பெற்ற பிரம்பூ ரரங்கன் வரைமயிலே.

குறிப்பு.—பரிவு – அன்பு ; மை – அஞ்சனம் ; அங்கை – அகம்கை ; " அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும் " (நன். 222.) என்பது விதி. காந்தன் ; தலைவன். தொடி ; வளையல்.

" பண்டு நமக்குப் பிரிந்துமை யூட்டிய பங்கயக்கை
யொண்டொடி சோர வுயங்குத ளேக்கி யுயங்குமது
தண்டலை தன்னிற் றலைப்பட்ட நாளிற் றலைவனைநாங்
கண்டது கொண்டல்ல வோவென்று போலுங் கலுழ்கின்றதே "

(அம்பிகா. கோ. 338.)

இச் செய்யுள் தற்குறிப்பேற்றவணி.

தலைவன் றெய்வங்கரட்டித் தெளிப்பத் தெளிந்தமை யெய்தக்கூறல்.

(தலைவன் தெளியச் செய்யத்தான் அதனை மெய்யென்றுதுணிந்தமையைத் தலைவி பாங்கிக்கு உளங்கொளக்கூறல்.)

278. வாட்டங்கு செங்கைப் பிரம்பை வரோதயன் வண்புலவ
ரீட்டம் விரும்பு மரங்கேந்த்ரன் முன்னீ ரிருந்துறைவாய்க்
கோட்டந் தராத கடற்றெய்வ முண்டெனக் கொண்டதுள்ள
நாட்டங் கலுழ்வதென் னேயறி யேன்பெண்க ணாயகமே.

**குறிப்பு.**—வாட்டங்கு – வாள்தங்கு ; ஈட்டம் – கூட்டம் ; முன்னீர்–கடல் ; கோட்டம் தராத – நடுவு நிலைமை பொருந்திய. நாட்டம் ; கண். பெண்கள் நாயகம் – தோழி.

### தலைவனிகந்தமை கூறல்

(தலைவன் பிரிந்தமையைத் தலைவி தோழிக்குக் கூறல்.)

279. இருவரு மன்பிற் கலந்திட்ட ஞான்றிடை நின்றவர்க
ளொருவரு மீனக் கொலைசூழ் குருகொன் றுறங்கிநிற்க
மருவுதல் செய்தவர் பொய்த்தாலென் செய்வது மாற்றலரைப்
பொருதிகல் வென்ற வரக்கன் பிரம்பையம் பூந்துறைக்கே.

**குறிப்பு.**—ஞான்று - தினம் ; குருகு – கொக்கு ; மருவுதல்செய்தவர்: தலைவர்; இகல் – பகைமை ; " ஒருவரு மீனக்கொலைசூழ் குரு கொன்று கொன்று உறங்கி நிற்க, மருவுதல் – செய்தவர் பொய்த்தாலென் செய்வது" என்றதன் கண்ணுள்ள நயம் உய்த்து நோக்கற் பாலது. 'ஈனக்கொலை' என்றே 'மீனக் கொலை' என்றே கொள்க.

" யாரு மில்லைத் தானே கள்வன்
றானவன் பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் காஅல
வொழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே. " (குறுந். 25)

### பாங்கியியற் பழித்துரைத்துழி தலைவியியற்பட மொழிதல்

(தலைவன் குணங்களைப் பாங்கி பழித்தபொழுது அவன் நற்குண முடையான் என்பது தோன்றத் தலைவி கூறுதல்.)

280. கன்னியம் புன்னைப் புதுமல ருள்ளங் கவர்ந்தளிக்க
நன்னர்செய் தண்டுறைச் சேர்ப்பன் கொடுமை நயந்திடினு
மென்னுயிர் காப்பவ னேயவ னேங்கு மெழிற்பிரம்பை
மன்னவன் கீர்த்தி வரரங்கன் றெண்கடல் வாயன்னமே.

**றிப்பு.**—கன்னி – இளமை ; நன்னர் – நன்மை.

“ அடும்ப னெடுங்கொடி யுள்புதைந் தொளிப்ப
வெண்மணல் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடிய னுயினு மாக
வவனே தோழியென் னுயிர்கா வலனே ” (ஐங்*)

**தெய்வம்பொறைகொளச் செல்குவம் என்றல்**

(தலைவன் சூளுறவு தவறியதைப் பொறுக்கும்படி கடவுளை வேண்டிக் கொளற்குச் செல்வோம் என்று தலைவி பாங்கிக்குக் கூறல்.)

281. ஏற்றம் படைத்த பிரம்பூ ரரங்க னிருந்துறைவர்
மாற்றம் துறந்து மறந்தன ரென்று மறிகடல்வா
யூற்றம் படைத்த தெய்வத்தினுக்குப் பலி யூட்டியெம்பாற்
சீற்றம் படாதி யெனநாம் பரவுதல் செய்துமின்றே.

**குறிப்பு.**—ஏற்றம் – உயர்வு ; மாற்றம் – சொல் ; ஊற்றம் – வலிமை ; ‘ கோதம் படாதி ’ (தஞ்சை. கோ. 294) என்னும் சொற்போக்குக் காண்க.

**இல்வயிற் செறித்தமை சொல்லல்**

(வெளியே செல்லாதபடி வீட்டின் கண் தன்னைத்தாய் அடக்கி வைத்தமையைத் தலைவி பாங்கிக்கு கூறுதல்.)

282. வாளா வெ துண்டு மணிவண்ட லாட வளரிளவேய்த்
தோளா யினிப்புறஞ் செல்லலென் றுளன்னை சுந்தரஞ்சேர்
வேளா மெனும்பிரம் பூர்வா ரங்கன் விளங்குவெற்பிற்
கேளார் தருமெழின் மேனியும் பார்த்துநங் கேண்மைவிட்டே.

**குறிப்பு.**—வாளா – பயனின்றி ; வேய் – மூங்கில் ; வேள் – காமன். கேளார் – தலைவர் ; உரிமை யுடையவர் என்னும் பொருட்டு. கேளார் தரும் எழில் : தேமல். கேண்மை : அன்பு.

“ கொன்னே வெகுண்டு மணிவண்ட லாடக் கொடிமருங்குற்
பொன்னே யினிப்புறம் போகலென் றுளன்னை ”

(அம்பிகா. கோ. 344.)

**செவிலி கனையிருள் அவன் வரக் கண்டமை கூறல்**

(கனையிருள் – மிகுந்த இருளில் ; செவிலி கண்டமையைத் தலைவி பாங்கிக்குக் கூறுதல்.)

283. யாமத் திடைநம் முயரிற் சிறந்த விறைவர் நம்பாற்
காமுற்று வந்துமௌ வற்பந்தர் நிற்கக் கழுதெனயா
யேமுற்று நின்றஞ்சி னேனென்று கூறின ளெய்துமுல்லைத்
தாமப் புயன்வர ரங்கன் பிரம்பைத் தளிரியலே.

**குறிப்பு.**—யாமம் – நல்லிருள் ; கழுது – பேய் ; யாய் – என்னுடைய தாய். இச்சொல் தன்மையோடு ஒட்டும் என்பதை “ யாயும் ஞாயும் யாரா கியரோ ” என்னும் குறுந்தொகை (40) யால் அறிக. ஏமுற்று : துன்புற்று.

---

* இச் செய்யுள் தொல் பொருள் 111-ம் சூத்திரத்திற்கு நச் உரைத்த மேற்கோள்.

"பேயொன்று கண்டஞ் சினேனென்று கூறினன் பெய்வளையே"
(அம்பிகா. கோ. 345.)

எறிவளை வேற்றுமைக் கேது வினவினும்
வெறிவிலக்கிய வழி வினவினும் பாங்கி
பூவேபுனலே களிறே யென்றிவை யேதுவாகத்
தலைப்பாடியம்பல்.

(செவிலி தலைமகள் வேற்றுமைக்குக் காரணம் கேட்பினுந்தான் வெறி விலக்கிய வழிக்காரணம் கேட்பினும், பூவும் புனலும் களிறுமாகிய இவை காரணமாகப் புணர்ச்சியினை அறிவித்தலாகிய பாங்கி கூற்று.)

284. தருவாருஞ் செங்கைப் பிரம்பூ ரரங்கன் றடஞ்சிலம்பின்
மருவார் குழலிக் கொருவன்றன் மாலை வழங்கியும்பூந்
திருவார் கயத்தின மிழ்ந்தாமற் றிண்புயஞ் சேர்த்தெடுத்தும்
பொருமாகரி மேல்வரக் காத்தது மூண்டுன் பூவையையே.

**குறிப்பு.**—தரு – கற்பகம்; கயம் – நீர்நிலை; கரி – யானை; கயத்தின் மூழ்காமற்பொருட்டுத் தலைவன் தலைவியைக் காத்த செய்தி செய்யுள் 166லும் கூறப்பட்டது. மாலை வழங்கியது பூத்தரு புணர்ச்சி; கயத்தின் அமிழ்ந்தா மற்றிண் புயஞ்சேர்த்தெடுத்தது புனல்தரு புணர்ச்சி; கரிமேல் வரக்காத்தது களிறுதரு புணர்ச்சி.

மின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினவுழி
முன்னிலை மொழியாற் செவிலி மொழிதல்.

(தலை மகள் வேறுபாடு கண்டு நற்றாய்தன்னை வினவிய விடத்து நேர்முகமாகச் செவிலி கூறும் கூற்று.)

285. பேதைப் பருவத் திவளையென் சொல்வன் பிரம்பையர் கோன்
மாதர்க் கிதஞ்செய் வரரங்கன் றுங்க வரையிடத்திற்
சூதைப் பொருமுலை தோன்று முன்னேமனத் துட்சிறந்த
காதற் கிடமாய் முதுக்குறைந்தாள் மலர்க் காரிகையே.

**குறிப்பு:**—இதம் – நன்மை; சூது – வட்டு; முதுக்குறைந்தாள் - பேரறிவுடையளானாள். "முதுக்குறைந்தாள் நறைவார் குழலே" (செய். 66.)

**அறத்தொடு நிற்றல் முற்றும்.**

## 21. உடன்போக்கு.

(தம்மவரைப் பிரிந்து தலைவி தலைவனுடன் செல்லுதல்.)

**பாங்கிதலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்**

('எத்துணை முலைவிலை தரினும் எம்மவர் இவளை வரைதற்கு உடன்படார்; ஆதலால் இவளை உடன்கொண்டு செல்க' எனப்பாங்கி தலைவனுக்கு அறிவித்தல்.)

286. கைம்மா றுளத்திற் கணிக்கா தருள்புரி கன்னன்கற்றோர்
தம்மால் விரும்பும் பிரம்பூ ரரங்கன் றடஞ்சிலம்பா
விம்மா வெழுந்தன பாரத்தி னுக்கு விலையெனவே
யிம்மா வுலகு மெதிரா ருடன்கொண் டெழுந்தருளே.

**குறிப்பு.** – கைம்மாறு - பிரதியுபகாரம் ; கணித்தல் - நினைத்தல் ; விம்மா - விம்மி ; உடன் பாட்டு வினையெச்சம் - எழும்தன பாரத்தினுக்கு; விலை : முலைவிலை; பரிசம் - எதிரார் : நிகராக உடன்படார். இச்செய்யுள் முதலடியை இந்நூல் 360-ம் செய்யுள் முதலடியோடு ஒப்பிடுக.

### ஆங்கவன் மறுத்தல்.

(தலைவி மென்மைத் தன்மையுடையள் என்று கூறி அவளை யுடன் கொண்டு செல்லுதலைத் தலைவன் மறுத்துக் கூறல்.)

**287.** சிற்றிடை கொங்கை சிலம்பையொப் பாகுமஞ் சீறடிமென்
பொற்றளிர் போலு மரம்பொருங் கல்லதர் போரைவென்று
வெற்றி கொள் ரங்கன் பிரம்பூ ரனையநின் மெல்லியரு
னுற்றிடு மாறென்கொல் சேண்படு மெம்மூர்க் குடனெழுந்தே.

**குறிப்பு.**—சிலம்பு - மலை ; சிற்றிடை - தலைவி, அண்மைவிளி - சிற்றிடைக் கொங்கை என்னும் பாடத்திற்கு 'சிறிதளவே இடை வெளியை யுடைய கொங்கை' என்று பொருளுரைத்துக் கொள்க. 'கல்லதர் அரம் பொரும்' என்க. கல்லதர் - கற்கள் மிகுந்த பாலைவழி. மெல்லியல் : தலைவி. சேண் : சேய்மை 'உடன்எழுந்து உற்றிடுமாறுஎன் கொல்' என்க.

### பாங்கி தலை மகளையுடன் படுத்தல்

(அங்ஙனம் போதற்குப் பாங்கி தலைவனை யுடன்படச் செய்தல்.)

**288.** தாங்காத வெப்பந் தரும்பாலை யும்வெயி ருழ்சுரமும்
நீங்காத காத லொடுமுன்னே டேகிலென் னேரிழைக்குப்
பாங்கார் பிரம்பை யரங்கன் புதிய பதியினிற்செய்
பூங்காவுந் தத்தையுண் டாடிய சோலையும் பொய்கையுமே.

**குறிப்பு.**—சுரம் - முரம்பு ; காதல் - அன்பு ; பாங்கு - அழகு ; புதியபதி ; புதுச்சேரி. பூங்கா - மலர் வனம் ; தத்தை - கிளி ; பாட்டுடைத் தலைவன் 'பிரம்பூ' ரிலிருந்து 'புதிய பதி'க்கு வந்தவனுதலின் 'பிரம்பை யரங்கன் புதிய பதியினிற் செய்............' என்றுர்.

### தலைவன் போக்குடன் படுதல்

(அங்ஙனம் தலைவியை உடன் அழைத்துச் செல்லுதற்குத் தலைவன் உடன்படுதல்.)

**289.** செலலைவெல் லுங்கொடை யான்பிரம் பூரன் சிறந்தகல்விச்
சொல்லைமெ ல்லுந்துரை ரங்கன்பொன் னேங்கலிற் சூழ்ந்துபட
ரல்லைவெல் லுங்குழ லீரிங் கியைந்திடு மன்புகொண்டே
மெல்லமெ ல்லக்கொண்டு சேறுமின் றேயென் வியன்பதிக்கே.

**குறிப்பு.**—செல் - மேகம் ; மெல்லுதல - ருசி பார்த்து அனுபவித்தல், பேசுதலுமாம். படர்தல் - பரவுதல் ; அல் - இருள். சேறும் ; செல்லுதும். செல்லுவோம் ; வியன்பதி - விசாலமான நகரம்.

" இன்னுத கானு மினிதென்று நீரிங் கியைந்தவன்பு
மந்நா ளளித்த வணங்குமுண் டேயென தாவியன்ன்
மின்னூர் திருந்திழை மெய்வருந் தாவகை மெல்லமெல்லப்
பன்னுள் படவு முடன்கொண்டு சேறும் பணிமொழியே "

[அம்பிகா. கோ. **365.**]

### பாங்கி தலைவிக்குடன் போக்குணர்த்தல்

(உடன் போக்கிற்குத் தலைவன் உடன்பட்டமையைப் பாங்கி தலைவிக்குக் கூறுதல்.)

**290.** எழுமையு மெய்த வுரிமையுற் ரோர்நின் னிருங்குழற்கு
விழுமிய காந்த ளொடுஞ்செங் கழுநீர் வியந்தணியக்
கெழுமையுற் றுர்பிரம் பூராங் கேந்திரன் கேளிரைப்போ
லுழுவலன் பாற்புணர்ந் தொன்ருய்க் கலந்தரு ளுத்தமரே

**குறிப்பு.**—எழுமை - எழு பிறப்பு ; கெழுமையுற்றுர் - மனம் பொருந்தி யுள்ளார். உழுவலன்பு - பேரன்பு. ' உத்தமராகிய உற்றுர் ' எனக் கூட்டுக. ' காந்தளொடு கழுநீர் கலந்து அணிய ' என்றதனுல் திணை வேற்றுமை கூறி, உடன் போக்கினைப் குறிப்பித்தனள். காந்தள் குறிஞ் சிக்கும், கழுநீர் மருதத்திற்கும் உரியவை.

### தலைவி நாணழி பிரங்கல்

(அங்ஙனம் உடன் சென்ருல் தனது நாணமழியுமென்று தலைவியிரங்கல். அழிபு - அழிவு ; நாணழிபு : நாண் அழிதற்கு.)

**291.** திருநாண் மலரெனச் சேர்பிரம் பூரிற் சிறந்தரங்க
னிருதாள் பணியா திருந்தின்ப மெய்தி யிடாதவர்போன்
றருநா ணழிய நிறைகுறை யுந்திற மாயினதா
லொருநாளும் பெண்பிறப் போகோ கொடிதிங் குரைப்பதற்கே.

**குறிப்பு.**—திரு - இலக்குமி ; எழுவாய் - நாண்மலர்: அன்று மலர்ந்த பூ. என - என்று நினைத்து ; நாண் - நாணம். நிறை , பிறரறியாதடக்கி வைக்குங் குணம். " நிறையெனப்படுவது மறை பிறர் அறியாமை " (**கலி. 133**) என்ருர் பிறரும்.

" துறவாத நாணந் துறப்பது வேண்டலிற் றெல்லுலகிற்
பிறவா தொழிகைநன் றேயொரு காலமும் பெண்பிறப்பே "

[தஞ்சை. கோ. 310.]

### கற்புமேம்பாடு பூண் முலைப் பாங்கி புகறல்

(நாணினுங்கற்புச் சிறந்த தென்பதைத் தலைவிக்குப் பாங்கி கூறல்.)

**292.** அன்னையைப் பார்க்கச் சிறந்தது நாணது தானுமன்பா
முன்னைய கற்பிற்குப் பின்னைய தாதன் முறைமையன்றே
பொன்னைய முற்ற பிரம்பூ ரரங்கன் பொருப்பிடத்தி
னென்னைய முற்றிங் கிருத்தல்பைந் தோகை யிளமயிலே.

குறிப்பு.—அன்பாம் - அன்பு பொருந்திய ; முன்னைய - முதன்மையான. பொன் - இலக்குமி ; நயம் ; விருப்பம் ; ஐயம் - சந்தேகம்.

" தாயிற் சிறந்தன்று நாண்டைய லாருக்கந் நாண்டகைசால்
வேயிற் சிறந்தமென் றேளிதிண் கற்பின் விழுமிதன்று "
[திருச்சிற். கோ. 204.]

" உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று. "
[தொல் பொருள் 113.]

### தலைவி யொருப்பட்டெழுதல்

(தலைவனுடன் செல்லுதற்குத் தலைவி யுடன்பட்டெழுதல்.)

293. என்னொடு மன்னி யிரங்கன் பிரம்பை யிடம்வளர்ந்த
வந்நெடு நாண்மங் கலந்தான் பரிப்ப தணித்தெனத்தான்
பின்னிடக் கற்பெனுங் கோல்கொண் டிழுக்கவிப் பார்பிறந்த
நன்னரிவ் வாறு விளைந்ததென் றன்மிக நன்றுநன்றே.

குறிப்பு.—நாண் - நாணம் ; மங்கலம் - தாலி ; பரிப்பது - தரிப்பது ; அணித்து - சமீபம். நன்னர் - நன்மை ; இச் செய்யுள் தன்மை நவிற்சியணி.

### பாங்கி சுரத்தியல் புரைத்துழித் தலைமகள் சொல்லல்.

(சுரத்தினியல்பைப் பாங்கி யுரைத்த விடத்துத்தான் அதற்கஞ்சாமல் சுரஞ்செல்லத் துணிந்திருந்தவளுக்குத் தலைவி கூறுதல்.)

294. வேயினுஞ் சீரிய தோளியர் சூழ்மத வேள்விரும்புஞ்
சேயினு மிக்க திறலரங் கன்பிரம் பூரவர்தம்
வாயினுங் காவன் மனையினுங் கண்வள ராதுவைகுந்
தாயினு மிக்க கொடிதோ நெடிய தடஞ்சுரமே.

குறிப்பு.—வேய் - மூங்கில் ; மதவேள் - மன்மதன் ; விரும்பும் - விரும்பப்படும் ; அன்றி மதவேளும் விரும்பும் சேய் எனினுமாம் ; வாய் ; அலர்மொழி ; இன்-ஐந்தனுருபு உறழ்வுப் பொருள்.

### பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தல்

(கையடை - அடைக்கலம் ; தலைமகனிடம் தலைமகளை யடைக்கலமாகக் கொடுத்தல்.)

295. மன்னிய கீர்த்திப் பிரம்பூ ரரங்கன் வரைச் சிலம்பா
வின்னியல் கூர்பெண் ணரசிடத் துன்னரு ளென்பதுதான்
பின்னிடின் வேத நெறிதான் பிழைக்குமப் பெற்றியொன்றே
பொன்னகந் தேயுமன் றேமுற்றும் வற்றும் புணரியுமே.

குறிப்பு.—மன்னிய - நிலைபெற்ற ; பெண்ணரசு - தலைவி ; பின்னிடின்: குறையின் ; பெற்றி - தன்மை ; பொன்னகம் - பொன் நகம் ; மேரு. நகம் - மலை. புணரி - கடல்.

## பாங்கி வைகிருள் விடுத்தல்

(வைகிருள் - தங்குமிருள் ; பாங்கி நள்ளிருளில் தலைவியைத் தலைவனுடன் விடுத்தல்.)

296. மாராபி ராம னெனுந்துரை ரங்கன் வளங்கொள்பிரம்
பூரா ருரையு மயற்சே ரியுமன்னை யுட்புலம்பும்
பேரா குலமும் பழியுஞ் சிதையப் பெரும்புகழின்
சீராகவே சிலம் பாவிடை யாமத்திற் செல்லுகவே.

**குறிப்பு.**—மாரன் ; மன்மதன். அபி ; மிகுதியையும் மேன்மையையும் புலப்படுத்தும் ஓர் உபசர்க்கம். மார அபிரரமன் : மாராபிராமன், இது வட மொழி நெடிற் சந்தி. உரை : அலர். புலம்பு : தனிமைபற்றிவருவதோர் வருத்தம்-உட்புலம்பு : உள்ளத் தினுள்ளே படுகின்றவருத்தம் ; வெளியிட வொண்ணாத என்று குறிப்பித்தவாறு. சீர் ஆக : சிறப்புப் பொருந்த. இடை யாமம் : நள்ளிருள்.

" ஊருங் கலிகெழு சேரியுந் தாயரு முட்புலம்பித்
தேரும் பழிபுக ழாக்கிவந் தெய்துவை சேயனையாய் "
[அம்பிகா. கோ. 371.]

## தலைவியைத் தலைவன் சுரத்துய்த்தல்

(தலைவன் தலைவியைப் பாலை நிலத்து மெல்லக் கொண்டேகல்.)

297. மெல்லமெல் லப்பதம் பேர்த்தணி நூபுர மேற்செறித்தஞ்
சொல்லிகல் லத்த மிதுவுதுக் காணிக ளேன்றவெதிர்
மல்லர்செல் லப்பொரு மால்ரங்க பூபன் மகிழ்பிரம்பூ
ரல்லிபுல் லச்செறி பூங்குழை யாய மணிதந்ததே.

**குறிப்பு.**—பதம்-பாதம் ; நூபுரம்-சிலம்பு ; அஞ்சொல்லி-அழகிய சொல்லையுடைய தலைவி ; அண்மைவிளி: கல் அத்தம்-பரற்கற்களையுடைய. வழி ; 'அஞ்சொல்லி' போர்த்துச் செறிததுக்காண் எனக்காட்டுக. அல்லி ; அகவிதழ். ஆயம் : மகளிர் கூட்டம் ; அணிந்தது : நெருங்கியது ; தா: துணை வினை.

## தலைமகன் றலைமகளசைவறிந் திருத்தல்

(அசைவு-இளைப்பு ; தலைவன் தலைவியின் இளைப்பை யறிந்து ஓரிடத்தில் தங்கியிருத்தல்.)

298. வன்பரற் கல்லதர் மார்க்கத்தின் மெல்லடி வைத்துவைத்து
நன்பகல் வெம்மையி னுற்செல்லு மாறென்கொ னுருவந்தீங்
கன்பொடு மிந்த வகன்பொழில் வாய்வைகி யாங்கெய்துவாம்
பொன்புனை ரங்கன் பிரம்பூ ரனையமென் பூங்கொடியே.

**குறிப்பு.**—பரற்கல்-பருக்கைக்கல் ; வெம்மையினுல்-வெம்மையினில் ; உருபு மயக்கம். ஆறு-உபாயம் ; உவந்து-களித்து ; பொழில்-சோலை ; வாய் ஏழனுருபு ; வைகி-தங்கி ; வெயிலில் வாடுமாதலானும், இப்பொழுது பொழிலின்வாய்த்தங்குதலானும் 'பூங்கொடியே' என்ற பொருத்தம் காண்க.

### தலைமகன் றலைமகளை யுவந்தலர் சூட்டி யுண் மகிழ்ந்துரைத்தல்.

(அலர் சூட்டி-மலர்களைப்பறித்துச் சூட்டி ; உண்மகிழ்ந்து-மனங்களித்து.)

299. பன்மலர் கொண்டடி சூட்டற்கெய் தாநற் பதத்திவட்கியா
னன்மலர் சூட்டவு நண்ணிய தாற்றெண்டை நாட்டிற்கற்றோர்
சொன்மலர் சூட்டும் பிரம்பூர்த் துரையடுத் தோர்க்குநித்தம்
பொன்மல ரங்கை நிறையச் சொரிரங்கன் பூம்பொழிற்கே.

**குறிப்பு**.—எய்தா-கிடைத்தற்கரிய ; பொருந்தா என்றுமாம் ; பதம்-நிலைமை ; நண்ணியது-கிட்டிற்று ; நித்தம்-நாள் தோறும் ; அங்கை-அகம் கை.

"அடிமலர் போற்றவும் போற்றியன்பாலிவளாய்முடிக்கியான்
கடிமலர் சூட்டவுங் காட்டிய தால்"

[தஞ்சை. கோ. 318.]

### கண்டோரயிர்த்தல்

(சுரத்திடை அவ்விருவரையுங் கண்டோர் இவர் தேவரோ
மானிடரோ என்று சந்தேகித்தல்.)

300. காரொன்று மின்னவுங் கண்டறியாக் கடும் பாலைதனிற்
சீரொன்றி வைகலுஞ் செல்வார் பலருண்டு தென்பிரம்பை
யூரொன்று கீர்த்தி வரரங்க பூபதிக் கொப்பெனத்தான்
நேரொன்று மாலிந் திரையென வெய்து மிவரெவரே.

**குறிப்பு**.—கார்-மேகம் ; வைகலும்-தினமும்; பூபதி-மன்னன் ; நேரொன்றும் : நிகர்த்தலைப் பொருந்தும் ; மால்-திருமால் ; இந்திரை : இலக்குமி ஏகாரம் ஐயப்பொருட்டு ; கார் மின்னுதலே யில்லையெனில் பொழித சிறிதும் இல்லை என்று கொள்க.

"கருவார் புயலொன்றுங் கண்டறி யாதவிக் கானகத்தே."

[அம்பிகா. கோ. 377.]

### கண்டோர் காதலின் விலக்கல்

(இவர்களை வழியிற்பார்த்தோர், 'பொழுது போயிற்று, வழிச்
சேறற்க' என அன்புடன் விலக்குதல்.)

301. எம்மூ ரலதிலை யெற்படு கால மிதுவெதிர
நும்மூரி னுளைக்கு நல்விருந் தாகுவிர் நுண்ணறிவாற்
கம்மூர் பிறையணி பெம்மானைப் போற்றிசெய் கார்புலவர்
தம்மூ ரெனும்பிரம் பூர்வா ழரங்கன் றமிழ்நகர்க்கே.

**குறிப்பு**.—எற்படுகாலம்-அந்திப்பொழுது ; கம்-நீர்; கங்கை; கம் ஊர்பிறை-(இறைவன் முடிமீதிருத்தலால்) கங்கை மீது இவர்ந்துள்ள சந்திரன் ; பெம்மான்-சிவன் ; போற்றி செய்தல்-வணங்குதல் ; கார்-மேகம் ; ஆநந்தரங்கன் ; அரங்கனது ஊர் புலவர்க்கே உரித்தாயிற்று என்க.

" எம்மூ ரல்ல தூர்நணி யில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப
விளையண் மெல்லியண் மடந்தை
யரிய சேய பெருங்க லாறே. " *

**கண்டோர் தம்பதியணிமை சாற்றல்.**

**(ஊர் அருகில் உள்ளதென்பதை அவர்களுக்குக் கண்டோர் கூறல்.)**

**302.** கானங் கடந்துமுன் காணும் வரையுங் கடந்து சென்றால்
நரனங் கமழ்குழ லார்குடை வாவியும் ஞாங்கரெங்கும்
வானந் துலாவும் வயலும் பொதும்பரும் வாய்ந்திருக்கும்
ஞானந் திகழ்துரை ரங்கன் பிரம்பை நகரதுவே.

**குறிப்பு.**—கானம்-காடு. முன்-முன்னால்; வரை-மலை ; நானம்-கஸ்தூரி ; குடைதல்-ஆடுதல் ; ஞாங்கர்-பக்கம் ; வால்நந்து உலாவும்-வெள்ளிய சங்கு உலாவும். பொதும்பர்-சோலை.

**தலைவன்றன் பதியடைந்தமை தலைவிக் குணர்த்தல்.**

**(இது வெளிப்படை.)**

**303.** ஈங்கிவர் சோலை விராய்க்கடி வண்ட லிழைக்குமிட
மூங்கது தானு மொளிர்மாட கூட முயர்மரமேழ்
தாம்புழை காணவில் வாங்கிய மாலரங் கன்றண்டமிழ்ப்
பாங்குறு செல்வப் பிரம்பூ ரதுசொல்லும் பான்மையதே.

**குறிப்பு.**—இவர்-தலைவி ; மகளிருமாம். வண்டல் ; மகளிர் ஆடும் ஒரு விளையாட்டு ; உயர்மரம்-மாமரம் ; புழை-துவாரம் ; வாங்கிய-வளைத்த; மால்-இராமன்; பாங்கு பெருமை. சொல்லும்-சிறப்பித்துச் சொல்லும்.

**உடன் போக்கு முற்றும்.**

## 22. கற்பொடு புணர்ந்த கவ்வை

[கற்பு-ஈண்டுத்தலைவி தலைவனுடன் சென்ற செயல் மேனின்றது. கவ்வை-பலரறிசொல், தலைவி தலைவனுடன் சென்றதைப்பலரும் அறிதல்.]

**வினவிய பாங்கியினுணர்ந்த காலையினையலென் போர்க்
கெதிரழிந்து மொழிதல்.**

[தலைவியாண்டுப் போயினள் என்று வினவிய செவிலிக்குப் பாங்கி அவள் தலைவனுடன் போயினாளென்று கூற அதனைக் கேட்டவள் வருந்தக் கண்ட பலரும் வருந்தற்கவென்று அவளைத்தேற்றுழி அன்னாரை

* இச் செய்யுள் இறை. அகப். 23-ம் சூத்திர உரையினும், தொல், பொருள். அகத். 40-ம் சூத்திரத்தின் உரையில் அவ்வுரையாசிரியர் நச்சினார்க்கினியராலும் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளது ; இது ஐங்குறு நூற்றின் இறுதியில் அந்நூற் செய்யுள்களில் ஒன்றாகச் சேர்க்கப்பெற்றுள்ளது. இதைச் சிலர் 'சிற்றெட்டக'ச் செய்யுள் என்பர்.

நோக்கிச் செவிலி வருந்திக் கூறுதல் காலை : பொழுது. இனையல் : வருந்தாதே ; எதிரழிந்துமொழிதல் : அழிந்து எதிர் மொழிதல். அழிதல் : மனம் அழிதல்; வருந்திக் கூறல்.]

304. காரமர் பூங்குழல் நீரா டவுந்திரை காட்டுமுந்தி
வேரம தெய்த வழுந்தா தெடுத்த விடலைதனக்
கேரமர் கின்ற திருத்தேவி யாகவிப் பாற்சிறந்த
சீரம ரும்பிரம் பூர்த்துரை ரங்கன் றிருநகர்க்கே.

**குறிப்பு.**—கார் அமர் குழல் : மேகத்தையொத்த கூந்தல். அமர் : உவம உருபு. பூங்குழல்-தலைவி ; திரை-அலை ; வேரம்-பகைமை ; விடலை-தலைவன் ; ஏர்-அழகு; சீர்-சிறப்பு.

### செவிலி தன்னறி வின்மை தன்னை நொந்துரைத்தல்

[தலைவனுடன் போதலைத் தலைவி யெனக்குக் குறிப்பால் அறிவித்தும் அதனை நான் அறிந்து கொண்டேனில்லையேயென்று செவிலி தன்னறியாமை காரணமாக நொந்துரைத்தல்.]

305. முலைமேன் முகந்து முகத்தின்முத் தாடி முறுவலித்தஞ்
சிலைமேன் மதிநுதற் செவ்வாய் மழலைமுன் செய்ததிந்த
நிலைமேற் படரெய் திடநினைந் தோவந் நெடுங்கடல்சே
ரலைமேல் விழிவளர் ரங்கன் பிரம்பையென் னாரமுதே.

**குறிப்பு.**—முகந்து-மோந்து ; முத்தாடி-முத்தங் கொடுத்து ; முறுவலித்து-புன்னகை செய்து ; சிலை-புருவம் ; சிலைமேன் மதித்தலாவது-சிலையினும் சீரிதாக எண்ணப்படுதல் ; படரெய்திட-தலைவனோடு படர்தலைப் பொருந்த ; அலை-பாற்கடல். படர்எய்திடுதல் செவிலியாயின், படர்-துன்பம் என்க.

### செவிலி தெய்வம் வாழ்த்தல்

[தலைவியை மீண்டுவரச்செய்ய வேண்டுமென்று செவிலி முருகனைத் துதித்தல்.]

306. வில்லுங் கணையும் பொருநுதற் கண்ணியர் வேள்புலவர்
சொல்லும் பிரம்பைத் துரைரங்க னொன்னலர் சூழ்சுரத்திற்
செல்லுந் திறமெனச் சிறுமியைச் செய்தருள் சேயணங்கே
வல்லும் பொருமுலை யாளினித் தான்வரு மாறருளே.

**குறிப்பு.**—வில்-புருவம் ; கணை-கண் ; நுதல்-நெற்றி ; ஒன்னலர்-பகைவர் ; சுரம்-பாலை ; சேயணங்கு-முருகன் ; வல்-சூதாடுகருவி ;

" போமாறு செய்வித்த நீவரு மாறும் புரந்தருளே "

[அம்பிகா. கோ. 389.]

### செவிலி நற்றுய்க்கறத்தொடு நிற்றல்

(கற்பின் மிகுதி தோன்றத்தலைவி தலைவனெருவனுடன் சென்றனளென் பதை நற்றுய்க்குச் செவிலி யறிவித்தல். நற்றுய்-தலைவியைப்பெற்ற தாய்.)

307. கொந்தார் நறுங்குழ லுன்மகள் கொங்கைக் குடைந்திகல்கொள்
தந்தா வளம்வென் றுயிர்தந் தவர்க்கன்றித் தானயலார்க்
கெந்தா யிசைந்தன ளென்றுசென் ருளெதிர்த் தாரையடுங்
கந்தார் களிற்றண்ணல் ரங்கன் பிரம்பைக் கடிநகர்க்கே.

**குறிப்பு.**—கொந்து-பூங்கொத்து ; உடைந்து-தோற்று ; இகல்-பகைமை ; தந்தாவளம்-யானை ; தந்தவர்-தலைவர். களிறுதருபுணர்ச்சியைக் குறிப்பிட்ட வாறு. யானைதலைவன் அம்பிற்கேயன்றித் தலைவியின் கொங்கைக்கும் தோற்றது என்க. எந்தாய்-எம்தாய் ; கந்து-கட்டுத்தறி ; கடிநகர்-காவலையுடைய நகர்.

### நற்றுய் பாங்கியொடு புலம்பல்

(பாங்கி-ஈண்டு உயிர்த்தோழி.)

308. என்னு ருயிரைச் சுரம்போக் கிடுமுன்ன மீங்கிதனைச்
சொன்னுலன் றேமணந் தோன்றுவ தன்றிப்பின் சொல்வ [துண்டோ
கன்னு வதாரன் பிரம்பைரங் கேந்த்ரன் கருத்தினில்லா
வொன்னுர் திரியுங் கடத்தவ மேசெல்ல வுய்த்தனையே.

**குறிப்பு.**—ஆருயிர்-தலைவி ; சுரம்-பாலை ; அன்றே-அப்பொழுதே ; கன்னன்-கர்ணன் ; கொடைபற்றிய உவமை ; ஒன்னுர்-பகைவர் ; கடம்-காடு ; அவமே-பயனின்றி ; உய்த்தல்-செலுத்துதல்.

" பொன்னே யனையநல் லாயவ மேசுரம் போக்கினையே "
[தஞ்சை கோ. 329.]

### நற்றுய் பாங்கியர் தம்மொடு புலம்பல்

[பாங்கியர்-மற்றைத் தோழியர்.]

309. பொன்னை விரும்பிய மாலரங் கன்பிரம் பூரறியாள்
முன்னை விரும்பிய தெய்வந் தொழாதற முன்னியிடுந்
தன்னை யறிந்து தலைவனை யுற்றவத் தன்மைபெற்று
லென்னை யருஞ்சுர மெய்திட வேண்டுங்கொ லேழையரே.

**குறிப்பு.**—பொன்-இலக்குமி ; அறியாள்-தலைவி ; முன்னை விரும்பிய தெய்வம். பெற்றோர் ; " அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் " (கொன்றை: 1.) தெய்வம் தொழாமை கற்பிற்கு அறிகுறி என்றுமாம். இதற்கு முன்னைவிரும்பிய தலைவனைக் காதலிக்கு முன்தொழுதுவந்த என்று கூறிக்கொள்க. அறம்-கற்பு ; என்னை-என் ; ஏழையர்-பாங்கியர் ; கொல்-அசைநிலை.

" தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்.... " என்ற வாக்கும் காண்க (குறள். 55.)

" ..................தெய்வந்தொழா
ளறந்தா னிலைபெற் றரும்பழி காக்கு மறிவுநெஞ்சிற்
பிறந்தா லருஞ்சுரம் பின்செல்ல வேண்டுங்கொல் பேதையரே."

[அம்பிகா. கோ. 393.]

**நற்றாய் அயலார் தம்மொடு புலம்பல்.**

(இது வெளிப்படை.)

**310.** மென்மொழி கூறிடும் வன்மனப் பேதை வியந்தொருவன்
பின்னிழல் போற்றொடர்ந் தென்னைமுன் னீத்துப் பிரிந்தறியா
வின்னுயிர்ப் பாங்கி யுடனூர் மறுக வினிதுசென்றாள்
மன்னுயிர் காக்கு மரங்கன் பிரம்பையெம் மாதவமே.

**குறிப்பு.**—பேதை-தலைவி ; ஒருவன்-தலைவன், ஒருவனை வியந்து என்க ; நீத்து-கைவிட்டு ; ஊர்-மனையிலுள்ளார் யாவரும் ; மறுக: வருந்திக் கலங்க ; மென்மொழி வன்மனம்-முரண்தொடை ; எம் மாதவமும்-யாம் செய்த தவம் இருந்தவாறு இஃது என்று புலம்பினாள் என்க.

" யாழியன் மென்மொழி வன்மனப் பேதையோ ரேதிலன்பின்
றோழியை நீத்தென்னை முன்னே துறந்துதுன் னூர்கண்முன்னே
வாழியிம் மூதூர் மறுகச் சென்றாள் "

[திருச்சிற். கோ. 230.

**நற்றாய் தலைமகள் பயிலிடந் தன்னொடு புலம்பல்**

(தலைமகள் பயிலிடம்-தலைவி விளையாடுமிடங்கள்.)

**311.** மும்மையு மிம்மையி னாராய்ந் துறுபயன் முன்னிமிக்க
செம்மையும் பெற்ற வரங்கன் பிரம்பைச் செழும்பொழில்வாய்
சும்மையுங் கொண்ட சுரும்பினங் காள்மயில் காள்கிளிகா
ளும்மையு மெம்மையு மென்னுயிர் காண்பதென் றோதுகவே.

**குறிப்பு.**—மும்மை-பதி, பசு, பாசம்; சித், அசித், ஈசுவரனுமாம். உறு பயன்-முத்தி. மும்மையை மும்மைத் தமிழ் என்று கொண்டு அதனால் வரும் பயன் அறம், பொருள், இன்பம், வீடு எனினும் ஒன்று. முன்னி-எண்ணி ; சும்மை-ஒலி, இராகம் ; சுரும்பு-வண்டு . உயிர்-தலைவி ; ' என் உயிர் உம்மையும் எம்மையும் என்று காண்பது ஓதுக ' என்று கூட்டுக.

" நன்றே யுமக்கவர் நல்லதெல் லாஞ்சொல்லி நவ்வியிளங்
கன்றே யருமணிக் கந்துக மேகண் கலந்தழைக்குங்
குன்றே குவலையங் கொய்தட மேயெதிர் கூஉங்குயிலே
யென்றேகொ லும்மையு மென்னையுங் காணவந் தெய்துவதே."

[அம்பிகா. கோ. 395.]

### நிமித்தம் போற்றல்

(நிமித்தம்-சகுனம் ; என் மகள் மீண்டுவரும்படி நீ கரைவாயென்று காகத்தை நற்றாய் வேண்டல்.)

312. காரஞ்சும் வண்கை யரங்கன் பிரம்பைக் கடிநகர்வா
யோரஞ் செனுங்குண முற்றிடுஞ் சேட்டை யுறுங்கொடியே
நீரஞ்சி டாதுண்ண லாகு மணந்த நெடுந்தகையோ
டாரஞ் சுமந்த முலையாள் வரக்கரைந் தாற்றுவையே.

**குறிப்பு.**—கார்-மேகம், கார் அஞ்சுதல் வண்கையிடம்தான் தோற்றலால். அஞ்சு எனுங்குணம்-ஐந்தாகிய குணம்; மறைந்த புணர்ச்சித்தாகலும், கலங்காமையும், பொழுதிறவாதிடம் புகுதலும், நெடுகக்காண்டலும், மடியின்மையும் காக்கையின் ஐந்து குணங்கள் என்ப. இவற்றுள் கலங்காமையை நீக்கி இனத்தார்க்கு உதவுதலைச்சேர்த்து ஐங்குணமாகக் கொள்வாருமுளர். சேட்டை-உறுப்பைப்புடை பெயர்த்தல். இனிச் சேட்டையெனின், மூதேவியெனப் பொருள்கொண்டு ஜேஷ்டையாகிய தெய்வத்தின் கொடி என்று கூறினு மமையும் ; கொடி-காக்கை ; அஞ்சிடாது-பயமின்றி, காக்கை உண்ணுதல் உணங்கலினை ; கரைதல்-கூவுதல் ; ஆற்றுவை-என்னை ஆற்றுவிப்பாய். காக்கை கரையின் விருந்துவரும் என்னு கொள்கையை,

" திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே " (குறுந். 210.)

என்னும் குறுந்தொகையானும் உணர்க.

" ..............................—..........
மணங்கொளஞ் சாயலு மன்னனு மின்னே வரக்கரைந்தா
லுணங்கலஞ் சாதுண்ண லாமொண் ணிணப்பலி யொக்குவன்மாக்
குணங்களஞ் சாற்பொலி யுந்நல சேட்டைக் குலக் கொடியே "

(திருச்சிற். கோ. 235.)

" மறுவி றூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே " [ஐங். 391.]

### சுரந்தணிவித்தல்

(சுரத்தின் வெப்பத்தைத் தணிவித்தருளுமாறு நற்றாய் தெய்வத்தை வேண்டல். சுரம்-பாலை நிலம்.)

313. மான்பெற் றெடுத்த விளமயில் வெஞ்சுரத் தேதிலனைத்
தான்பெற்ற தெய்வ மெனநினைத் தேகினள் தாரணிமேற்
றேன்பெற்ற முல்லைத் தெரிய லரங்கன் றிருப்பிரம்பைக்
கோன்பெற்ற தட்பங் கொளவிரந் தேன்சுடர்க் கொற்றவனே.

குறிப்பு.—மான்-நற்றாய்; இளமயில்-தலைவி; இனி, மான் பெற் றெடுத்த விள மயில்-வள்ளி, வள்ளி போன்ற தலைவி எனினுமாம்; ஏதி லன்-அயலான்; தலைவன். சுடர்க் கொற்றவன்-சூரியன்; தட்பம்-குளிர்ச்சி. 'மான் பெற்றமயில்' என்ற நயம் காண்க.

### நற்றாய் தன்மகள் மென்மைத் தன்மைக்கிரங்கல்

(தலைவியின் மென்மைத் தன்மையை நினைந்து அவள் எங்ஙனம் சுரத்தின் வெப்பத்தைப் பொறுப்பளோவென்று நற்றாயிரங்குதல்.)

314. அன்னத்தின் றூவியுந் தண்ணு ரனிச்சமு மத்தவிரா
மென்னத் தகுமடி மென்மைக்கொவ் வாவிந்த்ர கோபமெய்யின்
றன்மைக்கொவ் வாபிரம் பூர்த்துரை ரங்கன் றரியலர்போம்
வன்மைப் பரல்வழிக் கென்செயு மோவென் மடமகளே.

குறிப்பு.—இந்த்ரகோபம்-ஒரு வகைப் பட்டுப்பூச்சி; இந்த்ர கோபமெய்-இந்த்ர கோபம் போல மெத்தென இருக்கும் மெய். தூவியும் அனிச்சமும் மென்மைக் கொவ்வா என்றும், இந்த்ர கோபம் மெய்யின் தன்மைக் கொவ்வா என்றும் மடமகள் என் செய்யுமோ என்றுங்கூட்டுக. தரியலர்-பகைவர்.

### இளமைத் தன்மைக்குளமெலிந்திரங்கல்

(தலைவியின் இளமைத் தன்மைக்கு நற்றாய் மன நெகிழ்ந்து வருந்தல்.)

315. ஊரற்குச் செய்யுங்குற் றேவற்கென் ணும்புக லுக்கிரன்றன்
பேரற்கொப் பான பிரம்பூ ரரங்கன்றன் பெட்புறுமன்
னீரற் கினிய மனக்குறிப் பின்வழி நிற்குங்கொலோ
வேரற் கிளிகடி வாள்போன் றழைக்குமென் மெல்லியலே.

குறிப்பு.—ஊரன்-தலைவன்; உக்கிரன்-உக்கிரசேனன்; கண்ணனது தாய் வழிப்பாட்டன். உக்கிரன்றன் பேரன்-கண்ணன்; பெட்பு-விருப்பம்; வேரல்-தினை. கடிவாள் போன்றழைத்தல் சொல்லின் இனிமையாற் கிளிகள் அதனைக் கற்க வருதலின்.

"வைம்மலர் வாட்படை யூரற்குச் செய்யுங்குற் றேவன்மற்றென்
மைம்மலர் வாட்கண்ணி வல்லள்கொல் லாம்".

[திருச்சிற். கோ. 233.

**நற்ருய் தலைமகளச்சத் தன்மைகச்ச முற்றிரங்கல்**

(தலைவியின் பயந்த சுபாவத்தை நினைத்து நற்ரு யச்சமுற்றிரங்கல்.)

**316.** அடுங்கொலை வேழமும் வாள்வரி வேங்கையு மார்த்திடுமக்
கொடுங்குரல் கேட்குந் தொறுந்துண் ணெனவச்சங் கொண்டதரி
னடுங்குந் திறத்தின ளென்செயு மோசெம்பொ ளுளுமளித்
திடுஞ்செங்கை யாநந்த ரங்கன் பிரம்பையி னென்கரும்பே.

**குறிப்பு.**—வேழம்-யானை ; வரி வேங்கை : புலி ; துண் - அச்சக் குறிப்புச் சொல் ; ஆர்த்தல்-ஆரவாரித்தல் ; பொன் : திரவியம் ; கரும்பு-தலைவி.

**தலைமகளாயமுந்தாயும் அழுங்கக்கண்டு**
**காதலி னிரங்குங் கண்டோரிரக்கம்**

(தோழியர் கூட்டமும் நற்ருயும் வருந்துதலைக் கண்டு அயலார் மனங்கசிந்திரங்கல்.)

**317.** ஆயங் கலுழ்ந்து மெலிந்திடப் புல்லி யணைத்தணைத்து
நேயம் புரிந்த தெனப்பெற்ற தாயிங்கு நெஞ்சயரா
வேயுங் கழங்கொடு கந்துகங் கண்டினி யென்னையென்றும்
வாயும் புகழ்ப்பிரம் பூர்த்துரை ரங்கன் வரையணங்கே.

**குறிப்பு.**—ஆயம்:தோழியர் கூட்டம் ; புல்லி:கட்டி ; கழங்கு:கழற்சிக் காய் ; கந்துகம்:பந்து ; வாயும் : பொருந்தும்.

**செவிலி ஆற்ருத் தாயைத் தேற்றல்**

(வருந்தும் நற்ருயைச் செவிலி தேற்றுதல்.)

**318.** ஓங்கும் புகழ்ப்பிரம் பூர்த்துரை ரங்கனென் ளுரெனமுன்
வாங்குந் தனுவிற் குடைந்துடைந் தோடிய மாதிரஞ் சென்
றீங்குன் மகடிற மெல்லா மறிகுவ னிப்பதிசூழ்
பாங்கும் பரிவுமுட் கொண்டிரங் கேன்முற் பயந்தவளே.

**குறிப்பு.**—ஒன்ஞர் : பகைவர் ; வாங்கும் தனு: வளைந்தவில் ; மாதிரம்: திக்கு ; திறம் : தன்மை ; பாங்கு : நிலை ; பரிவு : அன்பு ; பயந்தவள் : பெற்றவள்.

“ ..............................திசைதிசைதாம்
போயுன வெல்லையெல் லாம்புக்கு நாடுவன் பொன்னினையே ”.
[திருச்சிற். கோ. 234.]

**ஆற்றிடை முக்கோற் பகவரைவினுதல்.**

(முக்கோற் பகவர் : திரிதண்ட சன்னியாசிகள் (தொல். மரபு. 70.) வழியில எதிரே வரும் முக்கோற் பகவரைச் செவிலி கேட்டல்.)

**319.** முக்கோல்கைக் கொண்டுகொண் மூவின் மறைகள் முழங்கிமண் [மேன்
மிக்கோ ரெனப்புய மேலதள் கொண்டுறும் வேதியரே
தக்கோ னரங்கன் பிரம்பைய ரின்புறத் தான்பகர்வீர்
மைக்கோதை யாளு மொருவேளு நும்மெதிர் வந்ததுவே.

**குறிப்பு.**—கொண்மூ-மேகம் ; அதள்-மான் தோல் ; கோதையாள்-தலைவி ; வேள்-தலைவன்.

" வெதிரேய் கரத்துமென் றேலேய் சுவல்வெள்ளை நூலிற்கொண்மூ
வதிரேய் மரையினிவ் வாறு செல்வீர் "

**[திருச்சிந். கோ. 243.]**

### மிக்கோரேதுக் காட்டல்

(மிக்கோர்-அறிவான் மிக்கோர், ஈண்டு முக்கோற்பகவர். ஏதுக்காட்டல்-தலைவியொருவனுக் குரியளாதல் உலகவியல்பெனக் காரணங்காட்டிக் கூறுதல்.)

320. கடலார மும்மலை யாரமும் பாரிடைக் காமர்செய்யும்
மிடலா டவர்க்குற்ற மெய்க்கணி யாமென்றல் வீண்மொழியன்
றடலார் பிரம்பைத் துரைரங்க பூப னணிநகர்க்கண்
மடலாரும் பூங்குழ லாருமந் நீரர் வகுத்திடிலே.

**குறிப்பு.**—கடலாரம்-முத்து, மலையாரம்-சந்தனம், காமர்-அழகு, மிடல்-வலிமை, ஆடவர்-புருடர்; காமர் செய்யும் அணியாமெனக் கூட்டுக; அடல்: வன்மை, மடல்-பூவிதழ், குழலார்-தலைவி ; நீரர்-தன்மையினர்.

" சுரும்பிவர் சந்துந் தொடுகடன் முத்தும்வெண் சங்குமெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க் கணியாம் ".

**[திருச்சிற். கோ. 248.]**

" பலவுறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யும் ".

**[கலி. 9.]**

" தடவரை தானே யணிந்தறி யாதுதண் சந்தனமே "
" முந்நீர் பயந்தா ஃணிவார் பிறரென்ப முத்தங்களே "

(இறை அகப். 23. உரைமேற்கோள்.)

### செவிலி யெயிற்றியொடு புலம்பல்

(எயிற்றி-மறத்தி ; இவள் பாலை நிலப்பெண்.)

321. கனவு தனிலு மகன்றறி யாள்சிறி யாள்கருதி
வினவுந் தொறுமறை வேறு யொருவன்பின் மேவினளோ
சினவும்மை வேற்கை யரங்கன் பிரம்பைச் சிகரவெற்பின்
மனவும் புலித்தட்ட மங்கல முங்கொண்ட வாணுதலே.

**குறிப்பு.**—அகன்று-என்னினின்றும் பிரிந்து ; சினவுதல்-கோபித்தல் ; மனவு-அக்கமணி ; புலித்தட்ட மங்கலம்-புலி நகமும், பல்லும் பதித்த ஒரு கழுத்தனி. 'ஒருவன் பின்மேவினளோ' என்றும் 'ஒரு அன்பின் மேலினளோ' என்றும் பிரியும். வளர்தல் : எயிற்றி.

### செவிலி குரவொடு புலம்பல்

(குரவோடு-குராமரத்தொடு ; இம்மரம் பாலை நிலத்திற்குரியது.)

322. இரவோர் பகலுறக் காட்டிய மாலை யிதயம்வைத்த
வுரவோன் பிரம்பைத் துரைரங்க பூப னுயர்வரைவாய்க்
குரவேயென் பேதையொ ரேதிலன் பின்னர்க் குலவியிங்கு
வரவேகண் டோர்சொல் வழங்காய்நற் பாவை மருவியுமே.

குறிப்பு.—இரவோர் பகலுறக் காட்டியது பாரதம் பதினான்காநாள் யுத்தத்தில், மால்-திருமால் ; " இருபகல் ஒரு பகலில் காட்டிய...." (செ. 250) என்றது காண்க. உரவோன்-வலியோன் ; ஏதிலன்-தலைவன் ; ஓர்சொல் வழங்காய்-வாயுந்திறவாய் ; நற்பாவை-குராப்பாவை.

" நீயுநின் பாவையு நின்றுநி லாவிடு நீள்குரவே."
[திருசிற். கோ. 241]

' நீயும் ஒரு பாவையை மருவியிருந்தும் பாவையை இழந்து நிற்கும் என்னிடம் ஒரு சொல் சொல்லாய்' என்க.

### சுவடு கண்டிரங்கல்

[தலைவன் தலைவியர் இருவருடைய அடிச்சுவடுகளையுங்கண்டு செவிலி யிரங்கிக் கூறல்.]

323. மைவடி வுற்ற திருமாலுக் கன்புசெய் வள்ளல்செம்பொன்
மெய்வடி வுற்ற பிரம்பூ ரரங்கனை மேவலர்சூ
ழிவ்வடி யவ்வடிக் கண்ணுள்செஞ் சீறடி யிங்கிவையு
மவ்வடி வேற்கள்வன் காற்சுவ டாமென் றறிந்தனனே.

குறிப்பு.—மை-மேகம் ; மேவலர்-பகைவர் ; சூழ்தல் (யாருடைய அடி யென்று) ஆராய்தல் ; வடிக்கண்-கூரியகண் ; கள்வன்-தலைவன் ; சுவடு-அடி.

### கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்.

(காதலன், காதலிகளாக எதிரில் வருபவர்களைக் கண்டு, " உம்மைப்போன்று இவ்வழியே செல்லும் என் மகளையும் அவள் தலைவனையும் கண்டீரோ " வென்று செவிலி கேட்டல்)

324. களிக்கின்ற காளையும் நீயு மெனக்கடத் தூடிதழ்க்கு
ளொளிக்கின்ற முத்த மொளிவிட வேறிரு வோரெதிரே
யளிக்கின்ற கீர்த்திப் பிரம்பூ ரரங்கன்மெய் யன்பெனவே
துளிக்கின்ற செவ்வியி னுற்றன ரோபின் றொடரவுமே.

குறிப்பு.—கடம்-காடு ; இதழ்க்குளொளிக்கின்ற முத்தம்-புன்னகை. அளிக்கின்ற கீர்த்தி : அளிக்கின்றதனால் உண்டான கீர்த்தி. செவ்வியின்: அழகுடன் ; பின்தொடர-யான் பின்தொடர்ந்து செல்ல.

" பைந்தார் விடலையு நீயுந் தகவிப் பரிசெதிரே
வந்தார் சிலருள ரோமகளே "
[அம்பி கா. கோ. 405].

### கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்

(அன்னோர், " அவர்களைக்கண்டோம், அவர்கள் இதற்குள் பிரம்பூரை யடைவார்கள் " என்று சொல்லிச் செவிலியின்றுயரத்தையாற்றுவித்தல்)

325, மீண்டிங் குறுவதிங் கில்லைவல் லேயெதிர் வெங்களிற்றைக்
கீண்டங் கறஞ்செய்து கேண்மையுற் றோனெடுங் கெண்டையங்கண்
பூண்டன்பு செய்தருள் ரங்கன் மகிழ்பிரம் பூரையெய்தி
யாண்டின் புறுவரிவ் வாறுற்ற மெய்விய ராறியின்னே.

குறிப்பு.—கீண்டு-கிழித்து ; கேண்மை-உறவு ; உற்றோன்-தலைவன் ; கண்-தலைவி ; ஆறு-வழி ; வியர்-வியர்வை ; இன்னே-இப்பொழுதே.

### செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தல்

(கவலை கூர்தல்-கவலைமிகுதல்.)

326. மன்னுண்மை யுற்ற வரங்கன் பிரம்பையின் வாழ்க்கையுற்றோ
ரென்னு விருவரைக் காணுந் தொறுமவ ரென்றிருந்தே
னன்னாரின் வேறவ ராக்கண்டு கண்டிங் ககமுடைந்தேன்
முன்னாவ தன்றிப்பின் னாகாவென் காலு முயற்சியுமே.

குறிப்பு.—மன்-நிலைபெற்ற ; அகம்-மனம்.

" செல்லாது மீண்டொரு காலிரு காலுமென் சிந்தையுமே. "
[அம்பி கா. கோ. 407)

" முன் வைத்த காலைப் பின் வையேன் " என்னும் பழமொழியும் காண்க.

கற்பொடு புணர்ந்த கவ்வை முற்றும்.

## 23. மீட்சி

(தலைவனுடன் தலைவிமீளுதல்)

### தலைவி சேணகன்றமை செவிலித் தாய்க்குணர்த்தல்

(தலைவி தலைவனுடன் அவனூர் சென்றுளென்பதைச் செவிலி நற்றாய்க் குணர்த்தல்.)

327. கொந்தார் மலர்க்குழற் கொம்பைத் திசையெட்டுங் கூர்ந்து [சென்றுங்
கெந்தாய் பரிவொடுந் தேடா விடமொன்று மில்லைமல்லர்
தந்தா வளம்வென்ற மாலரங் கேந்த்ரன் றமிழ்ப்பிரம்பூர்
முந்தார்வங் கூர்தன் மனையிற்கொண் டெய்தினன் மொய் [குழலே.

குறிப்பு.—கொந்து-பூங்கொத்து ; கொம்பு-தலைவி ; எந்தாய்-எமது தாயே ; பரிவு-அன்பு ; மல்லர் தந்தாவளம்-மல்லரையும, யானையையும் ; உம்மைத்தொகை. எய்தினன்-தலைவன், தோன்றா எழுவாய். மல்லர் முஷ்டிக சாணூரரையும் (செய். 19) தந்தாவளம் குவலயா பீடத்தையும் (செய். 160) குறிக்கும்.

### தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றல்

(இது வெளிப்படை)

328. மின்னுர் மருங்குற் றிருவே சுரத்திடை வேட்டிருந்த
வந்நாண் மலர்ப்பொழி லஃதிவை முன்றிற்கண் ணதுலர்செம்
பொன்னுர்வ மேற்கொ ளரங்கன் வளர்பிரம் பூரிடத்தி
னெந்நாளும் வைகு மிளஞ்சோ லையுநும் மிலஞ்சியுமே.

**குறிப்பு**.:—மருங்குல்-இடை ; வேட்டல்-விரும்புதல் ; நாண்மலர்-அன்றலர்ந்த பூ. முன்றில்-முன்வாயில் அதாவது வீட்டின் முன்புறம், முன் பின்னுகத்தொக்க ஆரும் வேற்றுமைத் தொகை. ஆதுலர்-யாசகர் ; இலஞ்சி-நீர் நிலை.

'முன்றிற் கண்ணின்றிரப்போர்' என்றும் பாடம். "எப்போதும் வைகு மிளமரக் காவு மிலஞ்சியுமே" (அம்பிகா. கோ. 410)

### தலைவி முன் செல்வோர் தம்மொடுதான் வரல் பாங்கியர்க் குணர்த்தி விடுத்தல்

(இது வெளிப்படை.)

329 ஒருமையி னுலிரு மைப்பய னோர்ந்துமுத் தீவளர்த்துப்
பெருமையி னுன்மறை சூழந்தணீரெற் பிரிந்துபரிந்
தருமை செயுந்தமிழ் கொள்ளு மரங்கனன் பார்பிரம்பூர்
வருமது நீர்சென் றுரைப்பீரென் றேழியர் வாழ்த்திடவே.

**குறிப்பு**.—ஒருமை-பிரமம் ; இருமை-இம்மை, மறுமை ; முத்தீ-ஆகவனீயம் காருகபத்தியம், தக்ஷிணுக்னேயம். சூழ்தல்-ஆராய்தல் ; எற்பிரிந்து-என்னினின்றும் பிரிந்து ; பரிந்து-அன்புடன் ; எற்பிரிந்து பரிந்து சென்றுரைப் பீரென முடிக்க. வரும் அது-வருவது. இச்செய்யுள் *ரதன மாலையணி ;

"ஒன்றே யுளங்கொண் டிருபிறப் பெய்திமுத் தீயுமுய்த்து
நன்றே நவில்கின்ற நான்மறை யீர்" [அம்பி கா. கோ. 411].

### முன் சென்றோர் பாங்கியர்க் குணர்த்தல்

(இது வெளிப்படை.)

330 நாளையிப் போதுங்க ளைவிருந் தெய்துவிர் நன்கழைவில்
வேளையொப் பாமொரு வேந்து மிரதியின் மிக்கபொன்னும்
பாளைநற் பூகங் கமழும் பிரம்பைப் பதியரங்கன்
கேளிரைப் போல்வரக் கண்டன மீண்டுயர் கீர்த்திகொண்டே.

**குறிப்பு**.—கழை-கரும்பு ; பொன்-இலக்குமி போன்றவள், தலைவி ; பூகம்-கமுகம் ; கேளிர்-உறவினர்.

---

* இவ்வணி குவலயாநந்தத்தில் 'இரத்தின மாலையணி' என்னும் பெயரிற் காணப் படுகிறது. (குவலயாநந்தம் 74-ம் பகுதி செய்யுள்கள் 382, 383, 384.) இதனை வட நூலார் 'இரத்நாவளியலங்காரம்' என்பர்.

" நண்போ டினியதொர் நல்விருந் தெய்துவிர் நாளே " (அம்பி கா. கோ. 412.)

**பாங்கியர் கேட்டு நற்றாய்க் குணர்த்தல்**

(இது வெளிப்படை.)

331. பந்தணை மெல்விரற் பாவையர் மெச்சிடு பார்த்திபன்மா
மந்தர மொத்த புயரங்க பூபன் மகிழ்பிரம்பூ
ரிந்திரை யாரொடுஞ் சேர்ந்தருண் மாலென் றிருவர்களும்
வந்தன ரென்றுமுன் னந்தணர் கூறினர் வாணுதலே.

**குறிப்பு.**—பார்த்திபன்-மன்னன். மந்தரம்-ஓர்மலை. இந்திரை-இலக்குமி. வாணுதல்-நற்றாய்.

" ஆவியன் னாருடன் வந்தனள் காணெனப ரந்தணரே, "
[அம்பி கா. கோ. 413].

**நற்றாய் தலைமகனுளங்கோள் வேலனை வினுதல்**

[தலைவன் தலைமகளைத் தன்னூருக்கு அழைத்துச் செல்வானோ அல்லது எம்மனைக்கே அழைத்து வருவானோ வென்று வேலனை நற்றாய் கேட்டல். உளங்கோள்-கருத்து; வேலன்-இவன் முருகக் கடவுளது படைக்கலமாகிய வேலினைக் கையிற் கொண்டிருத்தலின் இப்பெயர் பெற்றனன்; இவனை வெறியாட்டாளன் என்றும் கூறுவர்; வெறியாடுபவன் இவனே; இக் காலத்தில் இவன் பூசாரி யெனப்படுவான்.]

332. இரங்கன் பிரம்பைக் கிறைவன் பொருப்பினெட் டுத்திசையும்
வரங்கொண் டிடப்புலன் வாய்ப்பச்சொல் வீர்நெடு வான்சுரம் [போய்த்
திரங்கொண்ட வூரனென் செல்வியை யெம்மனை சேர்த்திடுமோ
கரங்கொண்டு தன்மனைக் கேசெல்லு மோசொல்லுங் காமருற்றே.

**குறிப்பு.**—புலன் - அறிவு. சொல்லும்: புகழ்ந்து சொல்லப்படும். காமர்-விருப்பம், அழகுமாம்.

மீட்சி முற்றும்.

## 24. தன் மனை வரைதல்

[தலைவன் தலைவியைத் தனது வீட்டிலேயே மணஞ்செய்து கொள்ளல்.]

**பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுதல்**

[தனது மனையில் தலைவியின் மணம் நடைபெற வேண்டு மென்னும் விருப்பத்தால் நற்றாய் செவிலியை வினுதல்.]

333. யான்பெற்ற செல்வியை யெம்மனைக் கேதந் தினியமணந்
தான்பெற் றிடவவ ரன்னையர்க் கோதவுந் தக்கதுண்டோ
வான்பெற்ற செங்கை யரங்கன் பிரம்பை வளம்பதியிற்
கான்பெற்ற வார்குழற் காரிகை யேநமர் காமுறவே.

குறிப்பு.—செல்வி-தலைவி ; ஓத-கூற ; அவர்-தலைவர் ; வான்-மேகம் ; கான்-மணம் ; நமர்-உறவினர்.

### செவிலிக்கு இருளை வரைந்தமை யுணர்த்தல்

[தன்மனையில் தலைவன் மணஞ்செய்து கொண்டதைத் தோழி செவிலிக் கறிவுறுத்தல்.]

334. யாமினிச் சொல்லுவ தென்கொலன் னேமெல் லியலையெழிற்
கோமகன் றன்மனைப் பாலுய்த்து மாமணங் கூர்ந்ததிறந்
தாமரைச் செங்கை யரங்கன் பிரம்பை தனிலெமர்தாங்
காமுறத் தூதர்வந் தோதினர் முன்னே கனங்குழையே.

குறிப்பு.—மெல்லியல்-தலைவி ; திறம்-தன்மை ; எமர்-எம்மவர்.

### வரைந்தமை செவிலி நற்றாய்க் குணர்த்தல்

(வரைந்தமை-தலைவனுந் தலைவியும் மணஞ்செய்துகொண்டமை.)

335. உற்றார் புரந்தர வூர்கம் பலைசெய வொண்ணுதலை
நற்றார் புனைந்து மணந்தா னெடும்வர நாளையிங்கே
முற்றா முகிழ்ப்பமன் முலையாய்கண் பார்க்கு முறைமையுண்டு
வற்றாத செல்வப் பிரம்பூ ரரங்கன் வளநகர்க்கே.

குறிப்பு.—புரந்தர-மணவினையையாற்றி முடிக்க ; கம்பலை-விழாவொலி ; ஒண்ணுதல்-தலைவி ; தார்-மாலை ; மணந்தான் - தலைவன் ; முகிழ்-தாமரை யரும்பு ; முறைமை-கிரமம். உண்டு-அநுபவித்தும்.

"பங்கே ருகத்தண் பழனநல் லூரன் பவனிவரக்
கொங்கேய் நறுங்குழற் கோதையர் கண்டு குவித்தகையு
மங்கே யவரவ ரன்புக் கருள்செய் தமைத்தகையும்
பொங்கே ரிளமுலை யாள்புல வாவகை போவதன்றே."

[அம்பிகா. கோ. 447.]

### தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு இயம்பு சென்றென்றல்

(நுமர்க்கு-உனது சுற்றத்தார்க்கு.)

336. மூவுல குஞ்சொல் லரங்கன் பிரம்பை முதுநகரிற்
பாவகன் செந்நா வினிற்பொரி தூவிப் பலர்புகழ்ந்து
மேவவும் மாதுக்கு மங்கல நாண்புனை வித்ததிறம்
யாவருங் கேட்டின் புறநுந் தமருக் கியம்புகவே.

குறிப்பு.—பாவகன்-அக்னி ; அக்நியிற் பொரிதூவுதல் மணவினைகளில் ஒன்று. 'பிரம்பை யெம்மூரிடத்தில்' என்றும் பாடம். திறம்-தன்மை ; உம்மாது-உங்கள் மாது ; தலைவி.

**பாங்கி தானது முன்னே சாற்றியதுரைத்தல்**

(அது-மணஞ்செய்து கொண்டதனை ; சாற்றியது : கூறியது.)

337. ஈன்றாட்கு முன்ன மினிதுரைத் தேன்கற் பெனப்புகலுந்
தேன்றார் புனைபிரம் பூர்வர ரங்கன் சிகரவெற்பா
கான்றாழ் குழலியை நின்கேளிர் சூழக் கடிநகர்க்கண்
வான்றாழ் முரசம் வயிரெழுந் தார்ப்ப மணந்ததுவே.

**குறிப்பு.**—ஈன்றாள்-நற்றாய் ; கான்-மணம் ; குழல்-கூந்தல் ; கேளிர்-உறவினர் ; கற்பு-முல்லை ; வான்-மேகம் ; கடிநகர்-பாதுகாவலையுடைய மனை ; தாழ்- ஒலியில் தாழ்ந்த ; வயிர்-ஊது கொம்பு.

**தன்மனை வரைதல் முற்றும்.**

## 25. உடன் போக்கிடையீடு

[தலைவனுந் தலைவியுஞ் சென்ற வுடன்போக்கி னிடையே நிகழுந்தடை.]

**நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்தன் செலவுணர்த்தி விடுத்தல்**

(செலவு-உடன் போக்கு.)

338. மைவா ரணம்வென்ற வள்ளல்பின் செல்லுமிவ் வண்ணமெலா
மெவ்வா றெனநின் றிரங்கிடும் பாங்கியர் யாவருக்குஞ்
செவ்வாய் புலர்ந்து புலம்புமென் னன்னைக்குஞ் சென்றுரைப்பீ
ரொவ்வாக் கலிப்பகை ரங்கன் பிரம்பை யுவந்திடவே.

**குறிப்பு.**—மைவாரணம்-யானை ; வள்ளல்-தலைவன் ; ஒவ்வா-நல்வாழ்க்கைக்குப் பொருந்தாத ; கலி-வறுமை.

**தலைமகடன் செலவீன்றாட் குணர்த்தி விடுத்தல்**

(ஈன்றாள்-நற்றாய்.)

339. தனைப்பெற்ற கிள்ளைக்குப் பாலள்ளி யூட்டித்தண் முல்லைக்குக்கா
லினைப்பெற்ற பந்த ரிடச்சொல்லு வீரிக லோடவென்று
முனைப்பெற்ற வெற்றிப் பிரம்பைரங் கேந்த்ரன் முதுபதிக்க
ணெனைப்பெற்ற பாவிக்கு மாவிக்கொப் பாமென் னிகுளைக்குமே.

**குறிப்பு.**—தனைப்பெற்ற - தன்னைப்பற்றுகோடாகப்பெற்ற, கிள்ளை-கிளி ; முல்லை-முல்லைக்கொடி ; இகல்-பகைமை ; முனை-போர் ; எனைப்பெற்ற பாவி-நற்றாய் ; தன் நிலையைக்கருதித் தன் நற்றாயைப் 'பாவி' என்றாள். இகுளை-தோழி.

**நற்றாய்க் கந்தணர் மொழிதல**

(தலைவியால் வேண்டப்பட்ட அந்தணர் அவள் தலைவனுடன் சென்றதை நற்றாய்க்கறிவித்தல்.)

340. வெள்ளக் கடற்படை ரங்கன் பிரம்பை விரும்பினர்போ
லுள்ளத் துவகை யொடுமன்பு கூர்ந்தொரு வாநிழல்போல்
வள்ளக் கமல வயனூரன் பின்செலுன் மான்கற்பினள்
எள்ளத் தகுவளல் லால்வட மீனு மெதிரல்லளே.

**குறிப்பு.**—ஒருவா-நீங்காத ; வள்ளம்-கிண்ணம் ; இவளோடு ஒப்பிடின் வடமீனும் எள்ளத்தகுவள் அல்லால் எதிரல்லள் என்க. வடமீன்-அருந்ததி.
'எள்ளத்தகுவதல்லால் வடமீனு மெதிரில்லையே' என்றும் பாடம்.

.......................................இங்ங னெய்தியமான்
றன்பே ரறிவுக் குயர்வட மீனுந் தகுவதன்றே.
[அம்பிகா. கோ. 419.]

### நற்றுயறத்தொடு நிற்றலிற் றமர்பின் சேறலைத் தலைவி கண்டு தலைவற் குணர்த்தல்

(நற்றாய் தலைவி உடன்சென்றதைத் தம்மவர்க்குக் கூற, அவர்கள் தலைவியை மீட்கக் கருதிப் பின்றொடர்ந்து வருதலைக்கண்டு தலைவி தலைவற்குக் கூறல்.)

341. மலைகொண்ட திண்புய மால்பிரம் பூரன் வரகவியா
னிலைகொண்ட கீர்த்திகொள் ரங்கனென் னுரென நெஞ்சினிற் [கொண்
டலைகொண்ட தெண்டிரை யிற்சிலை கோலி யடுத்தெமர்கொல்
லுலைகொண்ட தீக்கண் ணுகவண்ண றேர்ப்புறத் துற்றனரே.

**குறிப்பு.**—மலைகொண்ட-மலைபோன்று திண்ணிய ; கண்ணன் கோவர்த்தனமலையையெடுத்தமையைக் குறித்ததாகக் கொளினும் அமையும். ஒன்னார்-பகைவர் ; சிலைகோலி-வில்வளைத்து ; கொல்லுலை-கொல்லனது உலைக்களம் ; அண்ணல்-தலைவன்.

### தலைமகன் றலைமகளை விடுத்தகறல்

(விடுத்தகறல்-விட்டு நீங்குதல்.)

342. கானவ ரென்னுங் களிறு பிளிறிடக் கார்முகங்கை
தானெடுத் தானுமர் சாமென் றெனதுளந் தானிசையேன்
றேனமர் முல்லைத் தெரியல்ரங் கேந்த்ரன் றிருப்பிரம்பைக்
கோனுயர் வெற்பினி லற்புதம் பாரெழிற் கோமளமே.

**குறிப்பு.**—கானவர்-குறவர் ; கார்முகம்-வில் ; நுமர்-நினது சுற்றம் ; சாம்-இறந்துபடும் ; அற்புதம்-மலைவேடிக்கை ; கோமளம்-மென்மைத் தன்மையால் வரும் அழகு ; ஈண்டுத் தலைவி.

### தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றரற்றல்

(தலைவன் புறங்காட்டிச் செல்லுதலைத் தலைவிகண்டு கவலையுற்றுப் புலம்பல்.)

343. எம்மா னவரம் பெனுமாரிக் காற்று திடைந்தவர்போற்
சும்மாப் புறங்கொண்ட தோன்றல்பொற் றேர்நற் றுரகதத்துக்
கெம்மா லியற்றுவ தென்னே பிரம்பையி ரங்கன்கற்றோர்
தம்மா னருள்பெற் றவர்போல் விளங்குக சால்புகொண்டே.

**குறிப்பு.**—மானவர்-பெரியோர் ; தந்தை முதலியோர் ; **இடைதல்-**தோற்றல் ; சும்மா பகைவர்க்குத் தோற்றேடாமல் தலைவியை யுளங் கொண்டு விட்டு நீங்கினமையின். **துரகதம்**-குதிரை ; **இயற்றுவது**-இயற்றுங் கைம்மாறு ; மான்-பெரியோன் ; சால்பு-பெருமை.

"ஏமா னெனவஞ்சு மெற்காத் தலினவ் விரவிபொற்றேர்
வாமானின் வாழ்வன வாகபன் னுட்டஞ்சை வாணனென்னுர்
போமா னதரிடத் தென்னையர் தோன்றப் புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரகதமே".

[தஞ்சை. கோ. **365.**]

**உடன் போக்கிடையீடு முற்றும்.**

## 26. வரைதல்

[தலைவன் தலைவியை மணஞ்செய்து கொள்ளல்.]

**சென்றேன் மீண்டு வந்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல்**

(இது வெளிப்படை.)

**344.** எங்கு நிறைகுட மேந்த மணிவிளக் கேற்றநற்றூர்ப்
பொங்கு மலர்கள் புதுமணம் வீசப்பொன் மான்மருமந்
தங்கும் படிவந்த ரங்கன் பிரம்பை தழையவந்த
மங்கைதன் மங்கல மென்றெழுந் தார்க்கு மணமுரசே.

**குறிப்பு.**—நிறைகுடம்-பூர்ணகும்பம் ; பொன்மான்-இலக்குமி ; மருமம்-மார்பு ; இலக்குமியை மார்பில் தரிப்பதிதுமால் ; **ஆர்க்கும்-ஒலிக்கும்.**

**இரண்டாவது வரைவியல் முற்றிற்று.**

## III. கற்பியல்

### 27. இல்வாழ்க்கை

[தலைவனும் தலைவியுமில்லறம் நடத்துதல்.]

**தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல்**

[' உன்னுதவியானன்றோ யானிவளையடைந்தேன் ' என்று
பாங்கியைத் தலைவிமுன் தலைவன் புகழ்தல்.]

345. உள்ளக் கவலை யொழியக் கழிபே ருவகையொடும்
வள்ளக் குவிமுலை மாதொடு மெத்தையின் வைகினமா
லள்ளற் பழனப் பிரம்பூ ரரங்கனுக் கன்பினர்போற்
கொள்ளப் புரிந்த முயற்சியிவ் வாறெம்மைக் கூட்டியதே.

**குறிப்பு.**—வள்ளம்-கிண்ணம் ; மெத்தை-பஞ்சணை ; அள்ளல்-சேறு : பழனம்-வயல்.

**தலைவனைப் பாங்கி வாழ்த்தல்**

(இது வெளிப்படை.)

346. தெளித்தசொற் றப்பா வகைநின் புயத்திற் சிறந்தகண்ணி
யளித்திவள் பூங்குழ லேறச்செய் தூரெழு மம்பலெல்லா
மொளித்திட வென்கண் ணுகுபுனன் மாற்றிய வூரவென்றுங்
களித்த வரங்கன் பிரம்பூரின் வாழ்க கவின்சிறந்தே.

**குறிப்பு.**—தெளித்த - தேறுதலுரைத்த ; கண்ணி-மாலை ; குழல்-கூந்தல் ; அம்பல்-218-ம செய்யுள் காண்க. கண்ணுகுபுனல்-கண்ணீர் ; கவின்-அழகு.

" தேற்றிய வஞ்சினம் பொய்யா வகைநின் றிருப்புயத்தி
லேற்றிய தொங்க லிவள்குழற் கேற்றி யிலங்கிழையரர்
தூற்றிய பேரல ருந்தொலை யாவென்கண் சேர்புனலு
மாற்றிய வெம்பெரு மான்வாழி வாழி வளஞ்சிறந்தே "
[அம்பிகா. கோ. 434.]

**பாங்கி தலைவியை வரையு நாளளவும் வருந்தாதிருந்தமை வினுதல்**

(இது வெளிப்படை)

347. கானவ ரில்லிற் செறித்தவந் நாளுங் கடியயரத்
தானவ ருன்னைத் தனிவைத்த நாளுந் தழைத்திடுமன்
பானலந் துய்ப்ப தொழித்ததெவ் வாறு பசுந்தமிழ்க்கு
மீனவன் றென்பிரம் பூர்த்துரை ரங்கன்வெற் பாரமுதே.

**குறிப்பு.**—கானவர்-குறவர் ; கடி-மணம், காவல் ; நலம்-இன்பம் ; துய்ப்பது-அனுபவிப்பது ; மீனவன்-பாண்டியன், பசுந்தமிழை மீனவனைப் போலப் புரந்தவன் என்க. அவர்-தலைவர் ; வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிந்ததைக் குறிப்பிக்கக் ' கடியயர ' என்றார். கடி-காவலுமாம்.

" தினைக்காவன் மாறி மலைக்கும்வெம் போர்வெஞ் சிலைக்குறவர்
மனைக்காவ விற்றனி வைகிய நாளும் வரைவிடைவைத்
துனைக்கா தலர்விட் டுறைந்தவன் ஞளு மொளித்ததெங்கே
சுனைக்காவி யன்ன்கண் ணுய்தொலை யாநலந் துய்க்குமன்பே "

[அம்பிகா. கோ. 439]

### தலைமகள் வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை கூறல்

(இது வெளிப்படை)

348. முன்னு ளளித்தசெங் காவியுண் டாவியின் முற்றுமுற்று
நன்ஞண் மணஞ்செய்த நாண்மலர்க் காவுண்டு நன்மயிலே
என்னு மிரங்கல் பிரம்பூ ரரங்க னிருந்துறைவர்
புன்னுக நீழலி னெந்நாளு நெஞ்சிற் புகுதவுண்டே.

குறிப்பு.—அளித்த-தலைவன் கையுறையாக வளித்த ; முற்றும்-முழு வதும் ; அடுக்கு எஞ்சாமைப் பொருளில் வந்தது.

### பாங்கி தலைவனை வரையுநாளளவும் நிலைபெற வாற்றிய நிலைமை வினுதல்

(இது வெளிப்படை)

349. இன்பம் பெருக விவள்தன பாரத் திடைமுயங்கி
யன்பொன்று மாறுபெ ருவைக லெப்படி யாற்றல்செய்தீ
ரென்பு முருகப் பெருகுமக் காத லெழுந்துபொங்க
நன்பொன் மகிழு மரங்கன் பிரம்பைநன் ஞட்டண்ணலே.

குறிப்பு.—ஒன்றுமாறுபெரு-ஒன்றுதல்பெருத ; வைகல்-தினம் ; பொன்-இலக்குமி.

### மன்றல் மனை வரு செவிலிக்கு இகுளையன்புற வுணர்த்தல்

(மன்றல் மனை-கலியாண வீடு)

350. உன்மகள் கேள்வ னுடனு முயிருமொன் ருயிருக்குந்
தன்மையி னென்றித் தணந்தறி யாண்முத் தமிழ்வளர்க்கும்
பொன்முகி லென்னும் பிரம்பைரங் கேந்த்ரன் புகழ்க்கச்சியின்
நன்மல ருங்கமழ் நானமுஞ் சாந்து நயந்தணிந்தே.

குறிப்பு.—ஒன்றி-கூடி ; தணந்து-பிரிந்து ; பொன்முகில். புஷ்கலா வர்த்தம் என்னும் வகைமேகம் ; கச்சி-காஞ்சீபுரம் ; தன்மையினன்றி என்றும் பாடம்.

" ஓரிய லாவியும் யாக்கையு மென்னச் சிறந்தமையால் "

[திருச்சிற். கோ. 301]

**வாழ்க்கை நன்றென்றறைதல்**

(இவர் தம் இல்வாழ்க்கை நன்று என்று பாங்கி செவிலிக் குரைத்தல்)

351. தீம்பா லடிசிலுஞ் செந்தேன் பொதிந்த செழுங்கனியு
மாம்பா லனங்கொண் டமைத்தவில் வாழ்க்கை யகமகிழ்வுங்
கா்ம்பா னிரையழைத் தோன்பொரு ரங்கன் கவின்பிரம்பூர்
தாம்பாங் குறமனே மாண்பாகு மேன்மை தழைத்தனளே.

**குறிப்பு.**—அடிசில்-சோறு ; பாலனம்-உபசரித்தல் ; காம்பு-புல்லாங் குழல் ; நிரை : பசுக்கூட்டம் ; அழைத்தோன்-கண்ணன் ; பாங்கு-அழகு ; ' மாண்பாரு ' என்றும் பாடம்.

**மணமனைச் சென்று வந்த செவிலி பொற்றொடி கற்பியனற்றாய்க் குணர்த்தல்**

(பொற்றொடி : தலைவி ; கற்பியல்:கற்பின் தன்மை.)

352. சிற்றி லிழைத்து மணற்சோ றடுமத் திறமறிந்து
முற்றில் விடுத்தன்ப னின்புறும் வாழ்க்கை முறையினிற்கும்
பெற்றியு நல்விருந் தோம்புஞ் செயலும் பிறந்தறிவாற்
கற்றனள் ரங்கன் பிரம்பூ ரனையநின் கண்மணியே.

**குறிப்பு.**—சிற்றில்-சிறுவீடு ; அடுதல்-சமைத்தல் ; மறிந்து-நீங்கி ; முற்றில்-முச்சில் (சிறுமுறம்) ; பிறந்தறிவு-குலவிச்சை.

**நன்மனை வாழ்க்கைத் தன்மையுணர்த்தல்**

(தலைவியின் அழகிய இல்வாழ்க்கைத் தன்மையைச் செவிலி கூறல்)

353. இவ்வுல காளு மிரங்கன் பிரம்பை யிரும்பதியே
யவ்விய லூரன்னை நின்னையொப் பாளயில் வேல்பிடித்த
செவ்வியி னுனுன் கணவற்கொப் பாகுந் திறங்கருதி
னெவ்வ மிலாதன் னிகுளையு லாவுமென் போலிருந்தே.

**குறிப்பு.**—இயல்-இலக்கணம் ; அரங்கன் இரங்கன் என்றும் வந்தது. பிரம்பையிரும்பதியவ் வியலூரை நிகர்க்கும் ; எவ்வம்-குற்றம் ; இகுளை-தோழி ; நற்றாய்தலைவிக்கும், தந்தை தலைவனுக்கும், செவிலி தோழிக்கும் உவமை என்க.

" ............ .. ...... " நீயவ நிண்கொழு நன்செழுமென்
றண்டின மேவுதிண் டாளவன் யானவ டற்பணிவோள் "

[திருச்சிற். கோ.302]

**அன்னவர் காதலறிவித்தல்**

(அன்னவர்-தலைவன் தலைவியர் ; காதல்-அன்பு. அறிவித்தல்-செவிலி நற்றாய்க் கறிவித்தல்)

354. வேந்தன் கொடிநெடுந் தேர்புறத் தேகினு மீண்டுவரத்
தாழ்ந்தங் கொருவைக றங்கப் பொருது சததளமான்
காந்தன் பிரம்பைத் துரைரங்க பூபன் கனித்தமிழ்நாட்
டேந்திழை தானு மவனையல் லாத்தெய்வ மெண்ணலளே.

**குறிப்பு.**—வேந்தன்-தலைவன் ; புறம்-வெளி ; தாழ்த்து-தாமதித்து ; வைகல்-தினம். சததளமான்-இலக்குமி ; சததளம்-தாமரை ; காந்தன்-தலைவன் ; கனி-கன்னி ; " தெய்வந் தொழா அள் கொழு நற்றெரு [தெழுவாள் ".

(குறள் 55)

" அன்னவன் றேர்புறத் தல்கல் செல்லாது வரகுணனும்
..........அன்னளு மந்றேர் தெய்வ முன்னலளே "

[திருச்சிற். கோ. 306]

இல்வாழ்க்கை முற்றும்.

## 28 பரத்தையிற் பிரிவு

[பரத்தையின் இன்பம் நுகர்தற்குத் தலைவன் பிரிதல்]

**காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக் கேது விதாமவ் விறைவிக் கென்றல்**

[அங்ஙனம் தலைவன் பிரிந்த விடத்து அதனை யுணர்ந்தோர் இவன் இங்ஙனம் பிரிந்தது தலைவியின் ஊடற்குக் காரணமாம் என்றல்.]

**355.** தம்புன லூரன் பவனி வரமுகத் தண்மதியின்
பண்பெனச் செங்கைப் பதுமங் குவித்துப் பரவுநல்லார்
கண்களி கூர விழியாற் புணர்ந்தவிக் காதலெல்லா
மெண்பயில் ரங்கன் பிரம்பையன் னுடனிக் கேதுக்களே.

**குறிப்பு.**—பவனி-ஊர்வலம் ; பண்பு-தன்மை ; துனி-பிணக்கு.

**தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கல்**

(தனித்த விடத்துத் தலைவி துன்புமுற்று வருந்துதல் ; துனித்து-பிணக்குக் கொண்டு)

**356.** சீரார் பிரம்பைத் துரைரங்க பூபனைச் சேரலரி
னேராரு மூரன் கவரப் புழுங்கி யெழுந்தெழுந்து
வாரானை மெல்லணை யேதுணையாக வருந்தி நொந்தே
யாரா குலமுற் றுயிர்சோர் பவருள் ளறிவழிந்தே.

**குறிப்பு.**—சேரலர்-பகைவர் ; சேரலரிற் புழுங்கியெனக் கூட்டுக ; ஏர் : அழகு; ஆருமூரன்-இன்பம் நுகர்ந்த தலைவன் ; ' ஏரினை ஊரன் கவர ' எனக் கூட்டுக. வாரானை நொந்து எனக் கூட்டுக. ஆகுலம்-துன்பம் ; வாராரு மெல்லணையே துணையாக வருந்தி யென்போல் என்றும் பாடம். இச் செய்யுள் முதலடியை 365-ம் செய்யுள் முதலடியோடு ஒப்பிடுக.

" அப்புற்ற சென்னியன் றில்லை யுறரி னவருறுநோ
யொப்புற் றெழினல மூரன் கவரவுள் ளும்புறமும்
வெப்புற்று வெய்துயிர்ப் புற்றுத்தம் மெல்லணை யேதுணையாச்
செப்புற்ற கொங்கையர் யாவர்கொ லாருயிர் தேய்பவரே. "

[திருச்சிற். கோ. 354]

### இங்கிது வென்னெனப் பாங்கி வினுதல்

[இங்ஙனம் நீ துன்புறற்குக் காரணம் யாதென்று தலைவியைப் பாங்கி வினுதல்.]

357. வாளும் பரிசையுங் கொண்டொன் னலரை மறித்தவர்நீ
டோளுங் கவசமுஞ் சோடுந் துணித்திட்ட துங்கரங்கன்
ஆளும் பிரம்பையி லன்பன் பிரியா தகமகிழ்ந்து
நாளுமின் பந்தர வன்னே புலந்து நலிகுவதே.

குறிப்பு.—பரிசை-கேடகம்; ஒன்னலர்-பகைவர்; மறித்து-நீங்கி; சோடு-பாதரட்சை.

### இறைமகன் புறத்தொழுக் கிறைமகள் உணர்த்தல்

(புறத்தொழுக்கு-தலைவன் பரத்தை பாற் சென்றது.)

358. பாகங் கவுரிக் களித்தவர் போற்கரி பாய்ந்திடத்தன்
னுகந் தழீஇக்கொண் டணைத்திடு தோள்புறத் தாறொழுகின்
மோகந் தலைக்கொள்வ தன்றியுண் டோவணி மூசுகொடி
மாகஞ் செறிபிரம் பூர்த்துரை ரங்கன் வரைமயிலே.

குறிப்பு—கவுரி-உமை; பாகம் அளித்தவர்; சிவபெருமான். கரி-யானை; மூசுதல்-மொய்த்தல்; மாகம்-விண். புறத்தாறு-அறத்திற்குப் புறம்பாய வழி.

### தலைவியைப் பாங்கி கழறல்

(தலைவனுடைய குற்றத்தைக் கூறுதல்; கற்புடைமைக்குத் தகாதென்று பாங்கி தலைவியை யிடித்துரைத்தல்)

359. பொன்மாலைக் காலத் தமுதங் குமுதம் பொதியவிழ்க்க
முன்மா னுறவுண்ட வண்டுபின் காலையின் முன்னிவர
நன்மா மலர்தான் குவிதலுண் டோபெண்க ளுயகமே
யென்மா லுறுவ திரங்கன் பிரம்பையெய் தாரெனவே.

குறிப்பு.—பொன்மாலைக் காலம்-மஞ்சள் வெய்யிலாற் பொன்னிறம் பெற்ற மாலைக்காலம்; மால்-மயக்கம்; மாமலர்-கமலம்; 'மாலுறுவ தென்' எனமுடிக்க; எய்தார்-அடையாதார்.

" மாலைக் குமுத மலர்தருந் தேனுண்டு வண்டுவரக்
காலைக் கமலங் குவிந்தது வோ"

[அம்பிகா. கோ. 453.]

### செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி யவ்வணியுழையர் கண்டழுங்கக் கூறல்

[பூப்புற்றதை யறிவித்தற்குச் செம்மலர் முதலியவற்றை யணியச் செய்து ஒருத்தியைப் பரத்தை பாலிருக்குந் தலைவன் பால் விடுத்த பொழுது அதனைக் கண்ட அயலார் வருந்திக் கூறல்]

360. கைம்மா றுளத்திற் கருதா தளித்திடு கன்னன்கற்றோர்
தம்மா குலந்தீர்த் தருள்ரங்கன் பொங்குந் தமிழ்ப்பிரம்பை
யிம்மா னிதழன்றி யெங்குஞ் சிவக்கு மிணர்முடித்தார்
சும்மா வலர்தொடுப் பார்க்கிது தானென்று தோன்றியதே.

**குறிப்பு.**—இம்மான்-சேடி ; இதழ்-உதடு ; இணர்-பூங்கொத்து ; இச்செய்யுள் முதலடியை 286-ம் செய்யுள் முதலடியோடு ஒப்பிடுக. " .......... .................... சங்கந் தந்தநன்னீர்த்

தோளா மணியன்ன தொல்குல வோடையிற் றோன்றியபூ
வாளா வலர்தொடுப் பார்க்கெங்ங னேவந்து வாய்த்ததுவே "

[தஞ்சை. கோ. 382]

**பரத்தையர் கண்டு பழித்தல்**

[பரத்தையர் செவ்வணியைக் கண்டு பழித்தல்]

**361.** ஊரன் றிருந்திழை யுண்மையைப் பெண்மை யுருப்படுத்தி
நீரின்று செய்வது நீதிய தோநெட் டிலைக்கழைவில்
மாரன் பிரம்பை வரோதயன் ரங்கன் வளம்பதியிற்
காரொன்று கூந்தற்கு நாணம் வெளிநிற்கக் கண்டனமே.

**குறிப்பு.**—ஊரன்-தலைவன் ; திருந்திழை-தலைவி ; உண்மை-பூத்தமை ; பெண்மையுருப்படுத்தல் - செவ்வணியணிந்து தோன்றல் ; நீர்-சேடியரை நோக்கிக் கூறியது. நெட்டிலைக்கழை-கரும்பு ; காரொன்று-மேகத்தைக் கருமையில் நிகர்க்கும். நாணம் வெளி நிற்றல், இன்மையைப்புலப்படுத்தும்.

**தலைவன் வரவுகண்டு வந்துவாயில்கள்மொழிதல்**

(உவந்து-களித்து ; வாயில்கள்-பாங்கியர் முதலானோர்)

**362.** செவ்வாய்க் கருங்கட் பெரும்பணைத் தோட்சிற் றிடைதுயர
மவ்வா றறிந்திங் கணைந்தமை யாற்கஞ்ச னன்றுவிட்ட
மைவா ரணம்வென்ற மால்ரங்க பூபன் மகிழ்பிரம்பை
மெய்வாழ்வு கூரரிச் சந்திர னேசொல்லின் மெல்லியலே.

**குறிப்பு.**—முதலடியில் தொடை முரண் ; சிற்றிடை-தலைவி ; கஞ்சன்-கம்ஸன் ; வாரணம்-யானை ; அரிச்சந்திரன்-சத்தியவான்.

**தலைமகன் வரவுபாங்கி தலைவிக குணர்த்தல்**

(இது வெளிப்படை)

**363.** அன்பன் புறஞ்சென் றகமெய்த வெய்துயிர்த் தல்லறமும்
அன்பு மருளு மழகுமன் றேகொன்றை யங்குழல்கொண்
டின்பம் விளைத்த விரங்கன் பிரம்பை யிளமயிலே
யின்பம் பெருக வெதிர்கொள்ளு மாறுமக் கேற்புடைத்தே.

**குறிப்பு.**—புறம்-பரத்தையர் சேரி ; அகம்-வீடு ; கொன்றையங்குழல்-கொன்றைக்காயினுற் செய்த புல்லாங்குழல்.

" கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ "

[சிலப். ஆய்ச். பாட்டு. 3-ம் அடி]

" கொன்றைத்தீங்குழல் "

(கலி. 106.)

"புறத்தா ரெருழுகி வரினுமிப் போது புகையுயிர்த்த
லறத்தாறு மன்பு மருளுமன்றே"

[அம்பிகா. கோ. 457].

### தலைவனைத் தலைவியெதிர்கொண்டு பணிதல்

[இது வெளிப்படை)

364. பாங்கிற் சிறந்த பிரம்பைரங் கேந்த்ரன் பசும்பொன்வெற்பா
நீங்கிற் பசலை நிறைகுவ தாமொளிர் நேரிழையே
யீங்கற் புதமுற் றெதிர்கொண் டிடாம லிருப்பதுண்டோ
கோங்கிற் பொலிந்திடு கொங்கையம் மார்பிற் குளித்திடவே.

**குறிப்பு.**—பாங்கு-பண்பு ; பசலை-தேமல் ; கோங்கு-கோங்கரும்பு, அற்புதம்-பரவசப் படுதலான்.

### புணர்ச்சியின் மகிழ்தல்

(இது வெளிப்படை)

365. சீரார் பிரம்பைத் துரைரங்க பூபன் றிருநகரிற்
பேராத காதற் ரவாகங்கொண் டுய்த்திடப் பெண்ணரசு
மோராரு மூரனு நாரியொர் பாக னெனவொருப்பட்
டாராத வின்பக் கடலூ டமுந்தின ரன்புகொண்டே.

**குறிப்பு** :—இருவர் ஒருடலாயின்மையின் நாரியோர்பாகன் உவமை என்க ; நாரியொர்பாகன்-உமாமஹேசுவரன் ; இச்செய்யுள் முதலடியை 356-ம் செய்யுள் முதலடியோடு ஒப்பிடுக.

இதுவரை உணர்த்த வுணரும்ஊடல் கூறப்பெற்றது.

### வெள்ளணியணிந்து விடுத்தல்

(புதல்வன் பிறந்தமையைத் தலைவற் குணர்த்தக்கருதி வெண்மலர் முதலிய வணியச் செய்தொருத்தியைத் தலைவி தலைவன் பால் விடுத்தல்.)

366. கலைமா தெனவெண் டுகிறரி மாதர் கமழுமுல்லை
தலைமீது சூடிமுத் தாரம் புனைந்துமைந் தன்னுதய
நிலைதான் மகிழ்நர்க் குரைக்கமுன் னேடினர் நீண்டவெற்றிச்
சிலைமாது சேர்புய ரங்கன் பிரம்பைத் திருநகர்க்கே.

**குறிப்பு.**—கலைமாது-சரஸ்வதி ; வெற்றிச்சிலைமாது-(சிலை-வில்) வீரலக்ஷ்மி ; இஃது துறைப்பாட்டு, ஆசிரியன் கூற்றுதலின். உரைப்போரும் கேட்போரும் இன்றிக் கவிக்கூற்றாய் வரும் செய்யுள்கள் துறைப்பாட்டு என்க.

### மாலை வேலண்ணல் வாயில் வேண்டல்

(வெள்ளணியணிந்து வந்த பாங்கியை நோக்கித்தலைவன் 'யான் தலைவியைக் காணற்கு நீ தூதாகவேண்டு'மென்று வேண்டல்.)

367. பொன்னே குறையை மறந்தெதிர் கொள்ளப் புலவியெல்லா
மின்னே தணியமுன் னேசென் றுரைப்ப தியல்புனக்காந்
தன்னேயம் வைத்தொரு மாலை வளைத்த தலைவளைப்பாய்
மன்னேமி கொண்ட வரங்கன் பிரம்பை வளர்மயிலே.

**குறிப்பு.**—பொன்-தலைவி; தன்னையும் வைத்தொருமாலை வளைத்த தலைவளைப்பாய்:அங்ஙனஞ் செய்யச சம்மதித்தமைக்கு அறிகுறியாகச் சரி யெனத் தலையசைப்பாய் என்று கூறினன்; மன்நேமி-நிலைபெற்ற ஆஜ்ஞா சக்கிரம். 'வரைமயிலே' என்றும் பாடம்.

### தலைவி நெய்யாடிய திருவை சாற்றல்

(தலைவிபுனிறுதீர்ந்து எண்ணெய் முழுக்காடியதைத் தலைவனுக்குப் பாங்கி தெரிவித்தல்.)

368. புன்னலங் காட்டிப் பொர்ருணலங் கொள்ளும் பூவையர்தஞ்
சொன்னலம் விட்டுன் பரிக்கா றிரும்பவுந் தோன்றியதா
லந்நெடு மாலெனும் ரங்கன் பிரம்பையன் னுள்புதல்வன்
றன்னைமுன் னீன்றமெய் யாறநெய் யாடின டான்மகிழ்ந்தே.

**குறிப்பு.**—புன்னலம்-அற்பசுகம்; பூவையர்-பரத்தையர்; பரிக்கால் இரதத்தில்கட்டிய குதிரையின் கால்கள்.

### தலைவன்றன் மனத்துவகை கூர்தல்

(உவகை கூர்தல்-களிப்புமிகுதல்)

369. நண்ணுந் தவமுடை யேனென்று காண்பெ னகைநிலவின்
வண்ணந் தரவுண் மகிழ்வு மமுதம் வழியமக
உண்ணுங் கனதன பாரமு மொண்பச் சுடம்பும்ரங்க
னெண்ணும் பிரம்பை யிடத்தவர் தண்ணென் றிருப்பதுமே.

**குறிப்பு.**—வண்ணம்-நிறம்; பச்சுடம்பு-ஈன்றணிமை பொருந்திய உடம்பு.

" செய்யுந் தவமுடை யேன்சென்று காண்குவல் செவ்வியெழின்
மையுண் குவளை மடங்கெழு நோக்கும் மனமகிழ்வுங்
கையுங் குழவியுந் தீம்பா லெறிக்குங் கனதனமு
நெய்யும் பசந்து நிலவெழு மேனியு நீர்மையுமே."

[அம்பிகா. கோ. 465.]

### தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல்

(அவன்:தலைவன்; சாற்றல்:கூறுதல்).

370. சாயனு மார்பிடந் தாங்கொண்டு பால்சோர் தடமுலையுங்
காயலின் முத்த முறுவலுன் னன்புமுன் காணவராய்
பாயலிற் கண்வளர் ரங்கன் பிரம்பைப் பதியினன்பர்
வாயிலில் வந்துநின் றுரறி யேனின் மனக்குறிப்பே.

**குறிப்பு.**—'காணவந்து நின்றார்' எனக்கூட்டுக. காயல்-காயற்பட்டினம்; ஒரு முத்துக் குளிக்குந் துறைமுகம்; அராப்பாயல்-சர்ப்பசயனம்.

" மருவார் குழலி வருந்திய மெய்யு மகவுங்கையும்.
பருவார் முனிந்த பயோதர பாரமும் பச்சுடம்பு
மொருவாத வுள்ளத் துவகையுங் காணநம் மூரர்நின்பொற்
றிருவாசல் வந்துநின் றுரறி யேனின் றிருவுள்ளமே".

[அம்பிகா. கோ. 466.]

### தலைவியுணர்ந்து தலைவனொடு புலத்தல்

(புலத்தல்-ஊடுதல்.)

371. தெம்முனை வென்ற வரங்கன் பிரம்பைத் தருவனையாய்
அம்மதி போல்வளர் சேயைக்கொண் டிங்கினி யாற்றுவெம்யாம்
அம்மது வார்குழற் பூவையர் சேரன்ப ராகமதி
லெம்முலைப் பால்படி னன்னவர் சூழ்குறி யேகுமின்றே.

குறிப்பு.—தெம்முனை : பகைப்புலம் ; அம்மதி-அழகிய மதி, வளர் பிறை. ஆற்றுவெம் : தலைவன் பிரிவையாற்றுவம் ; ஆகம்-மார்பு, 'அம்மது வார்குழற் பூவையர் சேரி செலன்பனுரம்' என்றும் 'எம் முலைப்பாரம் படிளவர் சூழ்குறி' என்றும் பாடம். குறி : மார்பில் பரத்தையர் செய்யும் நகக்குறி முதலியவை.

" ...................... ........
யாம்பா லனைக்கொண் டினிவைகல் போக்குது மெம்முலையிற்
றீம்பால் படிலவர் செய்குறி மார்பிற் சிதையுமன்றே ".

[அம்பிகா. கோ. 471.]

### பாணன் வாயின் மறுத்தல்

(தூதாக வந்த பாணனைக் கண்டு தலைவி வெகுண்டு கூறு நிற்றல்.)

372. வேசிதன் பாலுற வென்கொலென் றன்பனின் மெய்யனெனப்
பேசிலுண் டோரங்கன் மெய்ப்புகழ் பாடி ப்ரதாபிக்கினும்
ஊசிகொண் டேபிரம் பூரிற் சொற் சேரியி னுற்றுவிற்று
வாசிகண் டேபொய்கொள் பாணு வடாதுன் வசனங்களே.

குறிப்பு.—இச் செய்யுள் உலக வழக்கு நவிற்சியணி. "கொல்லத் தெரு வினூசி விற்றல" என்னும் உலக வழக்கும் காண்க.

" வைகொண்ட வூசிகொற் சேரியின் விற்றெம்மில் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றேபுலை யாத்தின்னி போந்ததுவே ".

[திருச்சிற். கோ. 386.]

" யான் உண்மையை அறிந்திருக்கவும் என்னிடம் நீ வந்து பொய்ம் மொழிகள் கூறி என்னை ஏமாற்ற நினைப்பது தகாது " என்றவாறு.

### விருந்தொடு வந்துழிப் பொறுத்தல் கண்டு தலைமகன் மகிழ்தல்

(வந்துழி-தலைவன் வந்துவிடத்து.)

373. அறியா விருந்தென் றிடுமருந் தொன்றிங் ககமகிழ
மறியார் விழிதுனி மாற்றும் பொருட்டின்று வாய்த்ததுமே
னுறியாரும் வெண்ணெய் கவர்ந்துண்ட மால்பிரம் பூரிற்கற்றோர்
பிரியாத வன்புகொள் ரங்கனெங் கோனிற் பெரிதுவந்தே.

குறிப்பு.—அறியாவிருந்து : குறியாது வந்த விருந்து, முன்பின் அறி யாத விருந்து. மறி-மான் ; துனி-ஊடல் ; வாய்த்தது-கிடைத்தது.

" .................................................முகமறியா
விருந்தொன்று வேறென்றின் மீளா விருந்துனி மீட்கநல்ல
மருந்தொன்று வந்திங்ஙனமன மேவந்து வாய்த்ததுவே ".

[அம்பிகா. கோ. 492.]

### ஒளித்த வூடல் வெளிப்பட நோக்கித் தலைவன் சீறேலென்றவள் சீறடி தொழுதல்

(விருந்தொடு வந்தபொழுது மறைந்திருந்த வூடல் பள்ளியிடத்து வெளிப்பட்டபொழுது தலைவன் கோபியாதேயென்று தலைவியின் சிறிய பாதத்தை வணங்குதல்.)

374. உற்ற கலாமின்ன தென்றுரை யாம லுடையொடுக்கிப்
பெற்ற கலாபம் புறஞ்சூழ் தரப்புணை பேணும்வள்ளல்
நற்றமிழ் தேரும் பிரம்பூ ரரங்க னகரனைய
பொற்றொடித் தாமரைத் தாள்சூட்டக் கண்கள் புயலொத்தவே.

**குறிப்பு.**—கலாம்-கலகம் ; கலாபம் : இடையணி ; புணை-அடைக்கலம் ; கண்கள்-தலைவியின் கண்கள் ; புயலொத்தவே : நீர்மல்கின.

" படர்ந்த கலாமின்ன தென்றுரை யாமற் பயிலமளி
கடந்த கலாபங் கலைபுறஞ் சூழக் கதந்தணியத்
தொடர்ந் தகலாத துணையடித் தாமரை சூடவள்ளல்
மடந்தை பொருதென்செய் வாள்மலி நீர்கண்கண் மல்கினளே ".

[அம்பிகா. கோ. 494.]

### ஈதெங்கையர் காணினன்றன் றென்றல்.

(நீ என்னடி பணிதலைப் பரத்தையர் காணில் உனக்குத் தீங்கு விளைப்பரென்று தலைவி கூறுதல். ஈது : இவ்வடிபணிதல், எங்கை : என் தங்கை. தலைவனுக்குரிய பரத்தையரை எங்கையர் என்று தலைவி கூறுவது மரபு.)

375. அலவ னுலாவுந் துறைபோன் மனங்கொண்டணுகு மன்பா
விலகு முடிக்கொண்ட செங்கையு மென்னடி மேற்செங்கையுங்
குலவுத றன்னை யரங்கன் பிரம்பையங் கோனகரி
னிலவிடு மெங்கையர் கண்டாலிஃ தென்னென்று நேருவரே.

**குறிப்பு.**—அலவன்-நண்டு, அலவனுலாவுந் துறைபோல் மனங்கொள்ளுதல் : கரந்துபுறத்தொழுகுதல் ; விலகுதல்-விளங்குதல் ; எங்கையர்-பரத்தையர்.

" தொடிவைத்த செங்கை யலவ னுலாவுந் துறைசெய்ததோர்
வடிவொத்த சிந்தை மலிபுன லூர ".

[அம்பிகா. கோ. 495.]

பிறரைக் கண்ட வழித்தன் வளைக்குட் புகுவதும் காணவழி யதேச்சையாய்ப் புறம்பே திரிதலும் நண்டின் இயல்பாம். தலைவனும் தலைவியறியும் வழிப் புறத் தொழுக்கம் இல்லாதோன் போன் றொழுகுதலும் அறியா வழிப்

புறத்தா றெழுகுதலுமுடையான். இங்ஙனம் கரந்தொழுகும் புறத் தொழுக்கம் பற்றி நண்டு தலைவற் குவமை. அங்ஙனங் கரந்தொழுகும் அலவனைக் காணுவழியும் அது சென்ற இடங் கடோறும் அதன் அடிச் சுவடுகள் புலனாகி அதன் புறத்தொழுக்கம் வெளிப்படுவது போலத் தலைவன் புறத்தொழுக்கமும் பலசான்றுகளான் வெளிப்படும். அலவனு லாவுந் துறையதன் புறத் தொழுக்கைச் சுவடுகளான் வெளியிடுமா போல, தலைவன் மனமும், அகத்தினழகு முகத்திற் றெரியு மாற்றான், முகக் குறிகளான் அவன் புறத் தொழுக்கினைப் புலனாக்குதலின் அவன் மனம் அலவனுலாவுந் துறை போன்றது.

அங்கவர் யாரையு மறியேனென்றல்

(நீ குறிக்கும் பரத்தையர் யாரையும் யானறிந்திலேன் என்று தலைவன் கூறல்.)

376. துங்கப் புயாசல ரங்கன் பிரம்பைச் சுடர்த்தொடியே
யிங்குற்ற நின்றுனி மாறுமா னீளுதற் கென்செய்குவேன்
கங்கைத் துறைவிட் டுவரா ழியையனங் கைக்கொளுமோ
திங்கட் கொழுந்து பொருமெழில் வாணுதற் சேயிழையே.

**குறிப்பு.**— துங்கம்-உயர்வு, திங்கட் கொழுந்து-பிறை, துனி-முதிர்ந்த ஊடல்.

"மன்னும் புலவியை மாற்றியுந் தேற்றியும் வல்லவண்ணம்
மின்னந் தெளியிலை யென்னையென் னேயென்செய் கேனிதற்கு
முன்னம் படிந்து முழுகுநன் னீர்க்கங்கை முன்னுறைநீத்
தன்னம் படியுங்கொல் லோவுவ ராழியி லாரணங்கே".

[அம்பிகா. கோ. 478.]

காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்

(உம்முடைய காமக் கிழத்தியை யனறிந்தேன் என்பதைத் தலைவி தலைவனுக்குக் கூறுதல்.)

377. ஆசங்கை யுற்றுன் மகன்கடைக் கண்விளை யாடக்கண்டு
பூசுங் களப முலையாரப் புல்லுமப் போதுகண்டியான்
நேசம் புரியுன் மகன்று னெனவெட்கி நென்னற் சென்றுள்
வாசங் கமழ்தொங்கல் ரங்கன் பிரம்பை மறுகிடத்தே.

**குறிப்பு.**—ஆசங்கை-ஐயம் கடைக்கண்-தலைவாயிற்கடை ; தொங்கல் : மாலை. மறுகு : வீதி. நென்னல்: நேற்று; போது கண்டியான்-குற்றியலிகரம் அலகு பெறுதது.

தாமக்குழலியைப் பாங்கி தணித்தல்

(தணித்தல்-ஊடலை யாற்றுதல்.)

378. கண்ணன் கமலை யிருக்கவுஞ் செம்பொற் கலசமுலை
நண்ணுமக் கோபியர் தம்மொடுங் கூடி நயப்பக்கண்டு
முண்ணயந் தன்புற் றிருந்ததல் லாற்பிறி தொன்றுளதோ
அண்ண லரங்கன் பிரம்பை விரும்புமென் னாரணங்கே.

**குறிப்பு.**—கண்ணன்-கிருஷ்ணன் ; கமலை-இலக்குமி ; 'கோபியரோடு விளையாடிய கண்ணனைத் திருமகள் பொறுத்தவா போல நீயும் பரத்தையரோடாடிய தலைவனைப் பொறுத்தல் வேண்டும்' என்க. இச் செய்யுள் பிறிது மொழிதலணி.

**தலை மகள்தணியாளாகத் தலைமகனூடல்**

(இது வெளிப்படை.)

379. மைவண்ணங் கொண்ட கொடைச்செங்கைத் துங்கனிம் மாநிலத் [தோ
ருய்வண்ணஞ் செய்யும் பிரம்பூ ரினைச்சென் றுறுதவரின்
மெய்வண்ணங் கொண்டனை யாண்டன்பு பூண்ட விதம்பிறிதா
யிவ்வண்ண நீர்வஞ்ச முற்றேரே வருத்துவ தின்னமுதே.

**குறிப்பு.**—மை-மேகம் ; வண்ணம் : தன்மை ; துங்கன் : பரிசுத்தத் தான் வரும் மேன்மையுடையான் ; பாட்டுடைத்தலைவன். மெய்-உண்மை.

**பாங்கி யன்யிலை கொடியை யென்றுஇணர்த்தார் மார்பனையிகழ்தல்.**

(இணர்த்தார் மார்பன்-மாலையையணிந்த தலைவன்.)

380. வேறொரு தெய்வ முனையன்றிக் கண்டறி யாவிதங்கூர்
சீறடிப் போதக லல்குற்கு நீயித் திறஞ்செய்வதோ
வீறுயர் கீர்த்தி யரங்கன் பிரம்பை விளங்குநல்லார்
தேறிட வின்னு முலைமுகந் தோறுந் திளைத்திசென்றே.

**குறிப்பு,**—கூர்தல்-மிகுதல் ; அல்குல் : ஈண்டுத் தலைவி. திறம் : வகை. நல்லோர்-பரத்தையர் ; திளைத்தி : அனுபவிப்பாயாக.
இதுவரை முதியகலாமாகிய வுணர்த்த வுணரா வூடல் கூறப்பெற்றது.

**ஆயிழை மைந்தனும்ஆற்றுமையும் வாயிலாக வரவெதிர் கோடல்**

(தனதாற்றுமையும்மகனும் வாயிலாகத் தலைவன் வரத் தலைவி யேற்றுக் கொள்ளுதல். ஆயிழை : தலைவி ; ஆற்றுமை-மனம் பொறுமை.)

381. பாயும் பெரும்புனல் வெள்ளம் பரந்த படிவிரக
மேயுந் திறமுறி னும்பெரி யோரிழி பெண்ணுவரோ
ஆயுந் தமிழ்புனை ரங்கன் பிரம்பையி னுரமுதின்
வாயுமென் கோமள மேயன்பர் காமஞ்சொல் மார்க்கமன்றே.

**குறிப்பு.**—ஏயுந்திறம் - பொருந்தும் விதம் ; அமுதின் - அமுதத்தைப் போல் ; 'இன்' என்னும் ஐந்தனுருபு ஒப்புப் பொருள் ; வாயும்-பொருந்திய ; கோமளம்- மைந்தன்.

"வெள்ளம் பரந்தன்ன வேட்கைசென் றுனு மிகப்பெரியோ
ருள்ளஞ் சிறியவர் மேற்சொல்லு மோ"

[தஞ்சை. கோ. 404].

### மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடு இணங்கின மைந்தனை யினிதினிற் புகழ்தல்

(இணங்கின-வாயிலாகவுடன் வந்த).

382. பெற்றவர் தங்கட் கிருமையுஞ் செய்யுமப் பெற்றிமைந்த
னுற்றவிப் போது நமக்கொரு மைக்க ணுவந்துதந்தான்
நற்றமிழ் தேரும் பிரம்பூ ரரங்கனன் னுடளிக்குங்
கொற்றவ னைப்பெருந் தேருடன் மெய்யன்பு கூர்ந்திடவே.

**குறிப்பு.**—இருமை-இம்மை, மறுமை ; பெற்றி-தன்மை ; ஒருமை-இம்மை.

" இருமையி லேயும் பயன்களெல் லாந்தன்னை யீன்றநமக்
கொருமையி லேவந் துறத்தகைந் தான்மைந்த னெண்சுடர்போல்
வருமயி லேகொண்டு மாதடிந் தானன்ன வாணன்றஞ்சைத்
திருமயி லேயனை யாய்புன லூரனைத் தேருடனே."

[தஞ்சை. கோ. 405].

### தலைவி தலைவனைப் புகழ்தல்

(இது வெளிப்படை)

383. காந்தனிற் றுன்னிய கேளிர்மற் றியாரெனக் காதலிக்க
வாய்ந்திடு மாண்புமெய் வாணியு நீணில வைப்பிற்கண்டேன்
பூந்தவி சென்னத் திருவூர் தருபிரம் பூரரங்க
னேய்ந்தநன் னுடரு முன்னீர்மை தாழா திருந்தனரே.

**குறிப்பு.**—காந்தன்-தலைவன் ; கேளிர் : உறவினர். மாண்பு-மாட்சிமை ; மெய்வாணி-உண்மைப்புலவர் தம்மொழி. நாடர்-தலைவர். முன்னீர்மை-பழைய தன்மை.

" கொண்டானிற்றுன்னிய கேளிர் பிறரில்லை " [நான்மணி. 57.]

" கொண்டானிற் றுன்னிய கேளிர்மற் றில்லைக் குறிப்பினென்று
தண்டா தவர்சொன்ன சால்பு கண்டேன் " (தஞ்சை. கோ. 406)

### பாங்கிதலைவியைப் புகழ்தல்.

(இது வெளிப்படை.)

384. காதலன் செய்த குறையைத் தனையுங் கருத்தின்வைக்கா
தேதலை வன்வந் திடவெதிர்ந் தாள்குல வேற்றமிக்கா
ளாதலி னுற்கற்பின் மேம்பாடு கூறற் களவுறுமோ
சீதர னென்று மரங்கன் பிரம்பைத் திருவனையே.

**குறிப்பு :**—சீதரன் : இலக்குமியை மார்பிலே தரித்திருப்பவன் ; திருமால். திருவனை : திரு அன்னை. 'கூறற்கு அளவுறுமோ' என்க. இதுவரை ஊடலொழிபு கூறிற்று என்று கொள்க.

பாத்தையிற் பிரிவு முற்றும்.

## 29. கல்விவயிற் பிரிவு

[தலைவன் கல்வி காரணமாகப் பிரிந்து செல்லல். தலைமகன் எவ்வாற்றானும் தலை சிறந்தவன் என்பது கொள்கை. இனி இவன் கற்கவேண்டும் ஆயின், களவொழுக்கத்திற்கு முன்பு இவன் முழுஞானம் இல்லாதவன் என்பதாமோ எனின்; ஆகாது. இவன் புதிதாக ஒன்றைக் கற்க வேண்டிப் பிரிவதன்று இப்பிரிவு. தான் கற்றகல்வி யெல்லாம் கற்று உயர்ந்த பிறரை நாடி அவரோடு வாதிபடுத்தன் ஞானத்தை மேற்படுத்து அவர் ஞானத்தைக் கீழ்ப்படுத்தற்கு இவன் பிரியும் பிரிவு இது என்று கொள்க.]

### கல்வி வயிற்பிரிவு பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்

(தலைவன் கல்வி காரணமாகப் பிரிந்து செல்லுதலைப் பாங்கி தலைவிக்குக் கூறுதல்.)

385. இருமையு நல்குமுன் காதலன் கல்வியி னெல்லைசெய்ய
வொருமையிற் கற்றோ ரெழுமையு மேரரு ளூற்றிடுவான்
பெருமையின் மிக்க வரங்கன் விரும்பும் பிரம்பையிடத்
தருமையிற் போந்தன னேந்திழை மாமுலை யாரமுதே.

**குறிப்பு.**—இருமை : இம்மை, மறுமை. எல்லை : முடிவு. ஒருமை : இம்மை. ஓர் எழுமை : எழுபிறப்பு. வான் : வினையெச்ச விகுதி. அருமை : பிரிவதற்கருமை.

### கல்வி வயிற் யிரிந்துழித்தலைவி கார்ப்பருவங்கண்டு வருந்தியது

(கார்ப்பருவம் : ஆவணி, புரட்டாசி மாதங்கள்.)

386. கல்விப் பொருள்செய் தெனக்கள வாவின்பங் காட்டுதற்காச்
சொல்வித் தகஞ்செய்து சேணகன் றாரின்னந் தோன்றிலரான்
மல்லுற்ற திண்புய ரங்கன் பிரம்பையெண் மாதிரத்துஞ்
சொல்லுற் றதிர்ந்து குமுறிவில் விட்டது செல்லினமே.

**குறிப்பு.**—செய்து : படைத்து, சொல் வித்தகஞ் செய்து : தந்திரமொழி பேசி. எண் மாதிரம் : எட்டுத்திக்கு. செல்லுற்று : சென்று. செல் : மேகம்.

### கார்ப்பருவங்கண்டு மயங்கிய தலைவியைத் தோழி ஆற்றுவித்தது

(கார்ப்பருவம் : ஆவணி, புரட்டாசி மாதங்கள்.)

387. கொண்டலெண் டிக்குறச் சிந்தா குலமனங் கொண்டுகைசோர்
வண்டுகண் டிப்பொழு துன்கண் கலுழ்ந்து வருந்துவதென்
பண்டடங் கப்பகி ரண்டமுண் டோன்பதத் தன்பர்திண்டேர்
கண்டதண் டர்க்கிறை ரங்கன் பிரம்பைக் கடிநகர்க்கே.

**குறிப்பு.**—கொண்டல் : மேகம். வண்டு : வளை. பண்டு : முன். உண்டோன் ; கண்ணன். அண்டர் : தேவர், இடையர் நகர்க்கு : வேற்றுமை மயக்கம்.

கல்விவயிற் பிரிவு முற்றும்.

## 30. காவற் பிரிவு.

(தலைவன் நாடு காத்தற் பொருட்டுப்பிரிதல். இவன் நாட்டைப் பிறர் புகுந்து நலிதல் உண்டெனின் இவன் ஆண்மைக்குறைவும் மதிப்புக்குறைவும் உடையன் என்பதாம் ; அற்றன்று. புறத்தார் நலியும் நலிவை நீக்கச் செல்வான் என்பதன்று நாட்டவர்களுள் அரசன் முன்னிலையில் வந்துமுறைசெய்ய மாட்டாதவர்களுடைய முறைக் கருமம் கேட்டுத்திருத்துதல் பொருட்டாகவும், தேவர்குலம், சாலை, அம்பலம் முதலிய பொது இடங்களை ஆராய்தற் பொருட்டாகவும் இவன் பிரிவன் என்று கொள்க. அவ்வாறு அரசர் முன்னிலையில் வந்து முறை செய்யமாட்டாதவர்கள் மூத்தோரும், பெண்டிரும், முடவரும், கூன், குருடு முதலியோரும் ஆவர். குடிஜனங்கள் தம்மையாளும் மன்னரைக் காண விழைவது இயல்பாதலின் அப்பொருட்டும் பிரிவன் என்க.)

**காவற் பிரிவு பாங்கி தலைவிக் கறிவுறுத்தல்**

(இது வெளிப்படை.)

388. மன்னுயிர் காக்கு மரங்கன் பிரம்பை வரோதயன்போ
லின்னுயிர் காக்கவு மாதுலர்க் கீயவு மேதிலர்சூழ்
அன்னிலை நீக்கி யறப்புறங் காக்கவு மன்ப ரெண்ணி
முன்னுறு கேண்மை வளரச்சென் றுரின்று மொய்குழலே.

**குறிப்பு.**—ஆதுலர் : யாசகர். அல் நிலை : பாவத்தின் நிலைமை.

"அல்லவை நீக்கி யறப்புறங் காக்கவும்" (அம்பிகா. கோ. 519.)

"அல்லவை தேய அறம்பெருகும்." (குறள். 96)

**காவல் வயிற் பிரிந்துழித்தலைவி கூதிர்ப் பருவங் கண்டு வருந்தியது**

(கூதிர்ப்பருவம் : ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்.)

389. கோடை யொழியக் கருங்கொண்டல் பெய்த குறுந்துளியை
வாடை சிதற வளருங் குளிர்நாண் மறப்பர்கொலோ
வோடை மதகளி றூருந் துரைபிரம் பூரின்வைகி
மாடை வழங்கு மரங்கன் விரும்புநன் மன்னவரே.

**குறிப்பு.**—குளிர் நாள் : குளிர் காலம். ஓடை: யானை முகத்தில் அணியும் அணி. மாடை : செல்வம்.

**கூதிர்ப்பருவங் கண்டுவருந்திய தலைவியைத் தோழி யாற்றுவித்தல்**

(கூதிர்ப்பருவம் : ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்.)

390. முறைகொண்டு காக்கும் பிரம்பூ ரரங்கன் மூதுபதிக்கண்
கறைகொண்ட வேற்செங்கை நங்கோன் மருவலர் கண்டுபனி
திறைகொண் டவர்மணிச் சின்னங்கொண் டன்னோர் சிறந்தகுடி
யிறைகொண்டு திண்டேரி தோவந்து தோன்றிய தேந்திழையே.

**குறிப்பு.**—மருவலர் : பகைவர். திறை : கப்பம். குடியிறை : வரி. விரைவுபற்றித் 'தோன்றியது' என்று இறந்த காலத்தாற் கூறினர்.

**காவற் பிரிவு முற்றும்.**

## 31. தூதிற் பிரிவு

(இரு வேந்தரைப் பகை தணிவித்து நட்பாக்குதற்குத் தலைவன் தூதாகச் செல்லுதல். இவன் பகையரசர் இருவரைச் சந்து செய்வதற்குப் பிரிவன் எனின் இவன் பிற மன்னர் தம் ஏவல் கேட்கும் பணியாளனே என்னும் ஐயமுண்டாகும்; அற்றன்று; தூதுவர் போலச் சந்து செய்வித்தற்குப் பிரிபவன் அல்லன் இவன். பகையரசர் இருவரிடத்தும் கருணை மிகுந்த உள்ளத்தன் ஆதலின் அவரை நல்வழிப்படுத்திப் போர் வீரர், விலங்குகள் முதலிய உயிர்களைக் காத்தற்பொருட்டுப் பிரிவன் என்பது.)

**தூதிற் பிரிவு தலைவிக்குப் பாங்கியறிவுறுத்தல்**
**(இது வெளிப்படை.)**

**391.** இருமன்னர் தம்மிகல் கொண்டுவெம் போர்கொண் டெதிர்த்து [நின்று
பொருமந் நிலைதணித் தற்ககன் றூர்தென் புதுவையிலைந்
தருவென்னு முத்தியப் பன்மகிழ் மைத்துனன் றண்டமிழோர்க்
கொருகொண்டல் ரங்கன் பிரம்பூர் மகிழ்தவ ரொண்ணுதலே.

**குறிப்பு.**—இகல்-பகைமை; கொண்டல்-மேகம்; 'பிரம்பூர் மகிழ்நமர்' என்றும் பாடம்; தவர்-அருள் என்னும் அன்பீன் குழவியை அணிகலனாகக் கொண்ட தவமுடையோர்; 'ஐந்தரு' வை 'முத்தியப்ப' னோடேனும், மைத்துனனோடேனும் கூட்டுக; ஒண்ணுதல்-தலைவி, அன்மொழித் தொகை.

**தூதிற்குப் பிரிந்துழித் தலைவி முன்பனிப்பருவங் கண்டு வருந்தியது**
(முன் பனிப் பருவம்- மார்கழி, தை மாதங்கள்.)

**392.** அஞ்சுமற் றூனை யரசர்வெம் போர்தணித் தற்ககன்ற
வெஞ்சிலை வேலர்முன் னண்பிலை ரோமுத்த வெண்ணகையாய்
விஞ்சையர் சூழும் பிரம்பைரங் கன்கைக்கு வெட்கிமுற்று
மஞ்சுதெற் கோட வரவிந்தம் வாட வரும்பனியே.

**குறிப்பு.**—நண்பு-அன்பு; முற்றும் வெட்கி என மாறுக; மஞ்சு-மேகம். இயல்பாகவே தெற்கு நோக்கியோடும் மஞ்சு ஆநந்த ரங்கன் கைக்கு வெட்கி யோடுவதாகக் கூறியதால், இச் செய்யுள் தற்குறிப்பேற்றவணி. மஞ்சு கைக்கு வெட்குவது தன்னினும் அக்கை வண்மை மிகுந்திருப்பதால்; மேகம் தெற்கு நோக்கிச் செல்லல் முன்பனிப் பருவத்தின் இயல்பு.

"கருந்தா மறையெனச் செந்தா மரைகரு கப்பெருக
வருந்தார் வருந்துற மஞ்சுதெற் கோட வரும்பனியே".
(அம்பிகா. கோ. 526.)

"மங்குல் மாமழை தென்புலம் படரும்." (அகம். 24.)

**தூதிற்குப் பிரிந்துழி முன் பணிப்பருவங்கண்டு வருந்திய தலைவியைத் தோழியாற்றுவித்தல்**

(முன்பனிப்பருவம்-மார்கழி, தை மாதங்கள்.)

393. காரார் குழலி விதிர்ப்பு விடக்கடற் காசினியைப்
பேரா வடர்ந்திடு முன்பனி நாட்புவ னம்புரக்குஞ்
சீரார் பிரம்பைத் துரைரங்க பூபன்செந் தாள்பணியா
நேரார் பகைதணித் தின்றுவந் தாரன்பர் நேரிழையே.

**குறிப்பு.**—காரார் குழலி-மேகம் போன்று இருண்ட கூந்தலையுடையாள்; விதிர்ப்பு-நடுக்கம்; நேரார்-பகைவர்.

**தூதிற் பிரிவு முற்றும்.**

## 32. துணைவயிற் பிரிவு

(தனது நண்பனாகிய மன்னனுக்குப் போரிற்றுணை செய்தற் பொருட்டுத் தலைவன் பிரிதல்.)

**துணைவயிற் பிரிவு தலைமகனுணர்ந்த தோழியதற்குடன்படாமை**

(இது வெளிப்படை.)

394. வசந்தன் கருப்புவில் வாங்குவெம் போர்க்கு வருந்துமிவட்
கிசைந்தங் குதவி செயல்கொஞ்ச மோவெதிர்த் தோர்கள்வெற்றித்
துசங்கொண்ட ராய குலோத்தமன் ரங்கன்பைந் தோகையர்க்குப்
புசந்தந் தருள்பிரம் பூரனன் னாட்டிற் புரவலனே.

**குறிப்பு.**—வசந்தன்-மன்மதன்; வாங்குதல்-வளைத்தல்; துசம்-துவசம், கொடி; பைந்தோகையர்-திருமகள், நிலமகள்; பாட்டுடைத் தலைவன் மனைவியருமாம்.

**துணைவயிற் பிரிந்துழித் தலைவி பின்பனிப் பருவங் கண்டு வருந்துதல்.**

(பின் பனிப்பருவம்-மாசி, பங்குனி மாதங்கள்.)

395. இன்னற் களவுமுண் டோபனி யென்னு மெரியினிடை
யென்னைத் துவள விடுத்தவ ரெய்தா ரிரவலர்க்குப்
பொன்னைச் சொரியு முகில்ரங்க பூபன் புகழ்ப்பிரம்பை
தன்னிற் பிறக்கினும் பெண்பிறப் பந்தோ சகிப்பரிதே.

**குறிப்பு.**—இன்னல்-துன்பம், 'பனி' யை 'எரி' என்றபின் 'என்'னை 'மெழுகு' என்னாமையால் இச் செய்யுள் ஏக தேச வுருவகம்.

"இறந்தா லினிப்பிற வாகாப் பெண் பால்வந் தெழுமையுமே."

(அம்பிகா. கோ. 545.)

### தலைவன் தலைமகளுருவு வெளிப்பாடு கண்டு சொல்லியது

(உருவு வெளிப்பாடு-உருவெளித் தோற்றம்.)

396. பொருந்தா ரணிகொளு நாற்படை யோடும் புறமிடவென்
றருந்தா மவாகை மிலைந்தகல் வேமுன் னருங்கணைவில்
லிருந்தா னவெங்கரி தேர்கொடி சங்க மெதிர்தலென்பா
விருந்தா ரரங்கன் பிரம்பூருரர் செலும் வெஞ்சுரத்தே.

**குறிப்பு** :—பொருந்தார்-பகைவர் ; அணிகொளும் : அணிவகுக்கப்பெற்ற, வென்று அகல்வேம் எனக் காட்டுக ; ' அரும் தாம வாகை ' என்க ; வாகை-வெற்றிமாலை ; மிலைதல்-சூடுதல் ; கணை : கண் ; வில்-புருவம் , தானம்-மதம் ; கரி-தனம் ; தேர்-அல்குல் ; கொடி-இடை , சங்கம்-கழுத்து ; பாவிருந்து ஆர்-பாவினை விருந் தாகக் கருதியுட் கொள்ளும் ; சுரம்-பாலை ; இச் செய்யுளில் தலைவிக்கும் நால் வகைப் படைக்கும் இரட்டுற மொழிதலால், இது சிலேடையணி.

" வரிதருங் காஞ்சி மணிநெடுந் தேரும் வயங்கெழில்வார்
பரியும் மிருகட் பகடுமை வாட்பகை யுங்குவிந்து
திரிய முனிந்தது தேர்வல வாகல வாச்செருவிட்
டிரிய முனிந்திறை கொண்டகல் காலையி லெத்திக்குமே. "

(அம்பிகா. கோ. 534.)

### தலைவனைப் பாகன் தேற்றல்

(இது வெளிப்படை.)

397. அனமேவு மின்பதி சேய்த்தென நின்றிங் கலமரலென்
பினைமேவு மார்பிற் கதைபொறுத் தோனற் பிரம்பைவயிற்
கனமே யெனப்பொன் பொழிவோன் ரங்கன் கடிநகர்க்கண்
மனமேகு முன்னி ரதமேகுங் காண்டியெம் மன்னவனே.

**குறிப்பு** :—அனமேவுமின்-தலைவி ; அலமரல்-வருந்தல் ; பினை-பின்னை, இலக்குமி, திருப்பாற்கடல் கடைந்தபோது சேட்டைக்குப்பின் தோன்றியவள் என்பதாம். கதை பொறுத்தோன்-கிருஷ்ணன் ; பாரதம் பதினென்காம் நாள் யுத்தத்தில் சுதாயு எறிந்த கதையைக் கண்ணன் தன் மார்பில் தாங்கிய கதை யீண்டமைந்துள்ளது ; கனம்-மேகம்.

" . . . . . . . மன்னவ நின்
கண்காட்டு முன்னங் கடிதி னின் வாழ்பதி காட்டுவனே. "*

(தஞ்சை. கோ.)

துணைவயிற் பிரிவு முற்றும்.

---

* இச் செய்யுள் அச்சிடப்பெற்றுள்ள தஞ்சைவாணன் கோவைப் பதிப்புக்களில் காணப் பெறவில்லை. ஆயினும் இஃது ' தலைவனைப் பாகன் தேற்றல் என்னுந் துறைக்கு உதாரணமாக ' நாற்கவிராஜ நம்பியகப் பொருளிலும் இலக்கண விளக்கம் அகத்திணையியலிலும் காட்டப் பெற்றுள்ளது.

## 33. பொருள் வயிற் பிரிவு

(அதாவது, பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு; இதற்கு முன் பொருளில்லை எளியவனோ எனின், அற்றன்று. தன் முன்னோரால் ஈட்டப் பட்ட பலவேறு வகைப்பொருள்கள் எல்லாம் இவனுற் பெறப்பட்டன. முன்னோர் ஈட்டிய செல்வங்கொண்டு துய்ப்பது ஆண்மைத் தன்மையன்று : ஆகையால் தனது முயற்சியால் படைத்த செல்வங்கொண்டு இல்வாழ்க்கை நடத்த விரும்பிப் பொருள் வயிற் பிரிவன் என்பதாம். அன்றியும், தேவ காரியமும் பிதிர்க் காரியமும் தனது முயற்சியால் ஈட்டப்பெற்ற செல்வத்தைக் கொண்டு செய்யவேண்டுவனவாம். அதன் பொருட்டும் தன் தாளாற்றலாற் பொருளீட்டப் பிரிவன் என்பதாம்.)

### பொருள் வயிற்பிரிவு தலைவன் பாங்கிக்கு அறிவுறுத்தல்

(இது வெளிப்படை.)

398. பொருள்கொண்ட லாதற மும்பூ வைய ர்தோள் புணரின்பமுஞ்
சுருள்கொண்ட வேலை யுலகினெஞ் ஞான்றுந் துதைகிலவென்
றருள்கொண்ட வேந்த னரங்கன் பிரம்பை யகனகர்வாய்த்
தெருள்கொண்ட மேலவர் சொன்மொழி தேர்திகொல்
சேயிழையே.

**குறிப்பு.**—வேலை-கடல் , துதைகில-பொருந்தாதவையாம் ; தெருள்-அறிவு.

" அருள்கொண் டியற்று மறமு மறநெறி யாய்ந்தமென்பூச்
சுருள்கொண்ட கோதையர் தோள்புண ரின்பமுஞ் சூழ்சுரும்பு
மருள்கொண்டு பாடு மதுமலர்ச் சோலை மயிலனையாய்
பொருள்கொண் டொழியமுற் றுதென்று ஞாலம் புகலுமின்றே. "
(அம்பிகா. கோ. 539.)

### தலைவியிளவேனிற் பருவங்கண்டு வருந்தியது

(இளவேனில்-சித்திரை, வைகாசி மாதங்கள்.)

399. மன்னுசை யெட்டும் வளர்புகழ் போர்த்தவன் வான்புலவர்க்
கின்னுசை வீசு மிரங்கன் பிரம்பை யிரும்பொழிற்கட்
டுன்னுசை மேவுங் குயிற்றேன் றவுமவர் தோன்றிலராற்
பொன்னுசை கொண்டவர்க் கென்னுசை யுண்டுகொல் பூங்
[கொடியே.

**குறிப்பு.**—ஆசை-திசை ; இன்னுசை-இனிய பொன் ; துன்னுசை-மிகுந்த குற்றத்தை.

" பொருளாசை யுள்ளவர்க் கொராசையுமில்லை பூங்கொடியே "
(குலோ. கோ. 508)

" தனவாசை யுற்றவர்க் கெவ்வாசை யுண்டுகொ ருழ்குழலே "
(சீகா. கோ. 527)

**தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங் கண்டு உவந்து சொல்லியது**

(கார்ப்பருவம்-ஆவணி, புரட்டாசி மாதங்கள்.)

400. பொன்னை நிகர்மட மாதைப் புணர்ந்துபொலிந்தனமயா
மின்னியஞ் சூழ்பிரம் பூரரங் கேந்த்ர னிலங்கயில்போன்
மின்னி ய னியுங் கழல்போ லதிர்ந்து மிளிருமவன்
மன்னிய பொன்னங் கொடைபோல வாழிய வண்முகிலே.

குறிப்பு.—பொன்-இலக்குமி ; இயம்-வாத்தியம் ; அயில்-வேல்.

" . . . . . . . . . . . . . . . . வாணன் வண்மைக்
கைத்தல மான வினிப்பொழி வாழிய கார்முகிலே."

(தஞ்சை. கோ. 425)

" . . . . . . . . . . , . . . . சண்பை யெங்கள்
சிந்தா மணியருள் போற்பொழி வாழி செழுமுகிலே."

(சீகா. கோ. 531.)

" மன்னர் மன்னவன் மண்டமர் கடந்தவொண் வேலின்
மின்னியாங் கவன் முரசென் விண்ணிடை யதிர்ந்து
பொன்னங் குன்றின் மேலவன் கொடை போன்மெனப்
[பொழிந்த."

(நைட. நாட்டுப். 2.)

பொருள் வயிற் பிரிவு முற்றும்.

மூன்றுவது கற்பியல் முற்றிற்று.

களவியல்-269 ; வரைவியல்-74 ; கற்பியல்-57. ஆக இயல் 3-க்குச் செய்யுள் 400.

தியாகராச தேசிகர் இயற்றிய ஆநந்த ரங்கன் கோவை மூலமும் பலராம ஐயர் இயற்றிய குறிப்புரையும் முற்றுப்பெற்றன.

# ஆனந்தரங்கன் கோவை

## தனிப்பாடல்கள்

கீழ்க்காணும் செய்யுள்கள் இந்நூலாசிரியரால் ஒவ்வொரு சமயங்களில் இயற்றப்பெற்றவை ; ஆயினும் இந்நூலோடு தொடர்புடையவை யாதலின் ஈண்டுத்தரப்பட்டன. இவ்வரலாற்றின் விரிவை முகவுரையிற் காண்க.

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இருகோவை யொத்தபுயத் தேந்துமுல்லைத் தொடையலென்று
மிலங்கு நின்சீர்க்

கொருகோவை யாம்பாட வெண்கோவை வெண்குடைக்கீழ்
உறநீ பெற்றாய்

பொருகோவைத் தழுவுபிரம் பூர்த்திருவேங் கடதீரன்
புதல்வா நாளும்

வருகோவைப் பதமலர்கொள் விஜயவா நந்தரங்கா
மன்ன ரேறே.

**குறிப்பு** :—கோ : மலை ; கோவை : ஒரு பிரபந்தம் ; இந்நூல். கோ : திசை ; பொருகோ : போரேறு ; கோ வேலுமாம். தழுவு என்பதை, புதல்வனோடும் கூட்டுக. தழுவு என்பதை ஊருக்கு அடைமொழியாக்கின் கோ : விண்ணுலகாம். இம் மூன்றுமடியால் பாட்டுடைத் தலைவர் குலம் இடையர் குலம் என்று ஆசிரியர் குறிப்பித்த நயத்தை அறிக. நாளும் வருகோ : சூரியன் ; ஐ : அழகு. இதனால் பாட்டுத் தலைவர் சூரியநாராயண பூஜைசெய்பவர் என்பது பெறப்படுகின்றது. கொள் : சிரமேற்கொள்.

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தேனூறும் படிமதுரித் தின்சொல் கொண்டு
திகழ்பதினா றுயிரங்கோ வியரின் மிக்க

நானூறு காரிகையார் திரண்டோர் பாக
நயந்துவகை மணம்புணர்த்தல் ஞாயங் கண்டீர்

கானூறு படக்குதிகொண் டெழுந்து பாயுங்
கடுப்பினிற்பின் றொடர்ந்துபொருங் கணையால் மாய

மானூறு பட வெய்து பிரம்பூ ரோங்க
வந்தவா நந்தரங்கா மன்ன ரேறே.

**குறிப்பு** :—நானூறு காரிகை : நானூறு கட்டளைக் கலித்துறைகள்கொண்ட கோவைநூல் ; நூறுபட : புழுதியுண்டாக ; கடுப்பு : வேகம் ; மாயமான் : மாரீசன் ; ஊறுபட : அழிய, ' எய்துரங்கா ' என்று கூட்டுக.

### ஆறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அண்டர்வரோ தயன்பிரம்பூர்த் திருவேங்க டேந்த்ரநிதி
யளித்த பாலன்
மண்டலங்கொண் டாடவரு மானந்த ரங்கதுரை
மானரத்ன
குண்டலமுஞ் சரப்பணியும் பதக்கமொடு சாலுவையுங்
கொடுத்தேநாளுந்
தண்டமிழா ரூர்வசிக்கப் பொன்முடிப்பும் பூமிகளுந்
தந்திட் டானே.

**குறிப்பு** :—அண்டர் : இடையர் ; ஆரூர் : திருவாரூர்.

### வெண்பா

பத்தைய னென்றுதமிழ்ப் பாப்புலவர் மெச்சவரு
முத்தையா கோவை மொழிவிளங்க—வித்தகநல்
லாநந்த ரங்கைய னுக்குரிய வண்பூவைத்துத்
தானந்த ரங்கமுறச் சாற்று.

**குறிப்பு** :—பத்தையன் : பத்து ஐயன் ; முத்தையா : விளி வேற்றுமை ; அந்தரங்கமுற : தனிமையில் ; சாற்று : கூறுவாயாக.

# ஆனந்தரங்கன் கோவை

## அரும்பத முதலியவற்றின் அகராதி

(எண்கள், பக்க எண்கள்.)

அகத்தியர் : ஓர் முனிவர். 60
அகளங்கன் : குற்றமற்றவன். 75
அங்கசன் : மன்மதன். 39, 60
அஙகணன் : திருமால். 73
அசநம் : சோறு ; அசம் (ஆடு) நம் (நமது). 72
அஞ்சிறை : அழகிய சிறை, அகம் சிறை. 61
அஞ்சுகம் : அழகிய கிளி. 61
அஞர் : துன்பம். 80
அடுக்கல் : மலை. 77
அடுதல் : சமைத்தல் ; கொல்லுதல். 72
அண்டர் : தேவர் ; இடையர். 130
அணித்து : அருகிலுள்ளது. 10
அத்தம் : வழி (பொருள்.) 83
அத்தன் : உயர்ந்தோன். 83
அதர் : காட்டுவழி. 57
அதள் : மான்தோல். 107
அந்தரம் : வானம். 85
அப்பு : நீர். 57
அம் : நீர். 84
அம்பல் : சொல்நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்வது. 74
அம்புயம் : தாமரை. 48
அம்போருகம் : தாமரை. 4, 81
அமர் : விருப்பம். 58
அயன் : பிரமன். 87
அரவிந்தம் : தாமரை. 15, 41, 132
அரவிந்தன் : சூரியன் ; திருமால். 83
அராப்பாயல் : சர்ப்பசயனம். 124
அரிச்சந்திரன் : ரகுவமிசத்து ஓர் மன்னன். 122
அருமறை : பிறரால் அறிதற்கரிய, மறைவாகிய களவொழுக்கம். 68
அல் : இருள். 96
அலமரல் : சுழற்சி ; மனக்கவலை. 84, 134
அலர் : அலர்மொழி. 74
அலவன் : நண்டு. 126
அவலம் : துன்பம். 73
அழைக்கோ : அழைக்கவோ. 28
அள்ளல் : சேறு. 60
அளகபந்தி : கூந்தல் வரிசை. 32
அளகம் : கூந்தல். 15
அளக்கர் : கடல். 40
அளி : வண்டு. 51. 78
அளை : தயிர். 33
அறத்தொடு நிற்றல் : உண்மை கூறுதல் (களவொழுக்கத்தை வெளிப்படையாகப் பிறருக்கு அறிவித்தல்.) 92
அறல் : கருமணல். 15
அன்னிலை : அல் நிலை, பாவத்தின் நிலைமை. 131
அனிச்சம் : மோந்தால் குழையும் தன்மையுடைய ஒரு மெல்லிய பூ. 106
ஆகம் : மார்பு. 121
ஆகுலம் : துன்பம். 9, 120, 121, 130
ஆசங்கை : ஐயம். 127
ஆடகம் : பொன். 84
ஆதுலர் : யாசகர். 131
ஆமிரம் : மா. 65
ஆயம் : மகளிர் (தோழியர்) கூட்டம். 6, 99
ஆர்தல் : உண்ணல். 51
ஆரம் : முத்து. 48
ஆவி : பொய்கை, சரவணம். 39
ஆன் : காமதேனு. 27, 70
இகல் : பகை. 77
இகுளை : தோழி. 85, 114, 119
இங்கிதன் : அன்பன். 48
இடங்கர் : முதலை. 71
இடந்தலைப்பாடு : (இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த) இடத்தைத் தலைவன் அடைதல். 14
இணர் : பூங்கொத்து. 121
இதழ் : உதடு. 121
இதை : தினை. 72

இந்திரகோபம் : ஒருவகைப் பட்டுப் பூச்சி. 106
இந்திரஜாலம் : பொய். 28
இந்திரன் : தேவர்தம் இறை. 20
இந்திரை : இலக்குமி. 31, 32, 100
இந்தீவரம் : நீலம். 61
இயம் : வாத்தியம். 68
இருமை : இம்மை, மறுமை. 111, 129
இலஞ்சி : பொய்கை. 68
ஈட்டம் : கூட்டம். 93
உக்கிரன் : உக்கிரசேனன் (கண்ணனது தாய் வழிப்பாட்டன்.) 106
உகள் : புரளுகின்ற. 29, 90
உட்புலம்பு : மனவருத்தம். 99
உடந்தை : கூட்டு. 19
உடன்பாடு : உடன்படுத்தல். 23
உடைந்து : தோற்று. 71
உத்துங்கம் : உயர்வு. 33
உத்துங்கன் : தலைவன். 27
உபேந்திரன் : இந்திரனுக்கு உதவியாயிருப்பவன். 15
உம்பர் : விண்ணுலகு. 90
உம்மைப்பிறப்பு : முற்பிறப்பு. 9
உமர் : உம்மவர். 53
உமை : பார்வதி. 76
உரகர் நிலை : நாகலோகம். 2
உரம் : மார்பு. 20
உரும் : இடி. 57
உருமேறு : பேரிடி. 24
உரை : புகழ். 10
உலவாக்கிழி : குறையாத பணப்பை. 87
உவரி : கடல். 28
உவள் : சுட்டுப்பெயர் (தலைவி). 12
உழுவலன்பு : பேரன்பு. 97
உழை : இடம் (மான்). 25, 42
உளை : தலையாட்டம் என்னும் அணி ; பிடரி மயிர். 33
ஊர் : பரிவேடம். 75
ஊர் கொள்ளல் : பவனி வருதல், வளைதல், ஊர்தலைப் பொருந்துதல். 33
எண்சீர் : அஷ்ட ஐசுவரியம். 3
எய்யா : அறியாத, விளங்காத. 28
எயிற்றி : மறத்தி. 108
எல்லா : தோழி, முன்னிலைப் பெயர். 48, 70
எவ்வம் : குற்றம். 119
எழுமை : எழுபிறப்பு. 130
என்று : சூரியன். 47
ஏதிலர் : அயலார். 75
ஏமம் : இன்பம். 79
ஏமவெற்பு : மேரு. 7
ஏமுற : மயங்க. 49
ஏலம் : மயிர்ச்சாந்து. 21
ஏனல் : தினை. 51
ஐந்தரு : தேவதருக்கள் ஐந்து. 40
ஐம்பால் : முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்னும் முடி வகைகள். 17, 33, 36
ஐம்பெருஞ்சுற்றம் : அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதர், ஒற்றர். 52
ஐயர் : பெரியோர். 90
ஐயுறவு : சந்தேகம். 34
ஐவர் : பாண்டவர் (தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்). 88
ஒருமை : பிரமம். 111
ஒருவுதல் : நீங்குதல். 26, 114
ஒன்றுதல் : நிகர்த்தல். 3
ஓடாத்திமில் : வேங்கைமரம். 53
ஓடை : யானையின் முகத்தணி. 131
ஓதி : கூந்தல். 34
ஓம்படை : பாதுகாப்பு. 46
கங்குல் : இராப்பொழுது. 55
கச்சி : காஞ்சீபுரம். 118
கஞ்சம் : தாமரை ; அழகிற்கு இருமடியாகு பெயர். 11
கஞ்சன் : கம்ஸன். 25, 75, 122
கடநாகம் : யானை. 24
கடம் : காடு. 84, 103
கடலாரம் : முத்து. 108
கடற்கோ : வருணன். 51
கடி : காவலையுடைய, மணம். 117
கடுவன் : ஆண் குரங்கு. 42
கடைக்கண் : கடைவாயிலின்கண். 73, 127
கண்வணி : மூங்கில்வணி. 55
கண்டல் : தாழை. 21, 71

கண்ணலர் : பகைவர். 49
கண்ணன் : இருஷ்ணன். 32, 127
கண்வளர்தல் : தூங்குதல், தங்குதல். 58
கணி : வேங்கை. 83
கணித்தல் : நினைத்தல். 95
கதுப்பு : கூந்தல். 30
கந்து : கட்டுத்தறி. 103
கந்துகம் : பந்து. 107
கம் : நீர். 100
கம்பலை : விழாவொலி. 113
கம்பு : சங்கு. 67, 90
கமடம் : ஆமை. 70
கமலை : இலக்குமி. 3, 127
கயம் : நீர்நிலை. 85
கரடம் : மதம். 14
கரம் : சூரியன் கதிர். 47
கரா : முதலை. 16
கரி : யானை. 121
கல் : சிந்தாமணி. 27
கல்லாரம் : நீல மலர். 70, 79
கலாபம் : இடையணி. 126
கலாம் : கலகம். 126
கலி : வறுமை. 114
கலிங்கம் : ஓரிடம். 17
கவ்வை : பலரறிசொல். 101
கவிர் : கல்யாண முருங்கை. 45, 61
கவின் : அழகு. 117
கவுரி : உமை. 121
கழங்கு : கழற்சிக்காய். 107
கழல் : கழற்சிக்காய். 69
கழறல் : இடித்துரைத்தல். 121
கழிபடர் : மிகுந்த துயரம். 71
கழுது : பேய். 94
கழை : கரும்பு. 111
களபம் : கலவைச் சாந்து. 24
கற்பு : முல்லை. 114
கறங்கும் : ஒலிக்கும். 47
கன்னன் : கர்ணன். 46, 103, 121
கன்னி : இளமை. 69
கனகம் : பொன். 78
கனம் : மேகம். 43, 54, 58
காசினி : புவி. 133
காந்தன் : தலைவன். 129
காம்பு : புல்லாங்குழல். 119
காமர் : அழகு, விருப்பம். 108
காமன் : மன்மதன். 49
காயல் : காயற்பட்டினம். 124
கார்க்கடல் : கண். 3
கார்முகம் : வில். 115
காலவயிரவனூர்தி : நாய். 67
காவகம் : சோலை. 41
காவி : நீலோற்பலம், கண். 9
கான் : வாசனை. 10
கிணை : மருதப்பறை. 40
கீண்டு : கிழித்து. 110
குக்குக்கூ : ஒலிக்குறி. 68
குக்குடம் : கோழி. 72
குசன் : செவ்வாய். 72
குடியிறை : வரி. 131
குணில் : குறுந்தடி. 16
குதை : ஆகுபெயரால் அம்பினை யுணர்த்திற்று. 25
குந்தளம் : கூந்தல். 21
குரால் : கோட்டான். 69
குரிசில் : தலைவன். 72
குருகு : நாரைவகை. 85, 93
குவலயம் : நிலவுலகம். 9, 56
குழை : குண்டலம். 42
குழைக்கோ : குழைக்கவோ. 28
குளு குளு : ஒலிக்குறிப்பு. 65
கூகை : கோட்டான். 68
கூடல் : கூடற்சுழி. 87
கெண்டை : மீன். 87
கேண்மை : நட்பு, அன்பு. 94, 131
கேதனம் : கொடி. 72
கைம்மலை : யானை, 71
கைம்மா : யானை (விநாயகக் கடவுள்). காப்பு.
கைமிக்கு : மிகுந்து. 74
கையடை : அடைக்கலம். 98
கையுறை : காணிக்கை. 27
கொஞ்சம் : சிறிது. 133
கொடி : காக்கை. 105
கொடிச்சி : குறிஞ்சிநிலப் பெண். 29

கொடுவரி : புலி. 71
கொண்டல் : மேகம். 0, 130, 131
கொண்மூ :மேகம். 107
கொல்லிப்பாவை : அணங்கு. 16
கொன் : அழகு. 24
**கோகநகம்** : தாமரை. 2, 57, 72
கோட்டம் : மலைபடும் வாசனை திரவியம், நடுவு நிலைமை தவறுதல். 31, 93
கோலம் : அழகு, பன்றி. 21, 26
கோரம் : கொடுமை. 51
**சங்கரன்** : சிவபெருமான் 40
சததளமான் : இலக்குமி. 119
சந்தானம் : கற்பகம். 30
சந்தாடவி : சந்தனச் சோலை. 89
சமரம் : போர். 88
சயிலம் : மலை. 45
சரிக்கும் : சஞ்சரிக்கும். 9
**சித்தசன்** : மன்மதன். 61
சிந்தாமணி : தேவரத்நம். 10, 40
சிந்துரம் : களிறு. 56
சிலம்பழைத்தல் : மலை யெதிர் கூவுதல். 28
சிலம்பு : மலை. 3
சிலைமாது : வீரலட்சுமி. 123
**சிதரன்** : திருமால். 50, 129
**சுடர்க்** கொற்றவன் : சூரியன். 106
சுதை : அமுதம். 25
சும்மை : ஒலி. 104
**சுரும்பு** : வண்டு. 23, 32, 104
**சூர்** : துன்பம். 5
சூழ்ச்சி : அறிவுடையோர் செயல். 78
சூழல் : இடம். 14
**செஞ்சி** : ஓரிடம். 4
செந்திரு : இலக்குமியுருவம் பொறித்த வோர் மகளிர் தலையணி. 21
செம்பியன் : சோழன். 31
செயிர் : குற்றம். 50
செல் : மேகம். 96, 130
செல்வு : பெற்றோராற் கொண்டாடப் பெறுதல். 77
செவ்வணி : தலைவி பூப்புற்றதைப் பரத்தைபாலிருக்கும் தலைவற்கு அறிவித்தல் வேண்டி ஒருத்தியைச் செம்மலர் முதலியவற்றை அணியச்செய்து அனுப்புதல் மரபு. 121
**சே** : இடபம் - காப்பு.
சேக்கை : படுக்கை, கூடு. 48
சேட்டை : உறுப்பைப் புடை பெயர்த்தல், மூதேவி. 105
சேதாம்பல் : செம்மை ஆம்பல் (வாய்). 9
சேந்தன் : முருகன். 50
சேரலர் : பகைவர். 13
சேரலன் : சேரன். 31
சேல் : மீன். 59
**சோடு** : செருப்பு. 121
**ஞாங்கர்** : பக்கம். 101
**ஞிமிறு** : வண்டு. 46
**டெல்லி** : ஓரிடம். 4
**தடம்** : தடாகம். 29
தடித்து : மின்னி. 59
தணத்தல் : பிரிதல். 68, 80, 118
தத்தை : கிளி. 96
தந்தாவளம் : யானை. 103, 110
தந்தி : யானை (கஜேந்திரன்). 40
தந்திரம் : சேனை. 52
தமயந்தி : நளன் மனைவி 19, 20
தவளம் : வெண்மை. 72
தழைக்கோ : தழைக்கவோ. 28
தளவு : முல்லை மாலை. 12
தறுகண் : அஞ்சாமை. 69
**தாக்கொண்டு** : பாய்ந்து. 57
தாமம் : மாலை. 34
தாரணி : உலகு. 53
தாராகணம் : நட்சத்திரக் கூட்டம். 15
**திருத்தங்கை** : தலைவி. 31
திருவேங்கடன் : பாட்டுடைத் தலைவன் தந்தை. 19, 46, 65
திலோத்தமை : தேவலோக நாட்டியப் பெண். 29
**துகில்** : ஆடை. 38
துசம் : கொடி. 133
துதைதல் : நெருங்குதல். 46, 135
துப்பு : பவளம். 46, 72
துரகதம் : குதிரை. 115
துருவை : செம்மறியாடு. 74

துவர் : சிவப்பு. 28
துளவு : துளசி. 10
துனி : பிணக்கு, முதிர்ந்த ஊடல். 120, 27
தூவி : மெல்லிய சிறகு. 106
தெய்வம் : ஊழ்வினை. 9
தெரியல் : மாலை. 9
தெலுங்கம் : ஓரிடம். 17
தென்னவன் : பாண்டியன். 31
தேசு : புகழ், ஒளி. 44
தேன் : வண்டு. 82
தொண்டை : ஆதொண்டைக் கனி (கொவ்வைப் பழம்). 33
தொண்டை நாடு : ஒரு நாடு. 100
நந்து : சங்கு. 101
நரை : தேன். 23
நல்லார் : மகளிர். 27
நவ்வி : மான். 29
நவிர் : அளகம். 45
நளன் : நிடதநாட்டு அரசன். 20
நளன் காதலி : தமயந்தி. 49
நளினம் : தாமரை. 35
நன்னர் : நன்மை. 93, 98
நாகம் : குரங்கு, வாலி. 55
நாட்டம் : கண். 93
நாண்மலர் : அன்றலர்ந்த பூ. 111
நாணயம் : அழகு. 35
நாந்தகம் : வாள். 17
நாமம் : அச்சம். 34, 59
நாரியொர் பாகன் : உமாமகேச்வரன். 123
நானம் : கஸ்தூரி. 101
நிமித்தம் : சகுனம். 105
நிலச்சேய் : செவ்வாய். 25
நிறம் : மார்பு. 47
நிறை : பிறரறியாது அடக்கிவைக்கும் குணம். 97
நீவி : நீக்கி. 69
நூபுரம் : சிலம்பு. 99
நெட்டிலைக்கழை : கரும்பு. 122
நெய்யாடுதல் : புனிறுதீர்ந்து எண்ணெய் முழுக்காடுதல். 124
நென்னல் : நேற்று. 63, 127
நமி : ஆஜ்ஞா சக்கிரம். 86, 123
ங்கயம் : தாமரை. 55
பச்சுடம்பு : ஈன்றணிமை நீங்காத உடம்பு. 124
பஞ்சரம் : கூடு. 48, 58
பஞ்சி : செம்பஞ்சுக் குழம்பு. 15
படப்பை : தோட்டம். 65
படர் : துன்பம். 68, 82, 84, 85
படி : நிலம், உலகு. 9, 14
பண்ணை : ஆடிடம், விளையாட்டு. 52, 56
பணி லோகம் : நாகலோகம். 7
பணை : வயல். 34
பரற்கல் : பருக்கைக்கல். 99
பராநிலை : வழிபடும் நிலைமை. 91
பரிசை : கேடகம். 121
பரிப்பது : தரிப்பது. 98
பரிவு : அன்பு. 107
பருவமஞ்சு : கார். 58
பருவரல் : துன்பம். 68, 82, 86
பழனம் : வயல். 117
பழிச்சல் : வாழ்த்தல் 13
பறவை : பகன் என்னும் அசுரன். 8
பன்னகம் : பாம்பு. 44
பாங்கு : நிலை. 107
பாசடை : பசிய இலை. 44
பார்க்கன்பு : பார்க்க அன்பு. 47
பாரி : கடையெழு வள்ளலிலொருவன். 69
பால் : ஊழ். 85
பாலனம் : உபசாரம். 119
பாவகன் : அக்னி. 113
பானல் : நீலோற்பலம். 17, 32, 65
பித்தழையா : இதில் ‘அழைப்பு’ பொருள் புணராவோசை. 42
பிதிர்வு : பொடி. 92
பின் : பிரதிப் பிரயோசனம். 11
பினை : பின்னை, இலக்குமி. 134
புடவி : பூமி. 80
புண்டரீகம் : தாமரை. 82
புணரி : கடல். 98
புதியபதி : புதுச்சேரி. 96
புதுவை : புதுச்சேரி. 132
புயல் : மேகம், திருமால்-காப்பு.
புரசை : யானைக் கழுத்திலிடும் கயிறு. 69

புரிம் : புரியும். 82

புலராது : வாடாமல். 87

புலவி : ஊடல். 120

புலிங்கம் : தீப்பொறி. 69

புலித்தட்டமங்கலம் : புலி நகமும் பல்லும் பதித்த ஒரு கழுத்தணி. 108

புறத்தொழுக்கு : தலைவன் பரத்தை பாற்சேறல். 121

பூகம் : கமுகு. 43, 80, 111

பூதரம் : மலை. 68

பூவை : நாகணவாய்ப்புள். 25

பெட்ட : விரும்பிய. 24

பெட்பு : விருப்பம். 47

பெருமான் : பெரும் ஆன் (மிகுந்த பசுக் கூட்டம்). 8

பேர் : புகழ். 19

பொதும்பர் : சோலை. 61

பொதுவரை : பொதியமலை. 41

பொற்கா : ஐந்தரு. 62

பொறி : மதிலுறுப்பு. 54

பொன் : இலக்குமி. 38, 43, 47, 118

பொன் முகில்: புஷ்கலாவர்த்தம்.118

பொன்னகம் : மேரு. 98

பொன்னுடு : விண்ணுலகு. 77

போது : மலர். 56

மங்குல் : மேகம். 55

மஞ்சு : மேகம். 132

மஞ்சுவரை : இமயம். 50

மடலேறுதல் : பனைமடலாற் செய்த குதிரை மீதேறி வீதியிற் செல்லுதல். 34

மது : தேன். 80, 81

மந்தரம் : ஓர் மலை. 112

மந்தாரம் :.ஐந்தரு. 89

மந்தி : பெண் குரங்கு. 42

மநு : சுவாயம்பு மநு. 19

மரு : வாசனை. 13

மருமம் : மார்பு. 58, 116

மல்லர் : முஷ்டிக சாணூரர் என்னும் மல்லர். 8

மல்லல் : வளப்பம். 63

மலையாரம் : சந்தனம். 108

மழை : மேகம். 25, 42

மறி : மான். 125

மறிதல் : திரும்புதல், நீங்குதல். 25, 119

மறுக : துன்புற. 36

மறுகு : வீதி. 35, 127

மன்றல் : மணம் (வாசனை). 32

மா : இலக்குமி, குதிரை, வண்டு. 2, 46, 34, 78

மாகம் : விண். 121

மாடை : செல்வம். 131

மாதிரம் : திசை. 62, 75, 107, 130

மாமலர் : தாமரை. 121

மாமை : கருமை. 56

மால் : பித்து. 40, 121

மாழை : பொன். 87

மான்மதம் : கஸ்தூரி. 40

மானவர் : சிவபெருமான். 14

மிகைசூழ்தல் : கோபம்கொள்ளுதல். 46

மிசை : உண்பிக்கும். 90

மிடல் : வலிமை. 108

மீனவன் ; பாண்டியன். 117

முடங்க : படுத்து உறங்க. 69

முத்தப்பன் (பாசூர்) : தனிப் பாடல்.

முத்தியப்பன் 132

முத்துசாமி : தனிப்பாடல்.

முத்தையன் : தனிப்பாடல்.

முத்தீ : ஆகவனீயம் காருகபத்தியம், தக்ஷிணாக்னேயம். 111

முதுக் குறைதல் : பேரறிவுடையராதல். 23, 95

முதுமரம் : ஆலமரம், பழையமரம் 68

முருகு : வாசனை. 23

முளரி : தாமரை. 9

முளரி மங்கை : இலக்குமி. 12

முற்றில் : முச்சில் (சிறு முறம்). 119

முன்னம் : கருத்து. 23, 31

முன்னீர் : கடல். 12, 14

முன்னுதல் : நினைத்தல். 31,89,104

முனை : போர். 52

மூசுதல் : மொய்த்தல். 121

மெத்தை : பஞ்சணை. 117

மேதி : எருமை. 38

மைந்து : வலிமை. 58

மைம்மலை : அஞ்சனகிரி. 71

மோடி : காளி. 85

**வங்கம்** : ஓரிடம். 17
வசந்தன் : மன்மதன். 133
**வட்கார்** : பகைவர். 21
**வடத்திலை** : ஆலிலை. 35
**வடமீன்** : அருந்ததி. 114
வடி : கூர்மை. 37
**வண்டல்** : மகளிர் ஆடும் ஒரு விளையாட்டு. 4, 71, 87, 94
**வண்டானம்** : ஒரு வகை நாரை. 85
வம்பு : காலமல்லாத காலத்திற் பெய்யும் மழை. 85
வயிர் : ஊதுகொம்பு. 114
வரம் : உயர்வு. 74
வரவுற்றது : நேர்ந்தது. 38
வரை : உவம உருபு. 41
**வல்** : சூதாடு கருவி. 35, 79, 102
வல்லே : விரைவில். 85
**வலம்புரி** : சங்குவகை. 87
வலவன் : தேர்ப்பாகன். 11, 87
வள்ளம் : கிண்ணம். 114
வறிது : சிறிது. 7
**வறுங்களம்** : தலைவியில்லாத இடம். 54
**வாங்கு** : வளைந்த. 50, 107
வாந்தல் : வாவுதல், தாவுதல். 50
வாம்பரி : தாவுங்குதிரை. 33
வாய் : அலர்மொழி. 98
வாயில் : பெறுதற்குரிய வழியாயிருப்பவர். 12
**வார்** : நீண்ட, கச்சு. 68, 82
வாரணம் : யானை. 71
வாரம் : மலைச்சார்பு. 51
வால் : வெண்மையான. 101
வான் : மேகம். 112, 114
**விடலை** : தலைவன். 102
விண் ஆ : காமதேனு. 20
வித்துருமம் : பவளம். 44, 61
விதிர்ப்பு : நடுக்கம். 133
**விது** : சந்திரன். 41
விளரி : ஓரிசை. 4
விஜயாபுரம் : விஜயபுரி. 4
**வீரம்** : மலை. 51
**வெய்யோன்** : சூரியன். 44
வெருகு : பூனை. 58
வெள்ளணி : புதல்வன் பிறந்தமையைப் பரத்தை பாலிருக்கும் தலைவற்கு அறிவித்தல் வேண்டி ஒருத்தியை வெண்மலர் முதலியவற்றை அணியச் செய்து அனுப்புதல் மரபு. 121
**வேங்கடமால்** : பாட்டுடைத் தலைவன் தந்தை. 46
வேய் : மூங்கில். 43, 59, 61, 98
வேரம் : பகைமை. 102
வேரல் : மூங்கில், தினை. 62, 106
வேரி : தேன். 81
வேழம் : யானை. 25, 26, 107
வேள் : ஆண் பாற்பெயர், மன்மதன். 26, 72
**வைகல்** : நாள். 118

# ஆனந்தரங்கன் கோவை

## செய்யுள் முதற் குறிப்பகராதி


| | பக்கம். |
|---|---|
| **அக்கிணை** | 40 |
| அங்கச | 60 |
| அசந.. | 72 |
| அஞ்சுமற் | 132 |
| **அடி**மலர் | 5 |
| அடியொன்றி | 9 |
| அடுங்கைக். | 16 |
| அடுங்கொலை | 107 |
| அத்தங் | 83 |
| அந்தளிர் | 32 |
| அந்தா | 80 |
| அம்பல்கொள் | 90 |
| அம்பே | 19 |
| அரம்பொரு | 71 |
| அரவப் | 73 |
| அரிவையர் | 91 |
| அரும்பவிழ் | 32 |
| அரும்பிளங் | 23 |
| அரையிருள் | 57 |
| அல்லார் | 79 |
| அல்லும் | 84 |
| அலவ | 126 |
| அவ்வா | 71 |
| அவ்வுல | 29 |
| அவிராழி | 45 |
| அளிகாண் | 51 |
| அறியா | 125 |
| அன்பன் பிரிய | 73 |
| அன்பன் புறஞ்சென் | 122 |
| அன்னத்தின் | 106 |
| அன்னந் | 19 |
| அன்னமு | 37 |
| அன்று | 92 |
| அன்னையைப் | 97 |
| அனமேவு | 134 |
| **ஆசங்கை** | 127 |
| ஆடவர் | 84 |
| **ஆ**டுங் | ௭ |
| ஆதவன் | 18 |
| ஆயங் | 107 |
| ஆயம் | 6 |
| ஆயும் | 90 |
| **இகலுஞ்** | 77 |
| இந்திரன் | 20 |
| இப்புன | 72 |
| இரங்கன் | 112 |
| இரவோர் | 109 |
| இருகாலி | 5 |
| இருங்கடல் | 69 |
| இருதலைப் | 82 |
| இருமன்னர் | 132 |
| இருமையு | 130 |
| இருவரு | 93 |
| இவ்வுல | 119 |
| இறைவார் | 68 |
| இன்பம் | 118 |
| இன்மல | 43 |
| இன்னற | 133 |
| இனங் | 52 |
| **ஈங்கிவர்** | 101 |
| ஈட்டிய | 7 |
| ஈன்ருட்கு | 114 |
| **உம்மைப்** | 9 |
| உயிரிற் | 80 |
| உருகியசெம்பொற் | 92 |
| உருகிய மெய்யு.. | 23 |
| உருகியவன்பாற் | 86 |
| உவரிக் | 28 |
| உள்ளக் கவலையொழியக் கழிபே | 117 |
| உள்ளக் கவலையொழியப் பருவர. | 82 |
| உள்ளத் | 60 |
| உள்ளிக் | 70 |
| உளமொன் | 12 |
| உற்ற.. | 126 |
| உற்ருர் | 113 |
| உன்பே | 19 |

| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| உன்மகள் .. .. | 118 | கல்விப் .. .. | 130 |
| உன்னிடை .. .. | 60 | கலைமா .. .. | 123 |
| உன்னைப் .. .. | 80 | கலையு . .. | 8 |
| ஊர்கொண் .. .. | 75 | கவளக் .. .. | 7 |
| ஊரற்குச் .. .. | 106 | களிக்கின்ற .. .. | 109 |
| ஊரன் .. .. | 122 | கறங்கு .. .. | 47 |
| ஊராம .. .. | 31 | கன்மா .. .. | 62 |
| எங்கு .. .. | 116 | கன்மே .. .. | 33 |
| எண்ணும் .. .. | 15 | கன்ன .. .. | 46 |
| எம்மா .. .. | 115 | கன்னியம் .. .. | 93 |
| எம்மூ .. .. | 100 | கனங்கண் .. .. | 58 |
| எல்லா .. .. | 70 | கனவு .. .. | 108 |
| எழுந்தன .. .. | 79 | காதலன் .. .. | 129 |
| எழுமையு .. .. | 97 | காதுக் .. .. | 64 |
| என்னு .. .. | 103 | காந்தனிற் .. .. | 129 |
| என்னுன் .. .. | 14 | காமக் .. .. | 34 |
| என்னொடு .. .. | 98 | காமனெ .. .. | 49 |
| எனக்குயிர் .. .. | 43 | கார்காலம் .. .. | 86 |
| ஏதிலர் .. .. | 75 | கார்கொண்ட .. .. | 33 |
| ஏந்திளங் .. .. | 17 | கார்வந்த .. .. | 86 |
| ஏயு .. .. . | 75 | காரஞ்சும் .. .. | 105 |
| ஏலமுஞ் .. .. | 31 | காரமர் .. .. | 102 |
| ஏற்றம் .. .. | 94 | காரார் .. .. | 133 |
| ஐம்பான் .. .. | 36 | காரே .. .. | 15 |
| ஓருபக .. .. | 83 | காரொலி .. .. | 63 |
| ஒருமையி .. .. | 111 | காரொன்று .. .. | 100 |
| ஒளிதந்த .. .. | 11 | கால்கொண் .. .. | 59 |
| ஓங்கிருஞ் .. .. | 50 | காவியம் .. .. | 4 |
| ஓங்கும்பிரம்பையி .. | 85 | காவென்ற .. .. | 3 |
| ஓங்கும்புகழ்ப்பிரம் .. | 107 | கான்பாய் .. .. | 10 |
| ஓடாத் .. .. | 53 | கானங் .. .. | 101 |
| ஓதுவ.. .. .. | 50 | கானவர்கூடிக் .. .. | 76 |
| ஓவிய .. .. .. | 76 | கானவரில்லற் .. .. | 117 |
| கடலார .. .. | 108 | கானவரென்னுங் .. | 115 |
| கண்ணன் .. .. | 127 | கிளைவாய்த் .. .. | 68 |
| கண்ணு .. .. | 20 | குவளைக்கண் .. .. | 72 |
| கண்ணிற் .. .. | 49 | குழைக்கோ .. .. | 28 |
| கயல்பாய் .. .. | 29 | கூடப்.. .. .. | 6 |
| கருங்கடலுண்டெழு .. | 90 | கூடியன் .. .. | 73 |
| கருங்கடலூடுவெண் .. | 7 | கூறெரு .. .. | 76 |
| கருங்கடனீருண்.. .. | 30 | கெண்டையய் .. .. | 87 |

| | பக்கம். |
|---|---|
| கைம்மாறுளத்திற்கணிக்கா. | 95 |
| கைம்மாறுளத்திற்கருதா. | 121 |
| கைவா .. .. | 24 |
| கைவேல் .. .. | 26 |
| கொண்டலெண். .. | 130 |
| கொந்தார்நறுங்குழ .. | 103 |
| கொந்தார்மலர்க்குழற் .. | 110 |
| கொன்றையம் .. .. | 85 |
| கோடையெறியக் .. | 65 |
| கோடையொழியக் .. | 131 |
| கோமக .. .. | 56 |
| கோலப் .. .. | 21 |
| சங்கத் .. .. | 55 |
| சங்கந் .. .. | 63 |
| சந்தத .. .. | 87 |
| சந்தார் .. .. | 89 |
| சாயலு .. .. | 124 |
| சித்தச .. .. | 61 |
| சிங்கமு .. .. | 37 |
| சிந்திக்க .. .. | 40 |
| சிலவாய் .. .. | 87 |
| சிற்றிடை .. .. | 96 |
| சிற்றிலிழைத்து .. | 119 |
| சீரார்பிரம்பைத்துரைரங்க பூபன் .. | 123 |
| சீரார்பிரம்பைத்துரைரங்க பூபனைச் .. .. | 120 |
| சீரிடங் .. .. | 5 |
| சுதைகொண் .. .. | 25 |
| செங்கதிர் .. .. | 48 |
| செஞ்சி .. .. | 4 |
| செந்தா .. .. | 13 |
| செந்தினைகாத்திடும் .. | 28 |
| செந்தினைமுன்னம் .. | 58 |
| செம்பது .. .. | 74 |
| செல்லைவெல் .. .. | 96 |
| செவ்வாய்க் .. .. | 122 |
| சேந்தனை .. .. | 50 |
| சேய்கொண்ட. .. .. | 43 |
| சொல்லாலெவரையுந் .. | 18 |
| சொல்லாற்கிளியு .. | 27 |
| சொல்லுந் .. .. | 8 |
| தண்டலை .. .. | 71 |

| | பக்கம். |
|---|---|
| தண்புன .. .. | 120 |
| தந்திரஞ் .. .. | 52 |
| தம்பாலென் .. .. | 65 |
| தயங்கு .. .. | 65 |
| தருநாளு .. .. | 32 |
| தருமத்தை .. .. | 44 |
| தருவாருஞ் .. .. | 95 |
| தனைகொண் .. .. | 33 |
| தனைப்பெற்ற .. .. | 114 |
| தாங்காத .. .. | 96 |
| தாமம் .. .. | 79 |
| தாயின்றி .. . | 49 |
| தாயுந் .. .. | 69 |
| தாரணி .. .. | 53 |
| தாள்வீசி .. .. | 4 |
| திங்களிடத்திற் .. .. | 60 |
| திங்களில் .. .. | 10 |
| திருநாண் .. .. | 97 |
| திருமால் .. .. | 13 |
| திருவையுற் .. .. | 74 |
| திரைவா .. .. | 10 |
| திறங்கொண்ட .. .. | 48 |
| தீம்பா .. .. | 119 |
| துங்கப் .. .. | 127 |
| துப்போது .. .. | 46 |
| தூங்கிசை .. .. | 46 |
| தெம்முனை .. .. | 125 |
| தெளித்தசொற் .. | 117 |
| தென்வர .. .. | 38 |
| தென்னவன் .. .. | 31 |
| தேங்கமலத்துறை .. | 15 |
| தேங்கமழ்சோலை .. | 64 |
| தேருந் .. .. | 22 |
| தேனுரு .. .. | 9 |
| தோகை .. .. | 65 |
| தோளுங் .. .. | 77 |
| நங்கேள்வர் .. .. | 84 |
| நண்ணுந் .. .. | 124 |
| நல்லார் .. .. | 48 |
| நலந்தந்து .. .. | 81 |
| நற்பால் .. .. | 85 |

| | | பக்கம். |
|---|---|---|
| நன்புகழ் | .. .. | 30 |
| நன்றாகி | .. .. | 47 |
| நன்னா | .. .. | 35 |
| நாமக் | .. .. | 59 |
| நாளையிப் | .. .. | 111 |
| நாளொன்று | .. .. | 72 |
| நானா | .. .. | 5 |
| நெய்தற் | .. .. | 22 |
| நெய்யுறை | .. .. | 34 |
| பஞ்சர | .. .. | 58 |
| படநாக | .. .. | 24 |
| பண்ணார் | .. .. | 6 |
| பண்ணாக்கொப் | .. .. | 58 |
| பண்ணொன்று | .. .. | 3 |
| பந்தனை | .. .. | 112 |
| பந்திப் | .. .. | 42 |
| பன்மலர் | .. .. | 100 |
| பன்னகப் | .. .. | 45 |
| பாகங்... | .. .. | 121 |
| பாங்கிற் | .. .. | 123 |
| பாயுங் | .. .. | 128 |
| பாயும் | .. .. | 14 |
| பார்வாய் | .. .. | 36 |
| பாரிடங் | .. .. | 82 |
| பாருரைக் | .. .. | 25 |
| பாலொக்கு | .. .. | 18 |
| பாவென | .. .. | 34 |
| பின்னையெண் | .. .. | 11 |
| புயல்வள | .. .. | 44 |
| புருவச் | .. .. | 20 |
| புறந்தழை | .. .. | 44 |
| புன்னலங் | .. .. | 124 |
| புனங்காண் | .. .. | 53 |
| பூண்டவன் | .. .. | 41 |
| பூமேனுயர்ந்திடும் | .. | 64 |
| பூமேவு | .. .. | 2 |
| பூவு .. | .. .. | 62 |
| பெருமானை | .. .. | 8 |
| பெற்றவர் | .. .. | 129 |
| பேதைப் | .. .. | 95 |
| பைந்தினை | .. .. | 56 |

| | | பக்கம். |
|---|---|---|
| பொதுவரை | .. .. | 41 |
| பொருந்தா. | .. .. | 134 |
| பொருள்கொண் | .. | 135 |
| பொறியார் | .. .. | 54 |
| பொன்மாலைக் | .. .. | 121 |
| பொன்னக | .. .. | 80 |
| பொன்னாருந் | .. .. | 24 |
| பொன்னே | .. .. | 123 |
| பொன்னைநிகர் | .. .. | 136 |
| பொன்னைமறைத்த | .. | 38 |
| பொன்னைவிரும்பிய | .. | 103 |
| மங்கு | .. .. | 55 |
| மங்கையர் | .. .. | 54 |
| மண்ணிற் | .. .. | 20 |
| மணிகலன் | .. .. | 83 |
| மணிவண்டு | .. .. | 81 |
| மதிபொரு | .. .. | 77 |
| மந்தர | .. .. | 13 |
| மல்லல் | .. .. | 63 |
| மலைகொண்ட | .. .. | 115 |
| மழைகொண்ட | .. .. | 42 |
| மழைவந்த | .. .. | 25 |
| மன்றப் | .. .. | 36 |
| மன்னாசை | .. .. | 135 |
| மன்னாண்மை | .. .. | 110 |
| மன்னியகீர்த்திப் | .. | 98 |
| மன்னியசீர்ப்பிரம் | .. | 81 |
| மன்னுயிர்காக்கும்பிரம்மை | | 22 |
| மன்னுயிர்காக்குமரங்கன். | | 131 |
| மாராபி | .. .. | 99 |
| மாரிகை | .. .. | 21 |
| மாரிபொய்த் | .. .. | 69 |
| மாண்பெற் | .. .. | 106 |
| மான்வந் | .. .. | 27 |
| மானா | .. .. | 45 |
| மானே | .. .. | 70 |
| மானென்று | .. .. | 17 |
| மின்கொடி | .. .. | 65 |
| மின்போ | .. .. | 30 |
| மின்வைத்த | .. .. | 11 |
| மின்னார் | .. .. | 111 |

| | பக்கம். |
|---|---|
| மின்னல் .. .. | 41 |
| மீண்டிங் .. .. | 110 |
| மீன்சென்ற .. .. | 88 |
| முக்கோல்கைக் .. .. | 107 |
| முந்தப் .. .. | 51 |
| முந்நீ .. .. .. | 12 |
| முப்போது .. .. | 91 |
| மும்மையு .. .. | 104 |
| மூலேமேன் .. .. | 102 |
| முறைகொண்டு .. .. | 131 |
| முன்னளித்தசெங் .. | 118 |
| முன்னவி .. .. | 39 |
| முன்னெரு .. .. | 26 |
| முனேமறந் .. .. | 52 |
| மூவுல .. .. | 113 |
| மெய்க்கொண்ட .. | 41 |
| மெய்கண்டு .. .. | 52 |
| மெய்வைத்த .. .. | 88 |
| மெல்லமெல் .. .. | 99 |
| மென்மொழி .. .. | 104 |
| மேவலரஞ்ச .. .. | 78 |
| மேவலரைப்புறங் .. | 67 |
| மேனியெல் .. .. | 82 |
| மைவண்ணங்கொண்ட .. | 128 |
| மைவண்ணமுற்ற .. | 81 |
| மைவடி .. .. | 109 |
| மைவார்குழலிற் .. | 21 |
| மைவாரணம்வென்ற .. | 114 |
| மோடிவிட் .. .. | 85 |
| யாமத்திடை .. .. | 94 |
| யாமினிச் .. .. | 113 |
| யான்பெற்ற .. .. | 112 |
| வங்கங் .. .. | 17 |
| வசந்தன் .. .. | 133 |
| வடத்திலே .. .. | 35 |
| வடிவாள் .. .. | 14 |
| வண்ட .. .. | 21 |
| வந்தாரை .. .. | 30 |
| வயங்குங் .. .. | 78 |
| வருந்து .. .. | 91 |

| | பக்கம். |
|---|---|
| வல்லெரக்கு .. .. | 35 |
| வலம்பெற்ற .. .. | 8 |
| வன்பரற் .. .. | 99 |
| வாகையிருந்த .. .. | 68 |
| வாகைப்புயாசல .. | 46 |
| வாசங் .. .. | 61 |
| வாசனே .. .. | 44 |
| வாட்டங்கு .. .. | 93 |
| வாடிய .. .. | 74 |
| வாயிற் .. .. | 43 |
| வாரம் .. .. | 51 |
| வாரித் .. .. | 19 |
| வாரோ .. .. | 2 |
| வாளா .. .. | 94 |
| வாளும் .. .. | 121 |
| வானங் .. .. | 57 |
| விடநாக .. .. | 55 |
| விருந்தென .. .. | 67 |
| வில்லுங் .. .. | 102 |
| விளமேற் .. .. | 43 |
| வெங்கட்கரடக்களிற்றிரை திரியுமஞ் .. .. | 78 |
| வெங்கட்கரடக்களிற்றிரை வழங்குமஞ் .. | 57 |
| வெங்கொலே .. .. | 39 |
| வெண்சிங்க .. .. | 76 |
| வெண்ணெய் .. .. | 56 |
| வெம்புலி .. .. | 67 |
| வெள்ளக்கடற்படை .. | 114 |
| வெள்ளக்கடற்பொலி .. | 88 |
| வேசிதன் .. .. | 125 |
| வேந்தன் .. .. | 119 |
| வேயஞ்சு .. .. | 61 |
| வேயினுஞ் .. .. | 98 |
| வேயொக்கும் .. .. | 59 |
| வேரல .. .. | 62 |
| வேல்கொண்ட .. .. | 40 |
| வேல்பாய்ந்த .. .. | 38 |
| வேறெரு .. .. | 128 |
| வேனலங் .. .. | 65 |